தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண். 253.

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## பதினொன்றாம் தொகுப்பு

(வைத்தியப் பகுதி)

SARASVATI MAHAL • சரசுவதி மகால் • सरस्वती महाल्

• தஞ்சாவூர் •

கற்றனைத்து ஊறும் அறிவு

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகச் சங்கம்

1988 ] [ விலை ரூ. 15—00

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## பதினொன்றாம் தொகுப்பு

(வைத்தியப் பகுதி)

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் :
புலவர் வீ. சொக்கலிங்கம்,
தமிழாசிரியர், (ஓய்வு)
சரசுவதி மகால் நூலகச் சங்கம்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகச் சங்கம்

1988 ] [ விலை ரூ. 15—00

முதற்பதிப்பு : 1988

வெளியீடு :

சரசுவதி மகால் நூலகச் சங்கம், தஞ்சாவூர்.

பதிப்பகம் :

சரசுவதி மகால் நூலகச் சங்க அச்சகம், தஞ்சாவூர்.

# வெளியிடுவோர் முகவுரை

"நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பது செயல்" — என்பார் திருவள்ளுவர்

அவ்வாறு நோய் வரலாறு கண்டு அதனைத் தீர்க்கும் முறைகளை கண்டறிந்த அறிவாளர்கள் அவற்றைச் சுவடிகளில் பொறித்து வழங்கியுள்ளனர். அவற்றுள் பல சுவடிகள் உலகப் புகழ் வாய்ந்த நம் சரசுவதி மகாலில் இடம் பெற்றுள்ளன.

இச்சுவடிகளை ஆய்ந்து அவற்றில் பதிக்கப் பெற்றுள்ள மருத்துவ மற்றும் உடற்கூறு மகத்துவங்களை வெளியுலகிற்கு வழங்கும் பணியினை தற்போது மகால் விரைந்து மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முனைப்பான வெளியீடுகளில், இந்நூல் பதினொன்றாம் தொகுதியாகும். இதுநாள் வரையில் 430 சுவடிகள் அவற்றிற்கான விளக்கக் குறிப்புகளுடன் எமது நூலக வெளியீடாக பத்துத் தொகுதிகளில் வெளிவந்துள்ளன. இவற்றுள் ஐந்து தொகுதிகள் இலக்கிய விளக்கங்களைக் கொண்டதாகும்.

இப்பதினொன்றாம் தொகுதியில் 431 முதல் 504 வரையிலான சுவடிகளில் பதினென் சித்தர்களின் அரிய வைத்திய சுவடிகளின் விளக்கங்களும் இவ்வுலக வாழ்வை உய்விக்கக்கூடிய யோக முறைகளை விளக்கும் சுவடிகளும் இடம் பெற்றுள்ளன. அரிய இந்நூல் ஆன்றோர் பெருமக்களின் பேராதரவினைப்பெறும் என்பது திண்ணம்.

எமது சரசுவதி மகால் முன்னாள் தமிழாசிரியர் புலவர் வீ. சொக்கலிங்கம் அவர்கள், மிகுந்த ஆர்வத்துடன் தமது ஆழ்ந்த புலமையினைத் துணைகொண்டு, ஒவ்வொரு ஏட்டிலும் உள்ள செய்தியைத் தெள்ளத்தெளிய ஆய்ந்து உகந்த விளக்கங்களுடன் இத்தொகுதியினைப் பதிப்பித்து தமக்கும் நூலகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். அவர்தம் பணி பாராட்டுக்குரியது.

இப்பதினொன்றாம் தொகுதி வெளிவரப் பொருளுதவி புரிந்த மைய அரசுக்கு நன்றி கூறி மகிழ்கிறேன். இதுபோன்ற நல்ல நூல்கள் விரைவில் வெளிவர ஆர்வத்துடன் பணியாற்றிவரும் நிர்வாக அதிகாரி திரு சீ. கிருஷ்ணன் அவர்களுக்கும் நூலக வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன், எம்.ஏ., பி.லிப்.எஸ்.சி., அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். நன்முறையில் அச்சிட்டுத் தந்த இந்நூலக அச்சகப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

பெருமை பெறத் தக்க அரிய பெரிய ஓலைச்சுவடிகள், எங்கெங்கோ முடங்கிக் கிடக்கின்றன. அவை சரசுவதி மகால் நூலகத்தை அடைந்தால் இதுபோன்ற பதிப்பாகி மக்கட்குப் பெரும் பயன் நல்கும் என்பதால் எவ்வகைச் சுவடியாயினும் அவற்றை சரசுவதி மகால் நூலகத்திற்கு வழங்க பெரியோர் முன்வரவேண்டும் என இத்தருணத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சாவூர்
*14—3—1988*

**மா. இராமு**, இ. ஆ. ப.,
மாவட்டாட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகச் சங்கம்.

# முன்னுரை

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கேற்ப மனிதன் வாழவேண்டும். "உடன் பிறந்தே கொல்லும் நோய்" என்பதற்கிணங்க மனிதன் நோயுடன் துன்புறும்போது, உடன் பிறவா மூலிகை முதலான மாமருந்தால் குணமடைகிறன்.

இவ்வாறு குணமடைய வழிவகுத்தவர்கள் நம் முன்னேர்கள், சித்தர்கள், பேரறிஞர்கள் முதலானேர். அவர்கள் தாம் கண்ட அனுபவத்தால் பல மருந்துகளைக் கண்டறிந்து மனிதனை நீண்ட நாட்கள் வாழச் செய்தனர். அவ்வாறு செய்தவர்கள் அம்முறைகளை ஏட்டில் எழுதி, எதிர்கால மக்களுக்காகச் சுவடிகளாக விட்டுச் சென்றனர்.

அவ்வாருன சுவடிகளை ஏராளமாகத் தன்னகத்தே கொண்டது அவ்வுலகப் புகழ்பெற்ற, தஞ்சை மாமன்னர் சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம். இந்நூலகத்திலுள்ள, தமிழ் வைத்தியச் சுவடிகளுள் 480 சுவடிகள் வரை, விளக்கக் குறிப்புகளுடன், எமது மகாலில், 3, 4, 5, 8, 9 ஆகிய தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன.

இப்பதினெென்ருவது தொகுப்பில் 431 முதல் 504 முடிய 74 சுவடிகள் (D. 902—1100) விளக்கங்களுடன் தம்மை அறிமுகம் செய்துகொள்கின்றன. இதனில் மிகவும் அதிசயிக்கத்தக்க செய்திகள் காணப்படுகின்றன. உட்பிரிவுகள் a, b, c என அடைப்புக் குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளன. ஒரு சிலவற்றில் காலம் காணக் கிடைக்கிறது. பலவற்றில் இல்லை. பல வியாதிகளின் வரலாறு, அதன் பெயர்கள், அவற்றிற்கான மருந்துகள், செய்முறைகள், முதலியன இதில் காணப்படுகின்றன. இம்மகால் மருத்துவப்பிரிவில் உள்ள சுவடிகளை "வைத்தியக் களஞ்சியம்" என்றே கூறினல், அது மிகையாகாது. இன்னும் பல சுவடிகள் விவர அட்டவணை தயாரிக்கப் பட வேண்டியவை உள்ளன.

இவற்றுள் மிகப்பயன் தரத்தக்க சுவடிகளை வெளியிட்டால் அது மக்களுக்கு நீண்ட வாழ்நாட்களைக் கொடுக்கும். ஓலைச் சுவடிகளைப் பேணிக்காப்பது தனி மனிதரால் முடியாத காரியம். இது போன்ற நூலகங்களாலேயே இயலும். எனவே ஓலைச்சுவடிகளை தன்னகத்தே கொண்ட பேரறிவாளர்கள். அவற்றை நூலகத்திற்கு தந்து

உதவினால், அவற்றைப் பேணிப் பாதுகாப்பதோடு, பலருக்கும் பயன்படச் செய்வோம். மேலும், அப்படிச் சுவடி தந்தவர்கள் இந்நூலகம் உள்ளமட்டும் புகழடைவதோடு, பலருக்கும் பயன்பட்ட புண்ணியத்தையும் பெறுவர்.

இதனை, ஆய்ந்து வெளியிடப் பொருளுதவிபுரிந்த நடுவண் அரசுக்கும், இதனைப் பதிப்பிக்க அனுமதியளித்த எமது மகால் முன்னாள் இயக்குநரும் மாவட்ட ஆட்சியருமான திருவாளர் து. இரா இராமசாமி, இ.ஆ.ப., அவர்கட்கும், பதிப்புரை நல்கிய இயக்குநரும், மாவட்ட ஆட்சியருமான திருவாளர் மா. இராமு, இ. ஆ. ப., அவர்கட்கும், இந்நூலக நிருவாக அதிகாரி பொறுப்பு வகிக்கும் திருவாளர் அ. பஞ்சநாதன், எம். ஏ., பி. லிப். சி., அவர்கட்கும், நன்முறையில் அச்சிட்டுத்தந்த இந்நூலக அச்சகத்தாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இதில் காணும் குற்றங் களைந்து, குணம் பொருந்தி வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்.

இங்ஙனம்,

தஞ்சாவூர்,
22—12—86.

புலவர் வீ. சொக்கலிங்கம்,
தமிழாசிரியர், (ஓய்வு)
சரசுவதி மகால் நூலகச் சங்கம்

# பொருளடக்கம்

அ D. எண்.


| | |
|---|---|
| அகத்தியர் 150 | 927 |
| அகத்தியர் 205 | 1006 |
| அகத்தியர் 1200ல் சூத்திரம் 100 | 1036 |
| அகத்தியர் அண்ட தரிசனை | 1033 |
| அகத்தியர் அமாவாசி | 917 |
| அகத்தியர் கலைக்கியானம் 1200 | 1081 |
| அகத்தியர் குணவாகடம்—அவிழ்த சாரம் 60 | 1090 |
| அகத்தியர் குருநாடி | 1003 |
| அகத்தியர் கோவை 120 | 1089 |
| அகத்தியர் சல்லியச் சுருக்கம் 15 | 915 |
| அகத்தியர் சாலநிகண்டு 200 | 1075 |
| அகத்தியர் சாலம் 1200க்குச் சூத்திரம் பூரண சந்திரோதயம் | 1076 |
| அகத்தியர் சிவயோகச் சுருக்கம் 30 | 977 |
| அகத்தியர் சிவயோகம் 100 | 975 |
| அகத்தியர் சுருக்கம்—சரக்கு சுத்தி 150 | 966 |
| அகத்தியர் சூத்திரம் 100 | 1036 |
| அகத்தியர் சூத்திரம் 150 | 952 |
| அகத்தியர் சூத்திரம் 300 | 947, 1009 |
| அகத்தியர் ஞான நூல் | 936 |
| அகத்தியர் ஞானம் 14 | 1052 |
| அகத்தியர் தண்டகம் | 1034 |
| அகத்தியர் தீட்சை விதி | 908, 933, 939 |
| அகத்தியர் நாடிப் பரீட்சை—குணவாகடம் | 1077 |
| அகத்தியர் நோயின் சாரம் 67 | 1091 |
| அகத்தியர் பட்சணி 100 | 1098 |
| அகத்தியர் பரிபாஷை நிகண்டு—முதற்காண்டம் | 1044, 1045 |
| அகத்தியர் பரிபாஷை—முதற்காண்டம் | 970 |
| அகத்தியர் பரிபாஷை—2-ங் காண்டம் | 971 |
| அகத்தியர் பரிபாஷை—3-ங் காண்டம் | 972 |
| அகத்தியர் பரிபாஷை—4-ங் காண்டம் | 937 |

| | |
|---|---|
| அகத்தியர் பரிபாஷை 5-ங் காண்டம் | 974 |
| ,, பூசாவிதி 12 | 960 |
| ,, பூரண காவியம் 1000 | 941 |
| ,, பூரண சூத்திரம் | 1060 |
| ,, பூரண சூத்திரம் 216 | 976 |
| ,, மதிவெண்பா 100 | 911, 968 |
| ,, முப்பு 6 | 1056 |
| ,, முப்புமுறை 50 | 988 |
| ,, ரெத்தினச் சுருக்கம் | 951 |
| ,, வகாரம் 16 | 925 |
| ,, வகாரம் 30 | 1049 |
| ,, வயித்திய சூத்திரம் 300 | 931 |
| ,, வாக்கியம் முப்பூ 50 | 919 |
| ,, வாதகாண்டம் | 1074 |
| ,, வைத்தியர் சூத்திரம் 300 | 931 |
| ,, வைத்தியத் திரட்டு | 992 |
| ,, வைத்தியம் | 1083 |
| ,, வைத்தியம் 36 | 1092 |
| அண்ட தரிசனை—அகத்தியர் | 1033 |
| அமாவாசி—அகத்தியர் | 971 |
| அவிள்த சாரம்—அகத்தியர்—குணவாகடம் | 1090 |
| அறுவகை நீர் திராவகம்—நந்திதேவர் | 1018 |
| அனுபவமுறை வைத்தியம் | 1019 |
| அனுபவ வைத்தியம் | 1020 |
| அனுபவ வைத்தியம் | 1042 |
| அனுமார் மந்திரம் | 907 |
| அன்பத்தோ ரட்சரம் 108—முதல் காண்டம் | 928 |


ஆ


| | |
|---|---|
| ஆரியன் யோகச் சுருக்கம் 12 | 1050 |
| ஆனந்த பூரணம் 400 | 902 |


இ


| | |
|---|---|
| இரசவாத அட்டவணை | 905 |
| இரத்தினச் சுருக்கம் | 981 |
| இரத்தினச் சுருக்கம்—அகத்தியர் | 951 |

இராசிக வன்னம் 906
இராமதேவர் ஆயிரத்தில் சூத்திரம்—பத்து 985
இராமதேவர் ஆயிரம் 1043
,, கருக்கிடை சூத்திரம்—பலதிரட்டு 500 994
,, கருமானச் சுருக்கம் 30 1001
,, சிவயோகம் 200 903, 995, 1021
,, சுருக்கம் ஐம்பது 998
,, சூத்திரம் 100 1000
,, சோசியம் 10 999
,, தண்டகம் 110 996
,, பரஞான கேசரி 100 1002
,, வகாரம் ஆயிரம் 993
,, வைத்தியம் எண்பது 997
இராமலிங்க சுவாமியார் பாடல் 1031

ஊ

ஊழி வைத்தியம் 1030

ஏ

ஏகாட்சரம் 2-ம் காண்டம் 929
ஏரண்டத் தைலம்—தன்வந்திரி 1085

ஔ

ஔஷத அட்டவணை 944

க

கயிலாசச் சட்டைமுனி வாதநூல் 1000 957
கருக்கிடை சூத்திரம் பலதிரட்டு 500—இராமதேவர் 994
கருக்கிடை நிகண்டு 300 1010
கரு நிகண்டு 1024
கருப்பிணி மந்திரம் 1082
கருமான சாலம்—தட்சிணாமூர்த்தி 1200 984
கருமானச் சுருக்கம்—இராமதேவர் 30 1001
கருவூரார் சூத்திரம் 935
கருவூரார் நொண்டி 1095
கருவூரார் பூசாவிதி 934
கருவூர்ச்சித்தர் வாக்கியம் 1028
கலைக்கியானம்—அகத்தியர் 1200 1081

கு

| | |
|---|---|
| குணவாகடத்திரட்டு—தன்வந்திரி 236 | 943 |
| குணவாகடம்—அகத்தியர் | 1077, 1090 |
| கும்பமுனி சாமியார் பாடல் 12 | 1051 |
| குருநாடி சாத்திரம் | 948 |
| குழந்தை வைத்தியம் முதலியன | 1088 |

கை

| | |
|---|---|
| கைபாக சாத்திரம்—வைத்தியம் | 950 |
| கைபாகம்—சட்டைமுனி திட்டம் | 1011 |
| கைபாகம்—யூகிமுனி 439 | 953 |
| கைலாசச் சட்டைமுனி வாதநூல் 1000 | 957 |

கொ

| | |
|---|---|
| கொங்கணர் கடைக்காண்டம் 500 | 932 |
| ,, (கடைக்காண்டம்)—பிற்காண்டம் 1000 | 956 |
| ,, ,, வாக்கியம் 500 | 937 |
| ,, தண்டகம் | 1035 |
| ,, நடுக்காண்டம் 1000 | 955 |
| ,, பிற்காண்டம் 1000 | 956 |
| ,, முதற்காண்டம் 1000 | 954 |
| ,, வாக்கியம்—கடைக்காண்டம் 500 | 937 |
| ,, வேதாந்த ஞானச்சுருக்கம் | 912 |
| ,, வேதாந்த ஞானம் | 1029 |

கோ

| | |
|---|---|
| கோரக்கர் கற்ப முறை 31 | 991 |

ச

| | |
|---|---|
| சகல கருமான சாலம் 1200—தட்சிணாமூர்த்தி | 984 |
| சங்கராச்சாரியர் உலா | 1022 |
| சங்கராச்சாரியர் தீட்சை | 961 |
| சட்டமுனி கற்பம் 100 | 983 |
| சட்டைமுனி திட்டம்—கைபாகம் | 1011 |
| சட்டைமுனி தீட்சை | 962 |
| சட்டைமுனி நிகண்டு | 958 |
| சட்டைமுனியார் வாதநூல் | 1066 |

சட்டைமுனி வாதநூல் 1000 957
சரக்குசுத்தி 150—அகத்தியர் சுருக்கம் 966
சரக்கு சுத்தி முறை 150 1073
சல்லியச் சுருக்கம்—அகத்தியர் 15 915

சா

சால நிகண்டு 200—அகத்தியர் 1075
சால நூல் 1200—தட்சிணாமூர்த்தி 928
சாலம் 1200க்குச் சூத்திரம்—ஞான சந்திரோதயம்—
அகத்தியர் 1076

சி

சில்லரை வைத்தியம் 1032
சிவயோக சூத்திரம் 7—வாலையானந்தர் 1057
சிவயோகச் சுருக்கம்—அகத்தியர் 30 977
சிவயோகம்—அகத்தியர் 100 975
சிவயோகம்—இராமதேவர் 200 903, 995, 1021
சிவவாக்கியர் தீட்சை 963

சு

சுத்தஞானம்—சுப்பிரமணியர் 940
சுத்தஞானம்—சுப்பிரமணியர் 200 913
சுந்தரமூர்த்தி தண்டகம் 1037
சுந்தரானந்தர்—இருபத்தைந்து 986
சுப்பிரமணியசுவாமி சுத்தஞானம் 200 913
சுப்பிரமணியர் சுத்தஞானம் 940
சுப்பிரமணியர் ஞானம் 1038

சூ

சூதமுனியார் பாடல்—நீலகண்ட வாலை 1093

ஞா

ஞானக் குறம் 1023
ஞானச்சுருக்கம்—கொங்கணர் வேதாந்த 912
ஞான நூல்—அகத்தியர் 936
ஞானவெட்டியா ரருளிச்செய்த பூனீர் உற்பத்தி கால் முதலியன 1053

ட

டமரானந்தர் வகாரம் 16 1059

## த


தட்சிணமூர்த்தி 10 — 1050

தட்சிணமூர்த்தி சகல கருமானச் சாலம் 1200 — 984

தட்சிணமூர்த்தி சால நூல் 1200—அன்பத்தோரட்சரம் முதல் காண்டம் — 928

தட்சிணமூர்த்தி சூத்திரம் 50 — 965

,, சூத்திரம் 60 — 964

,, பரிபாஷை 500—முதலாங் காண்டம் — 920

,, பரிபாஷை 2-ங் காண்டம் — 921

,, பரிபாஷை 3-ங் காண்டம் — 922

,, பரிபாஷை 4-ங் காண்டம் — 923

,, பரிபாஷை 5-ங் காண்டம் — 924

,, பூசா விதி — 930

,, பூரண சூத்திரம் 216 — 904

,, பேதிக்கு குளம்பு — 990

தன்வந்திரி ஏரண்டத் தயிலம் — 1085

தன்வந்திரி குணவாகடத் திரட்டு 236 — 943


## தி


திராவகம்—அறுவகை நீர்—நந்திதேவர் — 1018

திருமந்திரச் சுருக்கம்—ரோமரிஷி — 1048

(திரு)மூலர் திரட்டு 1000-ல் — 1012

திருமூலர் வைத்தியம் — 987


## தீ


தீட்சை நீரின் பெயரும் முப்பூவின் பெயரும்—நிகண்டு — 1016

தீட்சை விதி—அகத்தியர் — 908, 933, 939


## தே


தேரையர் வைத்தியம் 133 — 1087

தேரையர் வைத்தியம் 1001 — 1004

நூ

நந்தி சூத்திரம் 300 969
நந்திகேசுவரர் சுருக்கம் 30 978
நந்திதேவர் அறுவகை நீர்—திராவகம் 1018
நந்தி நூல் 52 916
நந்தி வாக்கியம் 300 918
நந்தீசர் 300 1058
நந்தீசர் சுருக்கம் 12 1055
நந்தீசர் வைத்தியம் 205 1097

நா

நாடிப் பரீட்சை—அகத்தியர் குணவாகடம் 1077

நி

நிகண்டு 200—அகத்தியர் சால 1075
நிகண்டு—கரு 1024
நிகண்டு—முப்பூவின் பெயரும், தீட்சை நீரின் பெயரும் 1016

நீ

நீலகண்ட வாலை—சூதமுனியார் பாடல் 1093

நொ

நொண்டி—கருவூர் 1095

நோ

நோயின் சாரம்—அகத்தியர் 67 1091

ப

பட்சணி—அகத்தியர் 100 1098
பரஞான கேசரி 100—இராமதேவர் 1002
பரிபாஷை நிகண்டு—அகத்தியர்—முதற்காண்டம் 1044, 1045
பலதிரட்டு இராமதேவர் கருக்கிடை சூத்திரம் 500 994
பலவகை மந்திரங்கள் 946
பலவகை மருந்து அட்டவணை 945

பி

| | |
|---|---|
| பிரமமுனி சுருக்கம் 800 | 1005 |
| பிரம்மமுனி சூத்திரம் 383 | 949 |

பு

| | |
|---|---|
| புலத்தியர் சூத்திரம் 13 | 914 |
| புலிப்பாணி வைத்தியம் | 1099 |

பூ

| | |
|---|---|
| பூசாவிதி—அகத்தியர் | 938 |
| ,, அகத்தியர் 12 | 960 |
| ,, கருவூரார் | 934 |
| ,, தட்சிணாமூர்த்தி | 930 |
| பூரண காவியம்—அகத்தியர் 1000 | 941 |
| பூரண சந்திரோதயம் | 1076 |
| பூரண சூத்திரம்—அகத்தியர் | 1060 |
| பூரண சூத்திரம்—அகத்தியர் 216 | 976 |
| பூரண சூத்திரம்—தட்சிணாமூர்த்தி 216 | 904 |
| பூரணம்—போகர் 50 | 1100 |
| பூனீர் உற்பத்திக்கால் முதலியன — ஞான வெட்டியார் | 1053 |

போ

| | |
|---|---|
| போகர் 38 | 1096 |
| போகர்சுவாமி—அயச்செம்பு | 1013 |
| போகர் ஞான சூத்திரம் 100 | 989 |
| போகர் ஞானம் | 1063 |
| போகர் பூரணம்—சோடச சூத்திரம் 50 | 1100 |

ம

| | |
|---|---|
| மதிவெண்பா | 968 |
| மந்திரங்கள்—பலவகை | 946 |
| மந்திர சாத்திரம் | 910, 1041 |
| மந்திரம் வைத்தியம் முதலியன | 1086 |
| மருந்து அட்டவணை—பலவகை | 945 |

மு

| | |
|---|---|
| முப்பு 6—அகத்தியர் | 1056 |
| முப்பூ—அகத்தியர் வாக்கியம் 50 | 919 |
| முப்பூவின் பெயரும் தீட்சை நீரின் பெயரும்—நிகண்டு | 1016 |

மூ

| | |
|---|---|
| மூலர் திரட்டு 1000-ல் | 1012 |

யா

| | |
|---|---|
| யாகோபு வைத்தியம் | 1026 |

யூ

| | |
|---|---|
| யூகிமுனி கைபாகம்—439 | 953 |
| யூகிமுனி சிந்தாமணி 100 | 1015 |
| யூகிமுனி சுருக்கம் 100 | 1017 |
| யூகிமுனி வாத உலா 1000 | 1007 |

யோ

| | |
|---|---|
| யோகச் சுருக்கம்—ஆரியன் 12 | 1025 |
| யோகா அதிசயம்—லோகநாதர் | 1054 |

ரோ

| | |
|---|---|
| ரோமரிஷி 16 | 1046 |
| ரோமரிஷி 500 | 1008, 1061 |
| ரோமரிஷி சூத்திரம் பாடல் 51 | 942 |
| ரோமரிஷி திருமந்திரச் சுருக்கம் | 1048 |

லோ

| | |
|---|---|
| லோகநாதர் யோகா அதிசயம் | 1054 |

வா

| | |
|---|---|
| வாத உலா—யூகிமுனி 1000 | 1007 |
| வாதகாண்டம்—அகத்தியர் | 1074 |
| வாதச்சுருக்கம் 30 | 979 |
| வாத நிதானம் | 982 |
| வாதநூல் 1000—சட்டைமுனி | 957 |

வாதநூல்—சட்டைமுனியார் 1066

வாலையானந்தர் சிவயோக சூத்திரம் 7 1057

வே

வேதாந்த ஞானச்சுருக்கம்—கொங்கணர் 912

வேதாந்த ஞானம்—கொங்கணர் 1029

வை

வைத்திய அட்டவணை 967

வைத்தியக் கைபாக சாத்திரம் 950

வைத்தியக்கோர்வை 980

வைத்திய சூத்திரம் 300—அகத்தியர் 931

வைத்தியத் திரட்டு 909, 926, 959, 1014. 1027, 1062, 1064, 1065, 1067, 1068, 1069, 1070, 1071, 1079, 1084, 1094

வைத்திய நூல் 16 1047

வைத்தியம் பலதிரட்டு 1072

வைத்தியம் மந்திரம் முதலியன 1086


## இதிலுள்ள இலக்கிய நூல்கள்


அருச்சனை மந்திரம் 1080

கணபதி தியானம் 1039

சச்சிதானந்த மாலை 1040

தஞ்சை சரசுவதி மகால் நூலகம்

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

பதினொன்றும் தொகுப்பு

## மருத்துவப் பகுதி

***

வரிசை எண்: 902 சுவடி எண்: 431(a)

### ஆனந்த பூரணம்—400

ஏடுகள்: 48 (47—94) கிரந்த எண்ணிக்கை: 1000. அளவு: $29\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர். பக்கத்திற்கு: 7—9 வரிகள். ஆசிரியர்: அகத்தியர். நிலைமை: சிறிது பழுதுபட்ட நிலை. முழுமை: குறைபாடுடையது (தொடக்கம் 202 பாடல்கள் இல்லை). எழுத்து: தமிழ்.

தொடக்கம்:

... ... ... ... ...
... ... ... ...
(ப)கறக்கேள் மகாரத்தின் நடுவே நிண்டு
உத்துப்பார் பூரணத்தின் ஒளிகாண் பாயே. 202

கானப்பா சத்திசிவன் கன்னில் தேறே
கலந்திருப்பாற் றெருவருமே காணற் காணற்
தேனப்பா யறுவியங்கே பாயும் வீடு
திறுவான (சு)ழிமுனையில்த் திறமாய் நிண்டால்
தானப்பா தன்னுள்ளே தானே தோணும்ந்
தானாக முழக்கமங்கே தயவாய்க் காணும்
வீணப்பா யலைந்துகெட்டு திறிந்து டாதே
விபறமா யின்னமொரு பற்பங் கேளே. 203

**முடிவு :**

வெளியான வெளியதுதான் பறஞ்சொ ரூபம்
  வேதாந்த ரூபமடா சொரூபா னந்தம்
வளியான வயித்தியபூ றனமா னந்த
  மகத்தான பூரணத்தி னந்தங் கண்டு
நெழியாம லானந்தங் கடந்து மேலே
  நெறுப்பாறு மயிற்ப்பால வழியே செண்டு
அழியாத பறமவழி ஒளியி னேடே
  ஆனதே பூறனமு முகிந்த முத்தே.

ருமசெயம்

**குறிப்பு :**

இதில் சலாசத்து, வெங்காரம், பற்பங்கள் மூலநோய் வரலாறு, சொற்ண வெள்ளி பற்பங்கள், வாலைரசம், அப்பிரேகம், நாகம், தாம்பூர செந்தூரங்கள், திரிகடுகு, தூதுவளைப்பூ லேகியங்கள், முப்பூவின் விபரம், பரங்கிப்பட்டை, அமுர்த சர்க்கரை, கரிசாலைச் சூரணங்கள், சுரங்களுக்குக் கஷாயம், பீனிசத்துக்கு எண்ணெய், கல்பயோகி முழுக, பல்வலிக்கு நசியம், கண் நோய்க்கு மை, மேகத்துக்கு எண்ணெய் முதலியன உள்ளன. பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. 'யிதிற்கும் பின்பாக ருமதேவர் சிவயோகம் யிருநூறு' என்று எழுதப்பட்டுள்ளது.

இதன்பின் 95-வது ஏட்டில் உள்ளதாவது:—

பேற்பெறுகும் மெய்யானப் பொருள்கள் சொல்லும்
  பூறன சாஷ்த்திறத்தில் அனேக வித்தை
பேற்பெறுகும் ஞுடிமுதல் பற்ப லேகியம்
  பேருன யோகமொடு ஞான மெல்லாம்
பாந்தனியில் வசியமொடு செந்தூ றங்கல்
  ... ... ... ...
பேற்பெறுகும் சாஷ்த்திற்த்தை யெழுதி யானும்
  பெறியோர்கள் கிறுபையினுல் வந்த னூலே.

**காலம் :**

சவுமிய வருஷம் கார்த்திகை மாதம் 12 தேதி சுக்குல வாறம் உத்திருட நஷ்சத்திரம் திதி துதிகை லெக்கனம் தனுசு லெக்கனம் யிந்த சுபதினத்தில் அகத்தீசுபற சுவாமி பறிபூறண சாஷ்த்திறம் மறுதமுத்து கயினுல் யெளுதி முடிந்ததும் முஷ்த்து. குறுபாதம் துணை. பெறியோற்கள் கிறுபையினுல் வந்த சாஷ்த்திரம். யிதை உலகில்க் காட்டாதே. யிதை உன்னையல்லாமல்த் திருடிப்போனுனே யாகில், கோவதை, சிசுவதை செயித பாவத்தில் போவான். யிதை யெடுத்தவன் குடுக்கவும். குடுக்காவிட்டால் பெறியோறைக்

கொன்ல பாவத்திலே போவான். யிந்த நூலே வயித்துப் பூசை பன்னவும். படனம் பன்னவும்.

ஶ்ரீமசெயம்
காறி அழகர் சுவாமி துணை
மறுதமுத்து சுவடி.
(இவ்வாறுள்ளது)

வரிசை எண்: **903** சுவடி எண்: **431(b)**

## இராமதேவர் சிவயோகம் இருநூறு

ஏடுகள்: *53.* கிரந்த எண்ணிக்கை: *1000.* அளவு: $29\frac{1}{2} \times 3$ செ. மீ. பக்கத்திற்கு: *6—8* வரிகள். ஆசிரியர்: இராமதேவர். நிலைமை: சிறிது பழுதுபட்ட நிலை. முழுமை: முற்றுமுளது. எழுத்து: தமிழ்.

**தொடக்கம் :**

மூலமெனும் முதற்பொருளே முத்திநடு வணையில்
மூதண்ட மானதொரு பிறமமதுக் கப்பால்
ஞாலமெனுந் தவமுடைய சதிபதி மேலே
நாதாந்தப் பெருவெளியினடுவெளியின் கீளே
நீலமெனும் நெருப்பாரு மயிர்ப்பாலத்துக் கப்பால்
நிறைந்தபரி பூரணமாய் நிற்ககளம தாகி
சீலமெனுந் தவமுடையோ ரிதுயமே தானுய்
சிரந்துநின்ற பரமகுரு சீர்பாதந் துணையே. *1*

**முடிவு :**

முத்தான சிவயோக மிறுனூர் தன்னை
முறையாக குருவெனவென் றெடுத்துப் பாத்து
சித்தான சித்துவிளை யாடு மைந்தா
சிவயோக மார்க்கமடா திரந்தான் மெத்த
பத்தாசை கொண்டுமன மவுன மாக
பதிவாக சிவயோக மிறுனூ றும்பார்
வித்தான பிரவியது அத்துப் போகு
மேலான சிவயோகம் விளங்க முற்றே. *201*

குருபாதமே கெதியாக வேணும்.
ஶ்ரீமசெயம்.
செங்கமலம்—ராமதேவர் சிவயோகம் யெழுதினது முற்றே.
குருகிடாஷ்சியம்.

**குறிப்பு :**

இதில் சத்தியுட பூசை அண்டபிண்டத்தின் வேலே, வசியம், அஞ்சனம், செம்பு சுத்திக்கட்டு, யோக நிஷ்டை விபரம், அமுர்த லேகியம், வழலைச் சுன்னம், அயக்களங்கு, நந்தி உப்பு வேதை, லிங்கக்களங்கு, செம்பு சுத்தி வேதை, செம்புக் கட்டு வேதை, சந்திறகலே, ராப்பகல் விபரம். நவக்கிரக அனுசிதம், கும்பிடா லேக்கல் முதலியன உள்ளன. இதன்பின்,

'யிதிர்க்கும் பின்பாக அகஷ்த்தியர் பூறண சூத்திரம் யிருனூத்தி பதினறு' என்று எழுதப்பட்டுளது.

இதன்பின்னர் ஒரு ஏட்டில், "யிந்த பொஷ்த்தகத்தில் யிருக்கிண்ட சாஸ்த் திரத்தின் விபரம். அகஸ்த்தியர் பஞ்சபட்சி, அகஷ்த்தியர் வயித்தியம் பூறண சாஸ்த்திரம் நாநூறு, ருமதேவர் சிவயோகம் யிருநூறு, அகஷ்த்தியர் பூறண சூஷ்த்திரம் யிருநூத்தி பதினறு, சிறுது அட்டவணே, ருசிக வண்ணம், அகஷ்த்தி யர் தீட்சைவிதி யிருநூறு, ஞான குறவஞ்சி, சில மந்திரங்கள், அகஷ்த்தியர் வயித்தியம் என்பது ஆக புருதி 10 அறியவும்" என்றுளது.

---

வரிசை எண்: **904** சுவடி எண்: **431(c)**

## தெட்சிணுமூர்த்தி பூரண சூத்திரம்—216

ஏடுகள்: *60.* கி. எண்ணிக்கை: *1000.* அளவு: $29\frac{1}{2} \times 3$ செ. மீ. பக்கத்திற்கு: *6—7* வரிகள். ஆசிரியர்: தட்சிணு மூர்த்தி சுவாமிகள். நிலேமை: பழுதுபட்ட நிலே. முழுமை: முழுதுமுளது. எழுத்து: தமிழ்.

**தொடக்கம் :**

கார்செரி மெய்யன் வெண்மை
கடவுளுங் காணுப் பாதம்
ஓர்பொரு ளுண்மை தன்னேப்
பூரண னூலி லொத்த
தார்செறி கொன்றை சூடி
தாய்சர சோதி கந்த
னர்மத வாலேப் பிள்ளேயார்
பாதங் காப்ப தாமே. 1

**முடிவு :**

ஆமிந்த யிறுநூற்றிப் பதினறுக்கு
ளடைத்துவைத்த பொருள்களெல்லாம் வெழியாய்ச்
ஓமிந்த உலகத்தி லின்னூல் கிட்டி [சொன்னேன்
லுலகத்தில்ச் சித்ததிக முண்டாய்ப் போச்சு

தாமிந்த சூஷ்த்திரத்தைக் கெணியா தீந்தால்
தலைதெறித்துப் போகுமடா சத்தியஞ் சொன்னேம்
நாமிந்தப் படிசொன்னேம் யோகிக் கீய்வாய்
நலமான பூறணசூஷ்த் திரந்தான் முற்றே. 216

தெட்சணாமூர்த்தி யருளிய பூறணசூஷ்த்திரம் எழுதி நிரைந்தது முற்றும்.

சற்குருவே நமா.

ஶ்ரீமச்சந்திரா நமா.

செங்கமலம் யெழுதினது.

**குறிப்பு :**

இதில் மூலாதாரக் கினேசன் பூசை, மகாவிஷ்டுணு, சதாசிவன் அஷ்சரங்கள் தெட்சிணாமூர்த்தி தியானம், கற்பத்தின் பத்தியம், முளகு கற்பம், கற்பஞ் சாப்பிட காந்த கின்னி விபறம், ரசமணி, முப்பு சுத்தி, சவுக்கார வைப்பு, காய சித்திக்கித் தயிலம், பூநீருவேதை, குரு, பச்சை கற்பூரம், வீர வைப்புகள், செந்தூரம், தயிலம், தனமிருக்குமிடம், தங்கக்காசு இருக்கும் தலங்கள், குளிக கல்லின் விபரம், குளவி விபரம் முதலியன உள்ளன. பிழைகள் அதிகம்.

வரிசை எண்: **905** சுவடி எண்: **431(d)**

## இரசவாத (சிறுது) அட்டவணை

ஏடுகள்: 4. கி. எண்ணிக்கை: 50. அளவு: $29\frac{1}{2} \times 3$ செ. மீ. பக்கத்திற்கு: 5 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை. (இராசப்பன்). நிலைமை: பழுதுபட்டது. முழுமை: முற்றும். எழுத்து: தமிழ்.

**தொடக்கம் :**

### சாதிலிங்கக்கட்டு

லிங்கம் ஒரு பலத்துக்குக் குறையாமல் வேண்டியதுக் குழிக் கல்லுலே வைத்து அறைக்கிற விகறம்.

**முடிவு :**

அந்தை மறுந்தெ வெறுக்க யெந்திறத்திலே வயித்து ஒரு வெறகாய்ப் போட்டு மூனு சாமம் மூனு விதம் அக்கினியாக யெறிக்க செந்தூரமாம். யெடுத்து வயித்துக்கொண்டு காறியத்தில் பத்துக்கு ஒன்னு குடுக்க பத்து மாத்துக் காணும் சறியாயிருக்கும்.

குருபாதமே துணை.

ஶ்ரீசப்பன் கயிமுறை.

**குறிப்பு :**

இதில் சாதிலிங்கக்கட்டு, வீறமெழுகு, வீறசெந்தூரம் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: **906** சுவடி எண்: **431(e)**

## இராசிக வன்னம்

ஏடுகள்: 9 (5—11&2). கி.எண்ணிக்கை: 100. அளவு: $29\frac{1}{2} \times 3$ செ. மீ. பக்கத்திற்கு: 4—6 வரிகள். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. நிலைமை: பழுதுபட்டது. முழுமை: முற்றுமுளது. எழுத்து: தமிழ்.

**தொடக்கம் :**

தானனத் தனைத்த தத்ததனைத் தனைத் தந்ததன தனை தனை
தந்ததன தானதான தான தான தானன.

நிச்சயமாகச் சொல்வோம் நீலமா துறிசுப் போக்கு
வச்சதொற் வங்கத்தொடு யிடைக்கிடை யிறதஞ்சேத்து
மெச்சுமி நிடைக்கித்தானும் வெடியுப்புக் கூடக்கூட்டி
யுச்சயம் வாய்நீருலே யுறவறைத் தலத்துவட்டாய்

**முடிவு :**

திறக்கும்பார் பதினறதாகும் பறுவ வம்மாயி கடைகனல் நிற்கும் பதினஞ்சுளே கமத்தானே.

**குறிப்பு :**

இதில் இரச செந்தூரம், கறுவங்கம் லிங்கம், லிங்கம் (வேறு), வீறமெழுகு, வீர செந்தூரம் முதலியன கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: **907** சுவடி எண்: **431(f)**

## அனுமார் மந்திரம்

ஏடுகள்: 2. கி. எண்ணிக்கை: 25. அளவு: $29\frac{1}{2} \times 3$ செ. மீ. பக்கத்திற்கு: 6 வரிகள். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. நிலைமை: பழுதுபட்டது. முழுமை: முற்றும். எழுத்து: தமிழ்.

**தொடக்கம் :**

ஆதி விந்துவா ஆனதி விந்துவா
சாதி விந்துவா சத்திய விந்துவா
சூறிய விந்துவா பிறிதவா அப்புவா
தேயுவா வாயுவூவா ஆகாசம்வா

முடிவு :

அனுமார் யெந்திரம்: (சக்கரம் உள்ளது)

யிந்தப்படி அச்சரத்தை எழுதிப் பூசை பண்ணி என்னேரமும் வரவும்.

குறிப்பு :

இதில், அனுமார் மந்திரம், யந்திரம் முதலியன உள்ளன.

---

வரிசை எண்: **908** சுவடி எண்: **431(g)**

## அகத்தியர் தீட்சை விதி

ஏடுகள்: 57. கி. எண்ணிக்கை: 1200. அளவு: $29\frac{1}{2} \times 3$ செ. மீ. பக்கத்திற்கு: 6—7 வரிகள். ஆசிரியர்: அகத்தியர். நிலைமை: பழுதுபட்டது. முழுமை: முற்றுமுளது. எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

வானைத் தாவிய பொதிகை மகற்முன
 ரிசியுடைய வாக்கு நேர்மை
பானைத் தாவிய பூசைபரி வான
 சிவயோக மன்போர் கேளு
மீனைத் தாவிய ராசிமிகவு மாக
 விளங்கிநின்ற கன்னிமுதல் வில்லுமேஷம்
சேனைத் தாவிய துலாத்தின் சென்ம
 ராசிக்கருவைச் செப்பி றேனே. க

முடிவு :

முத்தான தீட்சையிது பத்திக் கொண்டு
 முதண்ட லேகியமும் கிழாய் மங்குட்
சித்தான கற்பாதி பண்ணிக் கொண்டு
 செகந்தோறுந் தான்சுத்திக் கிருபை பெத்து
முத்தான சிவயோக முனித்துப் பாத்து
 முன்ங்காண்டம் பின்ங்காண்டம் பூறணமும் பாத்து
கொத்தான சதிரகிரி யேரி வந்தால்
 கொள்கிநின்ற திரேகமது னிலைக்கு முத்தே. 202

அகத்தியர் தீட்சைவிதி செங்கமலம் எழுதி முடிந்தது.

முத்தும்.

குருகிடாச்சியமுண்டாக வேணும்.
ராமசெயம்.
சிவமயம்.

ந ம சி வ ய
ம சி வ ய ந
சி வ ய ந ம
வ ய ந ம சி
ய ந ம சி வ

குரு கிடாஷ்சியம்.

**குறிப்பு :**

இதன்பிறகு. "யிதிர்க்கும் பின்பாக ஞானக்குரவஞ்சி" என்று எழுதப்பட்டுளது. ஆனல் ஞானக்குறவஞ்சி ஏடுகள் இல்லை. இச்சுவடி 19 (b), 288 (e) போன்றது, பிழைகள் மலிந்து கிடக்கின்றன.

வரிசை எண்: 909 சுவடி எண்:431(h)

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 2. கி. எண்ணிக்கை: 20. அளவு: $29\frac{1}{2}$X3 செ. மீ. பக்கத்திற்கு: 4—6 வரிகள். ஆசிரியர்: அறியக்கூட வில்லை. நிலைமை: சிறிது பழுது. முழுமை: முற்றற்றது. எழுத்து: தமிழ்.

### துறுசு வெள்ளை

**தொடக்கம் :**

கிளிப்பாச்சி கிளங்கு தொண்டி
அதுக்குள்ளாக துறுசு வச்சு
கோளிப்புடம் துறுசு வெள்ளையாம்
யிது கைகண்டது. குஷ்டத்துக்குக்
குடுக்கவும்.

**முடிவு :**

கறுவிழி தனில் நோயிகள் களந்துடும் பதுநெட்டாதாகு
மறுவவிய வெள்ளை கனணி வளந்திடும் யிறுவவதாகு
பெறுகிய நெயில் நிற்கும் பற்பத்தின் னுறதாகும்
பறுவம்மாயி கன்னுல் நிற்க்கும் பதிஞ்சு ளேகும்ந்தாநே.

**குறிப்பு :**

இதில், இரண்டு ஏடுகளே இருந்தபோதிலும், குட்டத்துக்கும், கண்நோய்க்குமான இரண்டு மருந்துகள் கூறப்பட்டுள்ளன. இதன் உண்மையறிந்து அனுபவங் கண்டால் நன்மை பயக்கலாம்.

வரிசை எண்: 910 சுவடி எண்: 431(i)

## மந்திர சாத்திரம்

ஏடுகள்: 5. கி. எண்ணிக்கை: 200. அளவு: $29\frac{1}{2}$X3 செ. மீ. பக்கத்திற்கு: 7—9 வரிகள். ஆசிரியர்: அறியக்கூட வில்லை. நிலைமை: பழுதுபட்டுள்ளது. முழுமை: முற்றற்றது. எழுத்து: தமிழ்.

**தொடக்கம்:**

ஹரிஓம். சகல சறக்கும் நீத்தின முருக்குனத்துக்கு சாப நிவார்த்தி மந்திரம். இதிற்க்கும் பின்னல் கண்டுருக்குற சரக்கு இதனுஞ் சித்தி.

அய்யா—இஷ்சா—மனுசா—மகமது—நிறெக்காரு - நிறஞ்சனய நமா—நாச லேத்தோ ...குருகோறக்க நாதுபாத மாணே—விஷமல்லா யறயமான்ரகி—க—லிசாலி — மகாசாலி — தாமபேக்கா கோட்டுல வேக்கா பாடி—வாக்கச்சலே நபி—ரசுலில்லாக்காச்ச—ரறி—சரறக் கேச பானீ—பஞ்சாரக்கே முத்து சானி—ஆகேரக்கே—சப்றயல்— பிச்சேரக்கே—மகமது அலெக்கே—சவாரி—தில்பபுக்கார சசிகையிஷ் சிபநத்தானபந்—சவுசா நேக்கே—முஷ்டபந்த

**முடிவு:**

பூனைக்காயிலே அரைத்து அந்தச் சூத வெண்ணைக்கிக் கவசங் குடுத்து இரண்டு விருட்டியில்ப் புடமிட—சுன்னமாம்—வேதை—

| சக்கரம் இருக்கிறது | சிலியும் உன்மத்தம் மகாதேவி. |
|---|---|

**குறிப்பு:**

இதில், பாசான முருக்குணம் வேதை, கெந்தக பஷ்பம், துருசு சுன்னம், சிந்துரபற்பம், தாளக பற்பம், நாகவேதை, வெல்வங்க பற்பம், பாசான முருக் கினம், தாம்பூர பற்பம், றசவெண்ணை முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 911 சுவடி எண்: 432(a)

## அகத்தியர் மதிவெண்பா நூறு

ஏடுகள்: 10. ஏட்டின் நிலைமை: மிகப் பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு: 12—13 வரிகள். அளவு: $20\frac{1}{2}$X4 செ. மீட்டர்.

கி. எண்ணிக்கை: 400. ஆசிரியர்: அகத்தியர். எழுத்து: தமிழ். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஹரி ஓம்: **அகஸ்த்தியர் மதிவெண்பா நூறு**

ஆதிசிவன் பாதமதை யன்புடனே நெஞ்சில்வைத்து
சேதிமதி வெண்பாவைச் சொல்லுவே—நீதியுடன்
வாலை யிருபதத்தை வாக்கிலே வைத்தருள
காலையின்மேல் யேருசிவன் காப்பு. 1

காப்பான ஐங்கரனே கந்தன்வடி வேல்முருகன்
வாய்ப்பாகும் நெஞ்சில் மனங்கொண்டு—ஏர்ப்பாகத்
தவமுனிவர் சித்தரிசி சத்தியனூல் களெல்லாம்
நவமணியா மதிவெண்பா நத்து.

**முடிவு :**

அரிவா லறிந்துகொண்டு ஆசையெல்லாந் தான்போசு
நெரிவாக ஞானநிலையில் நில்லு—குறியாக
நான்சொன்ன வெண்பாவில் நத்துளது புத்திசொன்னேன்
மோன்சொன்ன மதிவெண்பா முற்றும். 100

அரிஓம் நமசிவாய
குருபாதம் நமஸ்தே.

**குறிப்பு :**

இது அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது, வெண்பாக்களில் பிழைகள் மலிந்துள்ளன. இதில் முப்புச்சுன்னம், சிற்றுமுட்டி, பேய்மிரட்டி, வெள்ளை விஷ்ணுகிரந்திகள், நஞ்சுகள், பில்லி சூனியம், குழந்தை தோடம் தீர்க்கும் பிரயோகங்கள், கெந்தகம், தாளக நீத்தினம், வெள்ளி வித்தை, பேரண்டம், குடத்துநீர் முதலியன உள்ளன. எழுத்துக்கள் தெளிவாக உள்ளன.

இது எமது சுவடி எண் 445 (a) D. 968 போன்றது.

வரிசை எண்: 912 வரிசை எண்: 432 (b)

## கொங்கணர் வேதாந்த ஞானச்சுருக்கம்

ஏடுகள்: 6. ஏட்டின் நிலைமை: பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு: 11—12 வரிகள். அளவு; $20\frac{1}{2} \times 4$ செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 200. ஆசிரியர்; கொங்கணர். முழுமை: முற்றும் இருக்கிறது.

தொடக்கம் :

மூலமுட னாறுதலங் கடந்து நின்ற
முச்சுடரி னொழிவாகி வெளியா யெங்குஞ்
சீலமுட னிறைந்துநிற்கு மனோன்மணியு மாகி
சிற்பரமாம் பருபரையைத் தினமும் போற்றி
கோலமுட னாறுமுக வடிவாய் நின்ற
குமரகுரு தாள்பணிந்து குண்டலியைப் போற்றி
ஞாலமுடன் கண்மணியின் கருத்தாய் நின்ற
நாதாந்த கணபதியின் காப்புக் காணே ! 1

முடிவு ;

காணப்பா சுண்ணம்விட்டால் செயநீர் போச்சு
கைமுரையாய் சாரம்விட்டால்க் கட்டே போச்சு
வீணப்பா சிங்கிவிட்டால்ச் சூதம் போச்சு
வேகாதே வேகுதற்குத் தீனீ ருச்சு
தோணப்பா திருவகத்தை விட்டா யானால்
சுழண்டுள்ளே புக்குவது தூரப் போச்சு
நானப்பா அறிந்தமட்டு மினத்தைச் சொன்னேன்
நளினமதா யடியாற்கு மடியேன் தானே ! 35

முற்றும்.

குறிப்பு :

இதில், கல்ப்பமுண்ண, சறக்குக்கட்டினம், முதலியன உள்ளன. முடிக்கும்போது 'அடியார்க்கும் அடியேன்' என்று கூறியிருப்பது சுந்தரரை நினைவுபடுத்துகின்றது. இது இச்சுவடியின் சிறப்பாகும்.

வரிசை எண்: 913 சுவடி எண்: 432 (c)

## சுப்பிரமணிய சுவாமி சூத்தக்கியானம் இருநூறு

ஏடுகள்: 30. ஏட்டின் நிலைமை; பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு: 12—15 வரிகள். அளவு: $20\frac{1}{2}$X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1200. ஆசிரியர்: சுப்பிரமணியக்கடவுள். முழுமை: முற்றும் உள்ளது.

**தொடக்கம் :**

அண்டபரு பரமான பரையின் பாத
மையனெங்கே ளாதிவஸ்த்து பதமும் போற்றி
(தொண்ட)ர்களே மெஞ்ஞானி பாதம் போற்றி
சொல்லுகிறே னுபதேச மிருநூறு தன்னை
மண்டலிகர் மகாயோகி மதிக்க வென்று
மருவில்லா ஞானமதை பாட்ட வேயான்
கண்டவர்கள் கண்ட்ரகோ டாலியாக
கண்காண ஞானமதைக் காட்டு வோமே. 1

**முடிவு :**

முத்தியதுக் கிதுபோலே முத்தி யில்லை
மும்மூலங் கொள்ளாட்டால் மோஷ்ச மில்லை
சித்தியதுக் கிதுவிட்டால் சித்தி யில்லை
சிதம்பரத்தி நடனஒழி காண்ப தில்லை
பத்தியதுக் கிதுதவிழ்த்தால் பத்தி யில்லை
பருதிமதி சுழிமுனையில்ப் பாய்வ தில்லைப்
புத்தியதுக் கிதுபாற்கில் புத்தி யில்லை
பூறணைத்தில் மனம்நிலைக்கப் பொருளு முற்றே! 200

முற்றும்.

**குறிப்பு :**

இதில், கற்பங்கொள்ள முறை, பத்தியம், கற்பம், வாசிகொள்ளும் வகை, கற்பமுண்க விபரம், சிரஞ்சீவியாகும் விபரம், பொதிகையிலிருக்க மார்க்கம் முதலியன உள்ளன. பிழைகள் அதிகமிருப்பினும் எழுத்துக்கள் தெளிவாக உள்ளன.

வரிசை எண்; 914 சுவடி எண்: 432 (d)

## புலத்தியர் சூத்திரம் பதிமூணு

ஏடுகள்: *3.* ஏட்டின் நிலைமை: பழுதுபட்டுள்ளது. பக்கத்திற்கு: *11—13* வரிகள். அளவு: $20\frac{1}{2} X 4$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *100.* ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும் இருக்கிறது.

தொடக்கம் :

திருவிருக்கும் பொதிகைமலை தன்னில் வாழுந்
　　தெஷ்சணு மூற்திகுரு பதத்தைப் போற்றிக்
கருவழலை வுருவெடுத்த மார்க்கஞ் சொல்லக்
　　கரிமுகனும் அறுமுகனுங் கமலத்தாளு
மிருவினையை யுருப்படுத்தும் வேதன் தேவி
　　யின்பமுட னவர்களுட பதத்தைப் போத்தி
அறிவுருவாய் விளங்கிமன தரிவாய் நின்ற
　　அப்பொருளை யெப்பொழுது மறிஓம் காப்பே! 1

முடிவு ;

முத்திதருங் குருமுனி பதத்தை நித்த
　　முனைமூக்கு மத்தியிலே யூணிப் பாரு
சித்திதரும் யுத்திதருங் கருமம் போக்குஞ்
　　சிகச்சால மாய்கையெல்லாந் தீருந் தீரும்
பத்தியுட ஞசானை நித்தங் காருப்
　　பணிவிடைகள் தப்பாமல்ப் பாரு பாரு
அத்திபுர மேல்வடம் ஐயன் கோவில்
　　அடையாளம் தினமேரு மறிவால் காணே. 13

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், வழலையுட பிறப்பு, வழலைக் கருவை முடிக்கும் முறை, அதன் பெருமைகள் ஆகியன பாடலாயுள்ளன. பாடல்கள் சிறப்பாக உள்ளன.

வரிசை எண்: 915　　　　சுவடி எண்: 432 (e)

## அகத்தீசர் பாடிய சல்லியச் சூருக்கம் பதினஞ்சு

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை: பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு: 9—12 வரிகள். அளவு: $20\frac{1}{2} \times 4$ செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 100. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

சீருன மணிக்குடலை உடலைப் பத்தி
　　செளித்திடவே உந்திதனில் சொல்லக் கேளு

வீனுன உச்சிக்கி வொன்றே மூலம்
　　வரைந்துநிற்கும் உடல்தன்னில் வரவே கேளு
பேறுன தாமரை தன் யிதளில் நின்று
　　பெருகவே வந்துவிடுங் குடலைப் பத்தி
ஆரார்க ளறிந்திடவே சல்லி யத்தில்
　　அப்பனே கருவொன்று காட்டி னேனே! 1

முடிவு :

விடாதுபார் விறுமகஸ்த்தி மகஸ்த்தான பாபம்
　　விதிப்படியே துடருமடா வித்தை பாரு
யிடறுகச் செய்வதில்லை நாய மார்கள்
　　யெடுத்தாடும் வித்தைகளோ வனந்தங் கோடி
படறுன பறமரக சியந்தா னப்பா
　　பாத்தவர்க ளிம்மட்டோ தொழில்க ளென்பார்
சடமான உடல்கருவி லறிந்து செய்ய
　　சல்லியத்தின் சூஷ்த்திரத்தில்ச் சாத்தி னேனே. 15

முற்றும்.

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இந்நூல் சல்லிய முனிவர் செய்த சோதிட நூலினும் வேறுபட்டது.

---

வரிசை எண்: **916** சுவடி எண்: **432 (f)**

## நந்தி நூல்—52

ஏடுகள்: 11. ஏட்டின் நிலைமை: பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு: 10—12 வரிகள். அளவு: $20\frac{1}{2}$X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 400. ஆசிரியர்: நந்திகேசுவரர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

சத்திமா திருந்தாள் போற்றி
　　செயகற்ப மறிந்து கொள்ள
அத்திமா முகவன் பாதத்
　　தடியிணைப் போற்றி நித்தஞ்

சித்தியால் சித்தாந் தத்தில்
சிறக்கவே சுருக்கம் பாட
புத்தியி லிருந்து ஞான
பூறணங் காப்ப தாமே. 1

முடிவு :

ஆனாலு மின்னூல்தான் அன்பத் தொன்று
அடிதொட்டு ஆதிமுத லந்தம் பாரு
சீனாறி சீயெனவே வுலகத் தோர்கள்
செப்பினா ரிப்பொருளைத் தெளிவாய்க் காணாற்
வானாநீ தாயெனவே வருந்திக் கூவ
மகத்தானச் சித்தாந்த மறுவிப் பாய
தேனான தேனமுற்தம் போலே யானுஞ்
செப்பினதோர் சித்தாந்தச் சுருக்க முற்றே. 52

காலம் : இல்லை.

குறிப்பு :

இது சித்தாந்தத்தினைச் சுருங்கச் சொல்வதாகும். தலைப்புக்கள் காணப்படவில்லை. எழுத்துக்கள் தெளிவாய் உள்ளன. பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. விந்து முதலானவற்றின் விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: **917** சுவடி எண்: 432 (g)

## அகத்தியர் அருளிச்செய்த அமாவாசி

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: பழுதுபட்ட நிலை.
பக்கத்திற்கு: 11—12 வரிகள். அளவு: $20\frac{1}{2}$X4 செ. மீட்டர்.
எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 100. ஆசிரியர்: அகத்தியர்.
முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

சீர்பெருகு ஞானகுரு பரனைப் போற்றி
சிதம்பரத்தி லாடுகின்ற மணித்தாய் போற்றி
கார்பெருகுங் கதிர்மதியுங் கண்தன் வேலன்
கருணைமலர்த் தாள்பணிந்து பூறணத்தைப் போற்றி
பேர்பெருகுஞ் சித்தாதிமுனி ரிஷிகள் தேவர்
பெருமையுற்ற பெரியோர்கள் தன்னைப் போற்றி

தார்பெருகு மமாவாசி தன்னைக் காண
தண்மையுட னெங்கரனைப் போற்றி னேனே. 1

**முடிவு :**

மாதாந்த ரெத்தமல்லோ சடல மாச்சு
விஷமான தந்தையல்லோ விந்து வாச்சு
நாதாந்த விந்துரெண்டுஞ் சமர சத்தில்
ஞட்டிப்பார் நாதவிந்து நம்முள் ளாச்சு
வேதாந்தஞ் சொல்லாது மவுன வாழ்க்கை
வெளியொளியாய்ப் பிரணவத்தே மேவுங் காலம்
போதாந்த மேலாச்சு யெமனும் போச்சு
பூரணத்தின் நூலைப்பார் புத்தி தானே! 8

முற்றும்.

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

அமாவாசை, பௌர்ணமி பற்றிய செய்திகளையும், நாதவிந்து செய்திகளையும் கூறுகின்றது இது. உடற்கூற்று வண்ணம் போலும், சித்தர் பாடல் போலும் காணப்படுகிறது.

* *

வரிசை எண்: 918 சுவடி எண்: 432 (h)

## நந்திகேசர் சுவாமியவர் வாக்கியம் மூன்னூறு

ஏடுகள்: *41.* ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: *10—13* வரிகள். அளவு: $20\frac{1}{2}$X4 செ.மீ, எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *1600.* ஆசிரியர்: நந்திகேசுரர். முழுமை: முற்றும் இருக்கிறது.

**தொடக்கம் :**

மூலமென்ற கணபதியின் பாதம் போற்றி
முற்றிபெற்று சுழிமுனையின் முனைமேல் நின்று
கோலமென்ற குண்டலிக்குள் குகைதா னுண்டு
குகைதனிலே குருபரனுஞ் சத்தி வாழ்ந்தாள்
சீலமென்ற தவமகிமை பெத்த சித்தர்
தேடியதோர் வீடதனை தெளிந்து பாத்து
ஞாலமென்ற கொடிமறத்தின் கீளே நந்தி
நாடிநின்ற பீடமது ஆதி காப்பே. 1

முடிவு :

பலிக்குமடா சாஸ்த்திரத்தை வெளிவி டாதே
பாடியதோர் கருவெல்லாம் பொருள்ச்சொல் லாதே
கலிக்குமடா செய்தொழில்கள் சிவன்கிருபை யாலே
கடினமென்ற சித்தர்களு முனிவ ராலே
சொலிக்குமடா வொன்னுவி லீசுபரியாள் கிருபை
தோணுமடா கருக்குருவும் நன்றாய்த் தோணுங்
கெலிக்குமடா நந்திமுன்னூர் சொன்ன வாக்கியங்
கெதிபெற்று சூஷ்சகா றணமு முற்றே. 304

முற்றிபெற்று ஞானறிவு தங்கி நின்று
மோஷ்ச நிலே தானறிந்து சித்தும் பெற்று
பத்திநின்ற சுடரொளியைப் பதிவாய்க் கண்டு
பளக்கத்தால் வாசிநின்ற தலமுங் கண்டு
சித்திபெற்று கருவினுட சூஷ்சங் கண்டு
தெளிந்தமதி மாய்கைவிட்டுச் சிவமே யென்று
சத்திநின்ற விடங்காணப் பேறும் பெற்று
சகலவுயிர் தானவனாய் முத்தி யாமே. 305

குருநமசிவாயர் துணை.

காலம் : இல்லே.

குறிப்பு :

இதில் கல்பங்கொள்ள வகை, கற்பமுண்ண, பத்தியம், சீஷன் மனமறிவது, சீஷனுக்கு உபதேசிக்கும் வகை, சீஷனல்க்கிடருவரும் வகை, நற்சீஷனுக்கு ஞானஞ் சொல்வது, அமுர்த கற்பமுண்ண, வஸ்த்து ஷமம், நிருவிகற்பம், ஊசி நீர், கல்பங்கொள்ள, சித்தண்ட கல்ப்பம், றவிமெழுகு, காயாதி கல்ப்பம், அண்ட மெழுகு, சந்திரன் மெழுகு, அயங்காயம், அஞ்சனம், கிருஷணம், மோகனம், பேதனம், தம்பனம், உச்சாடனம், மாறணம், கற்பம், அருநீர், முப்பூ, துருசு சுத்தி, கெவுரி வெண்ணே, சிவயோகம், அமுர்த ரசங்கொள்ள, காயாதி கற்பங் கொள்ள, பொன்முசுட்டை கற்பம், மும்முற்தி தயிலம், முப்பூ முடிக்கும் பாகம்' கெந்தக பற்பம், மறப்பு மை, வசிய மை, அஞ்சன மை ஆகியன உள்ளன.

வரிசை எண்: 919 சுவடி எண்: 432(i)

## அகத்தீசர் வாக்கியம்—முப்பு அன்பது

ஏடுகள்: 9. ஏட்டின் நிலேமை: மிகப்பழுது, பக்கத்திற்கு: 11—13 வரிகள். அளவு: $20\frac{1}{2} \times 4$ செ. மீ. எழுத்து: தமிழ்.

கி. எண்ணிக்கை: 400. ஆசிரியர். அகத்திய முனிவர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

வானும் புவியும் மதியுங் கதிரொளியுந்
தேனுந் தெளிந்த சிவகுருவைத்—தானுந்தா
ஞல்மறையு மாராய்ந்து நன்னூலா யன்பதையுங்
கோலமுடன் கிளேசனருள் கூறு. 1

**முடிவு:**

காலான வயித்தியத்தை யுறுதி யாக
 கைமுறைகள் தப்பாமல் கருவாய்ச் செய்தால்
பாலான மனமு......... பிறம மாவான்
 பாரிலே வாழ்வதற்குக் குருவு மாவான்
சேலான திருவுடைய செல்வ ஞவான்
 சிந்தையிலே களங்கமற்ற சித்த ஞவான்
நாலான மணிபோற்றும் பிறமன் சொன்ன
 நலமுடைய முனிவன்மொழி நாடி முற்றும். 51

ஹரி ஓம்.
நமசிவாய குருவின் பாதம்.
நமஸ்த்து.

**காலம்:** இல்லே.

**குறிப்பு:**

இதில், உவருப்பு, கரியுப்பு, நிலவுப்பு, கல்லுப்பு, முப்புநிரை, முப்புச் சுன்னம், ஞாலத்தெசுகை, உருக்கினம், காந்தம், இரும்பின் பொடி, அப்புரக நவனீதம், கெருட பச்சைக்கல், கல்ஞர், சகஸ்திர பேதி, ஞகம், அண்டம், சங்கு, சலா சத்து, நவரெத்தின செந்தூரம், முலேப்பாலினிடை, நீத்தினத்தில் கெந்திகூட்ட அனுபானங்கள்; தீரும் நோய்கள், மாத்திரை முதலியன உள்ளன.

வரிசை எண்: 920 சுவடி எண்: 432(j)

## தெஷ்சணமூர்த்தியருளிய பரிபாஷை அஞ்ஞூறு முதலாங்காண்டம்

ஏடுகள்: 25. ஏட்டின் நிலேமை: மிகமிகப் பழுதுபட்டது. பக்கத்திற்கு: 9—11 வரிகள். அளவு: $20\frac{1}{2} \times 4$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 750. ஆசிரியர்: தட்சிணமூர்த்தி சுவாமிகள். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

பரம ஞான உதையத்தின்
பரஞ்சுட ருலகுக் கெல்லாஞ்
சிரமென உதித்த ஞான
தெய்வனு யகன்ருள் போற்றி
வரமென வகார யோக
மறைப்பினூல் பாஷை யெல்லாங்
குருமுனி தமிழாற் செய்ய
குமரனேங் கரன்ருள் காப்பே. 1

முடிவு :

தாக்கிப்பா ரிந்தனூ லஞ்சுகாண் டந்தான்
பாற்கில் சமுசியங்கள் தட்டுண்டே போம்
நோக்கிப்பா ரிந்தனூல் தனக்கு சாஷ்சி
ரோமரிஷி யஞ்னூறும் நந்தி னூலுந்
தேக்கிப்பா ரிதுனுலே தெரியா துண்டோ
சிவசிவா குருத்தேடி யலேய வேண்டாம்
பாக்கியமாம் நூலில்ரெண் டாங்காண்ட மய்யா
பாடுகுறேன் முதல்காண்டம் பறமா முற்றே. 101

காலம் : இல்லே.

குறிப்பு :

இதில் நூல்தொகை, விண்ணவர் மருந்து, பிறம கெற்பம், எழுநில அண்ட விபரம், மண்ணுந்தண்ணீர் விபரம், பிறமா விபரம், பிறவியின் கூறு, தீட்சை விபறம், அப்பு முப்பு விபரம், சித்தர்கள் கோள்சொன்னுர், சித்தர்கள் நூற்ருெகை, பிறம உப்பின் பெயர், மூன்று உப்பின் பெயர், இருபத்தஞ்சின் சொரூபம், முப்பதாருபெயர், தொண்ணூத்தாரின் பெயர், நூத்திருவத்தஞ்சின் பெயர், சவுக்காரமறியாமல் உலகவாதி கெட்டான், சுத்தகெங்கை விபரம், சாஸ்த்திர விபரம். யோனியின் விபரம் யோகறசவாதம், தார ரசவாத விபரம், விந்து நாதத்தின் பெயர், தாது ரச வாதம், பஞ்ச சுன்னக்கரு, பிறணவநீர், சத்தி தீஷ்சை, சிவதீஷ்சை, சத்திக்குஞ்சிவத்துக்கும் வயது, பெருமை, யோகிகள் நிலமறிந்து யோகஞ் செய்யவும், கதை, நூல், பாஷை கதையின் விபரம் அஞ்செழுத்தின் செய்கை, ஊமையெழுத்து காண்ட விபரம், மூன்றில் கற்ப யோகம், நாலில் மணி முடிக்க, ஞான சார்பு முதலியன உள்ளன. மிகச்சிறந்த நூலாகக் காணப் படுகிறது.

வரிசை எண்: 921 சுவடி எண்: 432(k)

## தெட்சணாமூர்த்தி பரிபாஷை—இரண்டாங் காண்டம்

ஏடுகள்: 23. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுதுபட்டது. பக்கத்திற்கு: 10—12 வரிகள். அளவு: $20\frac{1}{2}$X4 செ.மீ. எழுத்து; தமிழ். கி. எண்ணிக்கை: 700. ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது

**தொடக்கம்:**

முத்தணி நகையாள் வேத
முதல்வியைப் பாகம் வைத்த
சுத்தமெய்ஞ் ஞான ரூபச்
சுடரெனுஞ் சோதி பாதம்
நித்தமுந் தொழுது போற்றி
நீதிசொற் பாஷை நூலின்
புத்தமு திரண்டாங் காண்டப்
பொருளினைப் புகலு வேனே. 1

**முடிவு:**

வாரான யிக்காண்ட யிருநூறத் துள்ளே
வழலைகுரு செய்யுகின்ற மாற்கஞ் சொன்னேன்
கூரான மூன்றினிலே கற்ப மூலங்
குணமான பிடைபஞ்சீ கறணஞ் சொல்லுந்
தாரான நாலுலே யோகஞ் சொல்லுஞ்
சுத்தஉப்பை யெடுககும்வகை அஞ்சில்ச் சொல்லும்
சீரான உப்பெடுக்கும் வகையைப் பாரு
தெளிவான செண்டாங்காண்டஞ் சிவனூல் முற்றே. 100

அறி ஓம்
நமசிவாய
குருபாதம் நமஸ்த்து

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

இதில் தோசிகளறிய, ரசவாதத்துக்கு ஞானமறிய, நாலுசாதி வழலையின் விபரம், ரவி, மதி அங்கி மூன்றும் வழலை, பூநீரின் விபரம், ஈசன் உப்பின் விபரம், வெளியுப்பு பங்கின் விபரம், பாரையுப்பின் பேர், சிவ உப்பு, சத்தியுப்பு, சிவனுப்புயிருக்குமிடம். காலமறியவும். மாதமறியவும், சிவத்தின் பரிட்சை, பரம சிவன் உப்பு கைத்திடாது, சத்தி சிவன் சேர்ந்தால் காரமில்லை, சத்தி சாரம்,

வயசு நிர்ணயம், முடியுப்பு, உப்பு கட்ட, வழலைக்கி உகமை கலக்க, வழலை ஞாபகம், வாதமாகாதென்பது, வாதமாகாதென்பதற்குப் பரீட்சை. வழலை முடிக்க, வாதமாகும், வழலை சவுக்காரச் சுன்னம், கிளிஞ்சி சுத்தி, கிழிஞ்சி சுன்னம், அண்டச்சுன்னம், ஆயினுதம், வழலை சவுக்காரச் சுன்னம், வெடியுப்பு திராவகம், சூத செந்தூரம் வாதஞ் செய்ய சித்தியிருபத்தஞ்சு, வாருதியால் தங்கத்தை யாட்டுஞ்சுன்னம்; மால்தேவி, சுத்தகெங்கை, வழலைச் சுன்னம், சிவச்சுன்னம், உருக்கினத்தாதி யென்ற சுன்னம், பூறணமான சுன்னம், பறத்தின் சுன்னம், அமுதுண்ணல், காயாதி கற்பம் சித்தியாம் ஆகியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இதில் பல சுன்னங்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 922 சுவடி எண்: 432(1)

## தட்சிணாமூர்த்தி பரிபாஷை — மூன்றுங்காண்டம்

ஏடுகள்: 27. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 9—11 வரிகள். அளவு: $20\frac{1}{2} \times 4$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 800. ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது,

**தொடக்கம்:**

சிவமான பூறணமே நாத விந்து
சின்மயமாய் நின்றதொரு பறமே ஆதி
உவமான மில்லாத பறந்த னக்கு
முளையாகி நின்றதொரு நாதம் நாதம்
நவமான நாதவிந்து ரெண்டு மொன்றாய்
நளினமுள்ள பருதிமதி சுடர்தா னுச்சு
பவமான யிந்தனூல் மூன்றுங் காண்டம்
பருபரனே ஐங்கரனே காப்புத் தானே. 1

**முடிவு:**

ஆடுவா யகத்தியன்றன் அருள்வாக்கி யந்தான்
ஐயனே யித்தையிலம் பெருமை மெத்த
பாடுவார் பதினெண்பேர் நூல்க ளெல்லாம்
பாலகனே யித்தையிலங் கொண்டு சாடு
சாடுவாய் சகலசித்தர் நூல்களுக் கெல்லாம்
சற்குருவா மின்னூல்தா னஞ்ஞூ ராகும்
யேடுவாய் யெந்தெந்த னூல்கட்க் கெல்லாம்
யின்பமுள்ள முக்காண்டம் பூறணந்தான் முற்றே. 101

குருவே துணை.

**காலம்:** இல்லை.

**குறிப்பு :**

இதில் ஆகாச உப்பு, சவுமிய சாகரங்காண. நந்திஒளி காணும், பூசை தியானம், கணபதி தெரிசனை, முதலாவது வாசல், பறபிரம குருக்காணல், நகார தெரிசினம், பிறமா சரசுபதி காணும் யிரண்டாம் வாசல், விஷ்ணு லெட்சுமியுங் காணும் மூன்றும் வாசல், அனுகதத்தில் ருத்திரன், ருத்திரியுங்காணும் நாலாம் வாசல், சுழிமுனையின் பூசை, மயேசுபரன் மயேசுபரி காணும் அஞ்சாம் வாசல், ஆறும் வாசல், சதாசிவத்தின் சத்தியின் பூசை, பருபரத்தைப் பதினெண்பேர் பூசிப்பார், அகஸ்த்தீசர் பீடங்காணும் யேழாம் வாசல், பரையின் தெரிசினை பூசை, இந்த நூலுக்கு சித்தர் சாபம், இந்த நூலுக்கு சித்தர் சாப நிவர்த்தி, நூல்த்தொகை, வயித்திய நூல்த்தொகை, சால சொல் நூற்றெரகை, வயிறவன் சக்கறத்தியானம், சுப்பிரமணியர் சக்கறம், தியானம், சித்தர்களுக்கு அடையாளம், செகத்குரு, வல்லாரை கற்பம், செயநீறு, கல்ப்பங்கொள்ள, செந்தூர முண்ண, பத்தியம், நித்திரை செய்ய, கேசறத்தின் காயாதி கற்பம், காயாதிச் சுன்னம், மூதண்டத் தயிலம், அறுபத்துநாலு சித்து ஆட ஆகியவைகள் கூறப்பட்டுள்ளன. எழுத்துக்கள் தெளிவாக உள்ளன. அரிய செய்திகள் கூறப்பட்டுள்ளன

வரிசை எண்: 923 சுவடி எண்: 432(m)

## தட்சிணாமூர்த்தி பரிபாஷை—4-ங் காண்டம்

ஏடுகள்: 24. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8—11 வரிகள். அளவு: $20\frac{1}{2}\times 4$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 600. ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

பூறணமாம் பரிபாஷை நாலாங் காண்டம்
புகழ்பெரிய பூமாது நிறைந்த சோதி
வாறணமாம் வாலையபிராமி தேவி
வசனித்தா ளெந்தனுக்கு மௌன மாதி
காறணமாய் கருக்களெல்லாங் கண்டு தேரி
கருக்குருவா மிந்தனூ லஞ்ஞூ ராதி
சீறணமாய்ப் போகாமல் சித்த ருக்குஞ்
செப்பினேம் நாலாங்காண்டஞ் செப்பி னேமே! 1

**முடிவு :**

நாயரா மஞ்ஞூத்தில் பலிதஞ் சித்தி
நாதாக்கள் மறைத்தனூல் குருநூல் பீடம்
ஆயராமை யாயிரத்து சொட்சங் கண்டு
ஆகதுகை யஞ்ஞூத்தி லடங்கிப் போச்சு

நேயராம் அகத்திசன் அமுத வாக்கியம்
நவரெத்னம் நால்வேத முழுதுஞ் சொன்னேன்
மாயரா முக்கறுவாஞ் சூஷ்சா சூஷ்ச
மாதியா முகிந்ததைடயா நாலாங்காண்ட முத்தே! 10

ஹரி ஓம் நமசிவாய
குருவின் பாதம் நமஸ்த்து
வேலு மயிலுந் துணே.

காலம்: இல்லே.

குறிப்பு:

இதில் முப்பு முடிக்க, உப்புமணி, கல்லுப்பு, அண்டத்தில் மாவெடுக்க, பாவ மூர்தம் பனிநீர் உண்ண, மனதாலறிவு குரு, பளச்சாரின் பெயர், முப்புகுரு கெவுன குளிகை, ஞானசாரம், ஆராதாரதெரிசனே, மூலாதாரம், கேசரத்தின் தெரிசினே, யோகம் பார்க்கும் நாளில் போடுவது சக்கரம், சுவாதிஷ்டானம், விஷ்ணு லெக்ஷ்மியின் வீடு, மணிபூரகம், அனுகதத்தின் வீடு, விசுத்தியின் வீடு, ஆக்கினேயின் சதாசிவத்தின் வீடு, குருவின் உபதேசமான பிறகு நூல் பார்க்க வேணும், பூறண யோகாஷ்சரம், குருவின் மொழிகாண்க, நாலுவகை ஜாதி, தேசம், பூமியின் வறணம், திதிவாரபஷ்சம், ருசியில், நஷ்சேத்திர பருவங்கூடும் நாளறியவும் முதலியன உள்ளன. சிறந்த சுவடியாகக் காணப்படுகிறது.

வரிசை எண்: 924 வரிசை எண்: 432(ந)

## தெட்சிணுமூர்த்தி பரிபாஷை
## அஞ்சாங்காண்டம்

ஏடுகள்: 25. ஏட்டின் நிலேமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 9—11 வரிகள். அளவு: $20\frac{1}{2} \times 4$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1000. ஆசிரியர்: தட்சிணுமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

ஆதியா முதல்வனரு ளந்தம் போற்றி
அம்பிகா சத்தியடி கமலம் போற்றி
சோதியாம் நிறஞ்சனமாய் குண்டலியே போற்றி
சுழிமுனேயில்க் கருவரிந்த பிறமன் போற்றி
சாதியாம் பலவகையு குதித்தோன் போற்றி
சருவாணி உமையாள்சரஷ் பதியே போற்றி
மாதியா முனிவரொடு மறையோர் போற்றி
மகத்தான பரிபாஷை வாதங் காப்பே. 1

முடிவு :

(ம)துவென்றும் அண்டபகி றண்ட மென்று
மகத்தான அண்டம்பே றண்ட மென்றும்
பதுவென்றும் பறமண்ட மஞ்சாங் காண்டம்
பகருமொழி யேறண்டம் பதியு மென்றும்
அதுவென்று மௌன அண்ட மிதுவே யென்று
மகத்தான யென்குரு... ... ... ...
சதுவென்றுஞ் சற்குருவு மிதுவே யென்று
சமறசத்தின்...... மென்னுஞ் சாரன் முற்றே.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் அண்டக்கல் அறிய, அண்டபிண்டமறிய, முதல்ச்சுத்தி, வாலை ரசம், ஊசிநீர் ரெண்டாஞ்சுத்தி, மூன்றுஞ்சுத்தி, ரோமநீர் நாலாஞ்சுத்தி, பஞ்சமலம், முப்பூ, பூனீர் யெடுக்கும் நாளறியவும், **தீஷ்சையை மறந்தால் குருசாபம் பலிக்கும்**, வழலை மெழுகு, குருச்சுன்னம், விஷக்கல்லின் சுன்னம், நூலின் பெருமை, கற்பமுண்ணும் வகை, துலா ராசி, கருக்களின் விபறம், ஆருவகை தீஷ்சை, நிராதார தீஷ்சை, நிற்குணத்தின் தீஷ்சை, பூறணத்தின் தீஷ்சை, சத்தி உப்பு, தேசிநீரின் பெயர், ஊசிநீரின் பெயர், அண்ட வைப்பு, குருநீர், மௌனம், ஆகியவை உள்ளன. "ஓமதுதான் நிராதார தீஷ்சை" என்ற 69-ம் செய்யுள் இதில் குறிப்பிடத்தக்கது. மிகவும் பயனுடைய சுவடியாகுமிது.

வரிசை எண்: **925** சுவடி எண்: **432**(○)

## அகஸ்த்தியனருளிச் செய்த (வகாரம்) பதினறு

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 7—11 வரிகள். அளவு: $20\frac{1}{2} \times 4$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 150. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

ஆதியென்ற மூலகண பதியின் பாதம்
ஆடினதோர் சூஸ்த்திரந்தான் பதினறப்பா
தேடியே அண்டபிண்ட மெல்லாஞ் செத்து
சீராகப் பாடியதோர் யென்னூலப்பா

பாடினேன் சூறணசூஸ்த் திரத்துக் காக
 பரிவாகப் பாடிவிட்டேன் சூஷ்த்திர னூலே
நாடியே நந்தீசர் சொன்ன வாக்கியம்
 நன்றான மூலகண பதியே காப்பு. 1

முடிவு :

காணேதா நூற்றிலே மெய்ய தாகுங்
 கருவதுதான் அன்பதிலே மெய்ய தாகும்
பூணேதா னிந்தனூல் துரைகாண் பிக்கும்
 பூட்டினதோர் பூட்டெல்லாம் அஞ்சில்க் காணுந்
தோணவே கருக்குருவும் வளிதுரையு மாகுஞ்
 சுகமாகும் வேதைவழி யோட யேறும்
பேணவே பதினாறும் யிதுவே யாகும்
 பிலமாக அகத்தீசர் வாக்கிய முற்றே. 16

அறிஓம் நமசிவாயன் பாதம் நமஸ்த்து.

காலம் : இல்லை.

குறிப்பு :

இது அகத்தியர் பூரண சூத்திரம் பதினாறின்பாற்படும்.

வரிசை எண்: **926** சுவடி எண்: **432**(p)

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 3 ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 5—8 வரிகள். அளவு: $20\frac{1}{2} \times 4$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 50. ஆசிரியர்: அகத்தியர் முதலியோர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

| | |
|---|---|
| குடத்து நீர் | பனியிநீர் |
| சமுத்திர நீர் | உவர்மண் நீர் |
| மழையிநீர் | சேருநீர் |

ஆக நீர் வகை 6

பூமினாதமென்ற 1
பாறையுப்பு என்ற கல்லுப்பு 1

ஆகாச உப்பென்ற கம்பியுப்பு 1
இதுக்கு அமுரியுப்பென்றும் பேர்

மூன்றுஞ் சேரில் முப்பு வாச்சு
அண்ட மாச்சு பிண்ட மாச்சு.

**முடிவு :**

ஆட்டுவா யஞ்சுநா (ளா)க மைந்தா
அப்பனே வில்லைதட்டி ரவியிற் போடு
யேட்டிலே யெழுதவென்றால் என்ன லாகா
யென்மக்கா ளிந்தவில்லை யுலையி லூது
காட்டிலே யலைவானேன் வாத மெல்லாங்
கைக்குள்ளே சுன்னம்பா முப்பே யாச்சு
நீட்டிலே மண்ணும் விண்ணும் மலையும் பொன்னும்
நிலையாக யிதினாலே யெல்லா மாச்சே. 3

முற்றும்.

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

மூன்று ஏடுகளும் வெவ்வேறு ஏடுகளாக இருந்தபோதும் முக்கியமான ஏடுகளாக உள்ளன. இரண்டாம் ஏட்டில் அகத்தியர் கற்பத்தின் சாரம் கூறப்பட்டுள்ளது. மூன்றாம் ஏட்டில் 3 பாடல்களே இருக்கின்றன, தலைப்புத் தெரியாத அளவுக்கு பூச்சியரித்துளது. 'உவருப்பு, கல்லுப்பு, வெடியுப்பு மூன்றுங்கூட்டி ஆட்டுவாய் சாமமொன்று' என்று 2-ம் பாட்டில் கூறப்பட்டுளது.

வரிசை எண்: **927** சுவடி எண்: **433(a)**

## அகத்தியர் நூற்றைம்பது

ஏடுகள்: 48. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது: பக்கத்திற்கு: 4—5 வரிகள். அளவு: 30X2 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 600. ஆசிரியர்: அகத்தியர் முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

சீரணி கொன்றை சூடுஞ்
சிவனிரு பாதம் போத்தி
வாறணி முகத்தோன் பாதம்
வணங்கிநூத் தன்ப துஞ்சொல

பூறணி வாலை ஞான
　　சரசுபதி போத்தி போத்திச்
காறண மான செஞ்சொர்
　　கற்மசூத் திரங்காப் பாமே.

முடிவு :

சொன்னது துகைதான் நூத்து
　　அன்பது சூட்ச மாகும்
முன்னமே சொன்ன நாலினு
　　முக்கிய மின்னூல் சூஷ்சம்
வற்ணமே வாறு லோக
　　மாறண மதிக சூஷ்சம்
மன்னமே சொன்ன நூத்து
　　அன்பதும் அறிவீற் முத்தே. 149

குரு பாதார விந்தமே கெதி

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் 34-வது ஏடு இல்லை. இது 269 (b)-ன் வேறுபட்டது. 324 (b) போன்றது. இதில் முழுமையும் இருக்கிறது. இதில் சுத்திமுறை, லிங்கம், வீரத் துக்கு, பூரத்துக்கு, வெள்ளை, கெவுரி, குதிரைப்பாஷாணம், மனோசிலை,பவளபுத்து அரிதாரம், சிலாசித்து, கல்நார், கெருட பச்சை, சீனம் சுத்தி, வெங்காறம், குந்தி ரகம், கெந்தி சுத்தி, ரசசுத்தி, தொட்டி பாசாணம், மடல் துத்தம், சாஷ்த்திர பேதி, அஞ்சனக்கல், லோக சுத்தி, பூறம், காரீய சுத்தி, பொன்நிமிளை, அப்பிறக சுத்தி. வாளம் சுத்தி. சேங்கொட்டை சிவதை சுத்தி, அமுக்கிரு, கடுக்காய் லேகியம், நெல்லிக்காய் லேகியம், தானிக்காய் லேகியம், **மிளகு லேகியம்**, திப்பிலி லேகியம், வெள்ளுள்ளி லேகியம், **கடுகு லேகியம்**, **வெந்தைய லேகியம்**, **ஓம லேகியம்** **பெருங்காய லேகியம்** ஆகியவை உள்ளன. அபூர்வமான லேகியங் கள் இதில் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: **928** சுவடி எண்; **433(b)**

## தெட்சிணாமூர்த்தி சாலனூல் ஆயிரத்திருநூறு அன்பத்தோரட்சரம் 108 முதல்க்காண்டம்

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத் திற்கு: 4—7 வரிகள். அளவு: 24 X $2\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 70. ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

கொள்ளவே காளியொன்று உருவம் பண்ணி
குங்கிலிய மெழுகாலே வைத்துக் கொண்டு
மெள்ளவே நிதந்தோரும் பூசை செய்ய
விதமான சிவந்தபுஷ்பம் லட்சம் சாத்து
துள்ளவே நினைத்தபடி முடிப்பாள் பாரு
சுருக்காக யின்னமொரு வயனங் கேளே
அள்ளவே ஆயிரத்தெட் டெழுத்தி னாலே
அன்பத்தோ ரட்சரத்தை அரைந்திட் டேனே. *109*

**முடிவு :**

வச்சபொருள் கண்ணுற்ற ஆத்தாள் வந்து
வாசலிலே நின்றுகொள்வா ளிமன்வா ருமல்
உச்சிதமாம் உன்மனைவி உமையைப் போலே
ஒட்டிரெட்டி யாவளடா விந்து தானே. *117*

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இது, காளி பூசை மூலம் 108 அட்சரங்களைக் கூறுகின்றது.

வரிசை எண்: **929** சுவடி எண்: **433**(c)

## ஏகாட்சரம் 51—2-ங் காண்டம்

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5—7 வரிகள். அளவு: $24 \times 2\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 50. ஆசிரியர்: தெரியவில்லை. முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

ஓமெனவே ஆமெனவே யீமெனவே
ஊங்கார மாங்கார மாகச்செவி
பாமெனவே மாமெனவே மூலமந்திரம்
பார்க்குமுன்னே செவியடா ஆயிரந்தானே
நாமென்ன வோமென்னவே கோடிவீசு
நபியுடைய மா(ர)சூ லல்லாவாச்சு

யீபெனவே திரிசூல மகம்மதிறைசூ
　　லிறுவில்லா நவிநவியென்று லட்சமோது
தூமென்ன நீலகண்ட லட்சமோது
　　சூட்சமடா ஒருகோடி யாடுந்தானே. 192

முடிவு :

அறிந்தள காட்சாம மதியி தப்பார்
　　அலைவார்கள் கோடிசித்தர் அபய மாக
பரிந்தகிளி யிரந்தவளி யறியச் சொன்ன
　　பேதனத்தை யினிமூன்றால் காண்டஞ் சொல்லு
முரிந்தகதிர் எதிராளி யரிந்தா னுனல்
　　மோசம்வரும் பிரர்களுக்கு சாமானி யாதேநீ
வெரிந்தவட விடமுயக்கம் நந்து வாக்கில்
　　விதியாளி வீணுசையரிந் துணரு வானே! 195

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இந்த இரண்டு ஏடுகளிலும் 4 பாடல்களே உள்ளன. இதுவே இரண்டாங் காண்டமென்று பேசப்படுகிறது. 4-ம் பாட்டில் 3-ம் காண்டம் சொல்லும் என்றதினுல் இதில் 4 பாடல்களே என்பது தெரிகிறது. இதில் ரசூல், அல்லா என்ற சொற்கள் காணப்படுவதால் இது ஒரு மகம்மதிய மகான் எழுதியதாக லாம்.

இதன் பின்னர் ஒரு ஏட்டில், சக்கரங்களும் பூசை முறையும் கூறப் பட்டுள்ளன.

வரிசை எண்: **930** 　　　　 சுவடி எண்: **433(d)**

# தெட்சிணுமூர்த்தி பூசாவிதி

ஏடு: *1.* ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: *4.* வரிகள்: அளவு: $24 \times 2\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *10.* ஆசிரியர்: தட்சிணுமூர்த்தி. முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

பூருனீ சூரியனைப் பூசை பண்ண
　　பன்னிரண்டு மொன்றுன பறுவங் காணு

...... கலையில் பன்னிரெண்டுங்
　　கருவதுவாம் ஏம்அவ்வும் வசியந வென்று
சேருனீ சூரியதேவாய நமா வென்று
　　செப்புவாய் மேவுலவும் வசியநமா வென்று
கூறுனீ சத்திரதே வாயநம வென்று
　　குகைவாச லூரடுபோய்த் தாக்கு தாக்கே! 91

முடிவு :

இல்லை

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் ஒரு பாடலே உள்ளது.

---

வரிசை எண். 931 சுவடி எண்: 433(e)

## அகத்தியர் வயித்திய சூத்திரம் 300

ஏடுகள்: 61. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5—6 வரிகள். அளவு: 30X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1200. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: குறைபாடுடையது (தலைப்பு ஏடு இல்லை)

தொடக்கம் :

குன்று மலையாள் துணை.

காலுந் தலையுங் கடந்துநடு வாகிநின்ற
மேலுந் துரிய விளக்கமே—காலா
வயித்திய முன்னூறு மேசூஸ்த்திரம் தாயவிளங்க
வயித்தியரு ளுங்கல்ண சா.

குருபாத முன்னிற்க.

பூதலத்தில் தென்பொதிகை தன்னில் வாழும்
　　பூரணமே யென்குருவே சின்மயமே யய்யா
மாதவத்தா லட்டசித்தி யெட்டும் பெற்ற
　　வரிசையினுல் வைத்தியனூல் வகையாய்ச் சொல்வேன்
போதகத்தின் முகத்தானைக் கடைகோட் டானை
　　புட்குழியில் விழுந்தானைப் புதல்வன் தன்னைச்
சாதகமாய் மனமடங்கி அறிலில் கூடித்
　　தற்பரமாய் நின்றகண பதியே காப்பு. 1

முடிவு :

முறிந்துபோம் குணய...... ளருக்குபட மூலம்
மூலத்தில் கிருணியொடு ஆனந்தமே.
முறிந்தவிதி மானந—யி—வ உணக்கண......
... ... ... ... ... ...
... ... ... ... ... ...
சொல்லுகிறேன் வெனமுள்ளிப் பழத்தின் சாறு
தொன் ... ... ... ... ...
... ... கத்திரியின் பழத்தின் சாறு
... ... ... ... ... ...
வெள்ளுறே னீருள் வாக்கா ... ...
வெள்ளு ... ... ... ...
விளங்கவே குறட்டையுடன் பழத்தின் சாறு
மல்லுறேன் படியொன்று வகை ... ... ...

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் காந்தத்தின் சத்து, செந்தூரம், சலாசத்து சுன்னம், அப்பிரக சுன்னம், அப்பிறக சத்து, பொன் நிமிளை சத்து, தாளக பற்பம், சூத பற்பம், வெப்புத் தயிலம், வீளி சூரணம், அண்ட சத்து. லேகியம், அப்பிரக செந்தூரம், சக்கரை, அமுற்த லேகியம், கருனை செந்தூரம், துரிசு செந்தூரம், அரபொடி செந்தூரம், லேகிய செந்தூரம், பளத்துருக்காய், வெண்கல செந்தூரம், முத்துமணி னுகை செந்தூரம், தாளக செந்தூரம், தாம்புர செந்தூரம், நவ சிந்தாமணி லேகியம், அயக்காந்த செந்தூரம், வங்க செந்தூரம், வயித்திய தீட்சை, பூனீறு வித்தை, கிளிஞ்சி சுன்னம், அண்டச் சுன்னம், லிங்க மயக்காந்த செந்தூரம், அயச்சுத்தி, துளசி லேகியம், வீரிய விருத்திக்கு அடை, ஞகத்தின் செந்தூரம் ஆகியவை உள்ளன.

8, 9-வது ஏடுகள் பாதியாக முறிந்துள்ளன. இச்சுவடியில் தலைப்பு இல்லை. இது 235 (a), 251 (b) போன்றது.

இதன்பின்னர் ஒரு ஏடு நூல்களின் பட்டியலுடன் காணப்படுகிறது.

---

வரிசை எண்: **932** சுவடி எண்: 434(a)

## கொங்கணர் சுவாமியருளிச் செய்த கடைக்காண்டம் அன்னூறு

ஏடுகள்: 92. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: $38 \times 3\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து;

தமிழ். கி. எண்ணிக்கை: 3500. ஆசிரியர்: கொங்கண முனிவர். முழுமை: முற்றும்.

தொடக்கம்:

அண்டரண்டங் கடந்தபொருள் நிற்கு ணமாய்நின்
 றளவில்லா நிற்ம்மலமே சூட்சா சூட்சம்
மெண்டிசையும் பரந்துநின்ற அஞ்சனமே யாகி
 யேகசச்சு தானந்த தற்பரமாம் ஞானங்
கொண்டதொரு பூரணமென் ளுளுங் காப்புக்
 குறியான வெளிப்பாளு மொளிப்பாளுங் காப்புப்
புண்டரீக வெளியொளிப்பால்ச் சுளினை மேவும்
 போதமுரும் வேதாந்தக் காதிக் காப்பே. 1

நூல்

ஆதியே தந்தமே தகண்ட மேது
 வப்புரத்தை நின்றபூ றனந்தா னேது
நீதியாய் நெறியேது நினைவங் கேது
 நேராத சுழினைதனை நேரா தாற்குச்
சோதியே துரியமென்ற துரிய மேது
 துரியாதீ தங்கடந்த சுருதி யேது
போதியா தொருமனதாய்ப் பெலக்க வேணும்
 பிலத்தாக்கால் மவுனமது பெலக்குந் தானே!

முடிவு:

விட்டகுறை யாலேதான் தேவி தோத்திரம்
 விளம்புனேன் பொரிபுலன்கள் காணும் வாயுவு
பட்டணமா மண்டல மண்ட பிண்டம்
 பரமபதம் போவெண்டிச் சொன்னே னய்யா
நிஷ்டையெல்லாம் ஏகவஷ்த்து நெடுமா லின்ற
 சக்கரமே மவுனபீடம்?
வட்டமதை ஓரெழுத்தென் றறியச் சொன்னேன்
 மகத்தான ரவிவட்டம் மான வாரே. 500

வாரான சாஸ்த்திரத்தி லாரு காண்டம்
 வகைவகையாகக் குருக்கியதில் மூன்று காண்டங்
கூரான கடைக்காண்ட மிந்த ஞானங்
 கொட்டினேன் அஞ்ஞூரு சீழ்சர்க் காசு

வீரான நடுக்காண்ட மன்னூருஞ் சொன்னேன்
வேதைஇடு முதற்காண்ட மன்னூருஞ் சொன்னேன்
தாரான மூன்றுக்கு மூன்று சூஸ்த்திர ந்
தப்பாமற் சொட்சமா ந் தெளிந்த முற்றே. 501

கொங்கணர் சுவாமி கடைக்காண்டம் அன்னூரு முற்றும்.
குருபாதமே கெதி
வாலாம்பிகை கிறுபை உண்டாகதாகவும்.
பரிபூறண கிடாட்சம் உண்டாகதாகவும்.
கந்தசாமி துணையாகவேண்டியன.
முத்தய்ய சுவாமி பரிபூறண கிடாட்சமாய் முன்னிற்க வேணும்.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதன் முன்னர் அட்டவணை எழுதிய ஏடு ஒன்று இருக்கிறது.

இதில், தீட்சை வகை, சத்தி பூசை, வாசியோகம், வயிரவன் பூசை, கணபதி பூசை, அத்தீசுவரன் பூசை, சுப்பிரமணியர் பூசை, தெட்சணாமூர்த்தி பூசை, ஆராதார பூசை, விஷணு பூசை, ருத்திர பூசை, சிதம்பர பூசை, சத்தி தீட்சை, அகத்தீசர் தீட்சை, பனிரண்டு தீட்சை, பதினன்கு தீட்சை, யாகசாலை கட்ட, ஏம குண்டம். மதிசாய்கை அப்பியாசம், நாள் ராசி, பிறவைமறிய, வளலை, பொரி புலன் பூத சக்கரம், கௌசக்கிற பீசம், கமலமறிய, பிண்டம், கற்ப முருக ஆகியவை உள்ளன. 43, 44-ம் ஏடுகள் முறிந்துள்ளன. இது 263 (a) போன்றது. ஆனல் பாட வேறுபாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

வரிசை எண்: 933 சுவடி எண்: 434(b)

## அகத்தீசுவர சுவாமியார் தீட்சைவிதி

ஏடுகள்: 36. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 38X3½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1300. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும் உளது.

தொடக்கம் :

வானைத் தாவிய பொதிகை மகத்தான
ரிஷியுடைய வாக்கில் நேர்மை
பானைத் தாவிய பூசை பரிவான
சிவயோகம் பனபொர் கேளீற்

மீனைத் தாவிய ராசி விளங்கி நின்ற
கன்னிமுதல் வில்லு மேழம்
சேனைத் தாவிய துலாத்தின் சென்ம
ராசிக் கருவைச் செப்பு றேனே! 1

செப்புறேன் துலாத்தோற்குத் தேவிமுதல் வாசி
சீவனெடு மந்திரங்க ளெல்லாஞ் சித்தி
ஒப்பிறேன் குளிகைசித்தி வாத சித்தி
யுசந்துநின்ற காயசித்தி யுறுதி யாகுந்
தப்பிறே னென்ருந் தவரொட் டாமல்
சாதகமாய் வாசினையால்த் தானே தூக்கும்
கோப்புறேன் னுலகத்தில் திசைதீட்சை பெற்று
கொடியசிவ யோகியெனக் கூறு வாரே. 2

முடிவு :

பணிமாறுங் காலத்தே மணியி னேசை
பாங்கான சேகண்டி னுத வோசை
பணிமாறுங் காலத்தே மவுன தோத்திரம்
பத்தியுறும் வாங்கையிலே லேகியத்தை யீய்ந்து
பணிமாறுங் காலத்தே சகல சித்து
பரிவாக தாவென்று கையில் வாங்கி
பணிமாறுங் காலத்தேப் பணிந்து தெண்டம்
பன்னுவாய் பூசைவிதி தீட்சை முற்றே. 202

அகஸ்த்திய சுவாமி திருவடிகளே சறணம்
குருபாதமே துணை.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் தசவிததீட்சை, பிராணுயாம விபரம், சக்கரலட்சணம், சிதம்பர சக்கர லட்சணம், அஷ்டகர்ம தசையறிய, சாபநிவர்த்தி, பாரபரை தீட்சை, வாலை தீட்சை, புவனை தீட்சை, சாமனை தீட்சை, சுப்பிரமணியர் தீட்சை, சிவ தீட்சை, 11வித தீட்சை முதயையன உள்ளன, இது, எமது சுவடி எண். 160, 288 (e) போன்றதேனும் இது சுத்தப்பிரதி போற் காணப்படுகின்றது.

---

வரிசை எண்: 934 சுவடி எண்: 434(c)

## கருவூரார் பூசாவிதி

ஏடுகள்: 6 (37—42). ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். அளவு: $38 \times 3\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து:

தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர்: கருவூரார்.
முழுமை: முற்றும் இருக்கிறது.

**தொடக்கம் :**

ஆதியென்ற வாலையவள் யிருந்த வீடு
ஆட்சரிய மெத்தமெத்த யதுதான் பாரு
சோதியந்த நடுவீடு பீட மாக
சொகுசுபிற யினித்திருந்தத் துரைப்பெண் ணுத்தாள்
வீதியென்ற அரிந்தெருவு மந்த வீதி
விளையாடி நின்றவெகு மானி கண்டாய்
பாதியிந்த மதிசூடி யிருந்த காமி
பத்துவய தாமிவளை வாமி தானே.

**முடிவு :**

தெழிவதற்குச் சூட்சமிது நன்ருய்ப் பாரு
சிவமிருந்து விளையாடுங் கருவைப் பாரு
மொழிவதற்கு யிதைவிட்டால் அரிவரோ ரில்லை
முன்னுதி அந்தமொடு நடுவுஞ் சொன்னேம்
சுளிவதற்குள் சுழியிருந்த சுளியைச் சொன்னேஞ்
சொல்லாத மவுனமுதல் கருவுஞ் சொன்னேம்
ஒளிபிறக்கும் நறுதியென்ற உண்மை சொன்னேம்
உற்ப்பனமாய்ப் பாத்தவற்க்கு தெளிவு தானே. 28

தெளிவுதனில் சிவந்தமேனி திருவடியு
முடியுமொரு சிணத்தில்க் காணும்
வளியதினில் வல்ல வளியுங் கூட்டு
மகத்தான வேதாந்த சித்துங் காட்டும்
ஒளியதினில் ஒளிவுதரும் ஒருத்தி சொல்ல
உற்ப்பனத்தில் உற்ப்பனமாம் உறுதி தோணும்
வெளிவுதனில் வெளியாகுந் நாதத் துள்ளே
விளங்கிநின்ற வாலைப்பெண் ணுதி யாமே. 29

குருபாதமே கெதி.

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இதில் வாலை பூசை கூறப்பட்டுள்ளது. எழுத்துக்கள் தெளிவாக உள்ளன.

வரிசை எண்: **935** சுவடி எண்: **434**(d)

## கருவூரார் சூஸ்த்திரம்

ஏடுகள்: 6 (43—48). ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். அளவு: $38 \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர்: கருவூரார். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

உறைக்குறேன் (மமை)ப்புதனே சித்திர மாக
லோகத்தோர் பிழைக்குதற்கு கருவை யெல்லாம்
திறைக்குறேன் சிவஞானமை தங்கித் தானல்
சித்திமுத்தி ரெண்டுமுண்டாம் பாரு பாரு
துறைக்குறேன் திறிலோகம் செயிக்க லாகும்
சொற்ப்பெரிய அதிசெயத்தில் வித்தை தானும்
தறைக்குறே னரிவுடனே செய்து பாரு
சாத்திரத்தின் கருவையெல்லா மிதிலே பாரெ. 1

**முடிவு :**

பாரிலே விளையும் பச்சை
பாரிலே விளையும் பத்து
கூறியத் தங்கச் செம்பு
மகுடவனு மாறு மாச்சு
காரியே னுலுஞ் சொல்வார்
காணலா மஞ்சு னதை
மாரியே தின்ரு னகி
லதிலாசம் பாகும் பாரே. 31

ஆகுமே வாத கெற்ப மதி ல்க்கரு வெல்லாஞ் சொன்னேன்
யோகமே லோக சிக்கி யுப்பினில் பிறவி யெல்ல
சாகுமே காரஞ் சித்தி சதாசிவனும்ங் கெட்டால்
போகுமே பாவ மெல்லாம் போக்குடன் செய்து பாரே. 32

குருசுவாமி துணே.
முருகய்யன் துணே.

**காலம் :** இல்லே.

**குறிப்பு :**

இது எமது மகால் சுவடி எண். 231 (f)-ன் வேறுபட்டது.

வரிசை எண்: **936** 434(e)

## அகத்தியர் ஞானநூல்

ஏடுகள்: 9. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 8 வரிகள். அளவு: $38 \times 3\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 450. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
பூமியென்றுந் திகியென்று படைத்த வாறும்
காரணமாய் தெய்வமெங்கும் நிறைந்த வாறுங்
கற்பமுண்டு ரிஷிகள்சா காத வாறுங்
வாரணமாய்ப் பறவைகளாய் நாற்கால்ச் சென(ன)
மானிடர்க ளுருகின்ற குலத்தின் வாறும்
பாரணமாய் விருஷ்சமதாய்ப் புல்ல தாகி
பாதாள சாகரமும் படைத்த வாறே. 1

படைத்தபடி யேதாலே நடந்து தென்றுல்
பாரா(ர்)கள் சிவயோகம் பாத்தோ ரய்யா
உடைத்துவிட்டேன் நூல்தனிலே ஞான மெல்லாம்
உற்பனமாய்க் கண்டறிந்தோன் மவனே சித்தன்
விடைத்தவிட்டை யஞ்செழுத்தாய் எல்லா மாச்சு
வேரான சிவமப்பா அங்கென்றோர் சொல்ல
அடைத்துவைத்த பொருள்களெல்லாம் வெளியாய்ப் பாடி
யப்பிலே மண்பிசைந்தான் குசவன்ந் தானே. 2

**முடிவு:**

அறிதப்பா ஊமையன்றி செவிடு மன்றி
அகங்கூனன் நொன்றியன்றி குருட னன்றி
அறிதப்பா பிறப்பதுதான் பிறந்தால் கேளு
அழகான முப்பத்தி ரண்டு ரூபம்
அறிதப்பா குறையன்றிப் பிறப்பா னாகில்
அழகான மெய்முகந்தா னிருக்க வேனும்
அறிதப்பா யிப்படியே பிறந்தா னாகில்
அருள்ஞான தமிழறிவ தரிது தானே. 50

**காலம்:** இல்லை.

குறிப்பு :

இதில், பிரமன் செயல் படைப்பது, பிறப்பின் வகை, கூன், குருடு, செவி டாய்ப் பிறக்கக் காரணம் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 937 சுவடி எண்: 435(a)

## கொங்கணர் வாக்கியம் கடைக்காண்டம் 500

ஏடுகள்: 120. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 25X3 செ. மீட்டர் எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 3500. ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆதியே தந்தமேது கண்ட மேது
அப்பிறத்தே நின் றபூ ரணந்தா னென்(று)
(நீதியே) தினவேது நினைவங் கேது
நேராத சுழிகன் தனை நினையா தாற்குச்
சோதியே துரியமென்ற துரியா தீதத்
தடங்குஞ்சு ருதியேது (?)
பேதியா தொருமனமே பிலக்க வேணும்
பிலத்தாக்கால் மவுனமது பிலக்குந் தானே!

முடிவு :

வாருன சாத்திரத்தி லாறு காண்டம்
வகையாகக் குறுக்கியதில் மூன்று காண்டங்
கூருன கடைக்காண்ட மிந்த ஞானங்
கொட்டினே னஞ்ஞூ றுஞ் சீஷர்க் காக
வீருன நடுக்காண்ட மஞ்ஞூறுஞ் சொன்னேன்
வேதையிடு முதற்காண்ட மஞ்ஞூறு சொன்னேன்
தாருன முன்னலக்கு மூன்று சூத்திரம்
தப்பாமல் சொடசமாந் தெளிந்த முத்தே. 500

சிவமயம்.
சிவகாமி துணை.
கொங்கிணர் சுவாமியார் துணை.

**காலம் :** இல்லை.

குறிப்பு:

இதில் நாற்பத்து முக்கோணம், பூசை பருவம், வடுகன் பூசை, கணபதி பூசை, நந்தீசர் பூசை, சுப்பிரமண்ணியர் தெஷ்சணமூர்த்தி பூசை, குபேரன் பூசை, பிரமத்தின் பூசை, விஷ்ணு பூசை, ருத்திரன் பூசை, மயேசுரன் பூசை, பராபரன் பூசை, மூப்பாழ், சிதம்பர பூசை, பூரக கும்பகரேசகத்துக்கு பிராணைய குறிப்பு, வாசியோகம், யாகசாலை, கும்பகம் குணம், ஓமம், குருனுத சாத்திரம், சீஷன் பத்தி, அனுஷ்டானம், வன்னுச்சிரமம் நாலில் சாங்கிரசாக்கினை, சீஷர் பக்குவம், மதி சாய்கை, அபான சுத்தி, தீபக்குறி, ராசி லெக்கணம், திதிவார யோகக் குறிப்பு, கிரகநிலை, மவுனம், சுழிமுனை, புவனை திரிபுரை, பெண்பூசை, நால்வகை யோனி, யெழுவகை தோற்றம், சிவகளையுற பதியறியக் ஞானம் ஆற்றுமாப் பிறப்பு, கேழ்விமுயல், அஷ்ட்டகற்ம பலகை, மணி வசீகரம், மாறணம், பேதனம், வித்துவேஷணம், உச்சாடனம், குருனுதன்றிரம், மோகனம், ஆகிறஷணம், அகஸ்த்தியர் சாபநிவர்த்தி, அரிசாப நிவற்தி, மயேசுபர சதாசிவ சாப நிவிற்தி, தீஷ்சை ஓத பொருத்தம், தரித்த முதல் பிறந்தனுள், காலதலையறிய, சிவகளை, பரமறிய சேவிக்க ஓரெழுத்து விபரம், வாதம், பூதமறிய, சக்கரமறியும்படி, அவத்தையறியும்படி, காலமறியும்படி, தோற்றமறியும்படி, பதியின் குணம், சடாதார பூசை, தோத்திரம், சுழினை அவத்தையறிய புரியஸ்ட்டகாசம், தலைமுழுக, சொற்கம், ஊழிகடிகை, கற்பூரதீபம், சிவனையறிய, பக்குவன், சீஷருக்கு பட்டாபிஷேகம், சீஷனியல்வு, சிவத்தின் யோகஞ் சாய்கை, சாம்பிராணித்தயிலம், சடல வாழ்க்கை, மவுன மூலம், மூன்றெழுத்தின் குறி, பாவ புண்ணியம் முதலியன உள்ளன.

இது *434* (a) போன்றது, ஆயினும் வேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

வரிசை எண்: 938 சுவடி எண்: 435(b)

## அகத்தீசர் பூசாவிதி

ஏடுகள்: *45 (121—165)*. ஏட்டின் நிலைமை: பழுதுபட்ட நிலைமை. பக்கத்திற்கு: *7—8* வரிகள். அளவு: *25×3* செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *1000*. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

ஆதார மாறு மகண்ட குருபாதம்
வேதா கமத்தின் விதிமாற்க்கம்— நாதமுறு
விந்துவிலே மூலம் விளங்கும்பூ சாவிதியால்
தந்திமுகத் தோன்கருணை தான்.

காப்பு

காறணமாஞ் சிவயோகிச் சித்தர் பூசை
களங்கமறச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளும்
பூறணமா மவுனமல்லோ ஞான வாழ்க்கை
புகளான அஷ்ட்டாங்க நடன மாடுஞ்
சீறணமாய்ப் போகாது சூசை மாற்கம்
செப்புகிறேன் மனந்தெளிந்த சித்தர்க் கையா
வாறணமா முகத்தோனே முதலே பூசை
மத்ததொரு பூசையெல்லாம் பிறகு செய்யே. 1

முடிவு ;

ஒன்றான மனத்துறுமை சீஷ னுக்கு
உரைசொல்லிப் பூசைவிதி உறைக்கச் சொன்னே
னன்றுட்டங் கண்ணுட்டில் மேவச் சொல்லும்
மேலான மவுனத்தைப் பத்தச் சொல்லுச்
சுண்ணும்பு மஞ்சளும்போல் குறிகள் காட்டி
சுழிலேயிலே நாட்ட முற கோடு காட்டி
கண்ணுடிக் குளக்கருவின் பதத்தைப் போற்றி
கருணைபெரும் பூசைவிதி கருவாய் முத்தே. 201

சிவமயம்
சிவகாமி துணை
தெஷ்சணுமூற்றி பாதமே துணை.
குருவே துணை.

**காலம்** : இல்லை.

குறிப்பு :

இதில் சமத்து, முத்திரை, யோகம், அஷ்ட்டகற்மவிதி, விநாயகர் பூசை, ஆசான், மவுனம், வாசி, ஆறு குறுஷணம், குக பூசை, சீஷன், சூரியன் குணம், முத்திரை, களகஞ்சா, னூல், சிவநியாசம், நவமுத்திரை, அறிவு, பிறம்பு, அமா வாசி முதலியன உள்ளன.

இது 19 (a), 352 (b) போன்றது.

வரிசை எண்: 939 சுவடி எண்: 435(c)

## அகத்தியர் தீட்சாவிதி

ஏடுகள்: 53. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 25X3 செ. மீட்டர். எழுத்து:

தமிழ். கி. எண்ணிக்கை: 1300. ஆசிரியர்: அகத்தியர்.
முழுமை: முழுதுமுளது.

**தொடக்கம் :**

வானைத் தாவிய பொதிகைமலையில் வாழும்
மகத்தான ரிழியுடைய வாக்கின் நேர்மை
பானைத் தாவிய பூசைவாம பூசை
பரிவான சிவயோகம் பண்போர் கேளு
மீனைத் தாவிய ராசி (?)
விளங்குகின்ற கன்னிமுதல் வில்ச மேடஞ்
சேனைத் தாவியத் துலாத்தின் சென்ம
ராசிக் கருவை செப்பி றேனே. 1

**முடிவு :**

பணிமாறுங் காலத்தே மணியி னோசை
பாங்கான சேகண்டி நாத வோசை
பணிமாறுங் காலத்தே மவுன தோத்திரம்
பத்தியுறும் வாலைகையி லேகியத்தை யீந்து
பணிமாறுங் காலத்தே சகல சித்தும்
பரிவாகத் தாவென்று கையில் வாங்கி
பணிமாறுங் காலத்தே பணிந்து தெண்டம்
பண்ணுவாய் பூசைவிதி தீஷ்ஷை முத்தே. 202

சிவமயம்
தேவிசகாயம்
குருபாதமே துணை
சிவகாமி துணை.

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இதில், கற்பம், காந்த சத்து முதலியன உள்ளன. இது எமது சுவடி எண் 160, 288 (e), 434 (b) போன்றது.

---

வரிசை எண்: 940 சுவடி எண்: 435(d)

## சுப்பிரமணியர் சொன்ன சுத்த ஞானம்

ஏடுகள்: 27 (219—245). ஏட்டின் நிலைமை: மிகப்பழுது.
பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 25X3 செ. மீ. எழுத்து:

தமிழ். கி. எண்ணிக்கை: 400; ஆசிரியர்: சுப்பிரமணியக் கடவுள். முழுமை; முற்றுமுளது.

**தொடக்கம்:**

ரசிதமாஞ் சுத்தக்கி ஞானம்
ரகசியப் பொருளில் தோன்றும்
சுசிதமாம் வாய்வு பஞ்ச
சுழல்கின்ற வட்ட மொன்றில்
உசிதமாந் தேய்வு அப்பு
உலாவியச் சிந்தை தன்னில்
தோசிகமாஞ் சித்த மாக்கித்
தொலங்கிய காப்புத் தானே.

**முடிவு :**

அரியெழுத்தின் விபரமிது அறிய மாட்டார்
அணிவரையில் யென்னூல்க்குச் சரினூலில்லை
பரியென்ற வரிசையினல் யீராறுங் கடந்து
பரமதிலே கலந்தவர்க்குப் பயனும் விள்ளும்
வெரிகொண்ட மோடர்க்குத் தெரியா தய்யா
விரைந்தோடிக் கடினய்போல் வேகஞ் செய்வான்
புரியென்ற ஞானமிது னூத்தொண்ணி னுள்ளே
குருச்சொன்ன விபரமெல்லாங் கூறினேனே. 101

சுத்தக்கியான முத்தும்.
கருணையானந்த சுவாமி துணை.

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இதில் ஞானம், தத்துவ ரூபமாகக் கூறப்பட்டுள்ளது. நான்கு ஏடுகள் ஒடிந்த நிலையில் உள்ளன.

வரிசை எண்: 941 சுவடி எண்: 436

## அகத்தியர் பூரண காவியம்—1000

ஏடுகள்: 108. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 38 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 3500. ஆசிரியர்: அகத்தியர். முழுமை; முற்றற்றது.

தொடக்கம் :

ஓமென்ற மூலகண பதியே காப்பு
உண்மையுடன் நடுமனையை உகந்து நின்று
ஆமென் ......... உள்க்கொண் டேதான்
அடங்க அந்த மனோன்மணியின் அருமை யாலே
ஊமென்ற .........தனை மவுன மாக
உருபெத்து கருபெத்து உறுதி பெத்து
தாமென்ற மசிதனையே ......... தாக்கி
சட்ச்சுதா நந்தமென்ற ஆதி காப்பே. 1

முடிவு :

காணவே வவர்களுட வேடங் கேளு
கருணையுள்ள ... ... ... ...
... ... ... ... ... ... ...
பூண்டுநின்ற வாசியடா யோக தெண்டு
தோணவே விபூதி ... ... ... ...
...ஞ்செழுத்து மாகி ... ... ... ...
போணவே வண்டவெளி நேச மாகி
பெருமணி ருத்திரா ... ... ... ...
பாரப்பா சிவபூசை வுதைய மாகும்
பதிவாக மதியமதி லமுது கொள்ளு
......ர்மையுடன் காலசந்தி வுச்சி மூன்றுங்
காரப்பா பூசைவிதி மறக்கா மல்த்தான்.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், முப்பு விபறம், வாலை ரசம், மோகனம், மாரணம், உச்சாடினம், ஆகிருஷணம், வேசனம், மந்திரசித்து, பிசாசு ஒட்ட, கட்டி கறைய, கெற்ப பிற சவிக்க, மாலைக்கண்ணுக்குத் தண்ணீர், கெற்பம் உண்டாக, நிஷ்ட்டை விவரம், கணபதி தியானம், பிரம்ம தியானம், மாலினதியானம், ருத்திர தியானம், சதா சிவ தியானம், முதல் தீட்சை, ரெண்டாந்தீட்சை, குரு தியானம், நாலாந் தீட்சை, அஞ்சாந்தீட்சை, ஆருந்தீட்சை, ஏழாந் தீட்சை, யெட்டாந் தீட்சை, பத்தாந்தீட்சை, பதினோராந்தீட்சை, முதல் தீட்சை, ரெண்டாந் தீட்சை, மூன் ருந் தீட்சை, நாலாந்தீட்சை, அஞ்சாந் தீட்சை, அஞ்சான் தீட்சை (2), ஆருந் தீட்சை, யேழாந்தீட்சை, யெட்டாந்தீட்சை, ஒன்பதாந்தீட்சை, பத்தாந்தீட்சை, அஷ்ட நாகம், பஞ்சக்கரத்தாள் பஞ்ச தீட்சை, சத்தரிசி, சத்தகன்னி, மந்திர தோத்திரம், அகாறம், பூறண லேகியம், குளிகை, செம்பு சுத்தி, அயச் செம்பு, முதலியன உள்ளன.

53-வது ஏடு வெற்றேடாயுளது. சில ஏடுகள் முறிந்துள்ளன. பின்னருள்ள ஏடுகளும் மிகமிகப் பழுதுபட்டுள்ளன.

இது எமது சுவடி எண் 361 போன்றது.

வரிசை எண்: 942 சுவடி எண்: 437

## ரோமரிஷி சூத்திரம் பாடல்—51

ஏடுகள்: 10. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 9—10 வரிகள். அளவு: 26 × 3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 250. ஆசிரியர்: ரோமரிஷி. முழுமை: முற்றும் இருக்கிறது.

**தொடக்கம் :**

மூலாதா ரத்தொளியாய் வெளியாய் ரூபாய்
முக்கோண வட்டமதில் முளைத்த தேவீ
மேலான பாதமது போத்தி யேத்தி
மெய்ஞான சித்திமுதல் வாதஞ் சொல்வேன்
ஆலால முண்டதொரு அய்யர் பாதம்
அழகான பார்பதித்தாய் அருளைப் பாத்தி(?)
சாலேர்க சாரூப சாமீ பந்தான்
சாயுச்சியங் கடந்தபாதந் தானே காப்பு. 1

**முடிவு :**

வாழ்ந்ததொரு ரோமர்சொன்ன அன்பத் தொண்டும்
வகையோடே தேற்ந்தவர்கள் யோகி யாவார்
அழுந்ததொரு ரிஷியாவான் சித்த ராவார்
அழகான ஞானியும் யீச ஞவார்
போழ்ந்ததொரு மாணுக்கள்சொன்ன நூலைப் புகழ்ந்து
பொதிகையின்மேல் தமிழ்முனிவன் திருந்திக்கொண்டு
யெழந்ததொரு உலகுக்கு வேணு மென்று
யியம்பினர் அன்பத்தி நன்று முத்தே. 51

ரோமரிஷி அன்பது பாடலும் சுப்ப அய்யர் கையினலே எழுத நிறைந்து முத்தும்.

**ஆகாசமே துணை.**

**காலம் :** இல்லை.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 353 (e) போன்றது. உடலிலுள்ள மந்தம் வாயுவு முதலான குணங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளன. வச்சிரபதி லேகியம், சந்த ஞதி தயிலம் முதலிய தலைப்புக்கள் உள்ளன.

---

வரிசை எண்: 943 சுவடி எண்: 438 (a)

## தன்வந்திரி குணவாகடத் திரட்டு 236

ஏடுகள்: 50. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 5—6 வரிகள், அளவு: 29 × 2½ செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1200. ஆசிரியர்: தன்வந்திரி. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

காந்தமு ஹுசியுங் கண்ட வாறுபோல்
சாந்தக முனிமொழி சாத்துந் தன்மையே
யேந்திடார்க் கெதிபிறர் இருண்ட சிந்தையில்
மாந்தரே கேளீ ரெவருமெஞ் ஞானமே.

விண்ணில்த் தேவர்க் கெல்லாம்
விளங்குமா முதல்வன் போலே
மண்ணினி மணிதா நோக்கி
வருஞ்சுடர் முதலே யென்ன
துண்ணிய நிதானந் தன்னை
நுவலவெ பவழ மேனி
கண்ணுதல்க் கடவுள் பெற்ற
கணபதி காப்பு தாமே. 2

முடிவு :

புவியோ ரறியக் கல்லுப்பும் இந்துப்
பதுளம் புகலக் களுநீர்
ருவமாய்க கொணர்ந்தே ஊர் வைக்க
நல்ல சுத்தி தானுகும்
செவிநீள் கொச்சை மூத்தி...த்தி லிரண்டு
வகையும் செங்க னல்மே
லாவிநீர் வத்தவுத் தியதா மென்றே
மேலோ ரருளி ஞரே. 236

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

முதன் முகப்பில் நூல்களின் தலைப்புக்கள் எழுதிய அட்டவணை ஒன்றுளது. அதன்படி இது முற்றுமுளது என்று தெரிகிறது. இதில் ருக்கிதகா சன்னி (?), சித்தவிப்பிர சன்னி, சீதாங்க சன்னி, கண்ட கூச்ச சன்னி, கறணிய சன்னி, விக்கிறுதை சன்னி, பகசி நேத்திர சன்னி, ரத்த விஷ சன்னி, பிறலாய சன்னி, சீவக சன்னி, அவினியா சன்னி, சுத்த சரீரம், பித்த சரீரம், சேற்றும சரீரம், வாத சரீரம், ரத்த சுரம், சேற்றும சரீரம், வாதத்தில் வாத சுரம், வாதத்தில் பித்த சுரம், வாதத்தில் சிலேற்றும சுரம், பித்தத்தில் பித்தம், பித்தத்தில் வாதம், பித்தத்தில் சிலேற்றுமம், சிலேற்பனத்தில் சிலேட்டுமம், சிலேற்பனத்தில் வாதம், சிலேற்பனத்தில் பித்தம், பித்த சேத்தும சுரம், பூத சுரம், அசீரண சுரம், அவிகாத சுரநாடி, சுக்கில சுரம், மாங்கிஷ சுரம், அதிசார நாடி விபரம், அதிசார விபரம், அதிசாத்திய சுரம், சுர நிதான விபரம், சுரத்துக்குப் பயித்திய விபரம், சுத்த லெக்ஷணம், நேத்திர லட்சணம், மலப்பருச்சை, நீர்ப்பருச்சை, வாதபித்த சிலேற்பன குணம், காயரோகம், பித்தபாண்டு உள்நோவு குட்டம், எரிகுணம், சத்தி குணம், வாத குணம், பித்த குணம், வலி குன்மம், கபால குன்மம், கலப்பெருங்குணம், மகா குன்மம், மேக வெட்டை, மேக விபரம், ரத்த சூரை, கெற்ப ரோகம், கெற்ப விப்புருதி, வெப்புப் பாவை, உளமாந்தை. நீராம்பல், வகுத்து நீராம்பல், பேராம்பல், வாதகரப்பான், சறுவாங்க வாதம், உள்க்குத்து, பிறவீச்சு, சறுசுங்க சுதவம், மகாகிருணி, வாயுகிருணி, மூலவாய்வு, அக்கினி மந்தம் என்பது வாதம், மகாகேசரி தயிலம்-கிரந்திக்கு, குடல்வாதம், சுடு வாதம், உழைவாதம், வற்ண வாதம், பித்தப் பிரகோபவம், அண்டவாதம், காமாலை விஷபாகம், அந்தரவாய்வு, பீலிகை, குண்டல வாய்வு, மந்தரகாசம், மூக்குநீர் பாச்சல், பீனிசம், கபால வருஷ்சி சன்னி சுத்து, சறுவாங்க வாது, சறுவாங்க வாதம், கொடிய கரப்பான், சுர சூசை, பெருவயிறு. மருந்தீட்டுக்குணம், கபால மருந்தீட்டுக் குணம், கபால விதி விபரம், கபால சன்னி, மகோதர வியாதி காரசாரசரக்கு விபரம், இரத்த சுத்தி, மனோசிலை சுத்தி, தாளிக சுத்தி, நாவி சுத்தி, பாசாண சுத்தி ஆகியவை உள்ளன.

40, 41 ஆகிய ஏடுகளில் கூறப்பட்டுள்ள, 'மகா கேசரித் தயிலம் கிரந்திக்கு' என்பது வேறு ஒரு பகுதிபோல் காணப்படுகிறது. சுவடியின் பாட்டெண் 42-ம் ஏட்டில் தொடர்கிறது.

---

வரிசை எண்; **944** சுவடி எண்: **438 (b)**

## ஔஷத அட்டவணை

ஏடுகள்: 86. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5—6 வரிகள். அளவு: $29 \times 2\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 2000. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

சுத்தி வகை விபரம்

சாதிலிங்கம், இலுமிச்சம்பளம், பாசாணம். தயிரில் வைக் களம்(?) அரிதாரம், மாவிலிங்கை இலை, அக்கிருக்கட்டி, இலுமிச்சம் பளத்தில் அரிதார எலுமிச்சம்பளம் பூசணிக்காய் காடியில், மனோ சிலை நா மூத்திரத்தில், சா... திலிங்கம் முலைப்பாலில், பெருங்காயம் வெற்றிலைச்சாற்றில், காந்தம் காடி மோர் இலுமிச்சம் பளசாததில். அப்புரோகம் காச்சிப் பசுவின் பாலில் தோய்க்கச் சுத்தி. நாவிபால் சிறுக்கீரை, கோமூத்திரம். சீரகஞ் சுண்ணும்பு தண்ணீரில்ப் பாசாணம் நா மூத்திரத்தில் ரண்டு சாமம். தொளேந்திரம் பாகல்க் காயில்.

**முடிவு :**

எரி மண்டலிக்கு நீர்பூலாவேர், சுண்டங் கருங்குவளைக்கு வேப்பம் வேர். மன்னுணிக்கு சுண்ணும்பு கரைத்து தெளிவித்து உள்ளுக்குங்குடுத்து மேலும் பூசவும். புடையனுக்குப் பொன் முசுட்டைவேர். சித்தமண்டலிக்கு வறப்பூலாவேர். உதிரமண்ட லிக்கு மிளகுகாய் வேர். கொம்பேறிமூக்கனுக்கு தலைசுருளிவேர். சாணுங்கிழக்கனுக்கு ஊணு வேர். ஊது சுருட்டைக்கு களக்கொடி வேர்.

பாம்பெனப்பட்டதுக் கெல்லாம் பாவட்டம்வேரரைத்து உள்ளுக் குக் குடுத்து, கடிவாயிலும் பூசப் பதினெட்டு விசமும் மீளும். இலு மிச்சம்வேர் இளவென்னீரில் குடிக்க விசமென்னப்பட்டதெல்லாம் மீளும்.

குருபாதமே தஞ்சம்.

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இதில், கொம்மட்டிக்காய், கடுகு. சுர நிதானம், பவள பற்பம், முத்து பற் பம், வயிர பற்பம், மரகத பற்பம், நீலப்பற்பம், மாணிக்கப்பற்பம், புருஷருகப் பற்பம், கோமேதக பற்பம், வயிடூரிய பற்பம், வெங்கல பற்பம், நேத்திர சந்த ஞதித் தயிலம், நான சந்தஞதித் தயிலம், அசன வில்லா தயிலம், **உளுந்து தயிலம்**, பாக இலைத்தயிலம், மூலத்துக்கு நெய், குண்டலாதி லேகியம் கிராணி கயாடம், தாளீசபத்திரி சூரணம், குன்மம் குடோரம் பஞ்ச செவ்விய கிறுதம், தூதுவளை நெய் வகை, தாதிறிகை சூரணம், கருங்கோழி பற்பம், தாம்பிர செந் தூரம் அக்கினி குமாரன், சகல தோஷத்துக்கும், கிசாயம், கெற்ப்ப விப்புருதிக் கும் பித்த விரிவுக்கும்; சன்னிக்கு நாசித்தூள், நசியம், கலிக்கம், வீரோகன்

குளிகை, விசங்களுக்கு, மருந்தீட்டுக்கு, செவிகேளாததுக்கு, மண்டை வியாதி, நாலுநாள் மாற்றுக்கு, இருமலுக்கு, நயன குளிகை, இருமலுக்கு சாரிசத்தும், பயித்திக்கு (?) அவிட்டண சூரணம், கணயின் திறிகிறதம், சரநூல், கோடா குளிகை விபாம், கொ குளிகை விபரம், சகல வியாதிக்கு, மனுபானங்கண்டு, குடுக்க விபரம், கோடா சுளிகை குடுக்க, செற்ப்ப விப்புருதிக்கு, சேற்றும கரப்பானுக்கு, பூத கரப்பானுக்கு பிளவைக்கு, பக்க பிளவைக்கு, மூல வியாதிக்கு, செரியா குணத்துக்கு, படர் தாமரைக்கு, கால்வலிக்கு கோடாசுளிகை. கன்னச் சிலந்திக்கு, சோற்றுமத்துக்கு, பித்தத்துக்கு, பிள்ளை பெற்ற உடம்பு வீக்கத்துக்கு கோடா சுளிகை, வெப்புப்பாவைக்கு, பித்தக்காசத்துக்கு, நீர்ப்பாய்ச்சலுக்கு கோடா சுளிகை, அக்கினி குமார குளிகை விபரம், மந்தாக்கினி வாயுவுக்கு குன்மத்துக்கு, கொம்மட்டிக்காய் குளம்பு, பரங்கிப்பட்டை சூரணம், கற்ச்சூராதி சூற்ணம், பிருங்காமலகத் தயிலம், வாதசன்னிக்கு எண்ணெய், வற்ண சுத்துக்குத் தயிலம், பக்கவாதத்துக்குக் குராசாணித்தயிலம், அஸ்த்தி சுரத்துக்கு மோரெண்ணை, காசத்துக்கு வெருகெண்ணெய், சயத்துக்கும் சூத ரோகத்துக்கும் அரக்கெண்ணெய், பயித்தியத்துக்கு சந்தனுதித் தயிலம், ஏ(லா)தித் தயிலம், நயன வில்வாதித் தயிலம், பீனிசம் இருமல் மேகவெட்டைக்கு, உசிசந்தனுதித் தயிலம், சயத்துக்கு காசத்துக்கு திப்பிலி நெய், ஏலாதி கிறுதி நெய், வில்வாதி லேகியம், புல்லாதி லேகியம், சுண்ட வாதத்துக்கு, வயத்தில் விப்புருதிக்கு மருந்து, ரச பற்பம், மருந்தீட்டுக்கு மருந்து, வாயுத் தயிலம், கண்ணுக்கு வெள்ளை பொடி, நீர்க்கட்டுக்கு, பசி உண்டாக நாற்த்தாங் குளம்பு, ராச பிளவைக்கு, அரையாப்புக்கு, தலை அரிப்புக்கு, எண்ணை வைக்க, காரி செந்தூரம், காரிய செந்தூரம், காந்த செந்தூரம், அரிதார பற்பம், நாசித்தூள், கொம்மட்டிக்காய் லேகியம், சூலைக்கு, இருமலுக்கு, அத்தி சுரத்துக்கு சகல பிரமியம், சத்துவமுண்டாக, எலிகடிக்கு, அரையாப்புக்கு, நீரளிவுக்கு, ஆறுத புண்ணுக்கு, நீராம்பலுக்கு; சகல மாந்தத்துக்கு எண்ணெய் வைக்க, எரிகுன்ம வாயுவுக்கு, பசியுண்டாக, மேக வெட்டைக்கு நெய், நீரடைப்புக்கு, மூட்டத்துக்கு, பாம்பென்னம்பட்டதுக்கெல்லாம் மருந்து முதலான பல மருந்தும் குணமும் கூறப்பட்டுள்ளன.

சிறந்த சுவடியாகக் கருதப்படுகிறது. 92-ம் ஏட்டின் பின்புறம் கடைசியில் 'அகத்திய மாமுனி துணை' என்று எழுதப்பட்டுளது. முதல் ஏட்டில் தலைப்பு இல்லை முகப்பு ஏட்டு அட்டவணைப்படி தலைப்பு கொடுக்கப்பட்டது.

வரிசை எண்: **945** சுவடி எண்: **438(c)**

## பலவகை மருந்து அட்டவணை

ஏடுகள்: *36 (137—172).* ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு: *6—8* வரிகள். அளவு: $29 \times 2\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *1000.* ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

வாஸ்த்து புருஈன் எழுந்திருக்கிர மாதமும்.........
சித்திரை மாதம் 10 தேதி பத்திளுளி யிதுக்குமேல்
வையியாசிமீ 21 தேதி இருபத்து ஒரு நாளிகைக்கு மேல்
ஆனி மாதம் 10 தேதி பத்து நாளியலுக்குமேல்
ஆடி மாதம் 11 தேதி பதிஞெரு நாளியளுக்கு மேல்
ஆவணி மாதம் 6 தேதி ஆறு நாளியளுக்குமேல்
புரட்டாசி மாதம் 6 தேதி ஆறு நாளியளுக்குமேல்
அற்பசி மாதம் 11 தேதி பதிஞெரு நாளியளுக்குமேல்
கார்த்திகை மாதம் 8 தேதி எட்டு நாளியளுக்குமேல்
மார்கழி மாதம் 22 தேதி இருபத்திரண்டு நாளியளுக்குமேல்
தை மாதம் 12 தேதி பனிரண்டு நாளிக்குமேல்
மாசி மாதம் 22 தேதி இருபத்திரண்டு நாளியளுக்குமேல்
பங்குனி மாதம் 12 தேதி பனிரண்டு நாளியளுக்குமேல்
இந்தப்படி பார்த்துக்கொள்ளவும்.

## அரையாப்புக்கு மருந்து

உள்ளுக்குப் பச்சோலேச்சாரு துர்த்தி இலேச்சாறு சின்னக் கறண்டியில் ஒரு கறண்டி குடுக்கவும். புண்ணுனல் அவுரி இலே கட்டவும். உள்ளுக்குக் குடுக்கிறது.

**முடிவு ;**

திப்பிலி காடியிலரைத்து, மேல் வயிற்றிலும் அடிவயிற்றிலும் இறங்கத் தடவவும். செத்த பிள்ளே விளும். காவட்டம் புல்லேக் காச்சி இறுத்துக் குடுக்க மரிச்ச பிள்ளே விளும். பெரும்பாட்டுக்கு: அத்திப்பட்டை இளநீரிலூறவைத்து இறுத்துப்போட்டு, அந்தப் பட்டையைத் துவைத்து பிலிந்து நாபிக்கு விராகனிடை காசுக்கட்டி சாரித்துக் குடுக்கவும். இப்படி மூன்று நாள் குடுக்க ரத்தப் பெரும் பாடு தீரும். நீர்ப்பூலாவேர், வெறப்பூலாவேர், இன்பூறல்வேர், கலங் கொம்பு சமன்கூட்டி அரைத்துப் பசுவின் பாலில் கரைத்து லூட்டி புரை(?)யில் துணித்து மேலும் போட ஆறும். இப்படி பத்து நாள் போடவும்.

அகத்திய மாமுனிவர் பாதந்துணே.

**காலம் :** இல்லே.

**குறிப்பு :**

இதில் பாம்பு கடித்தால், குன்மத்துக்கு, ரச முறிந்தால், இருமலுக்கு, அரையாப்புக்கு, வறணவாத முதல் பதினெட்டு வாதத்துக்கும், நரம்புச்சிலந்தி. பிளவை, அரிபிளவை, முதுபிளவை, படுவனுக்கு, கண்டமாலேக்கு, விரியன்

பாம்புகடிக்கு, மண்டை வியாதிக்கு, லண்டுகடிக்கு, ரத்த பிரமியத்துக்கு, பயித்தியத்துக்கு எண்ணெய், பெரும்பாட்டுக்கு, காச்சல்காரருக்குப் பசி உண்டாக மருந்து, சகல சுரத்துக்கும் கிசாயம், கண் சிவப்புக்கு பத்து, யோனிக்குத்து எடுக்கிறதுக்கு, நல்லபாம்பு கடிக்கு, தேள் கடிக்கு, சுக சன்னிக்கு, விரோசன ராம பாணம், ராச பிளவைக்கு முதலியன உள்ளன.

மேலும் வீடுகட்டுகிறதுக்கு, வாஸ்த்து புருஷனெழுந்திருக்கும் நிலையறியும் படி, பேதியானந்த வயிரவம், ஆனந்த கோடா சூளிக்குளிகை, சுரத்துக்கு சிந்தாமணிக்குளிகை, சன்னிவாத சுரத்துக்கு, சுராகுலாந்தகாபரணம், இளநீர்க்குளம்பு, ஆமலகத் தயிலம், திப்பிலி ரசாயனம், கண்டங்கத்திரி லேகியம், மகாகலியாண கிறுதம் தோஷகுணத்துக்கு, பெரும்பாட்டுக்கு ஆகியவை காணப்படுகின்றன.

172-ம் ஏட்டின் ஒரு பக்கத்தில் இந்நூல் முடிகிறது. பின்பக்கத்தில் அடுத்த நூல் ஆரம்பமாகிறது. முகப்பு ஏட்டு அட்டவணைப்படி இதற்கு தலைப்பு கொடுக்கப்பட்டது. இதில் தலைப்பு இல்லை.

வரிசை எண்: 946 சுவடி எண்: 438 (d)

## பலவகை மந்திரங்கள்

ஏடுகள்: 9. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5—7 வரிகள். அளவு: 29X2½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 150. ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

### படுவன், பருவுக்கு மந்திரம்

கணவதி, கணபதி மகாகரவரத கெணபதி சத்தியுள்ள கணபதி. கெங்கணபதி விக்கின விநாயகா.........இந்திரன் தந்த வேப்பிலை இறையவன் தந்த வேப்பிலை மந்திரி தந்த வேப்பிலை, மகாமுனி தந்த வேப்பிலை, அஷ்ட வசுக்க தும்புரு நாரதர்கள் தந்த வேப்பிலை, ஆனந்தத் தாண்டவன் தந்த வேப்பிலை, பத்திரகாளி பசுமேசுபரி தந்த வேப்பிலை, முப்பத்துமுக்கோடி தேவர்கள் தந்த வேப்பிலை, அறுபத்தெண்ணாயிரங் கோடி சூரிகள் தந்த வேப்பிலை, வடக்கே வடக்கேயிருந்து வந்த வேப்பிலை, வாலிதந்த வேப்பிலை, தெற்கே இருந்து வந்த வேப்பிலை சீதை தந்த வேப்பிலை.

**முடிவு:**

மீனமு மாடு மென்றும் மேற்றிசை தலையதாக
ஊனம திடக்கை கீளா யாதிசை திலர நோக்கிச்

சேனையின் கிளக்கு மாதம் தேதிகள் பெறக்காலே நீட்டி
மானைவே லனைய கனனல் வாஷ்துமன் துயிலும் வாறே.

### இருக்கு உறை

பங்கினி மாதர் சித்திரை மாதம் வைய்யாசி மாதம் யிந்த மூணு மாசமு மேற்கே தலை கிளக்கே கால் வடக்கே முகமா படுத்திருப்பன் வடக்கு வாசல் விடவு(ம்).

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இதற்கும் தலைப்பு இல்லை. அட்டவணை ஏட்டின்படி தலைப்பு தரப்பட்டது. 172-ம் ஏட்டின் பின்பக்கம் தொடங்குகிறது.

இதில், படுவன் பருவுக்கு மந்திரம், அனுமார் மந்திரம், அகோர அனுமார் மந்திரம், சக்கரங்கள், வயிரவன் மந்திரம், காச்சலுக்கு எழுதிக்கட்ட மந்திரம், பத்திரகாளி மந்திரம் முதலியன உள்ளன.

வரிசை எண்: **947** சுவடி எண்: **439(a)**

## அகத்தியர் சூத்திரம் முன்னூறு

ஏடுகள்: *48.* ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: *10—11* வரிகள். அளவு: *31 × 4* செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *2000.* ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

### அகஷ்த்திய மகா முனியுயனர் வற்றிய சூஷ்த்திரம் 300

பூதலத்தில் தென்பொதிகை தன்னில் வாழும்
பூரணமே யென்குருவே சிவமே அய்யா
மாதவத்தால் அஷ்ட்டசித்தி யெட்டும் பெற்ற
வரிசையினல் வயிற்றியனுல் வகையாய்ச் சொல்வேன்
போதகத்தின் முகத்தானை கடைகெட் டானை
புழுக்குழியில் விழுந்தானை புதல்வன் றன்னை
சாதகமாய் மனமடங்கி யறிவிற் கூட்டுந்
தற்பரமாய் நின்றகண பதியே காப்பே.

கணபதியின் முகத்தானைக் கீழ்முக் கோண
கறையடங்கா பிறப்பான கடவுள் மாற்கங்
கணபதியைக் குண்டலியிற் கண்டு தேறி
கனலெழுந்து வாய்வுவந்த புரியட் டாத்தார்
கணபதியே பிறப்புப்பார் ஆண்பெண் ணாகி
கரைகொள்ளா நாதமொடு விந்து வாகி
கணபதியே பெத்தெடுத்த விந்து வாசல்
கவறுகின்ற யிருகுறியுங் காணுங் காணே!

முடிவு :

காணப்பா பாத்துணர்ந்து வாதிமக னுனால்க்
கைவண்ணந் தப்பாமல் வயித்தியஞ் செய்வாய்
தோணப்பா வடுகனுட பூசை செய்வாய்
சொல்குருவை மறவாதே லட்சயத்தி னுள்ளே
பேணப்பா நந்திகுரு உபதே சத்தோர்
பேசாதே சூட்சமாய்ப் பேணிப் பாரு
ஆணுவத்தை விட்டுவிடு கற்பங் கொண்டால்
ஆகாகா சிங்கென்று மூலங் காணே! 300

மூலத்தி னெழுத்தாலே மவுனங் கொண்டு
மூட்டினால் வடுகனங்கே நிற்தஞ் செய்வான்
ஞாலத்தின் குண்டலிக்குள் ளடுக்கை பாரு
ஆசையவன் வைப்பதற்கு வடமாலை சாத்து
சீலத்தின் நந்தியுட பூசை பண்ணு
செகண்டி னாதவொளி மணியி னோசை
காலத்தின் கருவறிந்து பூசை தீர்ந்தால்
கைகொள்ளா வயிற்றிய முன்னூறு முத்தே. 301

ஹரி ஓம். நன்றாக. குரு வாழ்க. குருவே துணை.
சிவானந்ததி முன்நிற்கவும்.
செந்தூரம் முன்னூறு முற்றும்.

**காலம் :**

பாற்திப வருடம் ஆனி மாதம் 8-ம் தேதி ஆதிவாறமும் பூசனச் சேத்திரமும் கண்ணி லெக்கணமும் கூடிய சுபதினத்தில் எழுதி முடிந்தது. ராமசாமி கையெழுத்து.

முற்றும்.
குரு கிருபை.

குறிப்பு :

இதில், காந்தசத்து, அயசத்து, வாலைரசம், தளமுறு செந்தூரம், மூதண்ட லேகியம், னூல்த்துகை, கற்பூர சிலாசிற்று, வெடியுப்புச் சுன்னம், அப்பிரக சற்று சூதபற்பம், அமுர்த லேகியம் கருனை செந்தூரம், வெங்கல செந்தூரம், முத்து மணி செந்தூரம், தாம்பூர செந்தூரம்' நவமணி லேகியம்; வயித்தியர் சாபம், வயிற்றிய குரு, துளசி லேகியம், உளுந்து வடை, வெடி பிளந்த காலுக்கு நாக செந்தூரம், ஆனந்த வயிரவன், வயிற பற்பம், பஞ்சலோக செந்தூரம், நவலோக செந்தூரம், மகாராசா பூபதி, நாகபற்ப செந்தூரம், சரக்கு சுத்தி, காந்த செந் தூரம், வாத தயிலம், வேப்பெண்ணெய் நெய், வாதத்தெண்ணை ஆகியவை உள்ளன.

எழுத்துக்கள் தெளிவாக உள்ளன. பிழைகள் மலிந்துள்ளன. இது எமது சுவடி எண் 202 (a)/D. 322 போன்றது. இது முழுமையும் உடையது. நல்ல படியாக தெரிகிறது.

வரிசை எண்: **948** சுவடி எண்: **439(b)**

## குருநாடி சாத்திரம்

*ஏடுகள்: 19. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 9 வரிகள். அளவு: 31 × 4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 800. ஆசிரியர்: அகத்தியர் (?) முழுமை: முற்றற்றது.*

தொடக்கம் :

திருவளரும் பொதிகைமலை சிரந்து மேவுஞ்
சிவஞான தேசியகஸ் தீசர் பாடல்
குருனடி நேர்மைதனைக் கூரல் வேண்டிக்
குகநமசி வாயமனோன் மணித்தா யீன்ற
முருகசர வணபவென்றன் துணைவ னை
மும்மதமு மிருகுழையுஞ் சிறுகண் ணைந்துங்
கரமுடனே யடியவர்கள் கருத்தில் மேவுங்
கணபதிதா முனுதினமுங் காப்ப தாமே. 1

சீர்பெருகு முனிவர் வேதந்
தெழிந்து பின்னூல் கற்றோர்கள்
பேர்பெறு கருவி லுற்ற
பிணிபல வுணர்ந்து தேர்ந்து

யூர்பல ஞடிக் கெல்லாம்
முயர்பெரு ஞடி மூன்றில்ச்
சேர்குரு ஞடி நேர்மை
செயலுடன் செப்ப லுற்ருர். 1

முடிவு :

யினியநீற் பொசிவ தாகி
யிருவருக் குணர்வுக் கொள்ளும்
தனக்கிஷ்ட்ட மாகிப் போச்சுத்
தானெழுந் தான மாகி
மனத்திட மாவிக் கென்று
மாதாற மாவ குரகும்
புனிதமாய்த் தனைமுன் ஞனும்
புகலுவாற் விசிய நன்றே!. 125

அசனமா மோங்கா றத்தி
னவ்வாகி ஞடி மொள்ள
வசமுறு சுவாதி ஞதை
னத்தூடோடி

காலம் : இல்லை.

குறிப்பு :

இது அகத்தியர் குருநாடி (சுவடி எண் 13/D. 14)யின் வேறுபட்டது. இதில் பருப்பிழவை, சுரம், பீனிசம், சூலை, குன்மம், நீரளிவு, பித்தம், வாதம், பூதஞடி, மரணக்குறி முதலான தலைப்புக்கள் காணப்படுகின்றன. பாடல் தொகை தெரிய வில்லை. 126-ம் பாடல் குறையோடு முடிகிறது.

வரிசை எண். 949 சுவடி எண்: 439(c)

## பிரம்மமுனி சூத்திரம் முன்னூற்று எண்பத்து மூன்று

ஏடுகள்: 56. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 9—13 வரிகள் அளவு: 31×4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 3000. ஆசிரியர்: பிரம்மமுனி. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

சீருளான சோதி
  சினமய ஞான மூர்த்தி
ஆறணி கொண்டை சூடி
  ஆறணிந் தானைப் போத்தி
வாரணி ரிஷிகள் பாதம்
  வணங்கியே வயித்திய னூலைக்
காறண மாகப் பாடக்
  கணபதி காப்புத் தானே. 1

தானான வயித்தியத்தில் ரெண்டு பத்து நூறு
  சாத்தினே னதைக்குறுக்கிப் பற்று நூறுத்
தேனான திதைக்குறுக்கி முன்னூற் றூறு பற்று
  திரட்டியே கருவெல்லாந் திறந்து சொன்னேன்
பாரான மானிடர்கள் பிழைக்க வேண்டி
  பரிபாஷை யில்லாமல்ப் பாடி னேனே (?).

பாடியதோ ரென்னூலைப் பதினெண் பேரும்
  பாற்றிட்டு மனமகிழ்ந்து சிற்ற ரெல்லாம்
பாடியதோர் வாதமொடு வயித்தியமும் நன்றாய்ப்
  பாடினுர் கருக்குருவும் வெளியாய்ச் சொல்லி
தேடியே சித்தரெல்லாம் மெச்சுக் கொண்டு
  செப்பினுர் பிரமரிஷி யாகை யாலே
ஊடியதோர் கருவெல்லாம் வெட்டவெளி யாக
  உரத்திட்டா ரென்றுசித்த ரொளித்திட் டாரே ! 3

முடிவு :

வைத்துமே சத்துவகை கறடு தட்டி
  மைந்தனே குடோரியிட்டு யெருமைக் கொம்பால்
உத்துமே கிண்டுநீ கறமிசங்க ளத்து
  உருகியே வெள்ளிபோற் கண்விட் டாடும்
கைத்துமே கருவெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
  கருவாளி யானுக்கால் கண்டு பாரு
சேத்துமே சித்தருட னூலை யெல்லாம்
  திரட்டியே ஆயிரத்தில் தெளிவாய்ச் சொன்னேன்.

பைத்துமே ஆயிரத்தைக் குருக்கி நன்றாய்
பாடினேன் முன்னூத்திச் சிலுவான மப்பா
உய்த்துமே கருவெல்லாம் வெட்டவெளி யாக
ஒளியாமற் சத்தியமாய்ச் சொல்லிப் போட்டேன்
கைத்துமே சிறுபிள்ளை முதலா யுள்ள
கருவறியா மோடர்களுங் காணு வாரே. 383

வாரான கருவையெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
வாதமொடு வயித்தியமும் வகையாய்ச் சொன்னேன்
கூரான செந்தூரங் களங்கஞ் செயநீர்
குருமுடிக்கும் வகையெல்லாம் குறியாய்ச் சொன்னேன்
வாரான அஞ்சனமுந் திவதஞ் சொன்னேன்
வசியமொடு அழைப்புவித்தை மாறணமுஞ் சொன்னேன்
ஆறான ஞானமொடு வாசி யோகம்
மடங்கிநின்ற கருக்கிடையுஞ் சூஷ்த்திரந்தான் முத்தே. 384

**காலம் :**

யேற்வளம்பி வருஷம் மாசி மாதம் 21ம் தேதி வெள்ளிக்கிழமை பஞ்சமியுங் கூடிய சுபதினத்தில் யிந்த பிரம்மமுனி சாஸ்த்திரம் அன்னு சாமி நாயக்கருக்கு பூந்தமலி நாராயண செட்டியார் பேரான லெஷ் சுமு செட்டி எழுதி குடுத்த சாஷ்த்திர முத்தும்.

அகத்திச மகாரிஷி சுவாமி கிருபா கிடாஷ்த்துக்கு
கிருபையாக வேணும்
சிவமயம். ஓம்.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 36 (a) / D. 61 போன்றது. பாட வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இதில், முப்பு குரு, விற்று வகைக்கு மகாருசாங்க லேகியம், மேக ராசாங்க யெண்ணை, சேங்கொட்டை வல்லாதி, சண்டமாருதக் குளம்பு, பதினெட்டு குட்டத்துக்கு காலகண்ட குடோரி, சறுவாங்க வாத மேகத்தினல் கால் கை முடக்கலுக்கு ஒத்தடம், முடக்கு வாதத்துக்கு, வெள்ளை விழுகுறதுக்கு, புங்கம்பூ சூட்சம், சுராங்கிஷ மாத்திரை, கடுக்காய் லேகியம், சூத செந்தூரம், மாத்திரை போகம், துரிசி குரு, திசைமுக செந்தூரம், சறுவாங்க நோய்களுக்கும் தாம்பிர சித்தி நாக செந்தூர பற்பம், தேசிவித்தை முதலியன உள்ளன.

வரிசை எண்: **950** சுவடி எண்; **439(d)**

## வைத்தியக் கைபாக சாத்திரம்

ஏடுகள்: *16.* ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: *8—10* வரிகள். அளவு: *31X4* செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *700.* ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

ஆதியந்தம் மிகநிறைந்த பாதங் காப்பு
அகண்டபரி பூரணமே நிர்தங் காப்பு
சோதியந்தத் துள்ளிருக்கும் பொருளே காப்பு
சொல்லாத மவுனமுமே நித்தங் காப்பு
வாதியென்று வையகத்தில்ப் பொருளாய் நின்ற
ஐயிந்துகரன் வல்லபையுங் காப்புத் தானே. 1

முடிவு :

தானென்ற பற்பத்தை சர்க்கரைதேன் வெல்லம்
கனில்ச்சேத்து உண்டிடவே கிரந்தி புண்கள்
வானென்ற அரையாப்பு மேகச் சூலை
மைந்தனே கள்ளிப்பு கிரந்தி வெட்டை
நானென்ற ஆணுவத்தால் வந்த ரோகம்
ஞடாது மேகங்கள் யிருபத் தொன்றும்
யேனென்றே ஓடிவிடும் பற்பங் கொண்டால்
யிந்திரமா சாலவித்தை யிதுக்கொவ் வாதே. 111

காலம் :

கையிபாக சாஷ்திரம் தாருஞ வருஷம் தையிமாதம் 22-ம்தேதி புதன்கிழமையும் பூச நட்சேத்திரமும் கூடிய சுபதினத்தில் யெழுதி நிறைந்தது.

முத்தும்,
சிவானந்தி துணே.
குரு பாதாரவிந்தமே துணே.

குறிப்பு :

இதில் லிங்க செந்தூரம், வங்க செந்தூரம், வீரமெழுகு, கொடிப்பவுத்திரத்துக்கு எண்ணெய், மேகத்துக்கு கிரந்தி எண்ணெய், சிங்க பற்பம், வெள்வங்க பற்பம் முதலியவை உள்ளன.

சுவடியின் சிழ்ப்பகுதி கரையான் அரித்துள்ளது.

வரிசை எண்: 951 சுவடி எண்: 439(e)

## (அகத்தியர்) ரெத்தினச் சுருக்கம்

ஏடுகள்: 40. ஏட்டின் நிலைமை. கரையான் அரித்த நிலை. பக்கத்திற்கு: 8—11 வரிகள். அளவு: 31X4 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1600. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுள்ளது.

**தொடக்கம்:**

பூரணமாய் நிரைந்தகுரு பரைதாள் போத்தி
புகலுகுரேன் வயித்தியரே சுருக்கந் தன்னை
வாரணமாய் முகத்தோனைப் பணிந்து போத்தி
வயித்தியந்தான் முன்னூத் தறுப துக்குள்
காரணமாய்ச் செந்தூரம் பற்பம் லேகியம்
கருவான தயிலமொடு கிறுதம் மெண்ணை
சூறணமாய் கிராணமொடு கலிக்க மாத்திரை
சுளுவுகுரு ளுடிமுதல்ச் சொன்னோம் பாரே!.

**முடிவு:**

வடித்திட்ட தயிலத்தைப் பாணி தனிலடைத்து
வாகான கோரோசிநா களஞ்சி பொடித்துப்போட்டு
பிடித்திட்ட சன்னிவகை பதி மூணுக்குப்
பேரான கறண்டி நிறை உள்ளே கொள்ள
துடித்திட்ட சன்னியெல்லாந் துலைந்து போகும்
துடிப்பான யிசுவுக்குத் துவளை போட
நடித்திட்டு நரம்பெல்லாம் மிறுது வாகி
நளினமா யிசுவெல்(லா) நளின மாமே. 308

குருபாதந்துணை.

**காலம்:**

தாருண வருடம் தையி மாதம் 1 ந் தேதி திருப்பிறம்பியத்தி லிருக்கும் அதம்பார் மணியகாரர் ரெங்கனுதபிள்ளை கையா லெழுதின ரெற்றினச் சுருக்கம்.

பரதேவதை கிடாஷ்சமுண்டாக வேணும்.

**குறிப்பு:**

இதில், சந்தாநந்த வயிரவன், வாதருஷ்சதன், சுயமக்கினி, கபாட மாத்திரை, பூபதி மாத்திரை, ரச சிந்தாமணி, கோரோசினை மாத்திரை, அசுவ

செந்திச்சூறணம், கணத்தெண்ணே, மேகத்துக்கு யெண்ணெய், லிங்காதி யெண்ணெய், தாளக பற்பம், வங்க பற்பம், ஞக பற்பம், தாம்பிரபற்பம், வெண்ணி பற்பம், தங்க பற்பம், பவள பற்பம், சன்னிக்குத் தயிலம் முதலான தலைப்புக்கள் உள்ளன.

இச்சுவடியில் கீழ்ப்பகுதி பாதிக்குமேல் கரையான் அரித்துள்ளது.

இது எமது மகால் சுவடி எண். 296 (j) (5வது காட்டலாக்கு பக்கம் 448) போன்றது. ஷை காட்டலாக்கு 255-ம் பக்கம், 249-ம் எண்ணுள்ள (D. 439) சுவடியையும் ஒத்தது.

வரிசை எண்: **952** சுவடி எண்: **440**

## அகத்தியர் சூத்திரம் நூற்றைம்பது

ஏடுகள்: 25. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 8—9 வரிகள். அளவு: 25 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 600. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

சீரணி கொன்றை சூடுஞ்
சிவனிரு பாதம் போத்தி
வாரண முகத்தோன் தன்னை
வணங்கிநூற் றைம்பதுஞ் சொல்ல
பூரண வாலை ஞானச்
சரசோதி பாதம் போத்தி
காரண மான செஞ்சொல்
கற்மசூத்திரங் காப்ப தாமே. 1

**முடிவு:**

சொன்னேமே தானும் நூறு
அன்பது சூட்ச மாகும்
முன்னமே சொன்ன நூல்க்கு
முக்கிய மிந்நூல் சூத்திரம்
வன்னமே பாரு லோக
மாரணங் கடந்த சூட்சம்
அன்னமே சொன்னேம் நூற்று
அன்பது அறிவீர் முற்றே.
குருபாதமே கெதி.

**காலம்:**

அஷ்செய வருஷம், ஆடி மாதம் 15-ம் தேதி மங்கள வாரனாள் கூடின சுபதினத்தில் வெங்கடாசலம் அகஸ்த்தியர் ஐயனார் னூத்தன் பது எடுத்தவாள் பாத்து வாசித்து திரும்பவும் குடுத்துவிட வேண்டியது. யில்லாவிட்டால் மகா பாவமான சாபங்கள் வரும் அது அரிஞ்சு குடுத்துவிடவும்.

**குறிப்பு:**

இது எமது மகால் சுவடி எண்கள் *269* (b)/D. *483*, *324* (b)/D. *637*, *330* (c) D. *653* போன்றது.

இதில்: சரக்கு சுத்தி, தொட்டிப்பாஷாணத்தின் சுத்தி முதலியன உள்ளன.

---

வரிசை எண்: **953** சுவடி எண்: **441**

## யூகிமுனி கைபாகம்—439

ஏடுகள்: *26*. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: *7—9* வரிகள். அளவு: $33\frac{1}{2} \times 3$ செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: *1200*. ஆசிரியர்: யூகிமுனி. முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம்:**

உண்டிட கஞ்சியிரு போது உண்ண
உத்துநீ பின்னே மறுனாளில் *12*
கொண்டிட நல்லெண்ணை தேச்சு முழுகுநீ
கூடுமே அப்பிரம் கேளுங்கடி

கேளுங்கடி பின்னே தாளகச் சுன்னத்தைக்
கெட்டியாய்ச் சொல்லுரேன் கேளுங்கடி
வாளுமே போட்டளே புடம்பத்து
வாகாகத் தானே பிளியுமஞ்சு

**முடிவு:**

வானே புலத்தியர் தான்கேட்டு யூகி
வண்மைய தாக மகிழ்ந்து கேட்டு *437*

கேட்டுநீ பத்துரெண்டா னம்பதைக் குருக்குக்
கெட்டியாய் முன்னூத்திச் சொச்சமதாய் *438*

நாட்டியே தானே குருக்கீயே கைபாக
நாட்டிட முன்னூத்திச் சொச்சமுற்றே. 439

யூகிமுனி கைபாகம் நானூத்திச் சொச்சம்
யெழுதி முகிந்தது.
குருவே துணையாக வேணும்.

**காலம்:**

இது யெழுதினது மன்னார்குடி, மூர்க்க விநாயகப் பிள்ளையார் கோவில் தெருவிலிருக்கும் சதாசிவராய பிள்ளை குமாரன் கண்ணுசாமி பிள்ளையுடைய சொந்தம். 1870-ம் வருடம் சூலை மாதம் 21-ம் தேதி ஆதிவார நாள் ஞழிகை 25-க்குதயங்கம் பாடியைச் சேர்ந்த கண்ணும்பு பாளையம் இருக்கும் தோப்புளா பிள்ளையவற்கள் வீட்டில் எழுதி முகிக்கப்பட்டது.

தேவீ சகாயம்.
குருவே துணையாக வேணும்.

**குறிப்பு:**

இதில் தொடக்கம் 11 பாடல்கள் இல்லை. 121-ம் பாட்டுவரை பாட்டெண் கொடுக்கப்படவில்லை. 122 முதல் 439 வரை வரிவரியாக, வரிக்கு ஒரு எண்ணுக் கொடுக்கப்பட்டுளது. 121-ம் பாட்டின் இறுதியில்

வாதி வயித்தியம் செய்திடுவான் னவன்
வண்மையும் சித்தியும் கண்டிடுவான்
நீதியா யுப்புப் பிளியது கண்டுநீ
நேராகச் செய்துநிலைக்கச்செய்யே
சாதினை செய்துமி கப்பேசி
சறக்கேதுவும் பாராமல் சண்டைகொண்டு
வாதியா மென்று அலைந்துடன் சுத்தியே
மார்க்கமும் பாகமும் செய்யாமல் —என்றுளது

இதன்பின்,

'இதில் 30-வது யேடு முதல் 44-வது ஏடு வரையில் யெழுதப்பட்டிருந்தபடி யெழுதி யிருக்கிறது'. என்றுளது.

இதில் முதலேட்டின் முகப்பில்:

'அதுபோல யிதிலும் யெழுதியிருக்குது' என்றுளது.

பின் முகப்பில்

'வாதிக்கு மேல்பாடத்தில் 38-வது ஏடு முதல் 48-வது யேடு வரைக்கும் யெழுதப்பட்டுளது' என்றுளது.

இது கும்மி பாடலாகக் காணப்படுகின்றது. இதில், வங்கம் சுத்தி, பீனிசத்துக்கு தயிலம், வெள்ளெழுத்துக்கு நெய், குஷ்ட்டம், அயம் நாகம் செந்தூரம், சேங்கொட்டை வல்லாதி முதலியன உள்ளன.

வரிசை எண்: 954 சுவடி எண்: 442(a)

## கொங்கணர் முதற்காண்டம்—1000

ஏடுகள்: 121. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 8—16 வரிகள். அளவு: 35 X 4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 8000. ஆசிரியர்: கொங்கணர். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம்:**

வைய்யகம் வளர்க வென்று
வந்தகா மியமானூலை
அய்யநன் றுரை... ...
... ... ... ...
... ... ... ...
வாள்ந்திட வாள்வுண் டாகக்
கையுள்ளே கொட்டை யேந்துங்
கணபதி காப்புத் தானே. 1

**முடிவு:**

நினைந்து... ... ... ...ற்றி
... ... ...பகுந் துதித்துப் போற்றி
முனைந்துனுந்த போகமுதல்க் குளிகைமாற்க மெல்லாம்
முறையாகச் சொல்லிவந்தேன் வாத மெல்லாம்
பினைந்துஅந்த நாதாக்கள் சித்தர் தாமும்
பேராக என்னூலில் பொருள்கள் பார்த்து
வனைந்துயே நந்திவிண்ட மார்க்க மெல்லாம்
வகையாகக் கண்டுயென்னை வாழ்த்தினரே. 1000

தேவிகாயம்
என்குரு சதாசிவந்துணை
திருமூலர் பாதந்துணை
போகனுத நாயனுர் துணை.

**காலம்:**

குரோதன வருடம் பங்குனி மாதம் 25-ம் தேதி சோமவாரனுள் மகா நட்சேத்திரமும் கூடின சுபதினத்தில் திருமூலனுயனுர் பாதம், போக நாயனுர் பாதம். கொங்கணனுயனுர் முதக்காண்டம் ஆயிரமும் எழுதி நிறைந்தது முற்றும்.

குருவே துணை.

**குறிப்பு :**

இதில் காப்புச் செய்யுட்கள் 13 உள்ளன. நூலில் முதல் 34 செய்யுட்கள் இல்லை 35-ம் செய்யுளில் பாதியிலிருந்து தொடங்குகின்றது. ஏட்டெண்கள் கண்டுபிடிக்க இயலாதவாறு முகப்பு, பூச்சியரித்துள்ளது.

இது எமது சுவடி எண் 352(c)/D. 697 போன்றது. இதில் பலவகை மருந்துகளும், குரு, தைலம், வேதை, கட்டு முதலியன உள்ளன. தலைப்புக்களும் தெரியவில்லை.

வரிசை எண்: **955** சுவடி எண்: **442(b)**

## கொங்கணர் நடுக்காண்டம்—1000

ஏடுகள்: 76. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 10—16 வரிகள். அளவு: 35X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 4000. ஆசிரியர்; கொங்கணர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

நடுக்காண்டம் பாடுகிறேன் பூரணமே காப்பு
நலமான சுண்ணும்புக் காடு காப்பு
அடுக்கென்ற நாகம்ரெண்டு வங்கம் ரெண்டு
அப்பனே ஈயமொன்று உருகும் போது
தடுக்கென்ற சூதமொன்று அதிலே விட்டு
தாளகமாஞ் சுண்ணமொன்று அதிலே தூவி
முடுக்கென்ற முப்பிரலே பூரச் சுண்ணம்
மூடியொரு சாமந்தான் வருத்தி டாயே. 1

**முடிவு :**

காணிந்தத் திராவு கத்தைக்
காட்டில்ப் பொன்னும் லோகம்
ஆணிந்த ரவியில் வைக்க
அப்பனே வெண்ணை யாகும்
பூணிந்த தருவு கத்தைப்
பூட்டுமுன் சரக்கில் முன்போல்த்
தோணிந்த சரக்க தெல்லாஞ்
சுண்ணமாம் பாரு பாரே! 906

**காலம் :** இல்லை.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 33/D. 55 போன்றதே, பாடவேறுபாடுகள் மலிந்து காணப்படுகின்றன. அச்சிடப்பட்டிருக்கிறதாகத் தெரிகின்றது.

வரிசை எண்: 956 சுவடி எண்: 442(c)

## கொங்கணர் பிற்காண்டம்—1000

ஏடுகள்: 105. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 10—13 வரிகள்: அளவு: 35 × 4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 6000. ஆசிரியர்: கொங்கணர். முழுமை: குறைபாடுடையது.

தொடக்கம் :

வையக மேளி னுள்ளே
வளம்பெறு முனிவர் வல்லோர்
மய்யலைக் கடந்தோர் ஞான
வளிபட்டோர் வளமை யுள்ளோர்
அய்யமென் றேத்தச் சென்று
அலைவற உதகஞ் சொல்லக்
கையுள்ளே கொட்டை யேந்துங்
கணபதி காப்புத் தானே. 1

நூல்

வின்னுன ஆயிரத்தை விரித்துச் சொல்வேன்
பேரான தொழில்க்கோடி வளக்கங் கோடி
அன்னுன பிற்காண்டம் பாத மென்றே
னதுவிட்டால் நடப்பேது அசடர் பாரே. 1

முடிவு :

ஓங்கினதோர் சிங்கியின்மேல்ச் சிங்கி யில்லை
ஓகோகோ வஸ்த்துவின்மேல் வஸ்த்து வில்லை
வாங்கினதோர் வளலையின்மேல் சுண்ண மில்லை
மகத்தான ரசம்விட்டால் வற்ன்ன மில்லை
தேங்கினதோர் ஞானம்விட்டால்ச் சத்து மில்லைச்
சேர்ந்துண்ணுங் கற்பம்விட்டாத் தேக மில்லை
பாங்கினதோர்ப் பதியைவிட்டால்த் தட்டுப் போச்சே. 998

காலம் :

பிரமாதூதா வருடம் தனுசு (மார்கழி) மாதம் 25-ந் தேதி சுக்கிர (வெள்ளி) வாரமும் திறிதிகையும் உத்திராட நட்சத்திரமும் ராச்சத வேளையும் சிங்க லெக்கனமும் கூடிய சுபயோக சுபதினத்தில் கயிலாசக் கொங்கணர் நயினுரருளிச் செய்த பிறகாண்டம் யெழுதி நிறைந்தது முற்றும்.

அருணசல சுவாமியவர்கள் குமாரன் கும்பமுனி கையெழுத்து.
ஸ்ரீ கிஷ்ணமூர்த்தி சகாயம்
பரம குருவே நமா
சதாசிவ மூர்த்தி ரெட்சிக்க வேண்டியது
குருபாதமே கெதி
ஆதிசிதம்பரேசுவர சுவாமி துணே.

குறிப்பு :

இது எமது சுவடி எண். 231 (a)/D. 378 போன்றது. இதில் 998 செய்யுட்களே உள்ளன.

---

வரிசை எண்; 957 சுவடி எண்: 443 (a)

## கயிலாசச் சட்டைமுனி வாதநூல்—1000

ஏடுகள்: 180. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுதடைந்த நிலை. பக்கத்திற்கு: 5—7 வரிகள். அளவு: 40X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 8000. ஆசிரியர்: கம்பளிச்சட்டை கயிலாயநாதர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

காப்பு

அகண்டபரி பூரணமா முமையாள் பாத
யப்பிரதே நின்றதொரு அய்யர் பாதம்
* * * *
முகன்றென்னை யிண்டெடுத்த சின்மயத்தின் பாதம்
மூவுலகு மெச்சுதற்கு காப்புத் தானே.

நூல்

நிர்க்குணமாயி நிர்மலமாயி நிரஞ்சனமு மாகி
னேருன பூரணமாயி மனமெட் டாத
* * * *
நற்குணமாயி சினகாதி ரிஷிகள் பாதம்
நலம்பிரவே ஞவில்வைத்துப் பாடு ரேனே. க

**முடிவு :**

ஒன்றான சின்மயத்தின் பதத்தைப் போத்தி
உத்(த)தொரு கயிலாசத் தேக மாக
நன்றாக யீன்றதொரு உன்மனையைப் போத்தி
நவமான ஞாதாக்கள் பதத்தைப் போத்தி
கன்றான கயிலாசத் தேகமாய் வந்த
காரணமாஞ் செஷ்டருட பதமும் போத்தி
தன்றான வாதனூல் ஆயிரமுஞ் சொல்லி
சாதகமாயிப் பாடிவிட்டேன் வாதமுத்தே. 998

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இது எமது சுவடி எண்கள் 26 (b)/D. 44, 27/D. 45, 318 (a)/D. 593 முதலியன போன்றது. வெவ்வேறு எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன,

வரிசை எண்: 958 சுவடி எண்: 443 (b)

## சட்டமுனியார் நிகண்டு

ஏடுகள்: *116.* ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 5—8 வரிகள். அளவு: 40 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 6000. ஆசிரியர்: கம்பளிச்சட்டைக் கயிலாய நாதர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆ(தியந்த மில்லாத பூரணத்தை நோ)க்கி
அடுத்துநின்(ற உன்)மனைத்தாய்ப் பாதத்தைப் போத்தி
பாதியந்த மாகிநின்ற உமையாள் சொல்லப்
பாங்கான சின்மயத்தின் கருணை யாலே
ஓதியந்த வாதமென்ற (நூலுக் கெ)கல்லாம்
யேறவைத்தந் நாக(மணிக்) கிரீடம் போலச்
சாதியந்தக் குணத்தோடு நிகண்டு சொல்வேன்
சச்சுதா நந்தவெளி காப்புத் தானே. 1

**முடிவு ;**

ஞாட்டினேன்ஞ் செயவீர மூவர்க்க வித்தை
நலமாக ஒப்பினுட உருதி சொன்னேன்

பூட்டினேன் வாதத்தில் பூதம்ஞ் சொன்னே(ன்)
புகளாக இருவத் தஞ்சு அங்கம்
ஆட்டினே(ன்) பலனூாலு லில்லை ?
ஆச்சரியம் நிகண்டுனுட துகையைக் கேளு
நீட்டினேன் ஆயிரத்தி யிரனூத்து மேலே
நேராக முப்பத்தி ரெண்டு முத்தே. *1231*

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இது எமது சுவடி எண்கள் 26 (c) / D. 44, 318 (c) / D. 595, 342 (c) / D. 670 போன்றது.

வரிசை எண்: **959** சுவடி எண்: **443(c)**

## வைத்தியத்திரட்டு

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: *40X3* செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: *100*. ஆசிரியர்: தெரியவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

தள்ளப்பா மத்ததெல்லாங் கொண்டு தேரு
தவமான சீட்டத்துக்கு உறுதி யாகும்
கொள்ளப்பா தயிலமொன்று சொல்லக் கேளு
கூர்மையுள்ள ......... ......... .........
விள்ளக்கேள் சருகுமல மன்ப தாகும்
விளமினது ரெண்டுமடா ஆதி யந்தம்
சொல்லக்கேள் றெண்டயுமே பொடியாய் .........
சுகமான பாண்டத்தி லடைத்தி டாயே.

**முடிவு :**

நந்தி உப்பு

கா...... மூலமதி...... ......... கன்ரேுதி
கைம்முறையாய்ச் சத்திசிவ ஒன்ருய்ச் சேத்து
சேறடா கம்பிஉப்புப் பூரம் ரென்றும்
செம்மையுடன் ......... ......... .........

**காலம் :** இல்லை.

**குறிப்பு:**

இதில் 2 ஏடுகளே உள்ளன, இதில் அண்டத்தயிலம், சிகப்பு வெள்ளி முறை ஆகியவை உள்ளன. இரண்டும் வெவ்வேறு ஏடுகளாகத் தெரிகின்றன.

வரிசை எண்: 960 சுவடி எண்: 443(d)

## அகத்தியர் பூசாவிதி—12

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை. மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். அளவு: 40X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 100. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

நினவிலே வைப்பதென்று குருவின் பாதம்
நிஷ்செயமாய்ச் சிவன்பாதம் தேவி பாதம்
கனவிலே மறவாதே ஒருநா ளுந்தான்
கற்மமந்திர மில்லையடா னேயு மில்லை
செனமான தாகாது புத்தி சொன்னே(ன்)
சேதிமா ன(ன)க்கா லரிந்து கொள்வான்
மனதிலே தெளிவானல் முத்தி யுண்டாம்
வஞ்சினையொன் ருகாது வாசி பாரே. 1

**முடிவு:**

ஆட்டினேன் அவ்வுஉவ்வு ஒன்ருய்க் கூட்டு
அதினுடனே கிலியுமய்யுஞ் சவ்வும் பூட்டு
ஆட்டினல்ப் பூட்டு (தி)ரக்கப் போமோ
பூரணத்தி லொடுங்குமந்த ஊமை யாகி
காட்டில்நீ யலையாதே வெளியைப் பத்தி
கண்டாலோ பறவாசல்த் துரக்கு மப்பா
தேடுநீ யோங்கார அட்சரமே யப்பா
சிவாயமெ(ன்ற) அட்சரத்தைக் கூட்டு கூட்டே. 13

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

இது அகத்தியர் பூசாவிதி 5;200-ன் வேருனது. காப்புச் செய்யுளல்லாது 12 ஆகும்.

வரிசை எண்: 961 சுவடி எண்: 443 (e)

## சங்கராச்சாரியார் தீட்சை

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 2—6 வரிகள். அளவு: 40 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 60. ஆசிரியர்: சங்கராச்சாரியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

அத்தி முக(வனைப் போத்)தி ………
அ(ப்பனே) பிரமனை விஷ்ணுவைப் போத்தி
ருத்திரன் பாதமே போத்தி நல்ல
ளேக்குமயே சுரபரன் சதாசிவன் போத்தி
குருநல்ல குருஉப தேசத்தில் கூட்டினே னடநேச
குருஉபதேசமே தேசம்.

முடிவு :

(ஞயிலுங்) கடைகெட்ட கட்டையிது
நண்மை யில்லா முதிர்ந்த காதிக்கூட்டை
பெயிலும் பெயான துஷ்ட்டன் யிந்தப்
(பி)ணக்கட்டையைப் போட்டு பேருபெத்தோமே.

குருஉப தேசமே தேசம்
குருபாதம் துணையுண்டு
சோமசுந்தரம்.

காலம் : இல்லை.

குறிப்பு :

இது குரு உபதேசமாகும். தொடக்க அடியான " குரு உபதேசமே உப தேசம் " என்ற அடி ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் உள்ளது. தத்துவப் பொருளை உள்ளடக்கிக் கூறுவது. நொண்டிச் சிந்து சந்தத்தில் அமைந்துள்ளது.

வரிசை எண்: 962 சுவடி எண்: 443 (f)

## சட்டைமுனி தீட்சை

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிக மிகப்பழுது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 40 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்த

எண்ணிக்கை: 80. ஆசிரியர்: சம்பளிச்சட்டை கைலாசநாதர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

பராபரத்தி லுதி...... ......... .........
......... ......... தீட்சை சொல்வார்
தராதலத்தில் மெய்யான யோகிக் கெல்லாம்
தான்றவமே ஆடுதற்கு வகை... .........
(நிரா)தலத்தில் யானுரைத்த வரையே தென்றல்
நிச்சயமே சுந்தரமே நன்றாயிக் கேளு
அராதலத்தில் ஊவென்றும் ஆவென்றும் அன்பாக
யெட்டும் ரென்றுஆக பத்து மாச்சே. 1

**முடிவு :**

அமுர்தமே காயகுந்திரம் அடங்காத பானுவாம்
திமிரதஞ் சஞ்சீவி ...வமறி வேதியாய்
குமிர்தவே தேகம் கொடிய தோர்னுள்
திமிர்த கக்கிஷ்சற நிணக்கடை யொக்குமே. 9

முற்றும்.

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இதில் காய சித்தி பற்றியும், தேகநிலை பற்றியும் கூறப்பட்டுள்ளன. தத்துவப் பொருளாகப் பேசப்படுகிறது.

---

வரிசை எண்: **963** சுவடி எண்: **443 (g)**

## சிவவாக்கியர் தீட்சை

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுதுபட்டது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 40 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 80. ஆசிரியர்: சிவவாக்கியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆதியென்ற குருவரிந்துக் கப்பால் யோகம்
அட்டமா சித்தியது ஆடும் பாரு

சோதியந்தத் தூடேயடா சொல்லப் போகா
    சோதித்துக் கண்டவர்கள் சித்த ராவர்
பேதியென்ற அன(லு)மது அயிவர் வாழும்
    பேராமை பெத்துயொளி காணும் ஞதங்கேழ்க்கும்
வாதியென்ற வாசியென்றும் யிருந்த வீடு
    மகத்தான பேசுமிடம் தீசர் தானே. 1

முடிவு :

தானென்றல் கொன்றதோர் சறசுபதி
    மகத்தான சிதம்பரமாம் வறவு கன்றே
(நா)னென்றல் போத்தியே சிவவாக்கியர் பாதம்
    நலமான கும்பமுனி ஞதர் பாதம்
ம(ர)னென்றல் கொண்டதொர் வலத்தி யாறு
    வரிசைபெறு திசைகல்ப்பம் சிவவாக்கியர் தானே.

சிவவாக்கியர் தீட்சை முற்றும்.

**காலம் :** இல்லை.

குறிப்பு :

இதில் அட்டமா சித்து, சித்தர்கள் இலக்கணம், வாதி இலக்கணம் முதலியன கூறப்பட்டுள்ளன. தத்துவரூபமாக கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: **964** சுவடி எண்: **443 (h)**

## தெட்சிணாமூர்த்தி சூத்திரம் அறுபது

ஏடுகள்: 12. ஏட்டின் நிலைமை: மிக மிகப்பழுது (செல்லரித்த நிலை) பக்கத்திற்கு: 5—6 வரிகள். அளவு: 40 × 3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

ஆதி(யென்ற) (பூர)ணமா மகண்டத் துள்ளே
    ஆத்தாளைத் தொழுது நின்றங் கரனைப் போத்தி
சோதியெண்ட அறுனூறு பெருநூல் தன்னை
    சூஷ்த்திரந்தா னறுபதுள்ளே சுறிக்கி வய்த்தேன்
சேதியென்ற கருக்குருவு வெளிய தாகத்
    திறந்திட்டேன் கைபாக மருந்தின் பாதம்

விதியென்ற கெவுநத்தி நோட்டம் போல
விளைந்தமணி யின்னூல்தான் சொல்லக் கேளு. 1

முடிவு:

அங்கெண்ட புரியட்ட மிழந்து வாசி
ஆதார மேல்மூலத் தடக்க மங்கே
பங்கென்ற மனம்புத்தி ஆங்கார மூன்று
பஞ்சவர்க ளொத்துநின்ற மதியு மங்கே
சங்கென்ற பரமநதிக் கடல்மூ றேறி
தவசிருந்த குகைவீடு தலமு மங்கே
வங்கெ... ......... ......... .........
......... ......... ......... .........

காலம்: இல்லை.

குறிப்பு:

இதில் 58 செய்யுட்கள் முழுமையாயும், 59ம் செய்யுள் முடியாமலும் இருக்கின்றன. தட்சிணாமூர்த்தி அறுநூறின் சுருக்கமாகும் இது. ஏடுகள் நடுவில் மிகவும் செல்லரித்துள்ளன.

**

வரிசை எண்: **965** சுவடி எண்: **443 (i)**

## தட்சிணாமூர்த்தி சூத்திரம்—50

ஏடுகள்: 11. ஏட்டின் நிலைமை: மிக மிகப்பழுது. பக்கத்திற்கு: 5—6 வரிகள். அளவு: 40 × 3 செ. மீ எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுள்ளது.

தொடக்கம்:

நாடியதோர் பூரணமாம் வேதாந் தத்தில்
ஞதாந்தத் திருநடனசூத் திரத்தைப் பாட
ஆடியதோல் கணபதியுங் கந்தன் காப்பு
அருள்பெருகுஞ் சித்தர்முதல் ரிஷிகள் காப்பு
கூடயதோர் ஞாநிபரை வாலை யாலே
கூறுவேன் அகாரமுடி சிறீங்கா ரத்தில்
பாடியதோர் பலநூல்தான் பொயியாப் போகு
பாலாகு மெய்ந்தனுட னூல்தா னமே. 1

முடிவு :

சந்துகா லுளைந்து பத்தித்
        தழலெழ வய்யி றழத்தும்
அந்தகா ரங்கள் தன்னில்
        அதிகமாய்ச் சரீர வாதை
வந்துதான் தோன்றும் னாளில்
        வகைபட வாத குன்மம்
அந்தமா முனியோர் சொன்ன
        ஆயுறு வேத மாமே. 50

காலம் : இல்லை.

குறிப்பு :

இது ஆயுர்வேதச் சுவடியாகத் தெரிகிறது. இது 'தட்சிணாமூர்த்தி சூத்திரம் 48' போன்றுளது. இப்பெயருள்ள சுவடி எமது மகால் வைத்தியச்சுவடி எண். 189/D. 306ல் இருக்கிறது. அதற்கும் இதற்கும் வேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன. அதில் உள்ள தலைப்புக்கள் இதில் இல்லை. ஏடுகள் ஒடிந்துள்ளன.

அதில் நூற்றொகை நாற்பத்தெட்டு முற்றும் என்றுளது. இதில் நூற்றொகை ஐம்பது என்றில்லை. முற்றும் என்ற சொல்லும் கடைசியில் இல்லை.

இதன்பின்னர் மருத்துவமுறை எழுதிய ஏடு ஒன்று உள்ளது.

வரிசை எண்: 966 சுவடி எண்: 443 (j)

## அகத்தியர் சுருக்கம் சரக்கு சுத்தி நூற்றைம்பது

ஏடுகள்: 19. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். அளவு: 40 × 3 செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 500. ஆசிரியர். அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

சீறணி கொண்டை சூடும்
        சிவனிரு பாதம் போத்தி
வாறண முகத்தோன் பாதம்
        வணங்கிநூற் றன்பதுஞ் சொல்ல
பூரண வாலை ஞான
        சரசுவதி போத்தி போத்தி
காரண மான செச்சொல்க்
        கன்மசூத் திரங்கள் காப்பாம், 1

முடிவு :

சொன்னது துகைதான் னூற்று
அன்பதுஞ் சூட்சமமா யிருக்கும்
முன்னமே சொன்ன நூலில்
முக்கிய மின்னூல் சூட்சம்
வற்னமே வாரு லோக
மாறண மதிக சூட்சம்
வன்னமே சொன்ன நூற்று
அன்பது அறிவீர் முத்தே.

மீனாட்சி துணையுண்டு.
சோமசுந்தரம்.

காலம் : இல்லை.

குறிப்பு :

இது எமது மகால் சுவடி எண். *269* (b) / D. *483*, *324* (b) / D. *637*, *433*(a)/ D. 927 போன்றது.

வரிசை எண்: **967** சுவடி எண்: **444**

## வைத்திய அட்டவணை

ஏடுகள்: *108*. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: *4—9* வரிகள். அளவு: *30* × *3* செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: *4000*. ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

ஆதியே நம
சர்குருவே துணே.
வயித்திய உரை நன்ருக
அறையாப்புக்கு மருந்து.

உவர்மண், கோளிமுட்டை, சர்க்கரை மூன்றும் அரைத்து……… ………அதில் மஞ்சள் கடுக்காய் வசம்பும் கூட்டித் தக்காளிச் சாறும் விட்டுரைத்து 2 நாவிலையில் தடவிப்போடவும்.

முடிவு :

ஷெ திரியை……குளலுக்குள் வைத்து நெருப்புப் பற்றவைய்த்து ஷெ புகையை மூன்று நாளாறு போது சாப்பிட்டு உப்பில்லாமல் கஞ்சி கொடுத்து நாலா(நா)ள் விளக்கெண்ணே தேய்த்து தண்ணீர்விடவும்.

மண்டலம் இச்சாபத்தியம் கரப்பான் பதார்த்தம் தள்ளவும். துவரையும். சோறும் சாப்பிடவும். கைகண்டது.

**காலம் :** இல்லை.

குறிப்பு :

இதில், அஞ்சனம் பாட்டு, அரிதாரச் செந்தூரச் சூரணம், அமரத்துக்கு அரணைகடிக்கு, அண்ட வாதத்துக்கு, அரிமயல் வாந்திக்கு, விக்கலுக்கு, வியாதியிழக, வீக்கத்துக்குத் துவாலையும், நீருள்ளியெண்ணெயும், வெட்டுக்காயத்துக்கு முதலியன உள்ளன. இவை 38-ம் பக்கம் வரை.

39-ம் பக்கத்தில், 'புலிப்பாணி மகா முனிவர் அருளிச்செய்த 500-ல் யிருந்தெடுத்தெழுதியது. நன்றாக. அட்டவணை பாட்டு' என்றுளது. இது முதல் பல நோய்களுக்கு மருந்துகள் கூறப்பட்டுஸ்ளன. 61-ம் பக்க முதல், உடல் கட்டு மந்திரம் முதலான மந்திரங்களும் உள்ளன. சக்கரங்களும் உள்ளன. ஏட்டெண் 63-க்குப் பிறகு, 71-ம் ஏட்டிலிருந்து எண்கள் உள்ளன. (64-70) ஏடுகள் இல்லை.

***

வரிசை எண்: **968** சுவடி எண்: **445** (a)

## அகத்தியர் மதிவெண்பா

ஏடுகள்: 7. ஏட்டின் நிலைமை: மிக மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். அளவு: $29\frac{1}{2} \times 4$ செ.மீ. எழுத்து: தமிழ் கிரந்த எண்ணிக்கை: 200. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: குறைபாடு உடையது.

தொடக்கம்:

(தொடக்கத்தில் 11 பாடல்கள் இல்லை. 12-ம் வெண்பாவின் தொடக்கம் இல்லை)

(கட்டுமே) ஞானங் கெதிபெறலாஞ் சாதகமாய்
விட்டுமே போகாமல் மேல்க்கொள்ளு—தொட்டுவிட்டால்
விட்டகுறை யென்று மேதினியோர் சொல்லுவது
திட்டமறி யாயோ திடம். 12

முடிவு :

அறிவா லறிந்துகொண்டு ஆசையெல்லாந் தான்போக
நெறிவாக ஞான நிலையில்நில்லு—குறியாக

நான்சொள்ன வெண்பாவி லாத்துவது புத்திசொன்னேன்
மான்சொன்ன மதிவெண்பா (மணி)முற்றே.

முற்றும்.

குரு வாழ்க.

குருவே துணை.

**காலம்:**

சாதாருண வருடம், தையி மாதம் 16-ம் தேதி, கும்பகோணம் பெரியமடம் ஆதீனஸ்தர்களாகிய கன்னட முத்துச் சாந்தய்யன் இந்த மதிவெண்பாவை பெற்றுக்கொண்டது. மயிலூர் சித்தலிங்க சுவாமிகள் நூல்க்கும் ஒத்துப்பார்க்கலாச்சுது.

**குறிப்பு:**

இதில் தொடக்கம் இல்லை. *1, 7*-வது ஏடுகள் இல்லை. எழுத்துக்கள் தெளிவாக உள்ளன. இரட்டைக் கொம்பெழுத்துக்கள் உள்ளதால் இது பிற்காலச் சுவடி எனலாம்.

இதில், அகார, உகார, மகாரச் சறபம், முப்புச்சுன்னம், பேய் பிணிகள் தீர, கவிழ் மீழ்க்க, குழந்தை தோஷத்துக்கு, வாதக்கரு, கெந்தக கற்பம், மால்தேவி பற்பம், தாம்பூற பற்பம், உகமை, நாதநீர் கற்பம், சத்தி அடி மூலி கருமூலம், ஞானவழி, வாசி நடக்குங் குணம் முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண் *432* (a)/D. *911* போன்றது.

வரிசை எண்: 969 சுவடி எண்: 445 (b)

## நந்தி சூத்திரம் மூன்னூறு

ஏடுகள்: *34*. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது, பக்கத்திற்கு: *8—10* வரிகள். அளவு: $29\frac{1}{2} \times 4$ செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: *1000*. ஆசிரியர்: நந்திதேவர். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம்:**

(ஓங்காரத்திற்குள் நந்திகேஸ்வரர் அருளிச்செய்த முன்னூறு என்று அழகாக எழுதப்பட்டுள்ளது.)

காப்பு

மூலமென்ற கணபதியின் பாதம் போத்தி
முத்திபெற்ற சுழிமுனையின் முனைமேல் நின்று

ஞாலமென்ற கொடிமரத்தின் கீழே நந்தி
நாடிநின்ற பீடமது ஆதி காப்பே.

நூல்

ஆதிமறை நால்வேத மாறு சாத்திரம்
மடங்கிநின்ற அதனுடைய பாதம் போத்தி
பாதிமதி ரவியென்ற சுழினை தன்னைப்
பணிந்துகொண்டு சிவனுமையு மாதி தானே. 1

முடிவு :

முத்திபெற்று ஞானறிவு தங்கி நின்று
மோட்சநிலை தானறிந்து சித்தும் பெற்று
பற்றிநின்ற சுடரொழியை பதிவாய்க் கண்டு
பழக்கத்தால் வாசிநின்ற தலமுங் கண்டு
சித்திபெற்று கருவினுட சூட்சங் கண்டு
தெளிந்தமதி மாய்கைவிட்டு சிவமே யென்று
சத்திநின்ற விடங்காண பேரும் பெற்றுச்
சகலவுயிர் தானவனுய் முற்றி யாமே. 305

முற்றும்.
குரு முன்னிற்கவும்.

காலம் :

சாதாருண வருடம், தையி மாதம் 16-ம் தேதி, கும்பகோணம், பெரியமடம், ஸ்ரீமன் சாரெங்க தேசிகேந்திர சுவாமியாரவர்களின் ஆதீனஸ்தர்களாகிய கன்னட முத்துச்சாந்தய்யன் இந்த நந்தி சுவாமிகள் முன்னூரை பெற்றுக்கொண்டது. யிந்த முன்னூறுக்கு மையமூர் சித்தலிங்க சுவாமிகளுடைய நந்தி சுவாமிகள் முன்னூறும் ஒத்துமை யிட்டு எழுதி முகிந்தது.

குறிப்பு :

இதில் 10-வது ஏடு முதல் 46-வது ஏடுவரை உள்ளன. இதில் 16, 36, 37, 45 ஆகிய ஏடுகள் இல்லை. தொடக்கத்தில் ஓங்காரம் அழகாக வரையப்பட்டுள்ளது.

இதில், மெஞ்ஞான உபதேசம், ஞானவழி, செங்கையில் மூலம், மதி மெழுகு சீஷர் குணம், நூல்சாபம், கெந்தகபஸ்பம், மாந்திரியக்கரு, அஞ்சனம் ஆகியவை உள்ளன.

வரிசை எண்: 970 சுவடி எண்: 445 (c)

## அகத்தியர் (பரிபாஷை) முதற்காண்டம்

ஏடுகள்: 15. ஏட்டின் நிலைமை; மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8—11 வரிகள். அளவு: $29\frac{1}{2} \times 4$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 500. ஆசிரியர்: அகத்தியர் முழுமை: குறைபாடுடையது.

தொடக்கம்:

........ ........ ........ ........
........ ...னூலைப் பதனம் பண்ணு
விதியில்லையென் றலையாதென் னூலைத் தேடு
விண்டுவிண்டு பேசாதே வேண்டாம் வேண்டாம்
நிதிதருவா ருபசாரம் நீக்கிப் போடு
நினைவுகொண்டு சூஸ்த்திரமேல் நினைவைப் பாரே. 8

முடிவு:

தாக்கிப்பா ரிந்தனூ லஞ்சு காண்டந்
தான்பாற்கில் சமுசியங்கள் தட்டுண் டேபோம்
நோக்கிப்பா ரிந்தனூல் தனக்கு சாஷ்சி
ரோமரிஷி அஞ்னூறும் நந்தி னூலுந்
தேக்கிப்பா ரிதினலே தெளியா துண்டோ
சிவசிவா குருத்தேடித் திரிய வேண்டாம்
பாக்கியமா மின்னூலின் ரெண்டாங் காண்டம்
பாடுகிரேன் முதல்க்காண்டம் பரமா முத்தே. 100

காலம்: இல்லை.

குறிப்பு:

இதில், முதல் 7 பாடல்கள் உள்ள ஏடுகள் இல்லை. அதனல் தலைப்பு இல்லை. இதனை அடுத்த இரண்டாங்காண்டத் தலைப்பால் இது அகத்தியர் முதற்காண்டம் எனத்தெரிகிறது. இதில், நூல் தொகுப்பு, காண்டங்களின் குறிப்பு ஆகியவை உள்ளன.

வரிசை எண்: 971 சுவடி எண்: 445 (d)

## அகத்தியர் (பரிபாஷை) இரண்டாங்காண்டம்

ஏடுகள்: 15. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8—11 வரிகள். அளவு: $29\frac{1}{2}$X4 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 500. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முழுதுமுள்ளது.

தொடக்கம் :

முத்தணி நகையாள் வேத
முதல்வியைப் பாகம் வைத்த
சுத்தமெஞ் ஞான தீபச்
சுடரெனுஞ் சோதி பாதம்
நித்தமுந் தொழுது போத்தி
நீதிசொற் பாஷை நூலின்
புத்திமுத் திரண்டாங் காண்டப்
பொருளினைப் புகலு வேனே. 1

முடிவு :

வாறான யிக்காண்ட மிறண்டுக் குள்ளே
வழலைகுரு செய்யுகின்ற மாற்கஞ் சொன்னேன்
கூறான முன்றுனிலே கற்ப மூலம்
குணமான யிடைபஞ்சி கரணஞ் சொல்லும்
தூறான னுலுலே யோகஞ் சொல்வேன்
சுத்தஉப்பை யெடுக்கும்வகை அஞ்சில் சொல்லும்
சீறான உப்பெடுக்கும் வகையைப் பாரு
தெளிவான ரெண்டாங்காண்டஞ் சிவனூல் முத்தே. 100

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் தலைப்புக்கள் இல்லை. எழுத்துக்கள் தெளிவாகவும் நன்றாகவும் உள்ளன.

---

வரிசை எண்: 972 445 (e)

## அகத்தியர் (பரிபாஷை) மூன்றாங்காண்டம்

ஏடுகள்: 16. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8—11 வரிகள். அளவு: 29½ × 4 செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 1000. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும்.

தொடக்கம் :

சிவமான பூரணமே னாத விந்து
சின்மயமாய் நின்றதொரு னாதம் னாதம்
முவமான மில்லாத பறந்த னக்கு
முனையாகி நின்றதொரு னாதம் னாதம்

நலமான ஞதவிந்து ரென்று மொன்ருய்
நளினமுள்ளப் பருதிமதி சுடர்தா ஞச்சு
பலமான யிந்தனூல் மூணுங் காண்டம்
பருபறமே ஐங்கரனே காப்புத் தானே. 1

முடிவு :

ஆடுவா யகுத்தியந்தான் சொன்ன வாக்கு
அய்யனே யித்தயிலம் பெருமை மெத்த
பாடுவாய் பதினெண்பேர் னூல்க ளெல்லாம்
பாலகனே யித்தலம் கொண்டு சாடு
சாடுவாய் சகல சித்தர் னூல்க ளெல்லாம்
சற்குருவா மின்னூல்தா னஞ்ஞூ ருகும்
யேடுவாய் யெந்தெந்த நூல்கள்க் கெல்லாம்
யின்ம்பமுள்ள முக்காண்டம் பூரணந்தான் முத்தே. 101

மூணுங்காண்ட முடிந்தது.

முற்றும்.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் பயிரவ சக்கரம், வால சுப்பிரமணிய சக்கரம், பத்தியம் தள்ளல், பத்ய சேர்க்கை, மூல சுத்தி ஆசியவைகள் உள்ளன.

வரிசை எண்: 973 சுவடி எண்: 445 (f)

## அகுத்தியர் (பரிபாஷை) நாலாங்காண்டம்

ஏடுகள்: 16. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுதடைந்த நிலை. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: $29\frac{1}{2}$X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1000. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்று முளது.

தொடக்கம் :

பூறணமாம் பரிபாஷை நாலாங் காண்டம்
புகள்பெரிய பூமாது நிறைந்த சோதி
வாரணமாம் பூமாது வாலை தேவி
வசனித்தா ளெந்தனுக்கு மவுன மாதி

காறணமாங் கருக்களெல்லாங் கண்டு தேரிச்
கருக்குருவாயி உரைத்தயிந்த அஞ்ஞூ றுதி
சிரணமாய்ப் போகாமல் சித்த ருக்குச்
செப்பிஞேம் நாலாங்காண்டஞ் செயமே காப்பு. 1

முடிவு :

ஞாயரு மஞ்ஞூத்தில் பலித சித்தி
ஞதாக்கள் மரைத்தநூல் குருநூல் பீடம்
ஆயரு மய்யாயிரத்துச் சொச்சங் கண்டு
ஆகதுகை யஞ்ஞூத்தி லடங்கிப் போச்சு
நாயரு மகத்தியனுட மமுற்த வாக்கியம்
நவரெத்தின நால்வேத முழுதுஞ் சொன்னேன்
யாயரு முக்கருவாஞ் சூட்சா சூட்சம்
யாதியா முகிந்ததய்யா நாலாங்காண்ட முத்தே. 101

ஞலாங்காண்ட முற்றும்.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், தலைப்புக்கள் காணப்படவில்லை. நான்கு காண்டங்கட்கும் மொத்த பாடல்கள் ஐந்நூறு என்பது கடைசிச் செய்யுளால் விளங்குகிறது.

வரிசை எண்: 974 சுவடி எண்: 445 (g)

## அகத்தியர் (பரிபாஷை) ஐந்தாங்காண்டம்

ஏடுகள்: *16*. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: *10* வரிகள். அளவு: $29\frac{1}{2} \times 4$ செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: *1000*. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுள்ளது,

தொடக்கம் :

ஆதியா முதலவன்று னந்தம் போற்றி
(அ)ம்பிகா சத்திய(டி) கமல(ம்) போத்தி
சோதியாய் நிறஞ்சனமாய் குண்டலினியே போத்திச்
சுழிமுனையில் கரு(வறி)ந்த பிரமன் போத்திச்

(சா)தியாய் பலவஸ(கயு)ங் குரித்தோன் போத்தி
சற்வாணி உமையாள்சரசு பதியே போத்தி
மாதியா மா(மு)னிவர் மரையோர் போத்தி
மகத்தான பரிபாஷை வாதங் காப்பே.

முடிவு :

மதுவென்பா ரண்டபகி ரண்ட மென்று
மகத்தான அண்டமதுபே ரண்ட மென்றும்
பதுவென்ற பறமண்ட மஞ்சாங் காண்டம்
பகருமொழி யேறண்ட பதியு மென்று
மதுவென்று மவுனமென்றும் அண்ட மென்றும்
மகத்தான யென்குருவும் உபதே சித்தார்
சதுவென்ற சற்குருவு மிதுவே யென்றும்
சமறசத்தின் மற்மமென்றும் சாரவே முற்றே. -100

அஞ்சாங்காண்டம் முற்றும்.

குருவே துணே.

காலம் :

1851க்குச் சரியான விரோதுகிறது வருடம் வைய்காசி மாதம் 28-ம் தேதி திங்கள் கிழமை யெழுதி முகிந்தது முற்றும்; முற்றும்.

குரு வாழ்க. குருவே துணே.

குறிப்பு :

இதில், தலைப்புக்கள் இல்லை. எழுத்துக்கள் தெளிவாக உள்ளன. சித்தர் நூல்களுக்கு விளக்கமாக அவர்தம் நூல்களில் காணப்படும் பரிபாஷைகளுக்கு விளக்கம் கூறப்பட்டுள்ளன. சித்துக்களுக்கான வங்கை முறைகள் கூறப் பட்டுள்ளன.

***

வரிசை எண்: 975 சுவடி எண்: 445 (h)

## அகத்தியர் சிவயோகம்—100

ஏடுகள்: 15. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 9—10 வரிகள். அளவு: $29\frac{1}{2} \times 4$ செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 800. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: குறைபாடு உடையது.

தொடக்கம் :

பூறணமாம் பராபரமே பரமே போற்றி
புகள்பெரிய சிவசத்தி தன்னைப் போற்றி
தா றணியில் சீவன்முத்தர் சித்தர் கொண்டாட
தானருள்வாள் சரசுபதி காப்பதுவுங் காப்பே. 1

நூல்

சீர்சிறந்த சிவயோகம் அப்பியா சிக்க
திறமாக அடிதொடுத்துச் செப்பக் கேளு
யேற்சிறந்த ஆற்மா—ாம் யோகி யாரும்
பிறதிஷ்ச மாகவகை உரைத்திட் டாரே. 2

முடிவு :

பொருள்கண்டு முப்பத்து மூன்றினுட பேரும்
பூலோகத் தோர்களுக்கு முபதேசஞ் செய்தார்
அருள்கொண்டு முப்பத்து முக்கோடி தே.........
......... ......... ......... .........

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், தொடக்கத்தில் ஓங்காரம் அழகாக எழுதி அதனுள் தலைப்பு எழுதப் பட்டுள்ளது.

இதில், சிவயோகம், சித்தாசனம்; வேறுவகை சித்தாசனம், பத்மாசனம், பத்தருசனம், சிங்காசனம், யோகத்துக்காகாத பதார்த்தம், மனோன்மணி அவத்தை, சீவமுத்தர் நடத்தை, குண்டலி யோகம் ஆகியவை உள்ளன.

வரிசை எண்: **976** சுவடி எண்: **445 (i)**

## அகத்தியர் பூரண சூத்திரம்—216

ஏடுகள்: *26.* ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: *10–11* வரிகள், அளவு: $29\frac{1}{2}X4$. செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: *1000*, ஆசிரியர்: அகத்தியர். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

மறைநா லு வேதமொரு சாஷ்த்திரம் தானும்
வளர்சரிதை கிரிகையொடு யோகமுதல் ஞானங்
குறைவிடா குருசீஷன் சமா திநிலை கற்பங்
குருதெரி சினம்வாசி மாலையா சனமும்
நிறையான தென்றுதிக்கும் மவுன பூசை
நிசச்சரக்கு வைப்புஅஞ்சனத் தயிலங் குளிசைசு
முறையோடு வா தமுத லட்சரமுந் தீட்சை
முறைதப்பாம் படிக்குரைத்தேன் பூரணமா யொன்றே.

**முடிவு :**

ஆமிந்த யிருனூத்துப் பதினு ருக்கு
ளடக்கிவைத்தப் பொருளெல்லா வெளியாய்ச் சொன்னேன்
ஓமிந்த உலகத்தி லின்னூல் கிட்டில்
யுலகத்தில் சித்ததிகம் உண்டாய்ப் போச்சு
காமிந்த சாஸ்த்திரத்தைக் கெணியா தீந்தால்
தலைதெரித்துப் போகுமடா சத்(தி)யஞ் சொன்னேன்
(நாமிந்)தப் படிசொன்னேன் யோகிக் கீய்வாய்
நலமான பூரணசூஸ்த் திரந்தான் முத்தே. *215*

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இதில், *4 (151)*-வது *6 (153)*-வது *17-23 (164-170)* வரை உள்ள ஏடுகள், *30(177)*-வது ஏடு, ஆகியவை இல்லை. தலைப்பு அழகாக ஓங்காரத்துள் எழுதப் பட்டுள்ளது.

இதில், நூலின் மர்மம், மூலாதாறபூசை, சுவாதிட்டானம், மணிபூரகம் விசித்தி, ஆகினை, தியானமண்டலம், சூரியமண்டலம், நூலில் உள்ளன.

வரிசை எண்: 977 சுவடி எண்: 445 (j)

## அகத்தியர் சிவயோகச் சூத்திரம்—30

ஏடுகள்: *6.* ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: *10* வரிகள். அளவு: $29\frac{1}{2} \times 4$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *500.* ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

காப்பு

குண்டலிக்குள் ளிருந்துமூலத் தெழுந்த சோதி
குரு)க்கடையுங் கருக்கடையுங் கூர்ந்து வீறாய்
தண்டதனில் சுழிமுனையால் வந்து நின்ற
சச்சிதா னந்தமென்ற தாய்தான் செய்த
காப்பு முத்தும்.

முடிவு :

காணப்பா யெனைப்போலே மோட்சம் பெற்றார்
காசினியில் யாங்காணேன் கேட்டதுதா னில்லை
வீணப்பா உலகத்தோர் திரிந்தலைந்து கெட்டார்
வியனான சுழிமுனை சூஸ்த்திரத்தை மிகபாற்தால்
தோணாத கருக்கிடையு குருக்கிடையுந் தெரியுந்
சூட்சமதில் சூட்சமெல்லாந் தொகுத்து (நன்றாய்)க்காணும்
பூணப்பா மறைத்துவைத்த பூட்டையெல்லாந் திறந்து
பொருள்சொன்னா ரென்குருமுப் பதுதான் முற்றே.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், ஆருதார விளக்கம் முதலியன விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. அழகாக வரையப்பட்டுள்ள ஓங்காரத்தின் நடுவில் இந்நூலின் தலைப்பு எழுதப் பட்டுள்ளது.

வரிசை எண்: **978** சுவடி எண்: **445(k)**

## நந்திகேசுவர சுருக்கம்—முப்பது

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: $29\frac{1}{2} \times 4$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 150. ஆசிரியர்: நந்திகேசுவரர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

பூரண மான பொன்னடி மூலங்
காரண மான கணபதி சத்தி
தாரண மெல்லாயி சார்ந்திடுஞ் சோதி
ஆரண ஞானத் தடிமுடி காப்பே.

முடிவு :

(கோ)லமி தென்னுங் குருவிதி னூலே
காலனு மில்லைக் கலியனு மில்லைப்
பாலெனு முத்தப் பானமு முண்டாம்
மூலம தான முப்பது முற்றே. 30

குரு முன்னிற்கவும்.
தெட்சணாமூர்த்தி ரெட்சிக்கவும்.

குறிப்பு :

இதில் தலைப்பு பின்னர் எழுதப்பட்டு, மை பூசப்படாமல் இருக்கிறது. திருமூலர் திருமந்திரம் போலச் செய்யுட்கள் அமைந்துள்ளன. இது, நந்திகேசுவரர் வாதம் முன்னூறின் சுருக்கமாகும்.

இது, எமது வைத்தியச்சுவடி எண் 236 (j) / D.402 போன்றது.

---

வரிசை எண்: **979** சுவடி எண்: **445** (1)

## (வாதச்சுருக்கம்) முப்பது

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது, பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: $29\frac{1}{2} \times 4$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 290. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

........... ... ...யே பத்துமுறை காச்சு
உத்தவிந்து நீருலே கட்டிப் போகும்
விடுவானோ வாதிமகன் சிவத்தைத் தானும்
விழியொழியாஞ் சத்தியென்ற பூரணத்தை மைந்தா
படுபாதி மூன்றிலொன்று சிவத்தைச் சேர்க்கப்
பரியான ரவிமதியின் வப்பு தாச்சே. 7

முடிவு :

னமப்பா சொல்லுகினேம் தாம்பிரத்தில் கொடுக்க
நாட்டோர்க்கும் பிளேப்பதற்கு வளியு முண்டாங்
காமப்பா லதைமெடுத்து வெள்ளிக் கீய
கனகமாங் கருமூன்றும் பத்து முத்தே. 30

**காலம் :** இல்லை.

குறிப்பு :

இதில், தலைப்பு அழகான ஓங்காரத்துள் காணப்படுகிறது. இதில் முதலேடு இல்லாததால் தலைப்பு தெரியவில்லை. வாதம் பற்றிச் சொல்லப்படுகிறது. அதனால் இது வாதச்சுருக்கம் முப்பது என்று பெயர் கொடுக்கப்பட்டது. முதல் 6 செய்யுட்கள் இல்லை.

இதன் பின்னர் இரண்டு உதிரி ஏடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

வரிசை எண். **980** சுவடி எண்: **446**

## வைத்தியக் கோர்வை

ஏடுகள்: 200. ஏட்டின் நிலைமை: கையாளத் தகுதியற்ற நிலை. பக்கத்திற்கு: 3—5 வரிகள். அளவு: 40 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை. — ஆசிரியர்: பலர். முழுமை: —

**தொடக்கம் :**

கண்டங் கத்திரிச் சாத்தி..........பாவினை பண்ணி
அந்த வேரை நடுவே..................
வனை பண்ணின நூல்ச் சுற்றி எண்ணையில் நனைத்துக்
கொளுத்திச் சேலைமேலே போட்டால்
வேகாது.

முடிவு :

அனுமார் மந்திரம்

...............சவாகனுகிய மொசாலை தரவே படு. ஓம் ஸ்ரீம் கிரீம் வம்......டுகாய ஆபத்தாரணுயா. குரு குரு வடுகாய அபடு வம் அம் பத்திர மகாதேவா மகாதேவ மாம் பாலைய சத்துரு சங்........

**காலம் :** இல்லை.

குறிப்பு :

இது மிகமிகப் பயனற்ற நிலையில் உள்ளது. ஏடுகள் முழுதும் செல்லரித்த நிலை. இதில் மகாபூதிகா தயிலம், பாஷாணக்கட்டு மற்றும் பல தலைப்புக்களில் வைத்தியங்களும், வாதங்களும், மந்திரங்களும் உள்ளன.

வரிசை எண்: **981** சுவடி எண்: **447** (a)

## ரெத்தினச் சுருக்கம்

ஏடுகள்: 45. ஏட்டின் நிலைமை: கையாளத்தக்கதன்று. பக்கத்திற்கு: 6—8 வரிகள். அளவு: 38 X 3 செ. மீ. எழுத்து:

தமிழ். கி. எண்ணிக்கை: ... ஆசிரியர்: அறியக்கூடவில்லை.
முழுமை: ..

**தொடக்கம் :**

... ... ... ... ... ...
வைத்தப்பா யிஞ்சிநீர் தேனுங் கூட்டி
... ... ... ... ... ...
மாத்திரையைக் குடுப்பா யானல்.........
வரதமெல்லாம் சாந்தமாம்.

**முடிவு :**

ஏடு படித்து எழுதுமாறு இல்லை.

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இது மிகவும் கெட்டுப்போன நிலையில் உள்ளது.

---

வரிசை எண்: 982 சுவடி எண்: 447 (b)

## வாத நிதானம்

ஏடுகள்: 180. ஏட்டின் நிலைமை: பயனற்ற நிலையில் உள்ளது. பக்கத்திற்கு: 9—10 வரிகள். அளவு: 38 × 3 செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: — ஆசிரியர்: அறியக்கூடவில்லை.
முழுமை: —

**தொடக்கம் :**

வெண்பாவைப் பண்பா ... ... ...
வாழ்த்தியிடப் புண்டரீக வாலையத்தின் வாழும்......
... ... ... ... ...

**முடிவு :**

......நற்சுப தயிலமாஞல் வெய்யபனிபோல்
அகலும் வேறு சன்னியெல்லாம் துய்ய வயிராவித்தல்
... ... ... சொல்லுதனி மானே.

**காலம் :** இல்லை.

குறிப்பு :

இது, மிக மிகப் பழுதடைந்து கையாளத்தகாத நிலையில் உள்ளது. இதில் வாத நிதானம், பித்த நிதானம், காந்தம், வயிரக்கல், மரகதம் முதலான பல தலைப்புக்களில் உள்ளன.

வரிசை எண்: 983 சுவடி எண்: 448

## சட்டமுனி கற்பம்—100

ஏடுகள்: 23. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது, பக்கத்திற்கு: 6 வரிகள். அளவு: $22 \times 2\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர்: சட்டமுனி. முழுமை: குறைபாடுடையது.

தொடக்கம் :

பாடுகிரேன் காயகற்பம் அங்கரனே காப்பு
ப(ரி)வான சின்மயற்(றி)ன் பாதம் காப்பு
நாடுகுறேன் (ரிசிகளுட) பா(த)ங் காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பதமே காப்புத்
(தேடு)கிறேன் ெ(ஞ)ன்றூலும் யென்னூலைப் போலே
(செப்பார்கள்) க(ாயசித்தி) சித்த ரப்பா
சூடுகிறேன் காயசித்திக்குஞ்..........
சொல்லுகிறேன் (நன்று)கக் கேளு கேளே. 1

முடிவு :

(மெச்சினதோர்) ரசத்(துக்கு) (ஞ)லி லொன்று
மேலான தங்கத்தை யிட்டு ஆட்டி
நச்சினதோர் (றெச்)சூதம் மிடைக்கிடையே கூட்டி
நன்றாக வரைத்திதனை (மை)(போ) லாக்கி
கச்சினதோர் கெந்தகத்தைச் சமனாயிக் கூட்டி
கத்தா(ழ)ம் (ப)ாலாலே அரைத்துக் கட்டி
எச்சினதோர் விலக......யைத்......ன் ஓட்டில்வைத்து மூடி
உற்றமனே மணல்மாவில்ப் புடந்தான் பத்தே. 62

காலம் : இல்லை

குறிப்பு :

இது மிகவும் செல்லரித்த நிலையில் உள்ளது. காயசித்தி, இரசவாதம் முதலியன இதில் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 984 சுவடி எண்: 449 (a)

# தட்சிணாமூர்த்தி சகல கருமான சாலம் ஆயிரத்திருநூறு

ஏடுகள்: *133.* ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: *6—8* வரிகள். அளவு: $29\frac{1}{2}\times 3$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *4000.* ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

ஆதிபார பரத்தினிட கிறுபை கூர்ந்து
அன்பான மனோன்மணியைத் தொழுது போத்தி
சோதியெனுங் கமலமலர்த் தமுர்த முண்டு
சுந்தரம்போல் வாதத்தில் லெக்ஷசங் காப்பு
நீ(தி)பெர வயித்தியத்தி லிரண்டு லெக்ஷசம்
நிலைத்ததொரு சூஷ்த்திரத்திற் கோடி கோடி
வாதியென பேர்படைத்த பெரியோர்க் கெல்லாம்
கிளந்துமேக் கருக்குருவை வசனித் தேனே. 1

**முடிவு;**

வாங்கியே கல்வத்தி லிட்டுக் கொண்டு
மகத்தான மூலைப்பாலும் பழத்தின் சாறும்
பாங்குடனே ரெண்டுநிரை ஒன்றாய்ச் சேத்து
பக்குவமாய்க் கல்வத்தில் ஆட்டு......
... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... 1005

**காலம்:** இல்லை

**குறிப்பு:**

இதில் இடையிடையே செய்யுட்கள் இல்லை. இதில், சடாஷ்சரம், மானத பூசை, முப்பூவின் விபரம், பூனீறு உப்பு, முப்பூவில்க் காரசாரஞ் சேர்க்க லிங்க மணி, ஞக மணி முப்பூ, மயேந்திர வெண்சாரை, நூல் பதனம், போத முண்ட சுவேதகிரி, நாதகிரி, சோதிகிரி, போதகிரி, போதிகை, சாதி, நெறிகுலம், வேத ரிஷிபாடல், விரமம் அகல, முதலியன உள்ளன.

இதன் பின்னர், 5 ஏடுகளில், தாளகக்கட்டு, வாலைரசம், சூதமுனி முறை, பூரச்சுன்னம், துரிசுச்சுன்னம் முதலியன உள்ளன.

வரிசை எண்: **985** சுவடி எண்: **449**(b)

## இராமதேவர் ஆயிரத்தில் சூத்திரம் பத்து

ஏடுகள்: *3.* ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: *6—7* வரிகள். அளவு: $29\frac{1}{2} \times 3$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *100.* ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

காணப்பா யேரியிலே விளைந்த பிண்டம்
கடிதான மாங்கிஷத்தோ டெடுத்து வந்து
பூணப்பா பொரிக்காரம் பொரித்துக் கொண்டு
பிண்டத்தை வாய்பிளந்து யதினுள் போடு
ஆணப்பா பெண்ணோடே கூடி ஞர்போல்
அப்பனே நாதமங்கே யிரங்கும் பாரு
தானப்பா லோகத்தோர் சட்டி யொன்று
சாதகமா யிணங்களையி மதினுள் போடே. 1

**முடிவு:**

ஆடலாம் யிதுகொண்டு கோடா கோடி
அளவரிந்த வித்தையெல்லாம் யிதுக்குள்ளாச்சு
சூடலாம் யிதுனுலே குளிகை செய்துஉச்
சுதியுள்ள ம(லை)களெல்லாம் யேறலாமே யேறுதற்கு
நாடெல்லாம் திரிந்தாலும் யிந்தப் போக்கு
நல்குமுறை யிதுபோலே யெங்கு மில்லை
பாடல்போல் சொன்னதென்று யெண்ண வேண்டாம்
பத்துமே சூஸ்த்திரந்தான் அடக்க முத்தே.

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

இதில் மறைபொருளாகவே வைத்தியம் கூறப்பட்டுள்ளது.

இதன் பின்னர் 22 ஏடுகளில், புத்தி விபரம், வெடியுப்புச் சுன்னம், வெடியுப்புச் செயநீர், கலைமான் பசுப்பம், கணத்தெண்ணே, தேள் விஷத்துக்கு மாத்திரை, வெடியுப்புச்சுன்னம், அயச்செந்தூரம், வீரமெழுகு, முப்புச் சுன்னம், செயநீர், அமுதாதி உருண்டை, காயம் மாத்திரை ஆகியவை உள்ளன. இவைகள் முன்சுவடியின் தொடர்போலக் காணப்படினும், ஏட்டெண்கள் வரிசையாக உள்ளன.

வரிசை எண்: 986 சுவடி எண்: 449 (c)

## சுந்தரானந்தர் இருபத்தைந்து

ஏடுகள்: 5. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: $29\frac{1}{2}$X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 150. ஆசிரியர்: சுந்தரானந்தர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

பூமி ஞத மானதே புனல்செ ரிந்த பூவதாம்
ஆம டாவி முசுத்தி வாயி ருந்த யிந்தடா
சோம ஞத மீறியே புன்சுரூபம் வைத்த சத்தியாம்
யேம வித்தை பூரண யிருக்க அஷ்ட்ட சித்தியே. 1

**முடிவு:**

சோதி யான சுங்கத்தார்
சூத நவஷ் சாரமும்
ஆதி யாம பலத்துள்ளே
அரைத்து ஞலு சாமமு
பேதி யண்ட மஞ்சினில்
பிலக்கு மாம்கு மரியில்
வாதி யான வன்னியில்
மருவு மெட்டு முத்துமே. 26

முத்தும்.
சுந்தரானந்தர் நூல் முற்றும்.

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

இது எமது சுவடி எண் 228 (h) / D. 374 போன்றது. அதில் 25 பாடல்களே உள்ளன. இதில் 26 பாடல்கள் உள்ளன. 26 வது பாடலின் பின்தான் 'முற்றும்' என்றுள்ளது.

வரிசை எண்: 987 449 (d)

## திருமூலர் வைத்தியம்

ஏடுகள்: 16. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். அளவு: $29\frac{1}{2}$X3 செ. மீ. எழுத்து: தமிழ்.

கி. எண்ணிக்கை: 200 ஆசிரியர்: திருமூலர். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

உப்பும் புளியும் முடன்காரி சாரியும்
முப்பும் புளியும் முடன்சூடன் கண்ட தும்
முப்பும் புளியும் முறவா யமுரியும்
முப்பும் புளியும் முணற்வாகச் சுட்டிடே. 1

முடிவு :

காரத்தில் ரெண்டு கடுகப் பிளந்தா ரென்று
சாரத் துடனே சமைத்திடுங் கண்டரும்
வீரமும் சீனமும் வெதுப்பிடக் கட்டுமே
பாரினில் சொல்லும் பரிசை நீ பாருமே. 96

குருவே துணை.

**காலம் :** இல்லை.

குறிப்பு :

இதன் தலைப்பில் 'திருமூலர்' என்று மட்டுமே உள்ளது. பாட்டெண்ணும் குறிப்பிடப்படாததால் இதன் முடிவு தெரியவில்லை ஆயினும் 'குருவே துணை' என்றுளதால், பாட்டுக்கள் 96 மட்டுமே என்பது பெறப்படுகின்றது. 2 வது, 3 வது ஏடுகளின் தொடக்கம் முறிந்துள்ளன.

இதில், ஊமைச் சுன்னம், கெற்ப முட்டை, ரசம் குளிகை, செந்தூரம், அண்டம் பெருமை, துரிசு விபரம், உதகம்பண்ண விபரம், வேதை சூடனில் சுன்னப்பெறுமை, ஆகியவை உள்ளன.

வரிசை எண்: 988 சுவடி எண்: 449 (e)

## (அகத்தியர்) முப்புமுறை—அன்பது

ஏடுகள்: 14. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். அளவு. $29\frac{1}{2} \times 3$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 200. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

காப்பு

ஆதியாம் ரசவாதம் ஆன வயித்திய
பொதிகையே அன்ம்பதில் முப்புவைப் பொட்டினேன்
துதிகை வாரணன் தன் பதம் மறவாம
லென்னுளும் காரணமாம் தேவிபதங் காப்பு

சிவமயம்,

நூல்

மயமாய முப்புவின் மரணந் தன்னை
வயித்தியம தாக்கி விரித்துச் சொல்ல
செயமான கணபதியுங் கந்தன் தானுஞ்
சிவனெடு பார்பதியும் திருவாளி தானும்

முடிவு :

செயலான திருவுடையன் செல்வ னுவான்
சிந்தையிலே கலக்கமத்த சித்த (னு)வான்
நாலான மணிபெத்த வித (முஞ்) சொன்னேன்
நலமுடைய மும்மு(?) ரைடி முற்றே. 50

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் 49-பாடல்களே உள்ளன. 49-ம் பாடலுக்குப் பாட்டெண் 50 கொடுக்கப்பட்டுள்ளது. இதில், முப்புவினை அறியும் முறை, முப்பு முடிக்கும் முறை. ரசவாதம் செய்யும் முறை, குருச்சுன்ன முறை ஆகியவை கூறப் பட்டுள்ளன.

இது எமது சுவடி எண் 357 (b) / D. 714 அகத்தியர் முப்பு ஐம்பது என்ற சுவடி போன்றது. இதில் ' அன்ம்பது முப்பு முறை ' என்று தலைப்பு காணப்படு கிறது.

வரிசை எண்: 989 சுவடி எண்: 449 (f)

## போகர் ஞான சூத்திரம்—100

ஏடுகள்: 5, ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது, பக்கத் திற்கு: 6—7 வரிகள். அளவு: $29\frac{1}{2} \times 3$ செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 100, ஆசிரியர்: போகர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

காப்பு

சீருலவும் பொதிகைரிஷி பாதம் போத்தி
சிவகாமித் தாயாற் பாதம் போத்தி
... ... ... ... ...
காருலவுந் திருமேனித் துதிகை யானைக்
கணபதிசெந் தாமரைத்தாள் காப்புத் தாமே. 1

நூல்

ஆமென்ற போதத்தில் நிற்கு ணம்பாழ்
அதற்குள்ளே வெளியொளி பாழதி லொளிபாழ்
ஓமென்ற வொளிபாழி லொழிபா ழாகி
உற்றதற்குள் பதமாகிப் பரத்துக் குள்ளே

**முடிவு :**

நேருன பத்துமே வகைக்கு ளக்கு
ரேக்கருக்கி ருக்கிட்டால் சுத்தி யாகும்.
சாரேடே யிதைகட்ட வகையைக் கேளு
சாறத்தின் நீருக்குள் சுருக்குப் போட்டு
போரேடே துருசுவெள்ளை செம்ப ருத்தம்
பூவுக்கு ளிட்டுவைத்து பிளிந்து கொண்டு
வாரேடே நெருப்பாகச் சுருக்குத் தாக்கி
வளமான குண்டுமணி ஊசி நீறே.

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இதில், போகர் வழலை. வழலை உப்பு பிறப்பு, வெடி உப்பு, செயநீர், சூதத்தாலே வாணம், வெடியுப்புச் செயநீரில் சாரக்கட்டு, லிங்கம், சுத்தி, ஆகியவை உள்ளன. இடையிடையே செய்யுட்களில்லை.

---

வரிசை எண்: 990 சுவடி எண்: 449(g)

## தெட்சணமூர்த்தி பேதிக்கு குளம்பு

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5—6 வரிகள். அளவு: 29½X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 80. ஆசிரியர்: தட்சிணமூர்த்தி. முழுமை: முற்றும்.

தொடக்கம் :

கேளப்பா ஊழியென்ற காத்து சொல்வேன்
　　கெடியான சாமளா தேவி யாலே
காணப்பா மையிபோலே கருத்து நிற்கும்
　　கண்ணுக்குத் தோத்தாது கடினம் மெத்த
வாளப்பா காத்தினுட விபற மெல்லாம்
　　மைந்தனே சொல்லுகிறேன் வகையாய்க் கேளு
பாளப்பா பண்ணிவிடும் முலக மெல்லாம்
　　பரிசுத்த மாயிருந்தால் பரக்குங் காணே. 1

முடிவு :

சேதியொன்று சொல்லுகிறேன் திறமாய்க் கேளு
　　சிகந்தனிலே சாமளா தேவி யாலே
நீதியிலே சத்தகாண்டம் பார்வை யிட்டு
　　நெரியுடனே தேவியைநீ வசியம் செய்தால்
சோதியுடன் வந்ததொரு ஊழி தானும்
　　சொல்லுமுன்னே ஓடுமடா துன்ம்பம் நீங்கும்
ஆதியுடன் மூதண்டம் கொண்டு வந்தாள்
　　என்மகனே ஊழியது ஒடிங்கிப் போமே. 10

காலம் : இல்லை

குறிப்பு :

இதில், வேறு சுவடிகளில் காணப்படாத சியாமளாதேவி பேசப்படுகிறுள். ஊழிக்காற்றினுடைய குணம் குறிகளைப்பற்றிக் கூறப்பட்டுகிறது. வீரம், பூரம், முதலியனவும் இதில் காணப்படுகின்றன.

வரிசை எண்: 991 சுவடி எண்: 449 (h)

## கோரக்க நாயனர் கெற்பமுறை—31

ஏடுகள்: 5. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: $29\frac{1}{2}$X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 100. ஆசிரியர்: கோரக்கர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

கோரக்கர் மூலி குருவினுப தேசம்
நேர்ரொக்க கொண்டு நிலையறிவா ரில்லை
நேர்ரொக்க கொண்டு நிலையறி வார்க்கு
சீர்ரொக்க நிற்குஞ் சிவபதந் தானே. 1

முடிவு :

நரகமுந் தீங்கும் நல்லெறி யானுக்கால்
விகரம தாகும் மெல்லிநல் லாருடன்
பறகெதிக் காளாய் பரனடி சேருவார்க்
குரேவொ சுரந்தரும் கோரக்கர் நூல்முத்தே. 30

கெர்பவிதி முப்பத்தொண்ணு எழுதி முடிந்தது. முத்து.

காலம் : இல்லை.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 323 (m)/D, 634 போன்றது. அதில் 31 பாடல்களும் உள்ளன. இதில் 30 பாடல்களே உள்ளன. முடிவில் மட்டும் முப்பத்தொண்ணு முடிந்தது என்றுளது.

இதில் பூரண லேகியம், கல்ப்பம் தலைக்கி ஆகிய தலைப்புக்கள் உள்ளன. தலைப்பு 'கோரக்க நாயனர் பூரண லேகியம்' என்றே உளது. தலைப்பில் கெற்ப முறை என்று இல்லை. இறுதித் தொடரால் தலைப்புக் கொடுக்கப்பட்டது.

வரிசை எண்: 992 சுவடி எண்: 449 (i)

## அகத்தியர் வைத்தியத்திரட்டு

ஏடுகள்: 96. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5—7 வரிகள். அளவு: $29\frac{1}{2}$X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை. 1500. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

போச்சென்று மலையாதே பொருளைக் கேளு
புதுக்கலசம்த் தோண்டியப்போ விரண்டு வாங்கி
மேற்ச்சென்ற தோண்டிக்குள் பூசக் கேளு
மெதுவான பருத்தியிலே பூசி (?)

முடிவு :

தேங்கின் வெல்லஞ் செரியாக் குணம்சோபை
தூலவுடல் முடிவுண்டாம் பனைவெல்லம்
வாதபித்தம் கபம் சன்னி நோயி
அறுசி குன்ம்மமு போம்.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், அகத்தியர் அறுநூறில் வெள்ளை ரசகற்பூரம், அகத்தியர் அறுநூறில் காலாந்த கௌவுரி, கரிசல் முன்னூறில் காளகண்ட மேக ஞருயண சூதம், சார சங்கிரகம் வெடியுப்புக்கட்டு முதலியன உள்ளன

பின்னர், பிரம்மமுனி நூலில் அறுவகை சூரணம், லிங்கம், வீரம், பூரம், செப்பு நெருஞ்சிலின் குணம், யானை நெருஞ்சிலின் குணம், பஞ்ச சூதம், பஞ்ச பாணம், நிவர்த்தி, வயித்திய சார சங்கிரகம், வெள்ளை வெட்டையின் குணம் ஆகியவை உள்ளன.

---

வரிசை எண்: 993 சுவடி எண்: 450 (a)

## இராமதேவர் வகாரம் ஆயிரம்

ஏடுகள்: 99. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8—10 வரிகள். அளவு: 34X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 4000. ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

காப்பு

அண்டமெனும் கெரியார்(?) பாதங் காப்பு
அருள்பெருகும் பூரணத்தின் அறிவே காப்பு
* * * * *
பிண்டமெனும் பொருளான அண்ட பிண்டம்
பேரண்டம் நிறைந்தகண பதியே காப்பு.

நூல்

பதியான மதிநிறைந்த பூரணத்தி னலே
பக்குவமாய்த் திசைஞத மகண்டு தேறிக்
கெதியான மோஷ்சமென நின்றே நப்போ
கேசரத்தில் கேசரியாள் கிறுபை கூர்ந்து

முடிவு:

சோதி என்ற ஆயிரத்தை எடுத்து மைந்தா
சுகமாக மடிமீதில் வைத்துக் கொண்டு
நீதமுடன் மவுனமதாய்ப் பாத்து அந்த
நிலையறிந்த கருக்குருவாய் நின்றோர்க் கெல்லாம்
வாதகலும் ஞானமுறும் வசிய மாகு
மகத்தான பூரணமும் பூரணமே யாகும்
ஞதமுடன் ஞதமதா யொடுங்கி நின்ற
நாதாந்தச் சிவயோகம் பாத முத்தே. 1001

ராமதேவ சுவாமி ஆயிரம் முத்தும்.

ஸ்ரீ ப்ரமதேவதை பாதமே துணை.

குரு கிடாஷ்சம்.

காலம்: இல்லை.

குறிப்பு:

இதில், ஆதி உப்பு விபரம், வெள்ளைக்கல் சித்தி, சத்தி உப்பு, முப்புச் சுன்னம், யோகவாசி நிலை, பூரணப் பெருமை, ஆதி சவுக்காரமான அண்டச் சவுக்காரம், ஆதி சவுக்கார பிண்டம், பூரண லேகியம், ரூமதேவர் கொண்ட நாத விந்து மெழுகு, முன் வைத்த சவுக்காரச் சுன்னம், பூரண மெழுகு, மூதலியன உள்ளன.

✳✳✳

வரிசை எண்: 994 சுவடி எண்: 450 (b)

## இராமதேவர் கருக்கடை சூத்திரம் பலதிரட்டு ஐந்நூறு

ஏடுகள்: 53. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8—11 வரிகள். அளவு: 34 × 4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 2500. ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது,

தொடக்கம்:

ஆதியந்த மெய்நிறைந்த சோதி பாதம்
அகண்டபரி பூரணத்தி னறிவிர்க் கூடி
பாதியா முப்பொருளு மூன்று மொன்ருய்
பரவெளியாய் நின்றபரா (ப)ரையின் பாதம்

முடிவு:

செய்யாதே தீவினைதான் கொடிது பாவம்
செந்துவெல்லாம் யீசனென்று தெளிந்து காணு
மெய்யான குருபதத்தைப் பணிந்து போத்தி
விளம்பினேன் கருக்கிடைசூத் திரந்தான் முத்தே. 523

முத்தும்.
ரமதேவர் கருக்கிடை சூஷ்த்திரம் அன்னூத்திரட்டு முத்தும்.
பரதேவதை பாதாரவிந்தமே கெதியாக வேணும்.

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

இது எமது சுவடி எண் 365 (b)/D. 727 போன்றது. அதில் 521 செய்யுட்களிருக்கின்றன. இதில் 523 செய்யுட்களிருக்கின்றன.

வரிசை எண்: **995** சுவடி எண்: **450(c)**

## இராமதேவர் சிவயோகம் இருநூறு

ஏடுகள்: 21. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு 8—11 வரிகள். அளவு: 34X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1000. ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

காப்பு

மூலமெனும் முதல்ப்பொருளாம் முத்திநடு வணையில்
மூதண்ட மானதொரு பிறம்மத்துக் கப்பால்
ஞாலமெனுந் தவமுடைய சத்திபதி மேலே
நாதாந்தப் பெருவெளியில் நடுவழியி னுள்ளே
நீலமிகும் நெருப்பாரு மயிர்ப்பாலத் தப்பால்
நிறைந்தபரி பூரணமாய் நிட்களம தாகி
சீலமிகுந் தவமுடையோர் யிருதையமே தானாய்
சிறந்துநின்ற பரமகுரு சீர்பாதந் துணையே. 1

நூல்

பாதமெனும் வாசிதனை யறிய வேண்டி
பத்தியுடன் மனோன்மணியைக் கண்டு போத்தி
வேதமெனும் பொருளறிய வேணு மென்று
வேண்டினேன் நாதாந்த வேதத் தாயும்

முடிவு :

பத்தாசை கொண்டுமனம் மவுன மாக
பதிவாகச் சிவயோகம் யிர நூ றும்பார்
வித்தான பிறவியது அத்துப் போகும்
மேலான சிவயோகம் விளங்கு முத்தே. 201

ராமதேவ சுவாமி சிவயோகம் யிரனூறு முத்தும்.
சற்குருவே துணை.
பரதேவதை பாதார விந்தமே துணையாக வேணும்.
தேவி சகாயம்.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், அகார உகார மகார தீட்சை, சத்தி பூசை, காண்ட பாத்திரம் பூசையில் சேரும் பேர், நூலின் பெருமை, மானத வாலை பூசை, லகிரி விபரம், வாறணியில் அமுற்த லேகியம், வல்லாறை கற்பம், கடுக்காய்ச் சூரணம், னூல் குடுக்க சாப விபரம் முதலியன உள்ளன.

வரிசை எண்: 996 சுவடி எண்: 450(d)

## இராமதேவர் தண்டகம் நூற்றுப்பத்து

ஏடுகள்: 12. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8—11 வரிகள். அளவு: 34 × 4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 600. ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

மூலமுத லாதார விஞ்ஞைதனை ஓதி
முனையான சுழிமுனையில் மேலாக நின்று
பாலமெனு மயிர்ப்பாலத் தந்தமதிற் தாவிப்
பத்திகொண்டு நெருப்பாறில்ப் பதிவாகச் சென்று

முடிவு :

பாத்துநீ மகிழாமல் கேவலமாய் நின்ருல்ப்
பரமான வாசலது தோணுந் தோணும்
காத்துநீ கயிலாச வாசல்தனைக் கண்டால்
கண்ணுன நடுமணையில் கமலமது முத்தே. 111

ராமதேவர் தண்டம் முத்தும்.
சற்குரு பாதாரவிந்தமே கெதியாக வேணும்.
சிவசுப்பிரமணியர் கிறுபை உண்டாவ தாகவும்.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், கொச பீச அஞ்சனம், சல்லியக்கொடி, வழலைச் செயநீர் சரக்குக் கட்ட, ஞுத கல்ப்பம், ஷி செயநீரின் வாடை, கெவுனம்மனவெகிமனிர பஞ்ச பட்சியான காமரூபிக் குளிசம் மோகனம், கெற்ப வியாதிக்கி கருசலுப்புப் பற்பம், நூல் விபரம் ஆகியவை உள்ளன.

வரிசை எண்: **997** சுவடி எண்: **450**(e)

## இராமதேவர் வயித்தியம் எண்பது

ஏடுகள்: 8. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 8—11 வரிகள். அளவு: 34X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 400. ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

ஆதியிலே அமைத்தவிதி எழுத்தைக் காண
அருளான நந்திபத மன்பாய்க் கொண்டு
சோதியென நின்றிலங்கும் ஞுத ரூபி
சுருதியுள்ள வாலைமனோன் மணியைப் போத்தி
நீதியுடன் சஞ்சார சமாதி செயிது
நின்றநடா ஆதியந்தம் நிலைக்க வேதான்
வாதியென்று வந்தோற்க்குக் கருவா மின்னூல்
வசனித்தே னெண்பதுமே யொன்று மாச்சே. 1

முடிவு :

வணக்கமுள்ள பூறணத்தை வெளிவி டாதே
வஞ்சருடன் பேசாதே வாதா டாதே

இணக்கமில்லா மாந்தருட னிணங்க வேண்டாம்
யின்பமுள்ள வயித்தியனு லீய வேண்டாம்
மணக்குமலர் மதிகளிலே மனதை வைத்து
வயித்தியனு லெண்பதையும் வகையாயிப் பார்த்து
தனக்குமிது பொருளெனவே வணங்கிப் போத்தி
சதாகாலங் குருபதத்தில்ச் சருவாய் முத்தே, 83

ருமதேவர் வயித்தியம் எண்பது முத்தும்.

**காலம்:** இல்லை

**குறிப்பு:**

இதில், முப்புச்சுன்னம், கற்ப வகை காரசார விபரம், ஞதத்தில் மாத்தம், திலதம், வங்கச் சுன்னம், திகைப்பூச்சி திலத மை, தாமரைக்கொடி, லேகியம், சமாதிக்கி புத்தி ஆகியவை உள்ளன.

வரிசை எண்: **998** சுவடி எண்: **450**(f)

## இராமதேவர் சூருக்கம் ஐம்பது

ஏடுகள்: 6. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8—10 வரிகள். அளவு: 34X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

ஆதியிலே வாலைமனேன் மணிதான் கூவி
அழைத்திட்டு ஆதியந்த மறியச் சொன்னுள்
சோதியிலே கருவுருவை உன்னிப் பாரு
சொல்லவொண்ணு அதிசயங்கள் தானே தோத்தும்

**முடிவு:**

யிஷ்ட்டமுட னின்னூல்தான் அன்பத் தொன்றும்
யேகமாயி மவுனமுட னிருந்துக் கொண்டு
அஷ்ட்டாங்க யோகமதைத் தினமும் பாரு
அருளான மனேன்மணிதான் காற்பாள் முத்தே. 51

ருமதேவர் சூஸ்த்திர முத்தும்.

**காலம்:** இல்லை

குறிப்பு :

இதில், பேய் மரட்டி, அஷ்ட்ட கற்ப மூலிகை, வசியம், திகைப்பூடு திலதம், திரிகோணத் தயிலம், றசங்கட்ட, நூல்த்துகை, கருமானச் செயநீர், அஞ்சனம், பிணிகள் தீர மெழுகு, ஆலின் மேல்ப் புல்லுருவி சிறியா நங்கை, மகாரசத்தின் சுத்தி மணி, துருசு பற்பம், பால் முறிய, யோகத்தின் விபரம், பத்துனேம்பு, பிண்ட மெழுகு, கரு உரு திலதத் தயிலம் வேதைக்கி, செந்தூரங்கள் றசக்கட்டு, முதலியன உள்ளன

வரிசை எண்: **999** சுவடி எண்: **450** (g)

## இராமதேவர் சோசியம் பத்து

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். அளவு: 34X4 செ, மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 60. ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

ஆதியிலே வேதியன்தான் அறியச் சொன்ன
அருமறையின் பொருளான சோசியத்தை
சாதியிலே முதலான ராமதேவர்
தவருமல் சற்குருவின் பாதம் போத்தி
சோதியிலே செகச்சோதி சோதியான
சோசியமாம் நவக்கிரக ருசியப்பா
நீதியிலே நீடுலகில் நன்மை தின்மை
நேர்நிறைகள் சொல்லுகிறேன் யின்னூல் பாரே. 1

முடிவு :

ஆமென்ற ருசிநிலை றவிபுதனும் வெள்ளி
அமத்திடுவா ரொருருசி யதனிலொரு மாதம்
போமென்ற சந்திரனுள் ரெண்டேகா லாகும்
புத்தியுள்ள செவ்வாய்தான் மாதம் ஒண்ணரையாம்
தாமென்ற சனியாண்டு ரெண்டரையாயி நிற்கும்
தயவான குருவுமோ ராண்டுநிலை யாகும்
ஞமென்ற ஞகங்க ளிரண்டு மொண்ணரையாம்
நடுவான கிரகநிலை நலமறிய முத்தே. 11

ராமதேவர் சோசியம் முத்தும்.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், கிரக நிலைகளைப்பற்றியும், அதனதன் கால அளவு பற்றியும் விளக்க மாகவும் நன்ருகவும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1000 சுவடி எண்: 450 (h)

## இராமதேவர் சூத்திரம் 100

ஏடுகள்: 22. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். அளவு: 34 × 4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 600. ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

காப்பு

ஆ(தியந்த)ம் மெயிநிரைந்த சோதி பாதம்
அகண்டபரி பூரணத்தி னரிவைக் கூட்டி
... ... ... ... ... ... ...
சோதியாயி நாதாக்கள் பாதம் போத்திச்
சொல்லுவேன் சூத்திரத்தைச் சொல்லு வேனே. 1

நூல்

சொல்லுவேன் வாதத்தின் திறவு கோலுஞ்
சுளுக்காக அட்டகற்மக் கருவும் நன்ருயிச்
... ... ... ... ... ... ...
மல்லுவேன் சித்தர்கள்தான் மறைத்தப் பெருநேல்லா
மாட்டினேன் வெளிதிறந்து மைந்தா பாரே. 2

முடிவு :

(வைய)ப்பா சகலகலே செய்து யெல்லாம்
வளமாக அடக்கிவெகு தெளிவாய்ச் சொன்னேன்
அய்யவென்று நிலேயாதேப் புலேபே ச(ா)தே
ஆத்தாளே அனுதினமும் பிறவா தேநீ
செய்ய(ா)தே நீவிளேகள் கொடிது பாவமுஞ்
சேர்ந்துஎல்லா ஈசன்னென்னறுந் தெளிந்து காணு
மெய்யான குருபதத்தை போற்றி செய்து
விளம்பினேன் பலதிரட்டு சூஷ்த்திரந்தான் முற்றே. 103

இராமதேவர் சூஷ்த்திர முற்று முத்து.

சிவமயம்.

காலம் :

விரோதி வருஷம் வையாசி மாதம் 15ம் தேதி புதன்கிழமை நாளிகை 24 நாலு நாலிகையில் யெழுதி முடிஞ்சது முத்து.

சிவமயம்.

குறிப்பு ;

இதில் பலவிதமான மருத்துவங்கள் பேசப்படுகின்றன. இதற்கு முன்னுள்ள சுவடி எழுத்துக்கும் இதற்கும் வித்தியாசம் காணப்படுகிறது. இது வேறொருவர் கையெழுத்தாகத் தெரிகின்றது. பிழைகள் மலிந்து கிடக்கின்றன.

வரிசை எண்: 1001 சுவடி எண்: 450 (i)

## இராமதேவர் கருமானச் சுருக்கம் முப்பது

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: மிகமிசுப்பழுது. பக்கத்திற்கு: 9—10 வரிகள். அளவு: 34×4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 200. ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

ஆதிகுரு வானதொரு பிறமம் பாதம்
அனுதினமும் நெஞ்சில்வைத்து அருளை நோக்கி
சோதிவெளிக் கப்பாலே துலங்குஞ் சத்தி
துணையெனவே கருமானச் சுருக்கஞ் சொல்ல
நீதியுள்ள வாலைமனோன் மணிதான் வந்து
நிலைத்தபொருள் கருவமைப்பை நிலைத்துளோர்க்கு
சோதினையாய்ச் சொல்லுவையோ ருமா வென்று
சொல்லிமனக் கசடகத்தி துதித்தான் பாரே. 1

முடிவு :

முத்துமிதைப் பாற்கயிலே மவுன மாக
மூடருடன் பேசாதே வாதா டாதே
சத்தமுள்ள பெரியோரைத் தொண்டு பண்ணு
துவாதசாந் தத்தில்மனந் துலங்கி நில்லு
சித்தமே சிவன்செயல்தான் அப்பா சொன்னேன்
திறிகோண முள்ளசத்தி அறிவாற் பாரு
உத்தபொரு ளீதல்லா லொன்று மில்லை
ஊடாடும் வாசியைநீ வணங்க முத்தே. 31

குரு கிடாஷ்சம் உண்டாகதாகவும்

தேவி சகாயம்

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் மூப்புச் சுன்னம், லிங்கக்கட்டு, துருசுச் சுன்னம், ரசமணி, வீரக்கட்டு, காரசாரச் செயநீர், நாகக்கட்டு, பூமலர் குரு, செயநீர், தாளகச் சுன்னம், வீரச் சுன்னம், பாஷாணச் சுன்னம், கெந்தக மெழுகு, சூதக்கட்டு, அயச்செம்பு, தங்கச் சுன்னம், வியாதிக்குத் தயிலம், திலத மை, வசிய வாடை ஆகியவை உள்ளன. எழுத்துக்கள் தெளிவாக உள்ளன.

வரிசை எண்: 1002 சுவடி எண்: 450 (j)

## இராமதேவர் பரஞான கேசரி நூறு

ஏடுகள்: 12. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 9—10 வரிகள். அளவு: 34 × 4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 800. ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முழுதுமுள்ளது.

தொடக்கம் :

ஆதிபரா பரைஞான கேசரியைத் தானும்
அசையாமல் நெஞ்சகத்தில் அறிவதனால் நிறுத்தி
நீதியெனும் பரஞான கேசரி வினோதம்
நேர்மையுடன் யான்பாடக் குருவருளே சரணம்
சாதியெனும் மெழுவகையும் தன்வசமாய்க் கண்டு
சச்சுதா னந்தமென்ற அமுந்தமதைக் கொண்டு
சோதியெனுஞ் செகச்சோதி ஞான (மய்யா)
னண்டாகத் தீபமதைத் துணையெனக் கொண்டேனே. 1

முடிவு :

பூணேதான் மனதினிலே மவுன மாக
பூண்டுகொண்டு அஷ்ட்டமா சித்து பாற்க
வீணேதான் போகாதே வினோதம் பாற்க
மெஞ்ஞான குருதீப சரண முத்தே. 100
முத்தான பரஞான கேசரிவி னோதம்
முழுதுமிதை மவுனமதாய் மனதில் கொண்டு
* * * *
கற்த்தாவே கதியெனவே கமலம் னேக்கி
கற்ப்பூர தீபமதில்க் கருத்தாய் முத்தே. 101

ராமதேவர் பரஞான கேசரி வினோதம்
முத்தும்.

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இதில், முப்பொருள் விபரம், கள்ளச் சீஷர் வளப்பம், சரச்சீஷன் வளப்பம், யிடகலை. பின் (கலை), சிவதீட்சை, சத்தி தீட்சை, வாலை பூசை, சிதம்பரவ பூசை, ரசமணி, சஞ்சார சமாதி, சகல கருவுக்கும் பற்பம், முன் பற்பத்தில் வியாதிகள் தீர அனுபானம், நேத்திர சிந்தாமணி, பஞ்சபூத விபரம் ஆகியவை உள்ளன.

---

வரிசை எண்: 1003 சுவடி எண்: 451

## அகத்தியர் குருநாடி

ஏடுகள்: *39.* ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: *6—8* வரிகள். அளவு: *36 × 3* செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *1200.* ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

திருவளரும் போதிகைமலை சிறந்து மேவும்
சிவஞான தேசிகஷத் தீசர் பாடல்க்
குருனடி நேர்மைதனை உரை(க்க) வேண்டி
குகநமசி வாயமனேன் மணித்தா யீன்ற

**முடிவு :**

ஆனு மதனி னலு மறிவில்லா மாய்கை யாலும்
பூணுங்கால் பெருநோயில் வீழ்வார்
ஆனுகம் பித்தமாய்கை யதுவா தங் காமியங் கெற்பம். *226*

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இது, மிகவும் செல்லரித்து ஓரங்கள் சிதைந்தும் காணப்படுகிறது. இது எமது சுவடி எண் *13/D. 14*ன் வேறுயது.

இதில், பித்த குணம், தொந்த புத்தி, சலரோக குணம், சூட்டு குணம், குன்மம், நீரழிவுக் குணம், சோகை குணம், காதடைப்பு, தசைநாடி பற்றுக்கு குணம், குருனடி, பூதனடி, குருத்தியானம், சீஷன் குணம், நாடி சூச்சம், நாடி பிரிவு, திசை நாடி. சீஷனுக்கு புத்தி, பித்தனடி, சலேற்பனனடி, சததாது, பிரு(ண) குறி, கிருணி ஆகிய தலைப்புக்கள் உள்ளன. முற்றும் என்று இல்லாததால் செய்யுட்டொகை இன்னதென்று அறியக்கூடவில்லை.

வரிசை எண்: 1004 சுவடி எண்: 452 (a)

## தேரையர் வைத்தியம் ஆயிரத்து ஒன்று

ஏடுகள்: 48. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 32 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1500. ஆசிரியர்: தேரையர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

ஆதி சத்தி அருள்புதல்வர் சரண
மீதி லுத்த பிணி.அக லும்படி
வாதி யுத்தமர் சித்தர் பதமணிந்
தோதி வைத்ததோ ருயிரத் (தெ)ாண்டுமே. 1

முடிவு :

யேத்திடாய் முலைப்பால் யிளைத்ததோ ரபிலாந்
தோத்திடா நசியம் சுமை பாதிபோ
மாத்திடா நசியம் மறுபக்கமும்
பாத்திடாய் சுறம்பாதிவிட் டோடுமே.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் சயித்தியத்துக்கு மருந்து, மூல வாயுவுக்கு, ரெணத்துக்கு யெண்ணை, கல்லடைப்புக்கு, வாலவாதத்துக்கு, இடுப்பு வாதத்துக்கு, குடல் வாதம் தண்டு வாதத்துக்கு, குதி வாதத்துக்கு, சருவாங்கவாதத்துக்கு, மறணவலி வாதத்துக்கு, எலும்புருக்கிக்கு முதலான தலைப்புக்கள் உள்ளன.

வரிசை எண்: 1005 452 (b)

## பிரமமுனி சுருக்கம் எண்ணூறு

ஏடுகள்: 100. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8—10 வரிகள். அளவு: 32 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 4000. ஆசிரியர்: பிரம்மமுனியார். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

திருவளரு மெஞ்ஞான சோதி பாதம்
செப்பரிய கிணேச(னுடன் க)ந்தன் காப்பு
அருவுருவா யாதியந்த வெளியும்ந் தாண்டி
அகண்டுநின்ற சின்மயத்தின் பாதம் போத்தி
பரிவுடைய பூறணத்தின் சூட்சா சூட்சம்
பதியிருந்த மனோன்மணித்தாயி பாதம் போத்தி
குருவருளால் நாதாக்கள் பாதம் போத்தி
கூறுகிறேன் வயித்தியர்க்குத் திறந்தான் பாறே. 1

முடிவு :

வரிசையாம் முன்மருந்தோ டொக்கச் சேறு
வளமான ஒதியம்பட்டைச் சார்ஆவின் பாலும்
கிரிசையாம் கொடிக்கள்ளித் தேங்காயின்ம் பாலும்
கடிதான கத்தாளம் பாலுங் கூட
மருசையாம் ச... ... ... ... ...

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், மேக ராசாங்க லேகியம், ரசபஷ்ப்பம், தாம்பிரபஷ்ப்பம், யெட்டித் தயிலம், சிவன் வேம்புத் தயிலம், சிவன் வேம்புச் சூரணம், கரிசாலை லேகியம், பாண்டு. சோகை, காமாலைக்கி, வாய்நீரூறலுக்கு, விஷம் தீர, காச்சல் கெண்டை கட்டிக்கு, கொம்மட்டிக்காயி எண்ணெய், முன் குமட்டிக்காய் எண்ணெயில் மலடிக்கு குடுக்கவும் முதலியன உள்ளன.

வரிசை எண்: **1006** சுவடி எண்: **453**

## அகத்தியர் இருநூற்றைந்து

ஏடுகள்: 73. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5—7 வரிகள். அளவு: 23X2½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1000. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

இயேசு முன்னிற்க்க.
அகஷ்தீசற் இருநூற்றஞ்சு பாடல்
திருவிளம் பற்றினது.

பூரணமாம் மும்மூலப் பொரியிற் சூடாம்
புகையெழும்பி மேகம்தானு சிறசை சூடாம்
காரணமா நீர்கலந்து கண்ணில் ரோகம்
கனலெழுந்து வா வாயுனுல் சூலே ரோகம்
மாறணமாம் வா தத்தி லெழுந்த மேக
மதியதொரு பி(த்)தத்தால் கிருணி யாச்சு
தாரணமா வாயுவுனுல் கும்(ம) மாச்சு
சார்ந்தசிலேற் பனங்கூடி சயம தாமே. 1

முடிவு :

நோய்மிகுந்து சாவில்லா ஒருநா ளுந்தா
நுண்மையாய் சறக்கையெல்லாம் நீத்திக் கொண்டு
வாய்முட னெண்ணெயொடு கிறதஞ் செய்து
வாய்த்திடுவா யனுபானம் வயித்திய முத்தே. 204

இயேசு முன்னிற்க.
குருவே துணையாக வேணும்.

காலம் :

1848-ம் வருடம் ஆடி மாதம் 3-ம் தேதி திங்கள்கிழமை 10 மணிக்கி எழுதி நிறைந்தது முற்றும். இந்த பொஷ்த்தகம் அமுறுதம் தயிரியம் பொஷ்த்தகம். இதை யெடுத்தவர்கள் பார்வை செய்து குடுக்குற்படி கேட்டுக்கொள்ளுகிறேன.

இயேசு ரெஷ்சகற் அருளினுல் எழுதி நிறைந்தன
குறுபாதம் துணே.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 311 (e)/D. 566, 323 (a)/D. 622 போன்றது. எனினும் பாட வேதுபாடுகளும், மாற்றங்களும் காணப்படுகின்றன. 311 (e) என்ற நூல் முகம்மதியர் எழுதியது. இது கிறித்தவர் எழுதியது. இது மேலும் சுவடி எண் 294 (h), 317 (k) போன்றதுமாகும்.

இதன் பின்னர் ஒரு ஏட்டில்:—

'ஏங் சுங் உரு 205 போடவும்' என்று தொடங்கி சக்கரங்கள் எழுதப்பட்டு. 'திருவுலத்தில் உத்தித்த இயேசுனுதருடைய நமகையால் நடக்கும் பயபக்தி மந்திரம்' என்றும், அதன் பின் சக்கரங்களும் மந்திரங்களும் எழுதப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1007 சுவடி எண்: 454 (a)

## யூகிமுனி வாத உலா ஆயிரம்

ஏடுகள்: 68. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 34X3 செ. மீ. எழுத்து: தமிழ் கி. எண்ணிக்கை: 1400. ஆசிரியர்: யூகி முனிவர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

(பாயிரம்)

அண்ணு மலையிற் சிவனுமை யவளும்
பண்ணு ரசவாதம் பாவித்தார்—கண்ணுய்
(வ)டகிரந் தந்தனை வடிவாந் தமி(ழ்) செய்தார்
திடமுடனே யூகிமுனி செய்.

நூல்

ரச செந்தூரம்

ஓங்கு கணபதியும் உள்ளபடி சேவித்து
(நீ)ங்குரச செந்தூரம் சாத்தக்கேள்—பாங்காய்
ரசசுத்தி பண்ணி ஞடிபலம் நாலு
திசைசுத்தி கெந்தகம் பலம்அரை நிறுத்து

முடிவு:

தங்கமென வாழி தாம்பூரம்வாழி
யுங்கள்குல நாகமென வாழி—வங்கம்
வடிவாக வாழி வலுமைபெற யெல்லாரும்
முடிவாக வாழி முடிந்து.

குரு முன்னிற்க.
யூகிமுனி வாத உலா முடிந்தது.
முற்றும்.

காலம்:

இது மன்னார்குடி மூற்க்க விஞயகப் பிள்ளையார் கோவில் தெருவில் யிருக்கும் சதாசிவ அப்புபிள்ளை குமாரன் கண்ணுசாமி பிள்ளையால் யெழுதி முகிந்தது. தயங்கம்பாடியைச் சேர்ந்த புளையாத்தில் எழுதத்துவககி கும்பகோணம் சேர்ந்த கருப்பூரில் வீ. அப்பாவு பிள்ளை வீட்டில் முடிந்தது.

*1886*-ம் வருடம் மேன் மாதம் *29*-ம் தேதி சுக்குர வாரம் பகல் *15* நாழிகைக்கீ முடிந்தது.

கோர்ட்டு சாத்தின காலம்

மேற்கண்ட காலக்குறிப்பின் பின் ஒரு ஏட்டில்:

"இதுகளில்ச் சொல்லப்பட்டிருக்கிற ரசவாதத்துக்கு யிச்சியாதே வயித்தியத்தைக் கெடுக்காதே. மேலும் இந்த சாஸ்த்திரம் இந்தப் படிக்கு மேல்ப் பாடத்தில் யெழுதியது. அப்படியே இதிலும் எழுதப் பட்டிருக்குது. முற்றும்".

என்றுள்ளது. பாடல்கள் *990*க்குப் பிறகு *1023* தொடங்குகிறது. ஏட்டெண் சரியாக இருக்கிறது. கடைசியிலும் *1067*க்குப் பிறகு *1071* என்றுளது.

குறிப்பு:

இதில் ரச செந்தூரம், லிங்க பற்பத்தில் தங்கம் நாகம் சேர்க்க, கட்டுவகை, காரக்கட்டு, நாகக்கட்டு, மட்டம் செயமாகும் (பு)கைநீர், சரக்கு நீற்ற, சங்கதிரா வகை நிறை முதலியன உள்ளன.

வரிசை எண்: 1008 சுவடி எண்: 454 (b)

## ரோமரிஷி 500

ஏடுகள்: *4*. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: *6* வரிகள். அளவு: *34X3* செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *60*. ஆசிரியர்: ரோமரிஷி, முழுமை: முற்றற்றது.

தொடக்கம்:

பிண்டமென்று லிளங்கொடியாள் முதலாம் பிண்டம்
பெருமைபெறத் தானெடுத்துச் சொல்லக் கேளு
அண்டமெனு மாற்மாவி லஞ்சாம் பிண்டம்
அப்பனே அதுல்லிய விளுந்து தானல்
குண்டமெனும் (பீ)ங்கானி லெடுத்து வந்து
கூர்ந்துபார் பெண்ணுகில் ரவியு மாகும்
அண்டமதி லானல் மதியு மாகும்
மார்சுகங்கள் சொல்லுகுறேன் மருவீர் காணே.

முடிவு :

போடேநீ பட்சமொன்று கடந்து தானால்
பூரணியைப் பூசைபண்ணி யப்பால் வாங்கி
ஆடேநீ கோடிவித்தை இந்த நீரில்
அம்மம்மா ஆச்சரிய மாயி னுதம்
ஊடேநீ யின்னீரை றவியில் வைக்க
ஓகோகோ உப்பாகும் உண்மை சொன்னேன்
சூடேநீ இந்தஉப்பை கண்ட போதே
சுரூபமென்ற சித்தியெல்லாம் யிதுக்குள் ளாச்சே!

காலம் : இல்லை.

குறிப்பு :

இச்சுவடியில் இவ்வளவே உள்ளன. பாட்டெண்கள் காணப்படவில்லை. மிகவும் பழுதுபட்ட நிலையில் உள்ளது. நான்காவது ஏட்டில் ஒருவரியே எழுதப் பட்டுள்ளது.

வரிசை எண்: **1009** சுவடி எண்: **455**

## அகத்தியர் சூத்திரம் 300

ஏடுகள்: *142.* ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: $15 \times 2\frac{1}{2}$ செ. மீ. எழுத்து. தமிழ். கி, எண்ணிக்கை: *2000.* ஆசிரியர்: அகத்தியர்: முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

காப்பு

பூதலத்தில் தென்பொதிகை தன்னில் வாழும்
பூரணமே யென்குருவே சிவாயமே அய்யா
மாதவத்தா லஷ்ட்டசித்தி யெட்டும் பெத்த
வரிசையினுல் வயித்தியனுல் வகையாய்ச் சொல்வேன்

முடிவு ;

சீலத்தி னந்தியுட பூசை பண்ணு
செகனுடி னுதவொலி மணியி னேசை
காலத்தின் கருவறிந்து பூசை தீற்ந்தால்
கைக்குள்ளாம் வயித்தியமுன் னூறு முத்தே. *301*

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், காந்த சத்து, காந்தபஸ்பம். அயசத்து, வாலை ரசம், தளமுறு செந்தூரம், மூதண்ட லேகியம், ஹால்த்துகை, கற்பூர சிலாசித்து, அரபொடி செந்தூரம், லேகிய செந்தூரம், அய செந்தூரம், யெலும்பிச்சங்காய், கெந்தக பற்பம் முதலியன உள்ளன.

இதன் பின்னர் ஒரு ஏட்டில் :

தன் மந்திரி

"நாடியி னிதானத் தாலு
நற்குறி குணங்க ளாலும்
நீடிய விழியி னாலு
நிலைபெறு முகத்தி னாலுஞ்
சூடிய நாவி னாலுந்
சொல்மல சலத்தி னாலுந்
தேடிய குருடன் கையிற்
சித்திரம் போல தாமே."

என்ற பாடலொன்று காணப்படுகிறது.

---

வரிசை எண்: 1010 சுவடி எண்: 456

## கருக்கடை நிகண்டு 300

ஏடுகள்: *45*. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: *7—8* வரிகள். அளவு: *35X3* செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *1500*. ஆசிரியர்: தன்வந்திரி. முழுமை: குறைபாடுடையது.

தொடக்கம் :

... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
... ... ... ... நாத மாகும்
மருவிவருஞ் சிதம்பரமு மதுவே யாகும்
கல்லிடவே கடலாகும் மலைக ளாகுங்
கனமான செடிபூடு.........ளாகும்
நல்லிடவே தேவாலையஞ் சிவாலைய மாகும்
நலமான சத்தசா கறங்க ளாமே. *12*

முடிவு :

காமப்பா கல்வியது யெல்லாந் தோணுங்
கனமான யின்னூலைக் கைவி டாதே
நாமப்பா முன்னூறும் பாரு பாரு
நலமான கருக்கிடையாம் நிகண்டு முற்றே. 302

விசாலாட்சியம்மன் துணை.

(மேலும் இதிலுள்ள வேறு தலைப்பு)

விறம முனி முப்பூக் குரு

தொடக்கம் :

ரசகற்பூரம் வராகனிடை 5 கட்டியாய் வாங்கி சட்டியிலே அப்புறேக தகடு வச்சு அதின்பேரில் கட்டி வச்சு தீபாக்கின சங்கம் பள சாறு சாமனுலு சுருக்கு முசுமுசுக்கைச்சார் சாமம் னுலு நந்தியா வட்டை பூவுசார் சாமம் னுலு, குப்பைரோனிச்சார் சாமம் னுலு, யிந்த பர்ப்பத்தில் கடுகளவு எந்த அவிற்தத்திலும் தயிலங்கள், கசாயங்கள், லேகியஞ் சூறண மிதுகளில் சேத்துக் குடுக்கலாம். வயித்திய முப்பூ குரு சகல ரோகமும் நீரும்.

(பின்னர் 48, 49-ம் ஏடுகளில் உள்ளவை)

தொடக்கம் :

3. வாசிக்குகை
4. சுப்பிரமணிய தியானம்
6. வாசி சூட்சம்
8. சுழியறிய வாலைக்கி
9. வாமபூசை வாலைப்பேர்
10. சல்லிவேர்
12. கொடிசித்தான் உதகம்
14. அண்ட பிண்ட பேரு

முடிவு :

113. வயிரவர் தியானம் — சுப்பிரமணியர் தியானம்
114. கஞ்சா — ஆக தினிசு விபறம் ஏடு அறியவும்

கேசரியாவது கழுதை. கழுதை புலிக்குப் பேர். இந்தப் புலி தான் கேசரித் தயிலம்.

சுந்தரானந்தர் பாடல்படி—கழுதை—புலி.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் முதல் 2 ஏடுகள் இல்லை. 12-ம் பாடல் நடுவிலிருந்து ஆரம்பிக்கிறது. தொடக்க ஏடு இல்லாததால், முடிவுகொண்டு இது கருக்கடை நிகண்டு 300 எனப்பட்டது.

இது, எமது சுவடி எண் 248 (f)/D. 437 போன்றதாதலின் அதன் தலைப்பான ‘ தன்வந்திரி நிகண்டு முன்னூறு ’ என்பதனால் இதன் ஆசிரியரும் ‘ தன்வந்திரி ’ எனக்கொள்ளப்பட்டது.

வரிசை எண்: **1011** சுவடி எண்: **457**(a)

## சட்டமுனி திட்டம்—வைபாகம்

ஏடுகள்: *30*. ஏட்டின் நிலைமை: *மிகப்பழுது*. பக்கத்திற்கு: 5—7 வரிகள். அளவு: *19 × 3 செ. மீ.* எழுத்து: *தமிழ்*. கி. எண்ணிக்கை: *450*. ஆசிரியர்: *சட்டமுனி*. முழுமை: *முற்றற்றது*.

**தொடக்கம்:**

நாகக் கட்டு

பிரளாமல் லெகுவிலே சொல்லக் கேளு
பேரான வெங்காரம் பலந்தா னென்று
மருளாமல் அண்டத்தோல் பலந்தா னென்று
மாட்டிரென்றும் சதிரக்கள்ளிப் ப(ா)லா லாட்டி

**முடிவு:**

நெட்டிதேவி புழுகொடு சூதம் போட்டு
நேராக அரைத்துநன்றாய் செயநீ ராலே
ஒட்டியதோர் முன்துரிசிப் பலம்தா னென்றில்
ஊப்பூதி காயவைத்து தினம்தா னைந்து
கொட்டியதோர் ஊஷாத்தின் குருவில் வைத்து
குரையாமல் மூடிநன்றாய் யோலத்தே நீற்றி
அல்லோசாம் ஒன்று ... ... ...
... ... ... ... ... ... ...

**காலம்:** இல்லை

**குறிப்பு:**

இதில், நாகக்கட்டு, சுண்ண ஜெயநீர், அயக்களங்கு, காந்த சத்துக் களங்கு, சிவநீர், சத்திநீர், கெந்தக மெழுகு, வாதபுங்க வரிசை, சிங்கித் தயிலம், பூநீர் குரு உப்பு, துருசிகுரு, சத்தி சிவ செயநீர் முதலியன உள்ளன.

செய்யுட்கட்குத் தொடர் எண்கள் இல்லை வெவ்வேறு கையெழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

இதன்பின்னர் 3 ஏடுகளில் வங்கச் சுன்னம் முதலான வைத்திய முறைகள் காணப்படுகின்றன.

வரிசை எண்: 1012 457 (b)

## மூலர் திரட்டு ஆயிரத்தில்

ஏடுகள்: 9. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 19X3 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 150. ஆசிரியர்: திருமூலர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

எய்திட கேசம் இளந்தைப் பருவத்தே
கொய்திடு எள்ளுபோல் கூட்டுமூலைப் பாலே
மைபட நேகரை வளங்கும் பலம்பத்து
பைபடும சாரம் பலம்பத்து கூட்டிடே.

முடிவு :

சுருக்கிட்ட சூதம் துலையா தனலுக்கு
மருக்கி யெடுக்காது வாலை ரசமாகுங்
மறுக்கும் சரக்கெல்லாம் வாகாய் ஜெயித்திடு
உறுக்கும் சுறுக்கிட்டு ஒட்டிய சரக்குக்கே.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் ரோமத் தயிலம், அயச்செம்பு, நாகம், லிங்கம், சிலை, காரம், அயச் செம்பு செந்தூரம், கெந்தித் தயிலம், கெந்தகச் செம்பு, வூதியச் சரக்கு, அயக் களங்கு, அயபாலை ரசம், ஜெயரசம் முதலியன உள்ளன.

கடைசி ஏட்டின் பின்புறம் :

கெந்தி-கெவு பிச்சில் பொட்டு, டோலை கட்டி, சலம் ஆவியில் 4 சாமம் எரித் தெடுத்த பிரகாரம் 10 விசை எரித்தெடுக்கக் கட்டும். நாய்வேளைச்சார் படி 1, சூதம் சேர் 1. 7 விசை எரித்தெடுக்கக் கட்டும்.

சிமை வெள்ளை நாய் மலத்தூரில் யிளங்கள்கம்பி சேர்த்து பூமி புடம் 40 நாள்ச் சென்று புடம் செய், சுன்னம், யிளங்கள் உருக்கு பொள்ளம் கிறுசம் கொடுக்க சுன்னம்.—என்றுள்ளது.

வரிசை எண்: 1013 சுவடி எண்: 457 (c)

## போகர் சுவாமிகள்—அயச்செம்பு

ஏடுகள்: 10. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 5—7 வரிகள். அளவு: 19 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 100. ஆசிரியர்: போகர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

அயச் செம்பு

பலம் பத்தில் பழச்சார் முங்கவிட்டு நாலுநாள் கழிகி எடுத்துக் கொண்டு, ஐந்து பலம் காரம் கல்வத்திலிட்டு, செவ்வல்லிப் பூச்சாறில் மூன்று நாள் அரைத்து எடுத்து ஐந்து பங்காக்கி, யொருபங்கில் ஷெ அல்லிக்கிழங்குச் சார் முங்கவிட்டு நான்கு நாள் குழம்பொடிக்கி குகையிலிட்டு சில(ம்)விட்டு சுர உலையில் ஊதி எடுக்க மணி மணியா விழுந்ததை பொறிக்கி நொறுக்கு

**முடிவு:**

| | | | | |
|---|---|---|---|---|
| வீரம் | சாரம் $\frac{1}{2}$ | ரயித்தகடு விராகனிடை | | ஏழு |
| லிங்கம் | காரம் $\frac{1}{2}$ | வீரம் | ,, | ஒன்று |
| ரசம் | மைத்தது | லிங்கம் | ,, | ,, |
| கெந்தி | வகைக்கு | கெந்தி | ,, | ,, |
| தாளகம் | விராகனிடை 1 | தாளகம் | ,, | ,, |
| சிலை | தகடு மூன்று | சாரம் | ,, | ,, |
| | சாமம் எரிப்பு | காரம் | ,, | ,, |

பழச்சார் அரைப்பு

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

இதில் அயச்செம்பு, பஞ்சபூதிய நல்லோக கஞ்சா இனம், மித்திரச்சரக்கு. உருக்கினத்துக்கு மித்திரம், சத்துகள் சோதினை மித்திரம், சவளை மித்திரம், நவ பாஷாணம் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1014 சுவடி எண்: 457 (d)

## வைத்தியத்திரட்டு

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை: பழுது பட்டது பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 19×3 செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 50. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

காளப்பா வாதமுறைப் பாகம் வெண்டால்
கைமுறையாச் சௌகாரச் சுன்னம் பண்ணு
பூளப்பா உப்புமுதல்சகல மெல்லாம் சுன்னம்
புகழான ஜெயநீருல் எல்லாம் கட்டும்
தோளப்பா அப்பிறேகச் சத்தி ஞலே
சூஷ்சத்தில் தொழிலாகும் சூட்டிப் பாரு
ஊ(ள)ப்பா திராவகத்தைச் செய்தா யாஞல்
உத்தமனே சாரணைக்கு உதவும் சத்தே.

முடிவு :

எரித்தெடுத்து வைத்தினடீன் பனியில் வைக்சு
என்மக்காள் ஜெயநீராம் யிதனைக் கேளு
அருத்திஇந்தப் படிதானே மூன்றுதிரம் சூச்சு
அரகரா சூதசுத்தி வாலை ஆச்சு
தரித்திரமே என்றசொல்லும் அவனிடத்தில் இல்லை
சாவென்ற நாமமில்லை சையோகம் விட்டால்
கருத்திலுன்னிப் பார்மக்காள் சூத சுத்தி
கைமுறையை விட்டக்கால் வாதம் போச்சே.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், வாதமுறை, செயநீர், சூத சுத்திமுறை முதலியன பேசப்படுகின்றன.

வரிசை எண்: **1015** சுவடி எண்: 457 (e)

# ஆரியன் யோகச் சுருக்கம்—12

ஏடுகள்: *3.* ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 8 வரிகள். அளவு: *19X3* செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: *50.* ஆசிரியர்: ஆரியன். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

ஏகநிர் மயமான பூரணத்தைப் போற்றி
என்குருவின் அகத்தீசர் பாதம் போத்தி
மோகம்உள்ளே யோகம்என்ற பிராணயாம செய்து
முதல்மூலம் ஆனதொரு வாசி தன்னை
வாசையுடன் வசப்படுத்தி அறிவில் கூடி
மகரமென்ன பூரணத்தை மருவிச் சார
காதலுடன் ஞரியனுன் வாக்கியத்தால்
கருவான பதினுறில் காட்டுரேனே. 1

**முடிவு:**

வெளியான என்குருவின் கிடாட்சத் தாலே
வேதாந்த தீட்சைபெற்று யானு மானேன்
ஒளியாமல் பிறித்துவைத்தேன் யோக மாற்கம்
உத்தமரைக் கிட்டவைத்து ஊனம கேளு
வளியோடு வழிஅறிந்தால் எல்லா மூன்று
மாருட்ட மானதொரு மதியைக் கட்டு
வெளியோடு ஒளிசேர ஆரியனுன் சொன்னேன்
வேதாந்த மூலமப்பா யோக முற்றே. 12

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

இது யோகத்தைப்பற்றிக் கூறுகின்றது. சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறுகின்றது. ஆரியன் என்பார் அகத்தியரின் மாணக்கர் என்பது முதற்பாடலிலிருந்து தெரிகின்றது. இது சிறந்த நூலாகவும் தெரிகின்றது. இதில் 'ஏ' என்ற எழுத்து, எ-ன் மேல் நெடில் கொம்பிட்டு எழுதப்பட்டுள்ளது.

இதன்பின் வைத்தியம் எழுதிய இரண்டு உதிரி ஏடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1016 சுவடி எண்: 458 (a)

# நிகண்டு—முப்புவின் பெயரும், தீட்சை நீரின் பெயரும்.

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுதுபட்டது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: $16\frac{1}{2}$X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 75. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

அண்டம்—பிண்டம்—இடகலை—சுழிமுனை—பின்கலை — அம்பு—எரி—பரிதி—மதி—

**முடிவு:**

மேனிப்பால்—வண்டு—வஸ்துநீர்—வாலைநீர் — மூலவென்னீர் வேசநீர்—வேர்வை—யோக தீட்சை நீர்—ரீங்கார நீர்—முதலியவைகளாம்.

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

இதன் ஏடுகள் படிப்பதற்கே பயனற்றுள்ளன. மூன்றுவது ஏடு பாதியாக முறிந்துள்ளது. இதன் முதலேடுகள் இரண்டு உள்ளன. ஒன்றில்

சிவமயம். சுப்பிரமணியர் துணை
காமாட்சி அம்மன் துணை
அகஸ்த்திய மகாமுனி துணை

என்றுள்ளது.

அடுத்த ஏட்டில்:

பெரியசாமிபிள்ளை ஏடு. சிவமயம்.
முப்பூவின் பெயர்
தீட்சை நீரின் பெயர்

பூகிமுனி அருளிச்செய்த சுறுக்கம் நூறு சாஸ்த்திரம் கைய்கண்ட சாஸ்த்திரம்—சிவமயம்-என்றுளது.

வரிசை எண்: 1017 சுவடி எண்: 458 (b)

# யூகிமுனி சுருக்கம் நூறு

ஏடுகள்: 39. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—8 வரிகள். அளவு: $16\frac{1}{2} \times 3$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 700. ஆசிரியர்: யூகிமுனி. முழுமை: முற்றுமுளது. (குறைபாடுடையது)

**தொடக்கம்:**

ஆதிசிவன் தன்பாதம் உமையாள் பாதம்
 ஆதியாம் கணேசனுடன் முருகன் பாதம்
ஆதியாம் பதினெட்டுச் சித்தர் பாதம்
 வடிவான ரவிபாதம் போற்றி செய்து

**முடிவு:**

குறுக்காகத் தன்மந்திரி சவுக்கா ரத்தை
 கூறினு ரெல்லோருக்கும் தெரியத் தானும்
முருக்காகச் சவுக்காரங் கண்ட பேர்கள்
 முடிவாகச் சொன்னுக்கால் ரவிகோடி நரகம்
வருத்தமாய் வெகுபாடு பட்டுத் தேறி
 வகையான சவுக்காரங் கண்டு தேறி
உருத்தாக வழலையென்ற சூட்டுத் தானே
 உத்தமனுர் யூகிமுனி நூறுந் தானே. 100

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

இதில் முகப்பு ஏடு இல்லை. முன் ஏட்டில்:

பெரியசாமிபிள்ளை ஏடு—முப்பூவின் பெயர், தீட்சைநீரின் பெயர்—யூகிமுனி அருளிச்செய்த சுருக்கம் நூறு சாஸ்த்திரம் கைகண்ட சாஸ்த்திரம்—சிவமயம் என்றுளது.

இதில், வழலை, கல்லுப்புச்சுன்னம், சீனச் சுன்னம், பூரச் சுன்னம், வழலை வேறு முதலியன உள்ளன.

வரிசை எண்: 1018 சுவடி எண்: 458(c)

## நந்திதேவர் அறுவகை திராவகம்

ஏடுகள்: *11.* ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது, பக்கத்திற்கு: *5—6* வரிகள். அளவு: $16\frac{1}{2} \times 3$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *120.* ஆசிரியர்: நந்திதேவர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

அகாரமும் உகாரமுஞ் சேர்ந்தால்
ஆனந்த மாகு மாப்போல்
மகாரத்தில் சோதி பாதம்
மன்னியே தருவ தென்று
நகாரத்தி லுத்த சித்தன்
நாடினர் யருளி ஞலே
வகாரத்தி லெவர்க்குஞ் சொன்ன
வழதனை யறிகு வீரே. 1

**முடிவு:**

என்னிய சுருதி யெல்லாம்
இயர்பிய வகையைக் கேளு
தன்னியே உப்பு மப்பும்
தயவதாய்ச் சேர்க்கச் சொல்லி
நன்னியே முன்னோர் சொன்ன
நலமதை யரிந்தீ (ரா)ஞல்
மன்னிலே பிரந்த சென்மம்
மன்னிலே மடிந்து போமே. 32

நத்திதேவர் அருவகைநீர் திராவகம் முற்றிற்று.

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

இது ஆறுவகையான நீர் திராவகத்தைப் பற்றிக் கூறுகின்றது.

வரிசை எண்: 1019 சுவடி எண்: 459

# அநுபவமுறை வைத்தியம்

ஏடுகள்: 98. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5—8 வரிகள். அளவு: $18 \times 2\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1600. ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

கல்லடைப்புக்கு

இது எட்டு உரு. பிற்பூச்சு 5-ம்—வேறு—பூவரசின் பட்டை யுலத்திப் பொடி செய்து தேனில் குளைத்து ஒரு சுண்டைக்காயளவு முளுங்க நீரளிவு திரும்.

கோளிகாரமும் கருப்புகட்டியும் குளைத்து முளுங்கவும். தேற்றான் விரையை யரைத்து, பசுவின் பாலிலரைத்துக் குடுக்கவும். கல்லு விழும்.

முடிவு :

மூலத்துக்கு உள்ளுக்கு நெய்யி

எருமை நெய்யி......த்தை—11 ஈருள்ளி—11 யிதெல்லாம் கிண்டி காச்சி சிறு...........ருவத்திலிரக்கி வடித்து கக்கத்தைப் பொடித்து சீனி கூட்டி.........விரகடி பிரமாணம்......னனவும். நெயி சோத்தி லிட்டு ரெண்டு.........பத்தியமில்லை.

கிருமிக்கு

உருண்டை பாவக்காய் உமிக்காந்த...............தோலெடுத்து வடி......அரைத்து முளுங்கவும் இப்படி.........

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், பல்வேறு வகையான மருந்துகள் கூறப்பட்டுள்ளன. கல்லடைப் புக்கு, நீரடைப்புக்கு, சிறுநீர் மெத்தப் போறதுக்கு, உஷ்ணம், பித்தத்துக்கும் இஞ்சிச் சூரணம். சொரிக்கு உள்ளுக்குக் கொடுக்க, விரைவாதம், ஓரண்ட வாதம் இந்த ஆறுக்கும் வச்சிர சிந்தாமணி உண்டை முதலியன உள்ளன.

இதன்பின்னரும் பல நோய்களுக்கு மருந்துகளின் தலைப்புக்கள் உள்ளன.

வரிசை எண்: 1020 சுவடி எண்: 460

## அனுபவ வைத்தியம்

ஏடுகள்: 70. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—8 வரிகள். அளவு: 39 X $3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 2200. ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

பீனிசத்துக்குத் தயிலம்

சுக்கு, வால்மிளகு, கஷ்த்தூரி மஞ்சள் ... ...
(கார்)போக அரிசி, வசம்பு, வெள்(ள)ருக்கு, நொச்சியிலைச்சாறு
ஆடுதொண்டையிலைச்சாறு

**முடிவு:**

பூறக்கட்டு

கள்ளிப் பழுப்பேச் சார் பிளிஞ்சுகொண்டு
கல்லுப்புக்கு ரெண்டு சாமம் சுருக்குக்
குடுக்கவும். சுருக்கு குடுத்து எடுத்துக்
கொண்டு கீளு மேலுமாயிவைத்து
நடுபிறம் பூறம் வைத்து மேல் ஓடு
மூடி சீலைமண் செயிது தீபாக்கினியாய்
ரெண்டு சாமம் யெரித்துக் கொள்ளவும்.

பூரக்கட்டாம்.

**காலம்** இல்லை

**குறிப்பு;**

இதில் இருமலுக்கு லேகியம், பல வியாதிக்கு குளிநெய் வடிக்கும்படி கை கண்டது, எண்பது வாதத்துக்கு தயிலம், ரசமுரிவுக்கு முதலியன உள்ளன, மேலும் சில மருந்துகள் கூறப்பட்டுள்ளன. முதல் ஏடு இல்லாததால் தலைப்பு இல்லை.

---

வரிசை எண்: 1021 சுவடி எண்: 461 (a)

## இராமதேவர் சிவயோகம் — 200

ஏடுகள்: 48. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுதுபட்டது. பக்கத்திற்கு: 7—9 வரிகள். அளவு: 32 × 4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1500. ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

மூலமென்ற முதற்பொருளா முத்திநடு வணையில்
மூதண்ட மானதொரு பிறமமதற் கப்பால்
ஞாலமெனுந் தவமுமுடைய சத்திபதி மேலே
நாதாந்தப் பெருவெளியின் நடுவொளியின் கீளே
நீலமிகு நெறுப்பாறு மயிற்பாலத் தப்பால்
நிறைந்தபரி பூறணமாய் நிற்களம தாகி
சீலமிகு தவமுடையோ ரிருதயமே தானய்
சிறந்துநின்ற பறமகுரு சீர்பாதந் துணையே. 1

முடிவு :

முத்தான சிவயோக மிருநூர் தன்னை
முறன்யான கருக்குருவென் றெடுத்துப் பாத்து
சித்தான சித்துவிளை யாடு மைந்தா
சிவயோக மாற்கமடா திறந்தான் மெத்த
(ப)த்தாசை கொண்டுமன மவுன மாக
பதிவாக சிவயோக மிறுநூ றப்பா
வித்தான பிறவியது (அ)த்துப் போகு
மேலான சிவயோகம் விளங்க முற்றே. 201

பறிபூரண ஆனந்தந் துணை.
சகாதேவனுடைய......த்திற முற்......

காலம் : இல்லை.

குறிப்பு :

இது எமது சுவடி எண். 450(C)/D. 995 போன்றது இச்சுவடி மிகமிகப் பழுதுபட்டுள்ளது. பாடவேறுபாடுகள் மிகுதியும் காணப்படுகின்றன. அதை விட இது சுத்தப் பிரதிபோல் தெரிகிறது.

வரிசை எண்: 1022 சுவடி எண்: 461 (b)

## சங்கராச்சாரியர் உலா

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—8 வரிகள். அளவு: 32X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 60. ஆசிரியர்: சங்கராச்சாரியர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

சங்கராச்சாரியாறருளிச் செய்த ஞான உலா

சீரான காசி சிதம்பறத்து லேகுடியே
பேருன நெஞ்சகமே பேசக்கேள்—ஆராய்ந்து
உன்னே யுணர்ந்தபடி உலகத்தில் ஞானஉலாத்
தன்னே விரித்தரிவாத் தாழ்ப்பாட—பின்னே

முடிவு :

தெய்வ சதாசிவனுர் தெய்வ சிகாமணியார்
ஐவர் துரையாளு ராண்டவனுர்—வைய்யம்
புரக்கும் சதாசிவனுர் பூலோக நாயகனுர்
அரக்குமணி மாளிகைச் சுகங்கண்டே—யரளம்

காலம்: இல்லே.

குறிப்பு :

இது, தத்துவ உலா எனப்படும். எமது மகால் சுவடி எண் 238/D 416 போன்றது. தொடர்ந்து ஏடுகள் இல்லே. இது கலி வெண்பாவாலானது.

இத்துடன், 4-வது செய்யுள் முதல் 7-வது செய்யுள் முடிய எழுதப்பட்ட ஏடொன்று இணைந்துளது.

வரிசை எண்: **1023** சுவடி எண்: **461(c)**

## ஞானக்குறம்

ஏடுகள்: 5. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 32 X 4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 150. ஆசிரியர்: அறியக்கூடவில்லே. முழுமை: குறைபாடுடையது.

தொடக்கம்:

... ... ... டங்காத சூட்சம்
முப்பாழு மற்றதோ ரானந்த மோட்சம்
சுழிமு னேக்குள் நின்ருடும் செந்தூர்ச்
சுருதி நாட்டுக் குறவனும் நானே. 9

முடிவு:

துலேயாக விருக்கின்ற சூட்சந்தா (னஞ்சு)
சுடராகத் தோற்றிவிக்குஞ் சுரூபங் கேளீர்
அலேயாம லசையாமற் காணக் காண
வருளிருந்த சிர்பதத்தை யடைய லாமே. 42

முற்றிற்று.
சற்குரு பாதார விந்தமே துணே.
சிவகிரி முருகன் றிருவடி சரணம்.

காலம்: இல்லே

குறிப்பு:

இதன் முதலேடு இன்மையின் தலேப்பு தெரியவில்லே. குறவஞ்சி வகையில் ஞானத்தைப் போதிப்பது இந்நூல். பேரறிவினே எளிமையாகவும் கூறுகின்றது.

---

வரிசை எண்: 1024 சுவடி எண்: 461(d)

## சுரு நிகண்டு

ஏடுகள்: 12. ஏட்டின் நிலேமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 32X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 400. ஆசிரியர்: அறியக்கூடவில்லே. முழுமை: குறைபாடுடையது.

தொடக்கம்:

... ... ... ... ...
... ...மாய்ப் பூசைசெய்து போத்து வாயே. 73

போத்தியே அவர்பதம்பிடித்து மவுனம் பாரு
புகழான நாதவிந்து வெளியாக் காணு
... ... ... ... ...
சாத்திரேன் சாகாத காலேக் கண்டு
சச்சுதா னந்தவெளி திறந்து போமே. 74

முடிவு:

சொன்னதொரு யிந்தவகை நிகண்டுக் குள்ளே
சூட்சமுதல்ப் பா(ர்த்தவர்க்)கு எதிர்க்குருவு மில்லே
பின்னேயொரு மூலியென்ற பேச்சு வேண்டாம்
பிரவான சி(த்தருட) (மொளியும்) வேண்டாம்
திண்ணமொரு கோடிதவம் புரிவோர்க் கப்பா
செகந்தனிலே யிந்தனூல் கிட்டுங் கிட்டும்

முன்னமே பதினெண்பேர் னூல்க ளெல்லாம்
முறைப்படியே உரைத்தகரு நிகண்டு முற்றே. 117

குருவே துணை.

தெட்சணாமூர்த்தி துணையாக வேணும்.

**காலம் :**

*1855*-ம் வருஷம், (செப்டம்)பர் மாதம் *10*-ம் தேதி திங்கள் கிழமை பகல் *4* மணிக்கி யெழுதி முகிந்தது. முத்தும்.

யிது கிஷ்ட்ணசுவாமி பொஷ்த்தகம்.

முத்தானந்தர் கிருபையுண்டு
சிவமயம்
சுப்பிறமணியர் துணையுண்டு.

**குறிப்பு :**

இதன் தொடக்க ஏடுகள் இன்மையின் தலைப்பு தெரியவில்லை. முதல் 73 பாடல்கள் இல்லை.

இதில், சவுக்கார நீறு, பாஷாணம், வெள்ளி, நவச்சார பற்பம், வாசி யோகம், பூநீருக்குரு, பித்தளை பற்பம் முதலான தலைப்புக்கள் உள்ளன.

---

வரிசை எண்: 1025 சுவடி எண்: 462 (a)

## பூகிமுனி சிந்தாமணி—100

ஏடுகள்: *22.* ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: *7—8* வரிகள். அளவு: *34X3* செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *700.* ஆசிரியர்: யூகி முனிவர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

சாற்வாகச் சிவன்சொல்ல தேவி கேட்டு
சமுசி........ளில்லாமல் நந்திக்குச் சொல்ல
......க நந்திதன் மந்திரிக்குச் சொல்ல
பாலித்த தன்மந்திரி அசுவனிக்கிச் சொல்ல
வார்வாக அசுவவனி (விசு)வனிக்கிச் சொல்ல
வகையாக விசுவனியும் அகஸ்த்தியற்குச் சொல்ல
தடையறவே (அகஸ்த்தியரும்..........
... ... ... ... சொன்னார் தாமே 1

முடிவு :

பாறேநீ மிறுதாறு சிங்கி யைத்தான்
பதிவாக யீயமெனக் கரும ரைத்தான்
கா(ரே நீ) (மரைக்காமே) சொல்லிப் போட்டே
கருத்துவைத்து மிருதாரு சிங்கு பாரு
வாரேநீ வூத்துவந்த யிடத்தி லங்கே
(வதுவாக) (மிருதாரு) சிங்கு போட்டு
தா(ரே)நீ (முடியதை) வூ(தப் பாரு)
தப்பாமல் பொன்னுகும் தாக்கிப் பாரே.

முற்றும்
குருவே துணை.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் சிங்கி முப்பூ, வங்காளப் பச்சை, செம்பு, சிந்திசக்கரை, மண்டுறம், துரிசுச்சுண்ணம், றஜகட்டு, திசைமுகாமுப்பு, நாகறசமுப்பு, சிங்கீமுப்பூ, றஜ பஸ்ப்பம். உப்புக்கட்டு, வெடியுப்புச் செந்தூரம், நாகக்கட்டு, கல்லுப்பு, இந்துப்பு ரசித களங்கு முதலியன உள்ளன. ஏடுகள் மிகவும் பழுதுபட்டு உள்ளன.

வரிசை எண்: **1026** சுவடி எண்: **462 (b)**

## யாகோபு வைத்தியம்

ஏடுகள்: *9.* ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: *8—9* வரிகள். அளவு: *34X3* செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *400.* ஆசிரியர்: யாகோபு முனிவர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

64-வது யேடு முதல் 72-வது யேடு வரையிலும் மேல்ப்பாடத்தில் யெழுதி யிருந்தபடி இதில் யெழுதியிருக்குது.

யிளவயசு கேசறந்தான் பலமும் நூறு
யிதைநறுக்கிச் சீயக்காய் தனைய ரைத்து
குளகுளப்பாய்ப் பாணிவிட்டு கொதிக்க வைத்து
குணமாகக் கழுவியதை கக்க ரித்து
வளவளப்பூ யேகிவிடும் அயத்தின் சட்டி
வடிவுபெற வைத்தடுப்பில் திலத மிட்டு

தளதளப்பாயி கேசறத்தை அதிலே யிட்டு
தயிலமது வறுகையிலே அறப்பொடியைப் போடே.

முடிவு :

| | | |
|---|---|---|
| ........................ | .......................................... | பத்தியம் |
| மேகசூடு | .......................................... | தேகத்துக்கு |
| சூடு | போட | தக்கபடி |
| காங்கை | யிச்சா | செய்யலாம் |
| | பத்தியம் | |

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், சகல விழத்துக்கும் செம்பீடா மாத்திரை. அஷ்ட்டாங்க யோக பூரணுதி, விஷத்திலுல் மரித்தபேருக்கு அடக்க யெழுப்ப, விஷம் தீண்டின மயக்கம் தீர, சகல விஷத்துக்கும் மை, கருவழலை பனசை கடிக்கி, செத்த பிரேதம் பேச, தேள் கடிக்கி, வெள்ளி பஸ்பம், கிஷ்ணப்பன் சொல்ப்படி, சறுவ சங்கார மஷ்சாரீயில் சொல்லிய முறை, பட்டாளம் கிஷ்ணப்ப நாயக்கர் சொல்ப்படி, சிங்கித் தயிலம், புண் புரைகளுக்கு, கருப்பூர மடத்தில் பரதேசி சொன்ன முறை. புரையாரலந்திருந்தவர் ஷேச பரதேசி யாழ்ப்பாணம் முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1027 சுவடி எண்: 462(c)

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 149. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 3—6 வரிகள். அளவு: 32X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1500. ஆசிரியர்: பலர், பட்டணத்து அய்யா. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

அஸ்வகெந்தி சூரணம்
பட்டணத்து அய்யா சொன்னது

| | | | |
|---|---|---|---|
| அமுக்குராக்கிழங்கு | சேர் 2 | கிராம்பு | பலம் 1 |
| அதிமதுரம் | பலம் 1 | குரோசாணி ஓமம் | பலம் 1 |
| சுக்கு | பலம் 1 | சேலம் சர்க்கரை | சமன் |
| பரங்கிப்பட்டை | பலம் 1 | அமுக்கிராக்கிழங்கை | |
| வாயிவிளங்கம் | பலம் 1 | பசுவின் பால் | சேர் 2 |
| வாலுளுவை | பலம் 1 | | |

முடிவு :

அக்கினி சிங்காசம்

சன்ன லவங்கம், சதைகுப்பை, (அ)திமதுறம், மகாறம்பு, கிரும்பு சாதிக்காயி, சேசியம், சீருதேக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், சுக்கு மூளகு, கொத்தமல்லி, வோமம், தாளீசபத்திரி, குருசாணி வோமம், சமுத்திருப்பளம், கோஷ்ட்டம், சீறகம், லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரீ, வாய்விளங்கம், அனரத்தை

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இதில் பலவிதமான வைத்தியங்கள் உள்ளன. இதில், பஞ்ச தீபாக்கினி லேகியம், லிங்க கொழம்பு, சத்தி குன்மத்தின் குணம், இதுக்கு மருந்து, எளம் பிள்ளை வாதத்துக்கு, பசியில்லாதவர்களுக்கு மருந்து, வெள்ளை வோக்காளம், காது வலிக்கி, யேலாதிச் சூரணம், நீரடைப்புக்கு, கல்லடைப்புக்கு, விக்கலுக்கு, கழிச்சலுக்கு நிலப்பனை கற்பம் முதலியன உள்ளன. 27-ம் ஏட்டில் 'ஏசு ரெட்சிப்பார்' என்றுளது. சிறந்த சுவடி.

* * *

வரிசை எண்: 1028. சுவடி எண்: 463

## கருவூர்ச் சித்தர் வாக்கியம்

ஏடுகள்: 6. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: $32\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 150. ஆசிரியர்: கருவூர்ச்சித்தர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

மீனாட்சி சகாயம்

கருவூர்ச்சித்தர் வாக்கியம்

பூவு லாவிய தேவி சுந்தர
பாக சுந்தரி யாயி சிற்பரை
பூணு நற்சிவ ஞான சித்திக
ளேகொண் டாடவே
காவு லாவிய யோக நாயகர்
கடவு ளகத்திய ரிஷிகள் தேவர்
கருணை நந்தீசர் போது வருந்துணை
யேதந் தானனு.

முடிவு :

பாசாணக் கட்டிக்கு முருங்கைப் பட்டை(யும்) ஊமத்திலேயு மிடித்து அமுரியிற் பிசைந்து இறுத்துக்கொண்டு பாசாணத்துக்குச் சுருக்குக் குடுத்தெடுத்துக்கொண்டு பாசாண நிறை வெங்காரமுஞ் சுண்ணும்பு ஆக ரண்டையும் நிறுத்து அமுதத்திலரைத்துக் குளிகை செய்து தாம்பிரத்திற் குடுக்கவும்.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதன் தலைப்பு ஏட்டில், 'யிந்த சாத்திரம்-கருவூரர் சித்தர் வாக்கியம்-யிதில் யிருக்குது, யிதில் பாள வாகடம் அகஷ்த்தியர் கரும சாந்தி யிதில் யிருக்குது. பிள்ளை பிறந்த ஞல் முதல் பெறிய (பின்)னே ஆகுற வறக்கும் யிருக்குது.' என்றுளது.

இதில், நாய்ப்பாகல்த் தயிலம், வங்கப் பற்பம் ஆகிய இரண்டு தலைப்புக் கள் உள்ளன. ஏடுகள் ஒடிந்துள்ளன. எழுத்துக்கள் தெளிவாக உள்ளன.

இதன் பின்னர் வைத்தியம் எழுதப்பட்ட முழு ஏடு ஒன்றும், பிரதி ஏடு ஒன்றும் உள்ளன.

வரிசை எண்: 1029 சுவடி எண்: 464

## கொங்கணர் வேதாந்த ஞானம்

ஏடுகள்: 25. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 9—10 வரிகள். அளவு: 17X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 500.— ஆசிரியர்: கொங்கண நாயனுர். முழுமை: முற்றும்.

தொடக்கம் :

அகண்ட(ப)ரா பரமான மூல ஞயன்
அ(டி)தொழுது காலாங்கி நாதர்பதம் போற்றி
புகன்றுநின்ற போகருட பதத்தைப் போத்திப்
புகழ்பெரிய வல்லோர்கள் பதத்தைப் போற்றி
தகன்றுநின்ற சரிதையொடு கிறிகை யோகந்
தனிப்பெரிய ஞானமொடு ஞலுஞ் சொல்வேன்
நிகண்(று)நின்ற படிசொல்ல யென்ஞல் க(ண்டா)
நேரான பூரணந்தான் நேர்ந்த காப்பே. 1

முடிவு :

பாரப்பா ஞாலத்தே தேடத் தேட
　　பரிவாக மூன்று(சென்)மம் மவுனமே பத்தும்
நேரப்பா யிதுவுடனே அதுவே முத்தி
　　நின்மலத்தைச் சேத்துவிடும் நிசந்தான் முக்கால்
காரப்பா மூன்றுசென்மம் வாத சித்தி
　　கைமுறையாய்ப் பராபரையைப் பூசித் தாக்கல்
ஆரப்பா எனைப்போலே திறந்து சொல்வார்
　　அரகரா ஞானஅங்கம் அரைந்திட் டேனே. 107

திருச்சிற்றம்பலம்.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் தலைப்புக்கள் காணப்படவில்லை. எழுத்துக்கள் அழகாக உள்ளன. ஆனால் பிழைகள் மலிந்துள்ளன. வேதாந்தத்தினை மிகவும் சுருக்கமாகவும் எளிமையாகவும் கூறுகின்றது.

வரிசை எண்: 1030 　　　　சுவடி எண்: 465(a)

## ஊழி வைத்தியம்

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். அளவு: $22 \times 3\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 50. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

சாம்ளாதேவி சகாயம்

கேளப்பா ஊழியென்ற காத்தைச் சொல்வேன்
　　கெடியான சாமளா தேவி யாலே
நாளப்பா மைப்போலே கருத்து நிற்கும்
　　கண்ணுக்குந் தோத்தாது கடின மெத்த
வாளப்பா காத்தினுட விபர மெல்லா
　　மைந்தனை சொல்லுகிறேன் வகையைக் கேளு
பாளப்பா பண்ணிவிடு மூலக மெல்லாம்
　　பரிசுத்த மாயிருந்தால் பறக்கு மாரே. 1

முடிவு :

செய்தியொன்று சொல்லுகுரேன் தெளிவாய்க் கேளு
சிகந்தனிலே சாமளா தே(வி தன்னுல்)
நீதியுடன் ச(கர)காண்டம் பார்வை யிட்டு
நெரியுடனே தேவிதன்னை வசியம்ஞ் செயிதால்
சோதியுடன் வந்ததொரு ஊசி யுந்தான்
சொல்லுமுன்னே போகுமடா துன்பம் நீங்கும்
வியாதியுடன் மூதண்டங் கொண்டு வந்தால்
யென்மகனே ஊதியது நீங்கிப் போமே. 10

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் மருந்து செய்யும் முறை முதலியன கூறப்பட்டுள்ளன. சியாமளா தேவியை வழிபடு கடவுளாகக் கொண்டு இது பாடப்பட்டுள்ளது.

வரிசை எண்: 1031 சுவடி எண்: 465(b)

## இராமலிங்க சுவாமியார் பாடல்

ஏடுகள்: 6. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 4—8 வரிகள். அளவு: $28 \times 3\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 100, ஆசிரியர்: இராமலிங்க சுவாமியார். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

இராமலிங்க சுவாமியார் பாடல்

காப்பு

பதருலகி லாடவித்தை பாவினம் போலே
பரமகுரு ராமலிங்கர் பாதம் போத்தி
சிருலவு நவநீத சூடனுட பற்பம்
செப்புகவி சோடசந்தான் தெரிந்து சொல்ல
பேருலவு வாலைதிரி புரைபுவனை யாகி
யேகவடி வானபரி பூரணமே யென்(று)ம்
நேருலவு ஞானசுகந் தனிலிருந்து வாழ்க
நிற்மலமாங் கிணேசனடி நெஞ்சில் வைப்பாம் 1

முடிவு:

ஆகாது குளிர்சிலந்தான் வெண்ணீ ராகும்
அவனியிலே பால்நெய்யு மாகு மாகும்
பாருமொரு தூதுவளை காயிலையு மாகும்
பருகாதே கீரைமுளைப் புன்ம்புடலு மாகும்
யேகமாய் யேகாந்த தயலப் போக்கு
யென்னசொல்வேன் பதிணறு மியல்பு முத்தே. 17

ராமலிங்க சுவாமியார் பாடல் முத்தும்
சுப்பிறமணியார் துணை

காலம்: இல்லை.

குறிப்பு:

இதன் ஆசிரியர், இராமலிங்க வள்ளலாரின் வேறுபட்டவர். இதில் சஞ்சீவிச் சூரணம் சிவலோக பற்பம், சஞ்சீவித் தயிலம், சீஷனம்மைச் சோதிக்க ஆகிய தலைப்புக்கள் உள்ளன,

வரிசை எண்: 1032 வரிசை எண்: 465(c)

## சில்லரை வைத்தியம்

ஏடுகள்: 19. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 4—9 வரிகள். அளவு: $22 \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 400. ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்:

ஆண்டவன் உதவி செய்ய
கருஊற் முறை

சீனிக்காரம் வெடியுப்பு ரெண்டும், விந்துவும் நாதமும் விட்ட ரைத்து வில்லையாய் தட்டி ஒலற வைய்த்து (புளி)யந்தணல் சுத்தி வைத்து, நடுப்புறம் வில்லையை வைத்து விசிறியினுலே விசிறி காய வைய்த்து கொளுத்தினல் பஷ்ப்பம்.

முடிவு;

......விலாமிச்சம் வேர் பலம் $\frac{1}{2}$, கொத்தமல்லி பலம் $\frac{1}{2}$ யிந்த மருந்தெல்லாம் ஒரலிலே போட்டு யிடிச்சுத் தூல்ப் பண்ணிக் கொண்டு மூணுவிரல் கொண்ட தூள் யெடுத்து சட்டி அடுப்புலே .........ச்சு அந்த தூளைப் போட்டு தண்ணீர் அரைப்படி தண்ணீர்

விட்டு வீசம் படி தண்ணீர் வச்சுக் குடுக்க (பித்தசுர)ம் போம். யிந்(தமு)ரை அன்னமுரைக் கயிகண்டது.

(குருசுவா)மி துணையாக வேணும்.

யிதுக்கு அனுபானம். கந்த செந்தூரம் தேனிலே குடுத்து மருபடி யிந்த கஷாயம் குடுக்கவும்.

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இதில் பலவிதமான அநுபவ வைத்திய முறைகளும், மந்திரங்களும், சக்கரங்களும் உள்ளன. அண்டவாதம், விரைவாதம், சிதம்பர சக்கரத்துக்கு முகவசியம், விஷத்துக்கு பஞ்சாஷ்சரம், அடிபட்ட பிள்ளையளுக்கு, மாந்தகண, சுழிகணத்துக்கு தயிலம் முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1033 சுவடி எண்: 466(a)

## அகத்தியர் அண்டதரிசினே

ஏடுகள்: 10. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 12—13 வரிகள், அளவு: 10x3½ செ.மீட்டர். எழுத்து; தமிழ். கி. எண்ணிக்கை: 150. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும்.

**தொடக்கம் :**

அகத்தியர் அண்டதெரிசினே

பராபரமும் பரமசிவனே சத்தி போத்தி
பரவரிய நாதவிந்து குடலை போத்தி
நிராதாரன் சதாசிவனு மயேசுரனைப் போத்தி
நிலையான ருத்தின்மா லயனும் போத்தி

**முடிவு :**

கட்டெழுத்தா மகாரமுடன் நகாரந் தானும்
காணரிய திருவடியுங் கருத்தில்க்கொண்டு
யெட்டெழுத்தே பொருளாகக் கண்ட பேர்க்கு
மெல்லையில்லாப் பாலெ(ன்று) மெய்த லாமே. 31

அகஸ்த்தீசர் அண்டதெரிசனை முகிழ்ந்தது.

முற்றும்

தேவிசகாயம்

**காலம் :** இல்லை.

குறிப்பு :

இது கூந்தற்பனை ஏட்டில் எழுதப்பட்டுளது. மிக நெருக்கமாகப் பக்கத்திற்குப் பதின்மூன்று வரிகள் எழுதப்பட்டுள்ளன. தத்துவரூபமாகக் காணும்படி எழுதப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1034 சுவடி எண்: 466(b)

## அகத்தியர் தண்டகம்

ஏடுகள்: *11.* ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: *12* வரிகள். அளவு: $22 \times 3\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *150.* ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

அந்தணர் பாதம் போற்றி
அறிவுடன் வாழ்வோர்க் கெல்லாம்
சந்ததம் பூமி மீதில்
சாத்திய தண்ட கந்தான்
எந்தனுர் பிள்ளை யெல்லாம்
யிதுவறிந் துள்ளே கொண்டு
பின்தமிழ்ப் பிறர்வில் ளாதார்
பெரியவ ராகுந் தானே

முடிவு :

தேனே துடரி கண்டவர் செய்தும்
நாமோ படித்து ஞமுமா ஞேமே. *101*
ஆனேம் சிவனை அடிதொழு தேத்தி
மானே பார்பதி மக்களுமா ஞேமே. *102*
வீணர் விருந்து விஞ்சுவர் கண்டாய்
நானே தண்டக்கம் நாடுமுறை முற்றே. *103*

காலம் இல்லை

குறிப்பு ;

இதில் அஞ்சனம் வசியம், உருமாற்றம், மருந்திடு, அஷ்ட்டகர்மம் முதலியன சொல்லப்பட்டுள்ளன.

இது, எமது சுவடி எண் *17* (d)/D. *22, 347* (h)/D. *683* போன்றது. பாட வேறுபாடுகள் மிகுதியும் உள்ளன.

வரிசை எண்: 1035 சுவடி எண்: 466(c)

## கொங்கணர் தண்டகம்

ஏடுகள்: 37. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8—12 வரிகள். அளவு: 22x3½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 700. ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

வெளிகடந்த வெளியொளியே காப்பு
வேதாந்த விவரத்தின் றறிவே காப்பு
தளிர்கனலுங் காலுமொன்ருய் மூன்று நவ்வில்
தம்பனத்தில் மோகனத்தாய் பதமே காப்பு

**முடிவு :**

விதியறிந்தோன் கருந்தலையி லுபாய நின்ற
விட்டகுறைக் கட்டளையை யறிந்து கொள்வான்
பதியறிந்து மனம்பதிந்து விதியைக் கண்டு
பலன்பெத்தோர் பட்சணியின் பாடல் முத்தே 108

கொங்கணர் தண்டகம் முற்றும்.
செங்கோட்டையில்ச் சுவாமினுதன் எழுதியது
தண்டகம் முற்றும்
குருபாதம் சிதம்பரம் துணை

**காலம் :** இல்லை

**குறிப்பு :**

இதில் வெள்ளெருக்கு மூலம், கீழாநெல்லி மூலம், மூன்று மூலம், யிந்திர கோபம், மூல அட்சரம் மற்றும் அஷ்டகர்ம மந்திரங்கள், சாலங்கள், சித்திகள், திலதங்கள், மறைப்பு மை முதலியன உள்ளன.

இதில் மிகுதியும் ஞானமார்க்கங்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1036 சுவடி எண்: 466 (d)

## அகத்தியர் 1200-ல் சூத்திரம் 100

ஏடுகள்: 40. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 11—12 வரிகள். அளவு: 22X3½ செ. மீ. எழுத்து: தமிழ். கி, எண்ணிக்கை: 600. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும்.

**தொடக்கம் :**

பூரணமாம் சுளினை நடுக் கமல மீதே
புகள்பெரிய மூலகண பதியே காப்புக்
காரணமா யெனையாண்ட பரம்பரனைப் போற்றிக்
கட்டாக வாதத்தி லட்சங் காப்பு

**முடிவு :**

மனம்வேறு சாதகமாய்ச் சாத்திரத்தைப் பாத்து
மனம்பிலக்க குருவினிடம் வணங்கி நின்றால்
மனம்வேறு வாராது சித்தி முத்தி
வாய்க்குமே சூஷ்த்திரந்தா னூறு முத்தே. *100*

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இது எமது சுவடி எண் *258* (a)/D. *458*, *264* (a)/D. *471* போன்றது. அதை விட இது நல்ல பிரதியாகத் தெரிகிறது. பாடவேறுபாடுகள் மிகுந்து காணப் படுகின்றன.

இதில், ஞகை சூதம், துருசுக்குருச் செயநீர், லிங்கக்கட்டு, வள்ளிக்கிழங்கு, கற்ருழை, தவசிமுருங்கை, உப்புச்செயநீர், ரசக்கட்டு, செந்தூரம், வளலைக்கு யிடை பாகம், நூல்த்துகை, களங்கம், வெள்ளி வித்தை, வங்கநீறு, வெள்ளித் தொளில், வங்கநீறு, நாகக்கட்டு, வெடியுப்பு, பூனீறுச் சுன்னம், யேக மூலிப் போக்கு மெழுகு வகை முதலியன உள்ளன.

---

வரிசை எண்: **1037** சுவடி எண்: **466** (e)

## சுந்தரமூர்த்தி தண்டகம்

ஏடுகள்: *14.* ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: *10—11* வரிகள். அளவு: $22 \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *150.* ஆசிரியர்: சுந்தரானந்தர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

அரிஓம் அரகார அக்கனவு மாகி
அதிலேதான் சுளித்தயிரு சுளியு மாகி
தெரியாத பொருளாகிச் சித்தரியு மாகிச்
சிவமுமாய்ச் சத்தியுமாய் ரண்டு மொன்ருய்த்

தெரியாத நிர்மோட ரிதைய ரிந்தால்
தாயான மவுனத்தை அறிவா னய்யா
விரிகமலத் தோன்றியா திந்த மூலம்
வேதாந்தம் சித்தாந்தம் வெளிவிட் டேனே. 1

முடிவு:

செலுத்திடுவாய் செந்தூரம் வாத ராசன்
சிந்தா மணியொடுபூ பதியுந் தானும்
பலித்திடவே அப்பாகேள் கோடா கோடி
பவுறணிபூ றணசந்திரோதையந் தானு மங்கே
கெலித்துவரு.........சிந்தா மணியோ டப்பா
கீன்கானகம் மனேசிலை மாதுவே வல்லா
நலித்திட்ட மானமொறை கயிலாசமுனி சொன்னர்
நன்முக யிதையெடுத்து நான்சொன் னேனே. 33

முற்றும்

சுந்தரமூர்த்தி தண்டகம் முற்றும்.

காலம்: இல்லை.

குறிப்பு:

இது எமது சுவடி எண் 235 (c)/D. 390 போன்றது. இது முழுமையாக உள்ளது. நல்ல பாடமாக உள்ளது. அது குறைபாடுடையது.

இதில், தன்னுடைய ஆள்க்காட்டு என்ற தலைப்பு உள்ளது. 'தண்டகம்' என்று தலைப்பில் இல்லை இறுதிச் சொல் கொண்டு தலைப்பிடப்பட்டது.

வரிசை எண்: 1038 சுவடி எண்: 456 (f)

## சுப்பிரமணியர் ஞானம்

ஏடுகள்: 5. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 11—12 வரிகள். அளவு: $22 \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 100. ஆசிரியர்: சுப்பிரமணியர். முழுமை: முற்றும்.

தொடக்கம்:

உதிரம தேவுமென்ற மூல சீவன்
ஓங்காரப் பிரணவமு மிதுவு மாச்சு
பதியான வட்டமிது கிணேசன் வீடு
பாங்கான குண்டலியும் வ்ல்லபையு மாகும்

விதியான விதியெல்லா மிதிஞ லாகும்
வேதாந்தஞ் சித்தாந்த மிரண்டு மிங்கே
மதியான ரவிமதியு மூடே ஓட்டி
வாசியென்ற யெழுத்ததனுல் தாக்கு தாக்கே. 1

முடிவு :

ஆட்டினே னவ்வுமுவ்வும் ஒன்ருய்க் (கட்)டு
அதினுடனே கிலியுமய்யுஞ்......ம் பூட்டு
ஆட்டினல் பூட்டு திறக்கப் போமோ
பூரணத்தி லொடுங்குமந்த (ந)ன்மை யாகிக்
காட்டில்நீ யலேயாதே வெளியைப் பத்தில்
கண்டாலோ பரைவாசல்த் துறக்கு மப்பா
தேட்டுநீ ஓங்காரத் தட்சரமே யப்பா
சிவாயமென்ற அட்சரத்தைக் கூடக் கூட்டே. 12

சிவமயம்
சுப்பிரமணியர் ஞானம் முற்றும்
பரமகெதி

காலம்: இல்லே.

குறிப்பு :

இதில், ஞானம்பற்றிக் கூறப்பட்டுளது.

வரிசை எண்: 1039 சுவடி எண்: 466 (g)

## கணபதி தியானம்

ஏடுகள்: 5. ஏட்டின் நிலேமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 10—12 வரிகள். அளவு: $22 \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 100. ஆசிரியர்: அறியக்கூடவில்லே. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

உகந்துகொண்டு வசீகறத்தின் சூட்சங் கேளு
உத்தமனே வடதிசையை நோக்கி மைந்தா
அகந்தெளிய விபூதியுத் தளமாய்ப் பூசி
யானகலே யாசனமே லிருந்து கொண்டு
முகந்தெழுந்து ருத்திருக்ஷ மணிகை வாங்கி
முத்திபெறக் கணபதியை நன்ருய் சேவி

செகந்தனிலே ஜெவிப்பதற்கு மந்திரங் கேளு
சிவாசிவா ஓங்ரீங்கென் றோதே. பாட்டு—1

முடிவு :

பாரப்பா தம்பனத்தி னருமை சொன்னேன்
பரிவான உச்சாடனத்தைப் பகரக் கேளு
நேரப்பா தென்திசையை நோக்கி மைந்தா
நேர்மையுடன் விபூதியுத் தளமாய்ப் பூசி
காறப்பா படந்தா ரசமேற் கொண்டு
கருணையுடன் கங்குமணி கையில் வாங்கி
சாரப்பா சத்திகண பதியின் சூட்சமும்
தன்மையுட... ... ... ... ... 10

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் தலைப்பு இல்லை. நூலில் சொல்லியிருப்பது கொண்டு தலைப்பு கொடுக்கப்பட்டது. தியானவிதி, உச்சரிக்க வேண்டிய மந்திரங்கள் முதலியன இதில் கூறம்பட்டுள்ளன.

வரிசை எண்: 1040 சுவடி எண்: 466 (h)

## சச்சிதானந்த மாலை

ஏடுகள்: 18. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10—12 வரிகள். அளவு: $22 \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 400. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றும்.

தொடக்கம்:

முச்சுட ராகி யொன்றும்
முடிந்ததோர் சோதி பாத்
மச்சுத னயனுங் காணு
தகண்டமா யழிவி லாத
சச்சுதா னந்த மான
சதாசிவ குருவைப் பாட
மெச்சுட ருதைய மான
விளக்கொளி யுண்மை சேர்வாம். 1

முடிவு:

திருமருவு சிவசோதி மதிபெருகு சதிவீடு
தெரிசினைக ளாகி முடியுஞ்
சரமுமது பதிசேர்வை சகலகலை யனுராக
சாயுட்சிய பாதமே தரவேணு
மிருசமைய மெத்தபரா னந்தசபை
நிற்களா னந்த சிவ
சச்சிதானந்த குருவே. 30

முற்றும்.

சச்சுதா னந்த மென்னும்
தண்மையாய் மகிழ்ந்து கேள்ப்போர்
வுச்சிமேற் பார்வை யாகி
யுள்வளி திறந்து முப்பால்
வச்சிர ஒளிவு கண்டு
மகிழ்ந்தொரு வாசல் கண்டும்
நச்சிவன் நிற்க ளத்தே
திருமயச் சோதி சேர்வாம்.

காலம்: இல்லை.

குறிப்பு:

இது எமது சுவடி எண் 894/D. 1147 போன்றது. ஆயினும் பாட வேறுபாடுகள் மிகுதியும் காணப்படுகின்றன. நல்ல பாடமாகவும் இருக்கின்றது.

இது வேதாந்த நூல். பாயிரத்தில் 4 பாடல்கள் இருப்பினும் ஆசிரியர் அறியக்கூடவில்லை. "தற்பரானந்தசபை நிற்களானந்த சிவ சச்சிதானந்த குருவே" என்ற ஈற்றடியைக் கொண்டு, சச்சிதானந்த குருவைப்போற்றி வணங்கும் பாடல்கள் இவை. பாயிரம் நீங்கலாக 30 செய்யுட்களும் கடைசியில் ஒரு பாடலும் இருக்கின்றன.

வரிசை எண்: **1041** சுவடி எண்: 466(i)

## மந்திர சாத்திரம்

ஏடுகள்: *11.* ஏட்டின் நிலைமை: பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு *6—12* வரிகள். அளவு: $22 \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *100.* ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

ஹரி: ஓம்:

ஓம் அய்யும் கிலியும் சவ்வும் சவ்வும்
கிலியும் அய்யும் அய்யும் அக்கினி
தேவாயநம கிலியும் அக்கினி
தேவாயநம சவ்வும்

**முடிவு :**

| | |
|---|---|
| தெட்சணாமூர்த்தி தீட்சை | 72 |
| மச்சமுனி வகாரம் | 11 |
| சட்டமுனி சோடசசூத்திரம் | 52 |
| அழுகண்ணர் பாடல் | |
| கடைக்காண்ட சூத்திரம் 60 | 61 |
| அகத்தியர் | 53 |

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இதில் பலவிதமான மந்திரங்களும் யந்திரங்களும் உள்ளன,

வரிசை எண். **1042** சுவடி எண்: **467**

## அனுபவ வைத்தியம்

ஏடுகள்: *300.* ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுதுபட்டது. பக்கத்திற்கு: *4—6* வரிகள். அளவு: $20\frac{1}{2}$X*3* செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *1500.* ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

கோவிலுக்கு அஷ்ட்ட மந்திரம் மருந்து சாத்த மருந்து

| | | | |
|---|---|---|---|
| சுக்கான் | 3 | மஞ்சள் மெழுகு | 5 |
| கொம்பரக்கு | 1 | செம்பஞ்சு | 1 |
| கருங்குங்கிலியம் | 2 | அரசச்சாதிலிங்கம் | 1 |
| சேரான காவி | 3 | வெண்ணை | 1 |
| காசியசெந்தூரம் | 1 | | |

முடிவு :

கண்டாத்திரி உண்டெ

சுக்கு பலம் 5 சீரகம் பலம் $2\frac{1}{2}$

யிது ரெண்டும் யிடித்து தூள்செய்து வடிக்கட்டி,

இந்துப்பு பலம் $1\frac{1}{4}$ காயம் பொரித்தது பலம $\frac{5}{8}$

யிதெல்லாஞ் சேர்த்து கல்வத்தில் விட்டு, பளச்சாறு விட்டு அரைத்து சுண்டைக்காய்ப் பிரமாணம் உருண்டைசெய்து காய வைத்து யெடுத்துக் கொள்ளவும்.

காலம் : இல்லை.

குறிப்பு :

இது ஒரு சிறந்த சுவடி. இதில் பலவிதமான அனுபவ வைத்தியங்கள் உள்ளன. கஞ்சாச்சூரணம், பித்தவாயுவுச் சூரணம், லிங்க செந்தூரம், லிங்கக் கட்டு, சுரத்துக்கு மருந்து, பஞ்சதீபாக்கினி செந்தூரம், ரசப்பதங்கம் முதலியன உள்ளன. மை போடாத சுவடி.

சித்தபிரமை கொண்ட பேர்களுக்கு, வயத்தில் செத்த பிள்ளைக்கி, பிள்ளை பெறமாட்டாதவளுக்கு சிரசிலிருந்து தேங்காய் உருட்ட சொர்ணபற்பம், கிழவி குமரியாக முதலியன் உள்ளன.

வரிசை எண்: **1043** சுவடி எண்: **468**

## இராமதேவர் ஆயிரம்

ஏடுகள்: *230.* ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுதுபட்டது. பக்கத்திற்கு: 5—7 வரிகள். அளவு: 28 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *3500.* ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

அண்டமெனுங் கே... ... ... ...
அருள்பெருகும் பூரணத்தின் அருளே காப்பு
குண்டமெனும்... ... ... ...மெனும்
குண்டல... ... ... ... காப்பு
கருவான பராபரத்தின் குணமே காப்பு
... ... ... ...நிறைந்து நின்ற
மண்டமெனும்... ... ... ...காப்பு
பேரண்டம் நிறைந்தகண பதியே காப்பு —1

முடிவு:

ஆமென்றமறு தெரிசினையைக் கண்டால்
 அகலாத அவமிர்த்து அகண்டு போகும்
ஓமென்ற... ... ... ...உச்ச மாகும்
 உருமுகின்ற வாயுவுக்கும் ஒடுங்கும் வீட்டில்
தாமென்ற சங்கற்ப விகற்பர தீருஞ்
 சகலகலை மந்திரமுங் சுன்ன யாகும்
மாமென்ற மவுனமது வலுக்கு மய்யா
 மகத்தான யோகத்துக் கடிதான் பாரே. 941

காலம்: இல்லை.

குறிப்பு:

இச்சுவடி மிகமிகப் பழுதுபட்டு படியெடுக்கமுடியாத நிலையில் உள்ளது. முதல் 5 ஏடுகளில் இந்நூலின் அட்டவணை உள்ளது. அதுவும் மிகமிகப் பழுது பட்டுள்ளது.

வரிசை எண்: **1044** சுவடி எண்: **469**(a)

## அகத்தியர் பரிபாஷை நிகண்டு முதற் காண்டம்

ஏடுகள்: 35. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 23x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 600. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

பறமஞான ஹேதயத்திற்
 பறஞ்சுட ருலகுக் கெல்லாஞ்
சிறமென உதித்த ஞானத்
 தெய்வஞ யகன்றுள் போத்தி ...
வறமென வகாற யோக
 மறைப்புநூல் பாழை யெல்லாங்...
குருமுனி தமிழாற் செய்ய
 குமறனேங் கரன்றுள் காப்பே. 1

முடிவு :

தாக்கிப்பா ரிந்தநூ லேந்து காண்டந்
　　தான்பாற்கிற் சமுசியங்கள் தட்டுண் டேபோம்
நோக்கிப்பா றிந்தனூல் தனக்குச் சாட்சி
　　ரோமரிஷி வைந்நூறு நந்தி நாலு
தேக்கிப்பா ரிதினலே தெளியா துண்டோ
　　சிவசிவா குருத்தேடி திரிய வேண்டாம்
பாக்கியமாம் நாலினிலே ரெண்டாங் காண்டம்
　　பாடுகுறேன் முதற்காண்டம் பறமா முற்றே. 101

காலம் : இல்லை.

குறிப்பு :

இது எமது சுவடி எண். 270(a)/D 484 போன்றதெனினும் பாடவேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன. அது 'அகத்தியர் பரிபாஷை' என்றே குறிக்கப்படுகிறது. இது 'அகத்தியர் பரிபாஷை நிகண்டு' என்று குறிக்கப்படுகிறது, மிகவும் பழுதுபட்டுள்ளதால் செய்யுட்கள் படிப்பதே கடினமாக உள்ளன.

சித்தர் நூல்கள் பலவற்றிலும் காணப்படும் பரிபாஷைச் சொற்களுக்குப் பொருள் கூறப்பட்டுள்ளது. இதில் பூனீர் எடுக்கும் விதம், பிண்டம், பார்மண், சுத்தகங்கை, செயநீர், சுத்தசலம், விந்துனதம், பஞ்சரசக்குளிகை, பெண்டாட்டி புருஷன் வில்லோசை, மண், அப்பு, உப்பு, வெள்ளாவி, அஞ்செழுத்து, பிறவிக் கடல் முதலான விபரங்கள் உள்ளன. ரசவாத முறைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: **1045** சுவடி எண்: **469(b)**

## அகத்தியர் பரிபாஷை நிகண்டு
## இரண்டாங் காண்டம்

ஏடுகள்: 33. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 23X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 600. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

முத்தணி நகை...... வெ.........
　　முதல்வியைப் பாகம் வைத்த
சுத்தமெஞ் ஞான தீபஞ்
　　சுடரெனுஞ் சோதி பாதம்

நித்தமுந் தொழுது போத்தி
நீதிசேர் பாஷை நூலின்
புத்தமு திரண்டாங் காண்டப்
பொருளினைப் புகலு வோமே. 1

முடிவு :

வாருன யிக்காண்ட மிரண்டுக் குள்ளே
வளலைகுரு செய்யுகின்ற மாற்கஞ் சொன்னேன்
கூருன மூன்றினிலே கற்ப மூலங்
குணமான ... ... ... சொல்லும்
தூருன நாலினிலே யோகஞ் சொல்வேன்
சுத்தவுப்பை யெடுக்கும்வகை அஞ்சு சொல்லுஞ்
சீருன உப்பெடுக்கும் வகையைப் பாரு
தெளிவான ரெண்டாங்காண்டஞ் சிவனூல் முத்தே. 100

காலம் : இல்லை

குறிப்பு :

இது எமது சுவடி எண். 270 (b)/D. 485 போன்றது. பாட வேறுபாடுகள் இதில் மிகுதியும் காணப்படுகின்றன.

இதில், இரவிமதி, அங்கி, வெடியுப்பு, முடிதலை, சீனவுப்பு, உப்பு, தலையூசரம் புளிக்கொடி, அகாரவுப்பு, வெடியுப்பு, நிலவுப்பு, வழலை, துருசு, வெடியுப்புத் திராவகம் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1046 சுவடி எண்: 469 (c)

## ரோமரிஷி பதினாறு

ஏடுகள்: 5. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 23X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 75. ஆசிரியர்: ரோமரிஷி. முழுமை: முற்றுமுள்ளது.

தொடக்கம் :

மூலமுத லாதாரப் பொருளே காப்பு
முப்பாலும் பாழான முதலே காப்பு
மேலாதா ரத்தில்வளர் அய்யர் பாதம்
வேண்டிக்கொண் டஞ்ஞூறும் வெளியாய்ச் சொன்னேன்

முடிவு :

மணிபூ(றம்) வீரமல்லோ (கார) சாரம்
　　மன்(னவ)னுந் தேவியுமாய் மகிழ்ந்த வீடு
செணி... ... ... ... ... ...
　　கிணேசனுட பட்டணத்தில் கெடிமே லய்யாப்
பணிவான ... ... ... பேர்பதியம் வந்தால்
　　பாலனுக்குப் பலித்திடாதே... ... ...
வணி... ... ... ... ...
　　மக்களே பதினறு வன்னி முற்றே. 16

காலம் : இல்லை.

குறிப்பு :

இது மிகமிகப் பழுதுபட்ட சுவடியாக உள்ளதால் செய்திகள் அறிய முடியவில்லை.

வரிசை எண்: 1047 சுவடி எண்: 469 (d)

## வைத்தியநூல் பதினறு

ஏடுகள்: 5. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 23X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 75. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: குறைபாடுடையது.

தொடக்கம் :

தந்திமுகத் தோன்(சதங்)கை தாளே (காப்)பு
　　... ... ... ... ... ...
நந்தியுறைத் தேன்முதனூ லன்ப துக்குள்
　　மூலமுதல்... ... ... ...
......ய மக்களுக்கு தொடுகுறியும் பணில......
　　... ... ... ...சொன்னேம் சொன்னேம்
ரோமரிஷி... ... ... ... ...
　　... ... ... ... ... ... க

முடிவு :

ஆகாத வேலையிலே கண்டர் சிப்பி
　　ஆகாச விந்துவல்லோ முத்தாய்ப் போச்சு

சாகாதோ (யினன்றில்) ஆணைக் கல்லுஞ்
சத்தியுவர்ச் சூடனங்கே சேத்தே பாரு
வேகாதோ......யினமுஞ் சேந்தா லய்யா
வெண்கிளிஞ்சி கெற்பநீர்விட் டோர்கட் கெல்லாம்
போகாதோ (குருமுடிக்கு)ம் பாக மெல்லாம்
பூட்டறிந்து பாற்தவற்கு பொருள்தான் முற்றே. 16

கணபதி துணை.

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

முதல் ஏடு ஒடிந்துள்ளதால் தலைப்பு அறியக்கூடவில்லை. நந்தி, ரோமரிஷி என்ற பெயர்கள் காணப்படுகின்றன. ஏடுகள் மிகமிகப்பழுதுபட்டுள்ளதால் நூலின் பெயர் அறியக்கூடவில்லை.

---

வரிசை எண்: **1048** சுவடி எண்: **469 (e)**

## ரோமரிஷி திருமந்திரச் சுருக்கம்

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 23X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 50. ஆசிரியர்: ரோமரிஷி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

பதினாறு பாடல் பரமனென் னாத
மதிலே தெளிந்து (ஆடினார்) சூஞ்யம்
விதியாய வெகுநூல் விளப்புவ தெல்லாம்
கெதியேது மில்லை கிணேச னருளே. 1

**முடிவு:**

வகையறி வாளர்க்கு மச்சமுனி சொன்ன
தொகையொறு யெண்ணூத்தில் துவண்... ...
குகையமறைப் பென்றுங் குணஞ்சத் தறியாமல்
......தோர்கள் தெளிந்து... ... ... 16

**காலம்:**

நளவருஷம் வையாசி மாசம் 1-ம் தேதி தஞ்ச நகரம் கோட்டைக்குள் சக்கா நாயக்கன் தெருவில் கருப்பூற வயித்தியாம் பிள்ளை

மகன் வயித்திலிங்கம், ஷெயூர் தெற்குவீதி, கொல்லு சதாசிவ ஆசாரிக்காக பரிசோதித்து கேட்டுக்கொண்டதற்காக பிரகாசமாக நெட்டெழுத்துடனே யெழுதிக் கொடுக்கலாயிற்று.

குறிப்பு :

இதன் ஏடுகள் மிகமிகப் பழுதுபட்டிருப்பதால் செய்திகள் அறியக்கூட வில்லே.

இதன் பின்னர் போகர் பாடலில் என்ற தலைப்புடன் ஒரு ஏடு இருக்கிறது. அதில்,

சாற்ந்துபார் கல்லுப்பு யிந்துப் போடு
சமரசமாம் பிறிதுவியின் கூற தாகுங்
கூற்ந்துபார் சத்தியொடு நவச்சாறம் ரெண்டு
குறிப்பாக அப்புவுட கூற தாகும்
தேற்ந்துபாற் சவுட்டுப்பு வெடியுப்பு றெண்டுந்
தேயுவுட கூறென்றே செப்ப லாகும்
வேற்ந்துபாற் வெண்காரந் துருசி ரெண்டும்
வெரியான வாயுவுட கூற தாமே. 448

இதன் பிறகு 450-வது பாடல்வரை உள்ளன.

வரிசை எண்: 1049 சுவடி எண்: 469 (f)

## அகத்தியர் வகாரம் முப்பது

ஏடுகள்: 9. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 23 × 3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 150. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

ஆதிபரு பறத்தினுட கிருபை கூர்ந்து
அடிமுடியாய்... ... ...ந்தி காப்பு
நீதியாம் வாரணத்தின் முகவன் காப்பு
நிற்மலச் சதாசிவத்தின் (வ)டிவே காப்பு
பாதிமதி (சடை)யணிந்த சிவன்றன் காப்பு
பத்திமுத்தி சத்திவயி றவனே காப்பு
ஓதியதோர் வாணியுட பாதங் காப்பு
ஓங்கார மூலவட்டத் தொளிகாப் பாமே. 1

முடிவு :

......யின் னீத்தானல் துருசு வெள்ளை
அவவெள்ளை சுண்ணத்தாள் றசத்தை னீத்தி
ஓமப்பா பரித்தகட்டில் பூசிப் பாரு
உத்தமனே சொற்ணமது சுண்ணும் பாச்சு
ஞமப்பா சொல்லுகுறேன் தாம்புரத்தில் கொடுக்க
ஞட்டோர்கள் பிளைப்பதற்கு வழியு முண்டாம்
காமப்பா அதையெடுத்து வெள்ளிக் கிய்ய
கனகமாம் கருமூன்று பத்து முற்றே. 30

அகஸ்த்தீசற் சுவாமி சகாயம்.
மூலனுத சுவாமி பாதந் துணை.

காலம் : இல்லை.

குறிப்பு :

இது மிகவும் பழுதுபட்ட நிலையில் இருக்கிறது. இதில் இரசவாதச் செய்திகள் பேசப்படுகின்றன.

வரிசை எண்: 1050 சுவடி எண்: 469 (g)

## தெட்சணமூர்த்தி பத்து

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 23X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 50. ஆசிரியர்: தெட்சணமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

பாரப்பா (வாதி)யென்றல் பூசை வேணு
பாங்கான சிவம்பண்ணும் தியானம் வேணும்
நேரப்பா வாதியென்ற யோகம் வேணும்
(நேராக நிச்)சயத்தை நிறுத்த வேணும்
காரப்பா குருபதத்தைக் கார்க்க வேணும்
கைகாட்டி......களிலு முறைய்யே வேணும்
சாரப்பா சாஷ்த்திரமுஞ் சூஷ்த்திரமுங் கண்டு
.........பாத்திருந்து வாதம் பாரே. 1

முடிவு :

போமடா கரியோட்டி லூதும் போது
போக்காகக் கண்விட்டு ஆடும் ஆடும்
தாமடா நல்லுப்பைக் கூட்டி யூத
நல்லதொரு வயிரமணி போலே ஆடும்
நாமடா ஆணுவத்தால் வெளியில் போட்டேன்
நாடாதே கள்ளரெண்ட மானி டற்கும்
தாமடா யிதுவெல்லா மரிந்து கொண்டு
தாரணியில் விள்ளாதே அடக்க முற்றே. 10

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், வாதியின் இலக்கணமும், வாத முறையும், குருவைப் பேணுதலும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: **1051** சுவடி எண்: **469(h)**

## கும்பமுனி சாமியார் பாடல் பனிரெண்டு

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 23 × 3 செ.மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 60. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும்.

தொடக்கம் :

தாயான உன்மனை(யாள் பா)தம் போற்றி
சாஸ்த்திரமோ ஆயிரத்தி யறநூ ருக்குள்
தோயாத கருவொன்று யில்லை யில்லை
சொல்லடக்க மாய்உரைத்தேன் வழலை யொன்று
காயாகு மதைக்குரிக்கி யிறனூறு சொன்னேன்
கனிபோலே யிந்தநூல் பனிரெண் டுக்குள்
வாயாரச் சொல்லுகுரேன் வகார மார்க்கம்
மதியிரவி அண்டபிண்டம் வளமை கேளே. 1

முடிவு :

தானெண்ட அண்டபிண்டங் குருவைச் செய்ய
(தவம்)வேணும் சிவம்வேணும் தயவு வேணும்

வானென்ட அக்கியான மூப்பைக் காண
 மதிவேணும் விதிவேணும் வாசம் வேணும்
நாமென்ற ஆணவத்தை நொருக்க வேணும்
 நலமான சிவயோகம் நாட்ட வேணும்
தேனென்ற சற்குருவைக் கார்க்க வேணும்
 (சித்)தியாம் பனிரெண்டுஞ் சேர்க்க முத்தே 12

அகஷ்த்தியர் சுவாமி துணையாக வேணும்.

**காலம்:** இல்லை.

**குறிப்பு :**

இது எமது சுவடி எண். 226(c)/D. 359 போன்றது. அதில் 'அகத்தியர் பன்னிரண்டு' என்றுளது. இது கும்பமுனி பனிரண்டு என்றுளது. இதில் பாட வேறுபாடுகள் மிகுந்து காணப்படுவதோடு நல்ல பாடமாகவும் காணப்படு கின்றது.

---

வரிசை எண்: **1052** சுவடி எண்: 469 (i)

## அகஸ்த்தியர் ஞானம் பதினாறு

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 23X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 60. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆதியந்த மில்லாத ஜின்மயத்தின் பாதம்
 அகண்டபரி பூரணமா மாத்தாள் பாதம்
சோதிமய மாகிநின்ற கிணேசன் பாதம்
 சொல்லிநிக்கும் மெட்டாத சூட்சா சூட்சம்
வீதியென்ற பராபரத்தி னந்தி பாதம்
 வேதாந்த சாஸ்த்திரத்தின் வெளியா மார்க்கம்
சோதியெனும் பருபறத்தின் நடனஞ் செய்த
 சுடரொளியின் பாதமது (காப்புத்) தானே. 1

**முடிவு :**

பாற்க்கவே யிம்முறையைச் சொன்னாருகிற்
 பாளான நறகமெய்தும் பாரு பாரு

காற்க்கவே சீழனுட மனத்தைக் கண்டு
செய்முறையை.........ஞான மாற்க்கம்
மேற்க்கவே ரசமணியின் மார்க்கந் தானும்
மேன்மக்காள் சொல்லிவிட்டேன் (ஜெருளும்பு) மார்க்கம்
சேற்க்கவே யிம்முறையை யுனக்குச் சொன்னேன்
செளுங்கருணே பதினுலிற் சிவயோகம் முற்றே. 14

**காலம்** இல்லை.

**குறிப்பு ;**

இதில் சிவயோகம் பற்றிக் கூறப்படுகின்றது. இந்நூலின் அருமைகண்டு இதனை அற்பருக்குக் கொடுத்தால் நரகம் எய்தும் என்றும், சீடனுடைய மனதறிந்து கொடுக்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1053 சுவடி எண்: 469(j)

## ஞானவெட்டியா ரருளிச்செய்த பூனீர் உற்பத்தி கால் முதலியன

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—8 வரிகள். அளவு: 23X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 50, ஆசிரியர்: ஞானவெட்டியார். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

பூநீ ராவதும் பூதலந் தன்னிலும்
வானிலும் மாசி பங்குனி மூன்றினில்
காணீ ரோகதிர் சந்திரன் வந்தினுல்
சேரணே பாய்ந்து சுக்ரமுத்த நீற்தாம்
பரணி யோடி பருதி முகம்பட
தானினி வெண்மை தாரணி தன்னிலும்
கோனினி பூமி ஞதை மெழும்பிடும்
வேனினி விந்து நாதமீ தாண்டையே. 869

**முடிவு :**

இந்தவிதம் ......னரிந்து அனுபோ கத்தை
யினியுரைத்தேன் யாவர்களு மினமாய்க் காண
அந்தமுட னருவகைதன் சூலே யாலும்
அணுகாது புத்திரேட்சை யமைக்கும் வாறு

சந்தமாய் சதைமூடில் சதையைத் தின்ன
சண்டமா ருதக்கழப்பில் பணந்தா னென்று
விந்தையுடன் சிலைவனில் விரவிப் பூசி
மிருந்தர......கந்தனிலும் விளங்கு வீரே. 991

காலம்: இல்லை

குறிப்பு:

இது ஒரு நூலின் ஒரு பகுதியாகும். 869 முதல் 991 வரை செய்யுட்கள் இருக்கின்றன. ஞானவெட்டியாரருளிச் செய்தது என்றுளதால், ஆசிரியர் பெயரே ஞானவெட்டியார் போலும். ஞானவெட்டியாரருளிச்செய்த பூனீர் உற்பத்தி கால், அஃது எடுக்கும் வகை என்று முதலேட்டில் உள்ளது.

வரிசை எண்: 1054 சுவடி எண்: 469 (k)

## லோகநாதர் யோகா அதிசயம்

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 23 × 3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 50. ஆசிரியர்: லோகநாதர். முழுமை: முற்றும்.

தொடக்கம்:

யோகநாதி சயத்தை ஓதுதற்கு வாலைநன்பா
வாகாதி சயத்தை வைத்தாளின் —யோகமுதல்
தந்தும் பிரமநிலை தான் துலங்க வுங்கருணை
தந்தும் பிரமநிலை தா.

முடிவு:

கோனென்ற கற்த்தனே அறியவழி தேடியே
கோதிலா ஞானனூலைக் கூறிடும் அறிவோரிடம்
சென்று நீயுன் குணக்கேட்டை யகத்தி விடுவாய்
தேனனை அமுற்தமும் பொசித்தபின் நீடூழி
திற்ருயி திறவு பெறலாம் தேட்டையிது
பொய்யல்ல சத்தியம் யான்சொன்ன
திடமது கண்டுகொள்ளே. 9

முற்றும்

காலம்: இல்லை.

**குறிப்பு :**

இதில் ஒன்பது செய்யுட்களே உள்ளன. 'லோகநாதர்' என்பது புதிதாக உளது. இது யோக மார்க்கத்தைப் பற்றிக் கூறுகிறது.

---

வரிசை எண்: **1055** சுவடி எண்: **469**(1)

## நந்தீசர் சுருக்கம் பனிரண்டு

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 23X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 100. ஆசிரியர்: நந்தீசர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

சீர்பெறுகும் வேதாந்தத் துள்மூலத்...
... ... ... ... ... ...
நீர்பெறுகுங் காரமறிந் துண்ட வாசி
... ... ... ... ... ...
(ஏ)ர்பெறுகுங் கேசரியைக் கண்டு......
... ... ... ... ...பாதம்
நேர்பெறுகு நெ... ...... ......
...யச் சொல்லுகுரேன் உப்பை... 1

**முடிவு :**

வ(ாலென்ப)ாள் வாசியென்ற கு(தி)ரை (மேலே)
(வ)ங்குசிங்கு லக...ப் யேரி நோ(ளே)
மேவென்பால் ஞ(லை)யுந்தான் பெட்டில்ச் சேர்த்து
......யரிந்த சித்தனென்ருல் வெளிமையக் காட்டி
மாவென்பாள் தூரியமணி பூரகத் துள்ளே
வந்தமந்த நாதசத்தி மவுன மூலம்
ஊவென்பாள் உகாரத்தின் ஒளியைப் பாறு
(உத்தொடுங்கிப் பனிரெண்டு) மொன்ருய் முற்றே. 12

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இதில் வழலை காரசாரச் சரக்குகள், பூநீர் விளையுமிடம், அது விளையும் மாதம், தீட்சை முறைகள் முதலியன கூறப்பட்டுள்ளன.

இது எமது சுவடி எண். 341(c)/D. 667 போன்றது. பாட வேறுபாடுகள் உள்ளன.

வரிசை எண்: 1053 469 (m)

## அகத்தியர் முப்பு ஆறு

ஏடுகள்; 2. ஏட்டின் நிலைமை; மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—8 வரிகள். அளவு; 23×3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 50. ஆசிரியர்: அகத்தியர். முழுமை; முற்றுமுளது.

தொடக்கம்:

பாடுகுறேன் சூட்சமது ஆ(றி) னுள்ளே
(பண்பான) பிள்ளைகட்கு அடக்கித் தானே
ஊடுறேன் (இ)ரண்டெழுத்து சராசரந்தா னுச்சு
உத்தமனே மனேன்மணித்தா யிருந்த வீடு
நாடுநீ அகாரத்தில் மேலே தாக்கு
அண்டமெல்லாம் படைத்ததொரு ஆயி தாளை
தேடியே ஒன்ருகச் சித்தெல்லாம் பாரு
திரந்துவிட்டே னஞ்ஞானத்தின் திரவு தானே. 1

முடிவு;

பாரப்பா (ஐங்கோ)ணம் யெழுத்தி னலே
பருபரத்தின் (ஒளி)காட்டும் பாரும் பாரு
ஆறப்பா விந்துவிட யெழுத்(தே யாகும்)
ஆச்சரியம் (வே)ருென்ரு லா(டா) தப்பா
காரப்பா (பெரியோ)ரை பனிரெண் டாண்டு
கருத்தரிந்து திரங்கண்டு கைய்யி லீய்வார்
(வேரப்பா வேதைக்)கி யிதுதா னுகு
(வேதாந்)தி யானுக்கால் செய்ய நன்றே. 6

ஆள்கொண்டார் பாதாரவிந்தமே சரணம்.
உலகனுத சுவாமி பாதாரவிந்தமே சரணம்.

காலம்: இல்லை.

குறிப்பு:

இது முப்புபற்றித் தெளிவாகவும் சுருக்கமாகவும் ஆறு செய்யுட்களில் கூறுகின்றது.

இது எமது சுவடி எண். 236 (f)/D 398 போன்றது. பாட வேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன. இது நல்ல பாடமாகத் தெரிகிறது. மிக மிகச் சிதைந்துள்ளது.

வரிசை எண்: 1057 சுவடி எண்: 469 (n)

## வாலையானந்தர் சிவயோக சூத்திரம் 7

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு; 23 X 3 செ, மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 50. ஆசிரியர்: வாலையானந்தசுவாமி. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

ஆதியென்ற பூரணத்தி னறிவே காப்பு
அருளான அகஸ்த்தீசர் பாதங் காப்பு
சோதியென்ற ஞாதாக்கள் பாதங் காப்பு
சொல்தவரு பெரியோர்கள் பாதங் காப்பு
சாதியென்ற பேதமில்லாற் பாதங் காப்பு
சமத்தான பூறணியாள் பாதங் காப்பு
நீதியென்ற வாசிதனை கண்டோர் பாதம்
நித்தியமே தொழுதிறஞ்சி சாத்து வோமே. 1

முடிவு:

முத்தான வாலையா னந்தன் சொன்னேன்
முன்பின்னாய்ப் (போனாலு)ம் பெரியோர் தானும்
ஒத்தாசை யாயிருந்து காற்க வேணும்
ஒரு(மனத்தாய்) (வாசி)யில்ச்சென் றேத்த வேணும்
பத்தாசை கொள்ளாமல் செய்ய வேணும்
(பரம)குரு பாதமதை தொழுக வேணும்
வத்தாத பாத்திரத்தை காண்ப தற்கு
வரிசையுள்ள சூத்திரமா மேழு முத்தே. 7

காலம்: இல்லை.

குறிப்பு:

இது சிவயோகம் பற்றிக் கூறுகின்றது. வாலையானந்தர் எனும் இந்நூலாசிரியர் உலகநாதரின் சீடர் போலும். இவர் திருவையாறு ஆட்கொண்டாரை 3-ம் பாட்டில் வணங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

* * *

வரிசை எண்: 1058 சுவடி எண்: 469(0)

# நந்தீசர் 300

ஏடுகள்: 88. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5—6 வரிகள். அளவு: 23X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1000. ஆசிரியர்: நந்தீசர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

மூலமென்ற கணபதியின் பாதம் போத்தி
முத்திபெற்று சழிமுனையின் முனைமேல் நின்று
கோலமென்ற குண்டலிக்குள் குகைதா னுண்டு
குகைதனிலே குறு(பரனுஞ்) சத்தி வாழ்ந்தான்
சீலமென்ற தவமகிமை பெற்ற ........
தேடியதோர் வீடதனை தெளிந்து பாற்து
ஞாலமென்ற கொடிமரத்தின் கீழே நந்தி
நாடிநின்ற பீடமது ஆதி காப்பே. 1

முடிவு:

முத்திபெற்று ஞானறிவு தங்கி நின்ற
(மோட்சநிலை தா)னறிந்து சித்தி பெற்று
பத்திநின்(ற சுட)ரொளியைப் பதிவாய்க் கண்டு
பழக்கத்தால் வாசிநின்ற தலமுங் கண்டு
சித்திபெற்று (கருவினுட) சூட்சங் கண்டு
தெளிந்தமதி மாய்கைவிட்டு சிரமே யெண்டு
தத்திநின்ற விடங்காணப் பேறும் பெற்று
சகலவுயிற் ஞனவனுய் முத்தி யாமே. 306

முற்றும்.

காலம்: இல்லை.

குறிப்பு:

இதில் மும்மூலம், ஞானம், அண்ட பற்பம், ரவியில் நிக்க, மும்மூர்த்தி தயிலம், கருவு விபறம், முப்பூ, திருட்டு சித்தன், ஆய்சு விர்த்தி மெழுகு, வித்து வீடனம், தெரிசனம், கெந்தக பற்பம், கெந்தகம், மரப்பு மை, அஞ்சனம் ஆகியவை உள்ளன. இச்சுவடி மிகவும் பழுதுபட்டிருப்பதால் சில இடங்கள் தெளிவாக இல்லை.

வரிசை எண்: 1059 சுவடி எண்: 469(p)

## டமரானந்தர் வகாரம் 16

ஏடுகள்: 6. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 4—6 வரிகள். அளவு: 23X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 100. ஆசிரியர்: டமரானந்தர். முழுமை: முற்றும்.

தொடக்கம்:

ஆனந்த நிர்க்குணத்தி னருளே காப்பு
அடியேனை யாண்ட னந்திபாதங் காப்பு
தானந்த ஜெனகாதி ரிழிகள்க் கெல்லாம்
தாசனென்றும் பேர்படைத்தேன் டமரா னந்தன்
மோனந்தம் பிரமமன்னு சந்தா னத்தின்
மூச்சத்த வாய்வுகற்ன னிஷ்டை செய்தேன்
ஞானந்தான் பேசிவைத்தேன் எழுவத் தைந்தில்
நலமாக வாதவித்தை நவிலு வேனே. 1

முடிவு:

சத்துபதிஞ் சலிவியாங் கிரம ருக்கு
தனதான பிள்ளைகளில் ஞெருத்தன்
வித்தையெல்லாங் கண்டுகொண்டேன் வடமேர் தன்னில்
விசுவகருமா மகந்தனக்கு ஒபதேசஞ் சொன்னேன்
சித்துவிளை யாடுதர்க்குங் கிரந்தன் னூரு
செப்பினேன் சிவனூலை தெளிந்து பார்த்து
அத்துவைத மானதினல் டமரா னந்தன்
அருளிச்சொல் பதினொரு மடக்க முத்தே. 17

காலம்: இல்லை.

குறிப்பு:

இதில் டமரானந்தர், தான் பதஞ்சலி வியாக்கினபாதருடைய பிள்ளைகளில் ஒருவன் என்றும், தான் அத்வைதி என்றும் கடைசிப்பாட்டில் கூறுகின்றார்.

வரிசை எண்: 1060. சுவடி எண்: 470

# அகத்தியர் பூரண சூத்திரம்

ஏடுகள்: 15. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5—6 வரிகள். அளவு: 26X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 200, ஆசிரியர்: அகத்தியர். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம்:**

......களப்பா சுரங்க ளெல்லாம் திருத......
கெடியான ......... வகையொன்று சொல்லக்கேளு
வாளப்பா கெவுரியடி ......... தூக்கி
வண்மையுடன் முலைப்பாலி லூரப் போட்டு
டப்பா ......மூன்றுநா ளானபின்பு பூனீர்

**முடிவு:**

கொள்ளடா தண்ணிபடி அரைதான் விட்டு
குளிப்பாகக் காய்ச்சியதை குடிப்பீ ருகில்
கள்ளடா மேகத்தா லெழுந்த ரோகம்
கல்லடைப்பு நீரடைப்பு சதைய டைப்பு
பண்ணடா யிதுவெல்லாம் பறந்து போகும்
பண்பாக கிஷாயத்தை கொள்ளு கொள்ளே
......... ......... ....... .. .........
அல்லடா கல்லடைப்பு கிஷாய முற்றே.

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

இதன் தலைப்பு ஏடு தொடக்கம் முறிந்துள்ளதால் சரியான தலைப்பு தெரியவில்லை,

இதில், சன்னி சகலத்துக்கும், போரமானத்துக்கும், பேதி மாத்திரை வீர வய்ப்பு, நீரடைப்புக்கு கல்லடைப்புக்கு மருந்து முதலியன உள்ளன. இது எமது சுவடி எண் 289 (b)/D. 514-ன் வேறுயது.

இதன் பின்னர் இரண்டு ஏடுகள் மருந்து முறைகள் எழுதியவை உள்ளன.

வரிசை எண்: 1061 சுவடி எண்: 471

# ரோமரிஷி 500

ஏடுகள்: 90. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8—10 வரிகள். அளவு: $26\frac{1}{2}$X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 3000. ஆசிரியர்: ரோமரிஷி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

மூலமதி லாதார முடிவில் நின்ற
முந்தியெனுங் கிணேசனுட பாதங் (காப்பு)
சாலமெல்லாங் கடந்துநின்ற தாயின் பாதந்
சனகாதி மூலருட பாதம் (காப்பு)
காலமெனும் பிறப்பெறப்புங் கடந்து நின்ற
கறுணைதரும் நந்தீசர் பா(தங் காப்பு)
ஆலமுண்ட கண்டருட பாதங் காப்பு
அஞ்ஞூத்தை யானுரைக்க அம்பரத்தான் காப்பே. 1

**முடிவு:**

தாக்கியே வேப்பிலையை உரலி லிட்டு
தாக்கடா தவுடுபொடி யிடித்துக் கொண்டு
தேக்கியே படியெட்டு அமுரி தன்னில்
திரம்பெறவே கலக்கியே பூனீர் போடு
தூக்கியே யிருத்திடுவாய் ......... .........

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

முதல் ஏட்டின் முகப்பு ஒடிந்துள்ளதால் தலைப்பு இல்லை. ஆனல் மேலேட்டில் இச்சுவடியின் விபரங்கள் எழுதப்பட்டுள்ளன. பின்பக்கம்:

"யிந்த சாத்திரம் ரோமரிஷி சுவாமிகள் சாத்திரம் அயினூறு யிது அந்தளி துலுக்கபயல் வாங்கிட்டுப் போயி கிரிக்கி கிரிக்கி...... அவன் யெறந்து போனன். அப்பறம் அதையி வாசித்துப் பார்க்கயில்கெரு.........ச்சியிருக்குறன். ரோமரிஷி 500. ஆகையில் யென்மனது நொந்து வருத்தமாயி அப்போ ஆகாசம் பூமி எல்லவற்க்கும் முப்பத்தி முக்கோடி தேவரும், நாற்பத்தியெண்ணு ஆயிறம் ரிசிகல் அவனுக்கு கிருபையி செய்வார். பழனிப்பிள்ளை நமகாறம்" என்றிருக்கிறது.

இதில், பிண்ட முப்பு, நாதமுப்பு குரு, சாரமெழுகு, தூரிசி சுன்னம் முதலியன கையெழுத்துக்கள் வெவ்வாருயுள்ளன. பக்கங்கள் சிலவற்றில் இல்லே. பாட்டெண்கள் உள்ளன.

இதன் பின்னர் பத்து ஏடுகள் வைத்தியம் எழுதியவை உள்ளன.

வரிசை எண்: 1062 சுவடி எண்: 472

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 182. ஏட்டின் நிலேமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 4—7 வரிகள். அளவு: 22 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 2000. ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்:

சுலெ கட்டுக்கு பூஜை

| | | |
|---|---|---|
| சுடம் | வராகனெடை விசம் | |
| காந்தம் | ,, | 2 |
| பாசானம் | ,, | 2 |
| கெவுரிபாசாணம் | ,, | 1 |
| கொடிவேலிவேர் | ,, | 2 |
| வீரம் | ,, | $\frac{1}{2}$ |
| யெருகம் கரி | ,, | 2 |

முடிவு:

இத்துடன் பசுவின் பால் சேர் 2, தண்ணி சேர் 2 ஒரு புதுப் பாத்திரத்தில் விட்டு, மருந்து சாப்பிட்ட உடனே பாதியும், 15 ஞழிகையில் பாதியும், 25 ஞழிகைக்குமேல் பாதியைச் சாப்பிடவும். நீவட்டையும் நீரும் நல்லாய் வடிந்துபோம்—யத்தியம் சப்பட்டி.

காலம்: இல்லே.

குறிப்பு:

இதில் ஏடுகள் பல்வேறு அளவுகளில் உள்ளன. பலவிதமான நோய்களுக்கு எளிய மருந்துகள் உள்ளன.

இதில், பெரிய பயல் சொன்னது, வூட்டுக்குத் தூரம் ஆக, பேதி மாத்திரை, நிலப்பனேக்கிருதம், பொன்னங்காணிக் கிருதம், வல்லாரைக்கிருதம், கூஷ்பாண்ட கிருதம், தூதுவளே கிருதம். பித்தவெட்டை கிருதம், கண்டங்கத்திரி லேகியம், சிந்தாதி லேகியம், கபாட லேகியம், நெல்லிக்காயி லேகியம் முதலியன உள்ளன.

மேலும், மிளகு லேகியம், அக்கினி சூரணம், திரிராச்சித சூரணம், ஏலாதிச் சூர்ணம், கருங்கோளிச் சூரணம், அருவகை சூரணம், புங்கம்பூ சூரணம், கஸ்தூரி யெண்ணே, றச கற்பூரவைப்பு, கொம்பரக்குத் தயிலம், லிங்க செந்தூரம், அம்மசா சொன்னது, விட்டல் சொன்னது, ஆமை ஓடு பஸ்ப்பம், பச்சை வற்ண தகடு செய்யிற முறை, ஷூது பத்தி சரக்கு, அறகசா முறை, சந்தனவில்லை, பன்னீர் முறையி, மறப்பு வேலை முதலியன உள்ளன.

பின்னர், குளிர் சுரத்துக்கு மாத்திரையி, மஞ்சகாமாலை மருந்து, சாமு சொன்னது தங்கம் பண்ணுறது, வச்சிர குகை முறையி, வாண முறையி பொல்லாது, வெள்ளி செய்கிற பாகம், சாமுருவு சொன்னது தங்கம் பண்ணுற முறையி வயித்திய ரெத்தினச் சுருக்கத்தில் பாடியிருக்கும் அயம் காந்த செந்தூரம், சாமுருவு சொன்னது வெள்ளி முரையி, யிந்த கிசாயம் சாமிபிள்ளை சொன்னது, சாமு சொன்னது, ரெத்த விருத்திக்கி லேகியம் மருதமுத்து வாத்தியார் சொன்னது, மற்றும்பல வைத்தியங்கள் உள்ளன.

வரிசை எண்: 1063 சுவடி எண்: 473

## போகர் ஞானம்

ஏடுகள்: 9. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5—6 வரிகள். அளவு: $22 \times 2\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 130. ஆசிரியர்: போக நாயனர். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

ஹரி: ஓம் :
நன்ருக

போகநாயனர் அருளிச் செய்த
பாடல்—ஞானம்

அடிசிறுக்கி என்றழைத்தால் சுந்தரமே நீதான்
அப்பவல்லோ கேட்டபொரு ளெல்லா மீவாள்
தடியடிதா னுந்தனுக்குப் போடி யென்ருல்
சண்டாளா சாகாத வீட்டே போடா
குடிகேடி கைபிடித்தால் கோகோ வென்பாள்
கூடுவதும் பேசுவதுங் குறியைப் பாரு
முடிவான மேன்தலத்தில் நாலாம் வீட்டில்
முத்தியடி அடிசிறுக்கி முயன்று பாரே. 1

முடிவு :

போங்களென்று சொன்னவுட நிருவ ருந்தாள்
புனிதமா யவர்களுட வீட்டில் நின்றார்
ஆங்கண்டாள் சுழிமுனையாம் நாய கன்றான்
அனேகநா ளானபின்பு அந்தநிலையே நின்றான்
வாங்காம லிருவரையுஞ் சுத்திவரச் சொல்லி
மனதுதன்னில் நடமாடி நின்று ளப்பா
தாங்கிநின்ற சக்களத்தி ரெண்டு பேரும்
சமரசமாய் சிவகலையில் சார்ந்தா றன்றே. 21

போக நாயனுற் பாடல்
யெழுதி னிறந்தது
முற்றும்

காலம் : இல்லை

குறிப்பு :

இதில், 3, 5 வது ஏடுகள் இல்லை. இது கணவன் மனைவி, சக்களத்தி சண்டை யிட்டு ஏசுவது போல அமைக்கப்பட்டு அதன் மூலம் இடகலை, பிங்கலை, சுழிமுனை யின் நிலை கூறி ஞானத்தை உரைப்பது மிகவும் கற்பனை நிறைந்தது.

வரிசை எண்: **1064** சுவடி எண்: **474**

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 45. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5—6 வரிகள். அளவு: 22X2½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 600. ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

பல்லு வலிக்கி மந்திரம்

கணபதியே நமா சுப்பிறமணியா நமா
கரும்பு மூவும் செம்பு மூவும்
ஆனையேறும் பெரும் பறையன்
காலால் பொந்திரங்கிப் போக

சிவாய நம.

முடிவு :

போகிடுங் காரிவுரு மனை நீச
மாகிய கெந்திர கோண
மாகிடில் யேக லெக்கின மேழில்
மனை நல்லோர் ராகிய சுபருட
னணுகி லெழுபதே 31

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் மந்திரங்கள், மருத்துவம், சோதிடம் முதலியன உள்ளன. பல் வலிக்கு மந்திரம், அழைப்புக்கு திலதம், வியாதிகளுக்கு மருந்து குடுத்துக் கை கண்ட அட்டவணை, முகப்பரு, சகலபருவுக்கும், சறுவ புண்ணுப் புறைக்கும் ஆகியவை உள்ளன.

வரிசை எண்: 1065 சுவடி எண்: 475

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 20. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 1—4 வரிகள். அளவு: $48\frac{1}{2}$X2 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 200. ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

வும்பர்சா சொன்னது

புளிய பொருக்கு கொண்டுவந்து சுட்டு சாம்பல் பண்ணி, தண்ணிவிட்டு கறச்சி வுப்பு எடுத்து, அந்த உப்பு சுறக்கிர............ குப்பைமேனி சாறுவிட்டு அறச்சி, குகையி பண்ணி அதில் சாரம் வச்சு புடம் குக்கட போட.......றம் கட்டி போகும்.

முடிவு :

| | | |
|---|---|---|
| திரிபுரமெரித்தான் | — | மாவிலங்கை |
| அம்மான் பச்சரிசி | — | சித்திர(ப்பாலா)வி |
| ஆலுவணங்கி | — | அரசு—தொட்டால் வாடி |
| (வி)ருவேளி | — | வெட்டிவேர் |
| வுத்தமதாளி | — | வேலிப்பருத்தி—வுத்தாமணி |
| வுத்தாமணி | — | வேளிப்பறித்தி |
| யெருமைனுக்கு | — | சாணுக்கி யெலை |

முடிவு :

யெளியால — காட்டாமணக்கு
கருஞ்சூரை — சிங்கத்தாரி

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் உம்மர்சாமுறை-துவர் எண்ணை-பாப்பு சொன்னது அபின் முறையி, நாக அய்யன் சொன்னது ராமச்சந்திரசாமி சொன்னது, தன்மந்திரியார் காப் பாடு, ராமசாமி சொன்னது, வும்மர்சா சொன்னது, கறி சமைக்கிற பாகம், பட வதாவில் வாங்கிக்கிட்டு வந்த மருந்து முதலியன உள்ளன.

இது மை பூசாத ஏடுகளைக் கொண்டது. கடைசி ஏட்டில் மூலிகை நிகண்டு எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண்: 1066 சுவடி எண்: 476

## சட்டைமுனியார் வாதனூல்

ஏடுகள்: 153. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 8—9 வரிகள். அளவு: $41\frac{1}{2}$X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 7500. ஆசிரியர்: கம்பளிச்சட்டை கயிலாச முனியார். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

சற்குரு பாசமையந் துணை

அகண்டபரி பூரணமா முமையாள் பாத
மப்புறத்தே நின்றதொரு முமையாள் பாதம்
புகழ்ந்துநின்ற கிணேசனொடு நாதாக்கள் பாதம்
புகழான வாக்குடைய வாணி பாதம்
நிகண்டெனவே யெனையாண்ட குருவின் பாதம்
நிரைநிரையாய்ச் சுருபத்தில் நின்றோர் பாதம்
முகன்றுயென்னை யீன்றெடுத்த சின்மயத்தின் பாத
மூவுலகு மெச்சுதற்குக் காப்புத் தானே. 1

முடிவு :

ஒன்றான சின்மயத்தின் பதத்தைப் போத்தி
உத்ததொரு கயிலாசத் தேக மாக
நன்றாக யீன்றதொரு உன்மனையைப் போத்தி
நலமான நாதாகள் பதத்தைப் போத்திக்

கன்றான கயிலாசத் தேகமாய் வந்த
காரணமாஞ் செஷருட பதமும் போத்தித்
தன்றான வாதனூ லாயிரமுஞ் சொல்லிச்
சாதகமாய் ஞானமொரு னூர்தா முற்றே. 1002

சட்டைமுனியார் வாதனூல்
ஆயிரமு முகிந்தது முற்றும்.
சிவமயம்
குருபாதந் துணை.

**காலம் :** இல்லே.

**குறிப்பு :**

இதில், உற்பத்திலயம், மறிதல் புவனம், பக்குவமறிதல், மொடுக்க மனம், ஆராதாரமறிதல், முதலியன உள்ளன.

இதன்பின், பென்வழலே வகையறிதல், வஷ்த்து அன்னம், திராவக வைப்பு, நூலறிதல், ஆதிவிபரம், யுதக்கல்லுவகை. குதிரைப்பல் பாசாணம், குக்குட கெந்தி, வெள்ளிச்சூரணம், பல உயிர் பேர்வகை, உபாசம், மலேப்பேர், பாத்திர மூசை, ரேமத்தயிலம், சிலசரி மெளுகு, குக்குட அரிசி, பூனக அரிசி, யெலும்பின் வகைச் சத்து, சத்துவகை, சகலகுருவும் பக்குவமறிதல் முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண் 26 (b)/D. 44, 27/D. 45. 28/D. 46 போன்றது. இதில் பாட வேறுபாடுகள் மிகுதியும் காணப்படுகின்றன. இது நல்ல பிரதி போல் காணப்படுகிறது. எழுத்துக்கள் தெளிவாக உள்ளன.

வரிசை எண்: **1067** சுவடி எண்: **477**

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: *168.* ஏட்டின் நிலேமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7—8 வரிகள், அளவு: $24\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *3500.* ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது,

**தொடக்கம் :**

சவிரியார் குளம்பு

சறுவேசு பரனூர்ச் சகலமும் படைத்தார். அருள்மரை முனிவர் யாவரும் பிளேக்க குருபான் சீருனும் குளம்பு சூரணத்தை திருவரு ளென்று சேவித்த பேருக்கு இருவினே ஞனூற்றெண்பதுந் தீரும். உறுவினே யென்று உதவி செய்திடுவீர் யென்றுப் பெருமையா அவிசிதம் பேருரைப் பேனே.

முடிவு :

......ட்டினேய் கொண்ட மாட்டின் குணம்

எடை தளரும். அழி மேய்ச்சல் மேயும். கண் குழிந்துயிருக்கும்.

மருந்து: பனைப்பட்டை துவைத்துக் கழுநீருடன் மூன்று சொட்டம் புகட்டுவது. இடது விலாவில்ச் சூடு சுடுவது.




இந்தப்படி சுடவும்

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் பலவிதமான மருந்து முறைகளும், மந்திரங்களும், சக்கரங்களும் உள்ளன.

இதில் சன்னி சுரக்கிஷாயம், விதறன சன்னியின் குணம், பேச்சு மறந்த சுரக்கிஷாயம், சேற்றும சுரக்கிஷாயம், உள்சுரக்கிஷாயம், வாதத்துக்கு வேதுபிடிக்க கெற்பிணி சோபைக்கு, நீர்க்கட்டுக்கு, குன்ம வாய்வுகளுக்கு, சூதகக்கட்டுக்கு மருந்து, வல்லாதி கஷாயம், ஆருத புண்ணுக்கு நெயி, சன்னி சுரக்கிஷாயம் முதலான பல்வேறு மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1038 சுவடி எண்: 478

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 72. ஏட்டின் நிலை: பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு: 6—11 வரிகள். அளவு: 28X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 160. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயற் றிற்பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
குணபதிக மாமருணைக் கோபுரத்தின் மேவுங்
கணபதியைக் கைதொழுதக் கால்.

முடிவு :

மேலே குகையை வைத்து, மேலே யெருப்போட்டு, நெருப்பு வைக்க பற்பமாம்.

யெலுமிச்சம்பளச்சார் விட்டு அரைத்து, கொக்குட புடம்போட தண்ணிவிட்டான் தளேவிட்டு அரைத்து ஒரு பிடம் போடவும். ஆலாம் விழுது சாறு விட்டு அரைத்து ஒரு பிடம் போடவும். வெள்ளே நவல்ப் பட்டைச் சாறு விட்டு அரைத்து ஒரு பிடம் போடச் செந்தூரம்,

சிவமயம்

குருவே துணே.

காலம் : இல்லே.

குறிப்பு :

இதில், செம்பிராதி ரசாயனம், புண்ணுக்கு மருந்து, சங்க திராவகம், சங்க திராவகம் வீரிய விர்த்திக்கு, சொயமக்கினி, காச்சலுக்கு, கோரோசினே மாத்திரை, பலவகை விஷமருந்து, சொற மாத்திரை, யெழனிக்காய் லேகியம், யெண்ணே சேர் பண்ணி, ஸ்ரீகளுக்கு குடுக்கிறது முதலியன உள்ளன.

வரிசை எண்: 1069 வரிசை எண்: 479

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 63. ஏட்டின் நிலேமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 5—11 வரிகள். அளவு: $45 \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 3000. ஆசிரியர்: அறியக்கூடவில்லே. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

| | | |
|---|---|---|
| வில்லுவாதி | பிறுகத்தி | கண்டகாரி |
| இறதகாரி | அண்டவாத | கண்டாத்திரி |
| காசகுலா | விரைவாத | பவுந்திரவரை |
| வங்கம் | பித்தசத்தி | குண்டலாதி |
| நிறக்குபடி | பித்தத்து | வாயுவுக்குசூரணம் |
| உடம்புபருக்க | யெண்ணே | பிரளியெண்ணே |
| சூலேக்கட்டு | நாசிகாபரணம் | விஷகுளம்பு |

முடிவு :

'நித்திய தோஷம்' என்ற சோதிடப்பகுதி கிரந்தத்தில் எழுதப் பட்டுளது.

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

இதில், சரம்பார்த்து, பல கண் பட்டதுக்கு மருந்து, கணையெண்ணை, பிள்ளை பெற்றவளுக்கு, களிச்சலுக்கு குண்டலாதி, பித்த வாயுவுக்கு ஏலாதிச் சூறணம், பூறணாதி லேகியம், அகத்தியர் குளம்பு, கேசரி யெண்ணை, மதன காமேசுவர லேகியம், சுண்டக்காயளவு வீரணம், திரளாத பேர்களுக்கு நெய் முதலியன உள்ளன.

---

வரிசை எண்: **1070** சுவடி எண்: **480**

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 90. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: $13\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி எண்ணிக்கை: 1500. ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

(வாளப்)பா வகைவகைக்கிப் பலமுங் கால்தான்
வெருளாதே துரிசுவொரு பலமும் போடு
நாளப்பா அண்டவெள்ளை கருவா லாட்டி
நலமான முன்தயிலத் தோடே சேத்துச்
சூளப்பா அரப்பொடியைப் பிசரி வைத்துத்
துடியான குகையிலிட்டுச் சார்வுலையி லூதே. 57

**முடிவு:**

பூசியே ......நோக்கித் தயிலங் கூட்டி
புகழான கற்றூளைப் பூவை வாங்கி
......... ......... ...பூவி லொட்டி
கனமான மாமாங்க ......... .........

**காலம்:** இல்லை.

**குறிப்பு:**

இதில் ஏடுகள் தொடர்ச்சியாக இல்லை. இதில் பேய்க்கடலை, பொற்சிந்தி, கல்வாரை, பொற்கரை, அழுகண்ணி, தொழுகண்ணி, தற்சனை, வெண்கரந்தை, சூதமாமூலி, வூமத்தை, சிவனார்வேம்பு, கோசபீசம், அஷ்டமாசிங்கி, தாம்பிர சுத்தி, வெண்காரக்கட்டு, தங்கபற்பம், வெள்ளையாவறை, நாகக்கட்டு, வசியம், நாகக்கட்டு, வசியம், அஞ்சனம், மாறணம், யிதுமூர சிரடி, வெண்சாரை, வாடை, அதீத மாற்றம் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1071 சுவடி எண்: 481

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 100. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 3—6 வரிகள். அளவு: 28x2 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1000. ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

| | | |
|---|---|---|
| திப்பிலி | விராகனெடை | 5 |
| மிளகு | ,, | ½ |
| கர்க்கடசிங்கி | | |
| சடாமாஞ்சில் | ,, | ½ |
| இந்துப்பு | ,, | 5 |
| கருஞ்சீரகம் | ,, | 6 |

முடிவு :

வேறு: நிலக்கடம்பு பசுவின் பாலில் அரைத்துக் குடுக்கத் திட்டங்காணும், …………யிலைச்சாறு கால்ப்படி மோரில் குடுக்கத் தீட்டம் வரும். சாமத்தியமாக பச்சை 6 …………அரைத்துப் பசுவின் பாலில் குடுக்க சாமத்தியமாவாள்.

காலம்: இல்லை.

குறிப்பு :

இதன் ஏடுகள் ஒடிந்தும், முறிந்தும் உள்ளன. குஷ்டத்துக்குப் பூசுகிற நெய், அட்டலோக மாறணம், கிரிணிக்குத் தாளிம்பாதி சூரணம், பெரும்பாட்டுக்கு மருந்து, எழுனுறு பழுனுறுக்கும் மருந்து, நாடலச்சனம், சாக்கியலக்கணம் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1072 சுவடி எண்: 482

## வைத்தியப் பலதிரட்டு

ஏடுகள்: 33. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 4—6 வரிகள்: அளவு: 17½X2 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

சீத சுரத்துக்கு

| | | |
|---|---|---|
| சாதிலிங்கம் | விராகனெடை | 1 |
| சிவ......... | ,, | 1 |
| து(த்தம்) | ,, | 1 |
| கோழிமுட்டை ஓடு | ,, | ½ |

யூமுத்தயிலேச்சாறு வாத........குளறிப் பிரமாணம் ............ (உண்)டை செய்து கருப்புக்கட்டியிலிட்டு......... மாறும். ......... யிச்சா பத்தியம். இதுவும் ஒருவகை. ஏலம் லவுங்கம் அதிமதுரம் கோஷ்டம் திப்பிலி சத்திரபேதி. வாகை

முடிவு :

வாயாலும் வயிறாலும் மெடுக்கிறதுக்கு

| | | |
|---|---|---|
| ஏலசுக்குக் கிடை | | 1 |
| மிளகு சீரகம் | விராகனெடை | 2 |
| நல்ல வெல்லம் | | |
| முள்ளிக்காயி அழவு | | |

யிலுப்பை விதையே சுட்டு பரிச்திக்கொட்டை மாவும் முள்ளிக் காயிழவு யிது வெல்லங் கூட்டி உள்ளுக்குக் குடுக்கவும். நிற்கும்.

காலம் இல்லை.

குறிப்பு ;

இதில் அகஸ்தியர் குழம்பு, பேதி, சுரமாரணம், மூலேசுரக்க, வயருளச்சலுக்கு விரோசினத்துக்கு, வயற்றுக்கடுப்புக்கு, நீரழிவுக்கு, கரப்பான் கிரந்திக்கி, செம்பு களிம்பு, காந்தத்தில் ஈயம் உண்டுபண்ண, தாம்புர பற்ப்பம், முத்தக்காசு நெய், கிராணிக்கு, வாயாலும் வயத்தாலும் மெடுக்கிறதுக்கு முதலானவை உள்ளன.

---

வரிசை எண்: 1073 சுவடி எண்: 483

## சரக்கு சுத்திமுறை 150

ஏடுகள்: 20. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 31X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 500. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

சிற(ணி) கொன்றை சூடுஞ்
சிவநிறு பாதம் போத்தி
வாரன முகத்தோன் பாதம்
வணங்கிநூத் தம்பதுஞ் சொல
பூரண வாலை ஞான
சரஸ்வதி பாதம் போத்தி
காரண மான செஞ்சொல்
கற்மசூத் திரங்காப் பாமே. 1

முடிவு;

சொன்னதோர் நூல்கள் தன்னில்
முக்கிய மின்னூல் சூஷ்சம்
வன்னமே வாரு ரேக
மான மதின சூஷ்சம்
அன்னமே சொன்ன நூத்து
(அன்பதும்) அறிந்தோன் முத்தே. 151

குருபாதம் துணை

சிவ சுப்பிரமநியார் துணையுண்டாகவும்.

காலம்: இல்லை.

குறிப்பு:

இது 'அகத்தியர் 150' என்ற பெயரால் எமது சுவடி எண். 324 (b) / D. 637 433 (a)/D. 927 போன்றது. ஆனால் இதே பெயருடைய சுவடி எண் 70/D. 102-ன் வேறுயது.

***

வரிசை எண்: 1074 சுவடி எண்: 484

## அகத்தியர் வாதகாண்டம்

ஏடுகள்: 55. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—8 வரிகள். அளவு: $29\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 2000. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

காண்டமென்ன நாகாசஞ் சொல்லக் கேளு
கடியகோ டகசாலே கொடுப்பை வீளி
யா(ண்டமென்ன கொ)டுவேலி சாறணையின்ஞ் சாறு
மப்பனே செருப்படிச்சா ராறுங் கூட்டி
மீண்டசட்டி யில்வார்(த்து) ......ரகம் வாங்கி
விளம்பியசா றுடன்கலந்து பெரிப்பாய்ச் சாம
மாண்டுவிடும் வலியுமடா கட்டிப் போச்சு
வாதமென்ன யிம்மருந்தை மாட்டு மாறீ: 1

முடிவு :

விரைந்திருந்த மூன்றெழுத்தை தீட்சை பாரு
விளம்புவோம் வயித்தியகாண் டத்தில் சொன்னோம்
... ... ... ... ...
பரந்திருந்த சோடசமே மூலா தாரம்
பரவெளியே கடதலேக்குக் காப்பா முற்றே. 299

வெண்பா

காப்பேது வாதங் கடந்தங் குரைபாட
தாப்பேது சாலத்தே சாற்றவே—மாப்பேது
வாதனூல் முன்னூர் வகாரத் துரைசரிதான்
வேதமே சொல்லி விளம்பும் 300

வாதகாண்ட முகிந்து
முற்றும்
தெட்சணாமூற்தி குருவே துணே.

காலம் :

பவ வருடம் ஆவணி மாதம் 21-ம் தேதி சனிவாரம் விடிய தாசு 1க்கு சிதம்பரம் அகஸ்த்தியர் ரெண்டாங்காண்டம் எழுதின நன்மை.

குறிப்பு :

இதில் வெங்காரக்கட்டின் வேதை, பச்சைக் கற்பூர வைப்பு, பெண்குறி லட்சணம், நகை வற்ணம், தேவி பூசைவிதி, நாகவேதை முதலியன உள்ளன.

மேலும் போகர் எழுநூறு, மச்சமுனி யெண்ணூறு, முப்பூ விபரம், சிவஞான போதகம், மூலிகைக் குகை, பித்தளே செந்தூரம், கோவப்பழ சாபம், மாந்திரீகக் காண்டம், கரியுப்பு ரசம், நாதவிந்து பிரித்து ஆடுகிற விதம், அவையடக்கம், முதலியன உள்ளன.

வரிசை எண்: 1075 சுவடி எண்: 485

## அகத்தியர் சால நிகண்டு இருநூறு

ஏடுகள்: 17. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8—10 வரிகள். அளவு: 30X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 650. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

அகஸ்த்தியர் சாலநிகண்டு யிருனூறு சிதம்பரம் ஏடு

காப்பு

ஒத்த சால நிகண்டிரு நூறையுஞ்
சாத்த மூவ ரகத்தியர் நாமமே
பூத்த தாரணி பூபதி நந்தியே
காத்த வேள்(?) கணபதி காப்பதே.

**முடிவு :**

பாரினி லிந்த முறைப்படி பாத்து
தேறுநீ பாவஞ் செய்யவும் வேண்டாம்
ஆருநீ பாரு அறுபத்து ஞலும்
நேரிடு நூறு நிகண்டது முத்தே. 200

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இது "அகத்தியர் இந்திர ஜால நிகண்டு இருநூறு" என்ற பெயரால், எமது சுவடி எண் 248(c)/D. 434 போன்றது. பாட வேறுபாடுகள் மிகுதியும் காணப் படுகின்றன.

இதில், சல்லிய கரு அறியும்படி, ஸ்ரீ ஆகருணம், எதிரி மாறணம், வாடை பிண்டம், அகஸ்தியர், கருவூரான், சுந்தரன், திலதம், சிதம்பரசக்கரம் உள்ளான், மறைமூலம், வராகிமாலை, சவுந்தரி மாலை, குளப்ப முறை மாதர் வஞ்சகம், சல்லிய உருவை, அரவு நெய்யி, தயிலம், யோக மந்திரம், அஷ்ட்டகற்ம தகடு விபரம், தயில வகை, வளலை அருமை, சிங்கி முதலியன உள்ளன.

வரிசை எண்: 1076 சுவடி எண்: 486

# அகத்தியர் ஜாலம் 1200க்குச் சூத்திரம் பூர்ண சந்திரோதயம்

ஏடுகள்: 22. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 8—9 வரிகள். அளவு; $29\frac{1}{2}X3$ செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 800. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

பூர்ண சந்திரோதையம்

……… போதிருந்த ரசவா தப்பெண்
மோகனபூ ரணசந்திர உதையம் பாட
ஆச்சரிய மாயிரத் திருநூ ருய்ந்து
அரன்ஞ்சொன்ன ரதிலிந்த யிருநூ றுந்தான்
நீச்சுமில்லை நிலையுமில்லை கரையுங் காணேம்
நெடுந்தூர வரைக்கோடும் நெளித மில்லை
பேச்சரிய ஆயிபா தத்தைப் போத்திப்
பிதத்துகிறேன் குமரகுரு பரன்காப் பாமே. 1

**முடிவு :**

வாருரை சந்திர வாலைமெய் நூலை
பேருரை செய்பெரி யோரெனை நாடச்
சீறுரை செய்தொழில் தேறுவார் சித்தரி
யேறுவரா யிரத்திரு நூறுரை முற்றே. 200

பூரண சந்திர வாலை முற்றும்.

**காலம் :**

பவ வருடம் மாசி மாதம் 22-ம் தேதி புதன்வாரம் சுபதினத்தில்

தெட்சணாமூர்த்தி சூஸ்த்திரம்
சிதம்பரம் முத்தும்

**குறிப்பு :**

இதில் முதல்ச்சாதி லெஷ்சணம், வளர்பிறை, சாதிலிங்க மெழுகு, பறிச் சுண்ணம், மச்சமுனி, திருமூலர் எண்ணாயிரம், பாதாள மையி, மாற்றம், முதல் மஞ்சள் முப்பூ, பஞ்சபட்சி, மூலிகை விபரம், மச்சமுனி எண்ணாயிரம், பச்சணி நூறு, அழைப்பு வித்தை, மோதிரம் விடந்தீர எல்லைக்கல்லு முதலியன உள்ளன.

வரிசை எண்: **1077** சுவடி எண்: **487**(a)

## அகத்தியர் நாடிப் பரீட்சை—குணவாகடம்

ஏடுகள்: 5. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 31X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 150. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும்.

**தொடக்கம்:**

நாடிப் பருஷ்ஷை

குணவாகடம்

ஆதிய கடவு ளாணை
    யடினென் போத்தி போத்தி
தீதுறு வியாதி தன்னைத்
    தெளிவுட னறிய வேண்டி
சோதிசேர் நல்லோர் சொல்லுஞ்
    சொற்குறி குணவா கடத்தை
நீதிசேர் படியின் மீதே
    நெறியுட னுரைத்தார் மேலோர் 1

**முடிவு:**

னடியால் முன்னோர் சொல்லும்
    நற்குறி குணங்க ளாலும்
நீடிய விழியி னாலும்
    நின்றெழு வெயிலி னாலும்ங்
கூடிய வீதி தன்னை
    கூறிய குணபா டத்தால்
சூடி(ய) தங்க ளாலே
    சுகப்பட மறிந்து சொல்லே. 24

னடிப்பரீச்சை முற்றும்

வாத சுரத்தின் குணம்

வாத சுரத்தின் குணம்கேளீர்
    வகுத்த வண்மை யுயர்த்திடவே
சீத சுர(ம்)யா வத்துக்குதித்து
    சிந்தை கலங்கி நெஞ்சுஒன்று

மதித்தி டாக ஞளர்போல
சிந்துந் துவிழம் போல்பேசி
சித்து ஸர்த்து சுழலுமலம்
பெருகப் பசியுந் தோனுதே. 1

மிக்க சித்த மல்லிபேர்
மல்லி முள்ளி வில்லைகண்டங்
சாவி பாதரித் தொலோ........

**காலம் :** இல்லை.

குறிப்பு :

இதில் நாடி லட்சணங்கள் கூறப்பட்டுள்ளன. பிற்பகுதியில் மேற்கண்ட வாத சுரத்தின் குணம் எழுதப்பட்டுளது. தொடர்ச்சி இல்லை.

வரிசை எண்: **1078** சுவடி எண்: **487(b)**

## அகத்தியர் பதினொன்று

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிகப்பழுதுபட்டது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 31X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 60. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

சொல்லுகுறேன் பதினொன்று யப்பா கேளு
சுருதிநாங்கி நிற்கும்யெட்டால் நிற்கும்
வல்லமையும் யிடத்தானே மலாரை நோக்கி
வாக்கிலே வுத்தனன் மகனைப் போத்தி

முடிவு:

வேதாந்த சாரமிது உலகீ ரேழும்
வெளியாக உடலுயிர்ந் தன்னைக் கண்டு
பேதமில்லாத பெரியோர்கள் கண்டு
பேசுவார் இன்னூலின் பெருமை
... ... ... ... ...

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

மருத்துவ முறையில் தத்துவத்தையும் விளக்குகின்றது.

வரிசை எண்: **1079** சுவடி எண்: **487 (c)**

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 36. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 5—6 வரிகள். அளவு: 31x3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 600. ஆசிரியர்: பலர். முழுமை. முற்றற்றது.

தொடக்கம் :

மிருதிய ரசாயனம்— சகல வியாதிக்கும் மருந்து அறியவும்

| | | | |
|---|---|---|---|
| பறங்கிப்பட்டை | பலம் 10 | கொட்டான் கோரைக் கிழங்கு | பலம் ½ |
| ராயபுரிச்சர்க்கரை | ,, 10 | | |
| நிலப்பனைக்கிழங்கு | ,, 1 | சுக்கு | ,, 1 |
| பிறப்பங்கிழங்கு | ,, 1 | மிளகு | ,, 1 |
| அமுக்கிராக்கிழங்கு | ,, 1 | திப்பிலி | ,, 1 |
| தன்னிமுட்டான்கிழங்கு | ,, ½ | அதிமதுரம் | ,, ½ |
| | | ஏலம் | ,, ½ |

முடிவு :

சோதியுடன் வைத்ததொரு உள்ளி யுந்தான்
சொல்லுமின்னே போகுமடா தும்பம் போகும்
வியாதியுடன் மூதண்டம் கொண்டு வந்(தால்)
யென்மகனே உள்ளியது ஒதிங்கிப் போகும் 10

நஞ்சுக்கொடியாவது தலைச்சம்பிள்ளை பெத்தலள் நஞ்சுக்கொடி யெடுத்து, பந்துபோல் சுத்தி ஓட்டில் வயித்து, மேல் ஓடு மூடி முளப்பிடத்தில் சுன்னமாகும். யிது அறிவது.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் தலைவலிக்கி திரி, கண்ணுக்கு உண்டை, வாதம் குதிவாதம், கும்மட்டிக்காயி லேகியம், நவ பாஷாணக் குளம்பு, அகத்தியர் குளம்பு, நாவரச்சி, அஷ்ட குன்மத்துக்கு, லிங்கக் குளம்பு, பருவுக்கு, நொச்சி, வீர மெழுகு முதலியன உள்ளன.

பிறகு (பாடலாயுள்ள பகுதி) நீரிழிவுக்கு, ஊளிக்காத்து, களிச்சலுக்கு மருந்து முதலியன உள்ளன.

வரிசை எண்: 1080 சுவடி எண்: 488(a)

## அருச்சனை மந்திரம்

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8—10 வரிகள். அளவு: 31X3½ செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 50. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

நன்ருக.

ஓம் ஈசான மூர்த்தாய நமகா
ஓம் தத்புறம வத்திராய நமகா
ஓம் அகோர யிருதையாய நமகா
ஓம வாம தேவ குய்யாய நமகா
ஓம் சத்தியோ சாத மூத்தாய நமகா
ஓம் யிறுதையாய நமகா
ஓம் அஸ்த்திராய நமகா
ஓம் கவசாய நமகா
ஓம் நேத்திராய நமகா
ஓம் திக்குபந்தனுய நமகா

முடிவு:

ஓம் சோமலிங்காய நமகா
ஓம் நேத்திராய நமகா
ஓம் நேத்திரலிங்காய நமகா
ஓம் பிராணுய நமகா
ஓம் பிராணலிங்காய நமகா
ஓம் சூனியாய நமகா
ஓம் சூனிய லிங்காய நமகா
ஓம் மகாலிங்க மூர்த்தியே நமகா

மந்திர புட்பாணி சமற்பியாமி
தூப திபம் சமற்பியாமி

காலம்: இல்லை

குறிப்பு:

இது வடமொழி அருச்சனையினை தமிழ் எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. இதில் 103 நாமங்கள் உள்ளன,

வரிசை எண்: 1081 சுவடி எண்: 488(b)

# அகத்தியர் ஞானக்கியானம் 1200

ஏடுகள்: 45. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7—8 வரிகள்: அளவு: 31 X $3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1000. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்:

ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அன்பான மனோன்மணியைத் தோழுது போற்றிச்
சோதியெனுங் கமலமலரத் தமுற்தங் கொண்டு
சுந்தரம்போல் வாதத்தில் லட்சங் காப்பு
நீதிபெற வயித்தியத்தில் ரண்டு லட்சம்
நிலைத்தசெரு சூஷ்த்திரத்தில் கோடா கோடி
வாதியெனப் பேர்படைத்த பெரியோர்க் கெல்லாம்
மனமகிழ்ந்து கருக்குருவாய் வசனித் தேனே. 1

முடிவு:

வெண்சாரைக் கற்பம்

பாரப்பா மயேந்திரகிரி தன்னில்ச் சென்று
பக்குவமாய் நீயிருக்கும் போதில் மைந்தா
நேரப்பா வெண்சாரை யதிலே வாளும்
நிச்சயமா யச்சாரைக் கண்டா யானால்
கூறப்பா உம்மென்று தம்பித் தேதான்
கூற்மையுடன் பதினறு ........ ........

காலம்: இல்லை.

குறிப்பு:

இதில், மவுன தீட்சை, நூல்பார்க்கும் விவரம், நாதமான கற்பூரதீபம், சிதம்பரம், சக்தி பூசை, சடாட்சரம், கணபதி பூசை, மானத பூசை, மவுனம், சூரிய பூசை, பஞ்சபூதம் அடக்கம், நாதவிந்து முப்புச்சுன்னம், சவுக்காரச் சுன்னம், சிறுநீருப்பு, யோகம், மூன்றுப்புச் சுன்னம், பூனீற்கட்டு, காரசாரம், கடுங்காரச் சுன்னம், சவுக்காரக்கட்டு, கற்பூரக்கட்டு, துருசுக்கட்டு முதலியன உள்ளன.

இதில், நூற்று எழுபத்தெட்டு பாக்களே உள்ளன. குறைபாடுடைய சுவடி எழுத்துக்கள் நன்றாகவும் அழகாகவும் உள்ளன.

வரிசை எண்: 1082 சுவடி எண்: 489

## கருப்பிணி மந்திரம்

ஏடுகள்: 57. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 4—7 வரிகள். அளவு: 22X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 750. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

ஹரி ஓம்: நன்ருக. குரு வாழ்க. குருவே துணே.

அல்லல்போம் வல்வினைபோம் அன்னை வயத்தில் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
குணமா மருணைக் கோபுரத்துள் வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுதக் கால்.

சிவமயம்

ஞானபண்டிதன் லச்சிக்கவும்

முடிவு :

பிள்ளை பிறந்த பதினுறு வருடம் மகரகண்டி யென்னும் பேயனை யும். அதின் குணம் முகம் வெளுப்பாயிருக்கும். கூடா றுனெஞ்சாகும். இதற்கு வலி மாவால் பாவை செய்து மண் கலத்திலிட்டு பாக்கு வெத்திலே காணிக்கை தீப தூபம் கோளியறுத்துப் பலி குடுத்து குமுளம்பூச் சுட்டி வூருக்கு மேக்கே பேயின் பேர் கூறி வைக்கவும்.

(சக்கரங்கள் நிறைய இருக்கின்றன)

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், பலவகையான மந்திரங்களும் யந்திரங்களும் சக்கரங்களும் உள்ளன. கருப்பிணியைக் காப்பாற்ற, பேய் பிசாசுகளிடமிருந்து காக்க வழிகள் இதில் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1083 சுவடி எண்: 490

## அகத்தியர் வைத்தியம்

ஏடுகள்: 43. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6—8 வரிகள். அளவு: $19X2\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து: தமிழ்.

கி எண்ணிக்கை: 600. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

வெடியுப்பு பலம் 4 நமச்சாரம்
ஊசிக்காந்தம் சகஸ்த்திரபேதி
கிட்டம் துருசு
அறபொடி ................
வெங்காரம் சலாசித்து
கல்நார் ஆக வகைக்கி $1\frac{1}{4}$ வராகனெடை
யிந்த மருந்தை யெல்லாம் பொடி செய்துக்கொண்டு

முடிவு :

.........பின்பு யெல்லாம் சேர்த்துக்கொள்ளவும். கய்கண்டது. .............முன்னிற்க. சிங்கம் சேர்க்கவும். (எ)ருமை வெண்ணெ பலம் 1. பீதரோகணி பலம் $\frac{1}{4}$. சீனக்கா .........பொரித்து பலம் $\frac{1}{4}$. யிந்த 3-ம் செப்புக் கிண்............

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் இடையிடையே ஏடுகள் இல்லை. முதல் ஏடு முறிந்துள்ளது. பல விதமான மருத்துவங்கள் இதில் பேசப்பட்டுள்ளன.

வரிசை எண். **1084** சுவடி எண்: **491**

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 26. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5—8 வரிகள். அளவு: 20X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 450. ஆசிரியர்: பலர். முழுமை. முற்றற்றது.

தொடக்கம் :

ஞாயற்றுக்கிழமை

கிழக்குசனி (இரு)ப்பான கிழாகம்
தென்கிழக்கு ருசன் இருப்பான் செயம்
தெற்கு சந்திரன் இருப்பான் செயம்
தென்மேற்கு கேது இருப்பான் மரணம்
மேற்கு சூரியன் இருப்பான் செயம்

வடமேற்கு சனி இருப்பான் கிழாகம்
வடக்கு புதன் இருப்பான் உரரை வரும்
வடகிழக்கு சுக்கிரன் இருப்பான் செயம்

ஒருநாள் அறுபது நாழிகையும் பார்த்துக்கொள்ள வேண்டியது.

முடிவு :

பித்திலைப்பற்ப்பம்

பித்தலையின் காஞ்சிரையின் வேர் அரைத்துக் கணத்தில் பூசி ஓட்டில் வைத்து கெசப்புடத்தில் மாண்டு போகும். வாயுவு, குன்மம் கிரந்தி, மூலம், நீர்க்கணம்பு, வாயில் நீர், குடல் வாதம், பார்சவாயுவு ஆனந்த வாயிவு, கெண்டை அனுப்பானம் செயிதேனும் அறிந்து சொல்லே,

**காலம் :** இல்லை.

குறிப்பு :

இதில் சோதிடம், வாடை வித்தை, மரப்பு மையி, துருசுச்சுன்னம், மூலிகை வகை, சரக்கின சத்துரு மித்துரு, மாறணம், மந்திரம், ஐங்கோலத் தயிலம், வடவேறு, மதனபூண்டு, மரப்பு மை, ஞானவனக்கம், அயபற்ப்பம், காந்தம் பற்ப்பம், வங்க பற்ப்பம், மேகவகை, காரீய பற்ப்பம், வெங்கல பற்ப்பம், திருவினுட பற்ப்பம், பித்தலை பற்ப்பம் முதலியன உள்ளன.

வரிசை எண்: **1085** சுவடி எண்: **492**

## தன்வந்திரி ஏரண்டத் தயிலம்

ஏடுகள்: 42. ஏட்டின் நிலைமை; மிகப்பழுது. பக்கத்திற்கு: 3—5 வரிகள். அளவு: 22X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 400. ஆசிரியர்: தன்வந்திரி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

| | | | |
|---|---|---|---|
| கய்யான்தகரை | சேர் 2 | செறுப்படிச்சார் | சேர் 2 |
| சங்கம்குப்பிச்சார் | ,, 2 | யிருள்ளிச்சார் | சேர் 2 |
| நீர்முள்ளிச்சார் | ,, 2 | தூதுவிளைச்சார் | |
| குப்பமேனிச்சார் | ,, 2 | காசிடை ரெண்டு வீ | |
| கும்மட்டிச்சார் | ,, 2 | விளக்கெண்ணெய் | சேர் 2 |

யெரித்து மெழுகு பதத்தில் மாதம் ஒரு தடவே சாப்பிடவும். உடம்பு தன்னை திமிரத்தால் காமாலை வாதம் கரப்பான் னிற்க கொரவே.

முடிவு :

யமவாளபா யவாவெனவ இதுக்கு சே............................நிலத்தில் திருனுத்தை, பரத்தி. சக்கரத்தை நட்டி, ஒரு ஆ........................உள்ள கைய்யே வத்து கொள்ள செய்திரக்க யிருந்துகொண்டு செயி......... ஆளும் கையிம் வரும். சோதினை பார்க்கவும்.

(சக்கரம் ஒன்று உள்ளது)

காலம் : இல்லை

குறிப்பு :

இதில், இத் தலைப்பே யன்றி, பல்லாதி லேகியம், மறணக்குறிப்பு, பரமந்த குன்மங்களுக்கு, பகந்த மேகத்துக்கு எண்ணை, பேதி, மலட்டுப் பூச்சிக்கிம், புள்ளை யில்லா, தாளிசபத்திரி குளிகை, விக்கலுக்கு முதலியன உள்ளன.

பிற்பகுதி அகத்தியர் நூற்றைம்பது போன்று, ஓம லேகியம், காய லேகியம் முதலியன உள்ளன. இச்சுவடி வைத்தியத்திரட்டு போல உள்ளது.

வரிசை எண்: **1086** சுவடி எண்: **493**

## வைத்தியம் மந்திரம் முதலியன

ஏடுகள்: 142. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 5—7 வரிகள். அளவு: 24X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 2000. ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

கடமதத்தைப் பொற்களிறே காரானைக் கன்றே
குடவயற்றி லெனகோட்டுக் குன்றே—கடலையவில்
அப்பமொடு மெள்ப்பொரியும் மப்பியட் சிப்பயறு
முப்பழமுந் துதித்திடவா முன்.

குருவாள் திருச்சிற்றம்பலந் துணை செய்யவும்,

நூல்

சித்தான் சுழல்வண்டு சுழல்த்து றும்பு
சித்திரையி லத்தநாள் கடசி தொட்டு
மத்தான விரை யெடுத்து மறுளு மத்தும்
வரம்பான பேய்பீக்கன் மூலங் கூட்டி

முடிவு ;

யிதுக்கு கசாயம்

ஏல மதிமதுர மோடு
இருவேலி யின்வேர் இலாமிச்சங்
கோலுங் கலந்து கொர்புமிலுப்
பைப்பூக் கொநன்ஞரி பேய்புடல்
சில முத்தந் தோடையிலே
சீந்தில் பற்படவம் சமனிடித்துக்
கோல முளம்பன் னிருகளஞ்சு
குடிநீறு காச்சிக் கொள்ளே.

காலம் : இல்லே.

குறிப்பு :

இதில் சூனிய மீள்க்க, அரசு மேல் படர்ந்த ஆதண்ட மூலிகை, வெழ்மொடிக்கு, ஏவல் பில்லிக்கு, வில் கட்டுக்கு, குடல் பிஞ்சு விழுகிற கைகாலெரியுரா சூனியத்துக்கு, மேலெரியுர சூனியத்துக்கு, சூனிய மருந்தீடுக் குளிகை, மயிரோசிகை விளுேதம், மற்றும் வாதத்துக்கு எண்ணெய் முதலியன உள்ளன.

இதில், *82, 85, 88, 94, 96, 110, 111, 113-116, 120, 121, 124, 131* ஆகிய ஏடுகள் இல்லே.

வரிசை எண்: 1087 சுவடி எண்: 494(a)

## தேரையர் வைத்தியம் 133

ஏடுகள்: *20.* ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: *8—10* வரிகள். அளவு: $24\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *500.* ஆசிரியர்: தேரையர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

வாத சுரம், பித்த சுரம், ஆக்கிராணம்

ஆரியமாம் வாகடத்தி னுட்பொருளை ஆருய்ந்து
சீரியதாஞ் செந்தமிழ்ச் செப்பவே—மாரியென
வெள்ள மதம்பொழியும் வேழ முகமுடைய
வள்ளலே என்மனத்துள் வா. 1

முடிவு :

கல்லடைப்புக்கு

கக்குஞ் சிறுபூளை கல்னெருஞ்சி மாவலிங்கை
விக்கும்போ ருமுட்டி வேரதனி—லொக்கவே
கூட்டிக் கியாழமிட்டுக் கொள்ளவே கல்லடைப்புக்
காட்டிக் கழன்ருேடுங் காண். 133

தேரையர் பாடல் 133-ம் முற்றிற்று.
அப்பாவு ஏடு

காலம் : இல்லை.

குறிப்பு :

இதன் பின்னர் 3 ஏடுகளில் உள்ளவை ;—

ஏடு 21 முதல் 23-ம் ஏடு முடிய தேரையர் பாடலுக்கு முகவுரை; அட்டவணை முதலியன உள்ளன.

வரிசை எண்: 1088 சுவடி எண்: 494 (b)

## குழந்தை வைத்தியம் முதலியன

ஏடுகள்: 24. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 4—7 வரிகள். அளவு: $24\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர்: பலர். முழுமை: முற்றறறது.

தொடக்கம் :

குழந்தைகளுக்கு

கிராம்பு, ஏலம், சன்ன லவங்கப்பட்டை, மதுரம், கோஷ்டம் செண்பக மொட்டு வகை 1க்கு வராகனெடை. சுத்திசெய்த வாளம் வராகனெடை 1. பழச்சாறு விட்டு 3 சாமமறைத்து மிளகளவு உண்டை செய்யவும். சர்க்கரை, வெல்லம், பழம், மிளகு கிஷாயத்தில் குடுக்கவும். அந்திக்கி சுக்கு சீரகம் கிஷாயம் போட்டுக் குடுக்கவும்.

முடிவு :

சூட்சாதிக்குளிகை

ரசம், திரிபலை, மிளகு, கடுகு, கெந்தகம் வகைக்கு பலம் 4. கருப்பட்டி பலம் $1\frac{3}{4}$ அரைத்து உதயத்தில்ச் சாப்பிட்டு ஒருநாழிகைக்குப் பிறகு பால் சாப்பிடவும். ஒரு மண்டலஞ் சாப்பிடவும். பத்தியமில்லை.

**தீரும் வியாதி :** குஷ்ட்டம், குன்மம், சொறி, கண்டமாலை, மந்தம் வாயு தீரும், மேகவகை தீரும்.

**காலம் :** இல்லை.

குறிப்பு :

இதில், அக்கர சஞ்சீவி, கட்டுவாதி மாத்திரை, அமுர்த சஞ்சீவி, சுரம், சன்னி தோஷத்துக்கு குழந்தைகள், குழந்தைக்கு வாந்தி கண்டால், குழந்தைகள் பெருக்க நெய், வாலைகண்டம், பூபதி, குழந்தை பிணிக்கிக் களிப்பு சாந்தி, சக்கரங்கள், மூலமந்திரம், நஞ்சுதின்ற பேருக்கு, படி விபரம், சகல வியாதிகளுக்கும் நீலமேக சாமழ செந்தூரம், ருகுலய்யன், லிங்கம், சகலவியாதிக்கும், வெடியுப்புச் சுன்னம், பயித்தியத்துக்கு வயத்தில் கெண்டை, முதலியன உள்ளன.

வரிசை எண்: 1089 சுவடி எண்: 495

## அகத்தியர் கோவை 120

ஏடுகள்: 21. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 8—9 வரிகள். அளவு: $24\frac{1}{2}$X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 450. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

வயற்றுப்போக்கு

சிறக்குந் திரிகடு கோமங் கிராம்புநற் சித்தரத்தை
கருக்கும்பொன் ஞவைரவே ரன்ன பேதி கடல்ப்பளமும்
சரக்கொன்றுஞ் சாதிக்காய்ப் பெருங்காய முந்தான்
பத்தொன்ருய்
நிருக்கும் வகைக்கிவகை தான்வரு கன்னிருக்கச் சொல்லே. 1

முடிவு :

கூருவன் குண்டுமணி யிலைதன்னையுங் கூர்ந்தரைத்துத்
தேறிய தொன்றுமே நெய்யிலடை சுட்டுசிந்தையுட
ஞறிய மூன்றுதின முண்ணனுவினி லாணியொடுங்
கூறிய புன்பொடி யெல்லாவலிப்புங் குறிக்குமே. 120

முற்றிற்று
குருபாதமே துணை

காலம் : இல்லை

குறிப்பு :

இதில். வயிற்றுப்போக்குக்கு, பவுந்திரம், மூலம், விசகடிக்கி, நெஞ்சுவலி, வாயுவுக்கு, வயற்றைக் கவ்வுகிற அனந்த வாயுவுக்கு, கெற்ப்ப விப்புருதிக்கும், பித்தத்துக்கும், சூலைக்கடுப்புக்கு, ஷண்குன்மம், மகோதரத்துக்கு, குழந்தைக் கரப்பான், வாயுவுக்கும் மேகத்துக்கும் முதலியன உள்ளன.

***

வரிசை எண்: **1090** சுவடி எண்: **496**(a)

## அகத்தியர் குணவாகடம் அவிழ்த சாரம் 60

ஏடுகள்: 10. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 8—9 வரிகள். அளவு: $24\frac{1}{2} X 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 250. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

காப்பு

ஆதியாங் கிணேசன் காப்பு
அருனூற்றுக் கருவை யெல்லாஞ்
சோதியாம் ஆயி பாதம்
துணையென உட்கொண் டேத்தி
நீதியாந் திரட்டுச் சூஸ்த்திரம்
நிலைத்தவா கடமாய்ச் சொல்ல
வாதமாம் பிணிகள் தீர
மருந்தொடு குணத்தைக் கேளே. 1

முடிவு :

பற்ப மினிக்கேள் பறந்திடும் நோயெல்லாம்
அற்ப மீதென்று அசடரே யெண்ணுதீர்
கற்ப மீதாகும் கற்ம வினையறும்
நுட்பம தெல்லாம் நுகர்ந்தனன் முற்றே. 61

முற்றிற்று.

குருவே துணை.

### வலிப்பு வகைக்கு

குதிரை வலிப்பு, குமரகண்டன், முசலகன், காக்காய் வலிப்பு வகை சன்னிக்கு னீலியிலைச்சாத்தில் வசம்பு உள்ளி தட்டி நசியம் செய்யவும்.

சன்னிக்கெல்லாம் முசரு முட்டை பூனுகம். வசம்பு உள்ளி, முலைப் பாலிஞ்சி நசியம் பண்ணவும்.

### புகைச்சலுக்கு மாத்திரை

தேற்றுன் விரை, சீவக்காய்ப் பருப்பு, நல்ல மஞ்சள் முலைப் பாலிலரைத்து கண்ணிலிடக் கண் தெரியும். கைகண்டது.

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில். வாதம் எண்பதுக்கும், பித்தம் நாற்பதுக்கும், சிலேற்பனம் இருபதுக்கும், முலநோய் ஆறுக்கு, பெருவயரு மகோதரத்துக்கு, குமட்டி எண்ணை, சகல வாய்வுந் தீர சூரணம், ரத்தவாந்தி, சயகாசம், எலும்ருக்கிக்கி நெய், சுறத்துக்கு கிசாயம், சன்னிக்கி நசியம், மேல்ப் பூசத் தயிலம், கறப்பானுக்கெண்ணை முதலியன உள்ளன

வரிசை எண்: 1091 சுவடி எண்: 496 (b)

## அகத்தியர் நோயின் சாரம் 67

ஏடுகள்; 12. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 8—9 வரிகள். அளவு: $24\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து; தமிழ். கி. எண்ணிக்கை; 250. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

காப்பு

கறிமுகக் கடவுளைக் கவுறி மைந்தனை
விறிகடல் வாயனை வேதவே தாந்தனை
அறிதிரு மருகனை ஆதி சோதியைப்
பறிவொடு தொழுதவர் பாதம் போற்றுவாம். 1

முடிவு :

பிருணன் விடும் நாடிக்குறியறிதல்

நிரைபுர வட்டம் பூண்டு
நின்றிடு மறனை விறப்போலக்
குறைபடா பித்த மென்றுங்
குறைந்துமே நிற்கு மாகில்
உரைவிடும் பிராண னென்று
உண்மைசொல் வாக டத்திற்
பறையது கட்டிச் சாற்றும்
பண்டிதர்க் கெல்லாம் பாரே.

சிவமயம்

முற்றிற்று

காலம்: இல்லை.

குறிப்பு :

இதில், நாடி பார்க்கும் விபரம், மலச்சுறம், சுரத்துக்கு பாசாண மாத்திரை, சுரக்கிஷாயம், மலபந்த னுடி, மந்தசன்னி, அண்டத்தயிலம், சோசக்குறி, மயில் நெய், வாத மெலிவு தோசம், சருவாங்க வாத சன்னி, முட்டித் தயிலம், வாதக் கழிப்பால் வரும் வியாதி, வாதக்குறி, கெற்ப னுடி, கெற்பமில்லாத னுடி, கெற்பமுண்டாக, சூதக வாய்வு, யெரி குன்மக் குணமருந்து, சூலை வரலாறு, மரண னுடி, மூலாதாரத்தின் அவஷயால் பயித்தியமும் மரணக்குறியும் அறிய, பித்தத்தின் குணம் முதலியன உள்ளன.

நாடி மூலம், மரணம் கூறும் சிறந்த சுவடி இது.

---

வரிசை எண்: 1092 497

## அகத்தியர் வைத்தியம் 36

ஏடுகள்: 9. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 8—10 வரிகள். அளவு: $24\frac{1}{2} \times 3$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

காப்பு

சொல்லும் வயித்தியசார் சூச்சம்நூல் முப்பதாறு
யல்லும் பகலும் மறிவுணர்—நல்ல
குணபதியாம் பூறணத்திற் கூடியே வாழும்
கணபதியின் பாதமலர் காப்பு.

நூல்

அன்னியபற ஸ்ரீசங்கக் கபட ஞானன்
ஆனகஞ்சா கள்ளுரொட்டி அபின்மருந்து
துன்னிய சூனியக்காரன் சண்டைக் காரன்
துரும்புக்கிள்ளி விருந்துண்பான் திருடன் துஷ்ட்டன்

**முடிவு :**

நாவுகுறி

தானமொடு வாய்வெளுத்து நீருண்டா கிற்றான்
சிலேற்ம நாவாகும் யீர மற்றே
ஆனைமுட்போல்க் கருக்கில்சன்னி ரோக நாவாம்
அதம்தொந்த நால்நிறம் நால்விதமாய்த் தோன்றும்
ஆனயிவ் வகையெட்டும் அறிந்த வேரை
அவனிதனில்ப் பண்டிதரா யறியச் சொல்வார்
யீனமில்லாப் பொறியடக்கும் பெரியோ ரன்றி
யெய்தாது யாவருக்குப் யியம்புங் காலே. 36

அகத்திய மகாமுனிவர் அருளிய வயித்திய சாரம் முற்றிற்று.

**காலம் :**

வெகுதானிய வருஷம் பிரட்டாசி மாதம் 29ம் தேதி யெழுதினது அப்பாவுப் பண்டிதர்.

முற்றிற்று.

**குறிப்பு :**

இதில், நற்கமவருலிலறிக (?), தற்க்கம் நாடி, பிண்ட வுற்பத்தி, கருத்தறிக்கும் விதம், தசவாய்வு (கார)ணப்பேர், தசநாடி, குருநாடி, அஷ்ட்ட விதப் பருக்கைகள், நாடி நிற்குமிடமறிக, நாடிகள் விபறம், சன்னி வாதம், தேக பருசம், (ச)த்தம், மலக்கூறு, சலக்கூறு, நாவுக்குறி முதலியன உள்ளன.

இதில் 23 முதல் 31 முடிய உள்ள ஏடுகள் உள்ளன. நாடிபற்றி அறிந்து கொள்வதற்குச் சிறந்த நூலாகுமிது.

வரிசை எண்: **1093** சுவடி எண்: **498**(a)

## சூதமுனியார் பாடல்—நீலகண்ட வாலை

ஏடுகள்: 8. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 8—9 வரிகள். அளவு: 24½x3 செ. மீட்டர். எழுத்து: தமிழ் கி. எண்ணிக்கை: 200. ஆசிரியர்: சூத முனிவர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

நந்தீசர் வேதமுனி சூதமுனி யிவர்கள்
நாதனடி போற்றிசெய்து மகிழ்ந்திருக்கும் வேளை
யிந்தவுலக மன்னவர்வாத வித்தை செய்ய
யேதுவகை யென்றருள் வேதமுனி கேட்கத்
தந்திமுகன் றனைப்பணிந்து வுரைத்திடுவார் நந்தி
தாரணியி லுள்ளவர்க்குச் சாகாத வரமு
மந்திரத்தால் சத்திசித்தி யாகும்வர லாறு
மாந்தரீகம் வருத்துவதும் வௌர்மாதி பகர்வாம். 1

முடிவு:

... ... ... ... ... ... ...

களங்குபோல் திரண்ட செம்பைப் பொதிவு செய்து
அடுத்தடுத்தே அஞ்சுதிர முறுக்கில் பின்னு மறிய
புங்கம்வே றரைத்துவல முன்போ லேத்தெடுத்
துறுக்கவீ ரஞ்சூத்தி ரத்திற் செம்பு
சுத்தியென்று சொன்னவரை சொல்லொண் ணாதே. 27

சூதமுனிச பாடிய னூரு. அதிலிருந்து யெடுத்து எழுதியது—வேறு

காலம் : இல்லை.

குறிப்பு :

கடைசி ஏட்டின் பின் பக்கத்தில், 'பச்சைக் கற்பூர வைப்பு' உள்ளது. இதில், நீலகண்டவாலை, ரசபற்பம், வங்க வெள்ளி திரிகடுகு சூரணம், செம்பு சுத்தி முதலியன உள்ளன. இது சூத முனி நூறிலிருந்து எடுத்து எழுதியது.

வரிசை எண்: 1094 சுவடி எண்: 498(b)

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 70. ஏட்டின் நிலைமை: பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு: 5—9 வரிகள். அளவு: $24\frac{1}{2}$X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1400. ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

அமுற்த கெந்தி
குக்கில் வல்லாதி

| | |
|---|---|
| கெந்தகம் பலம் 8 | சுத்தி அமுரியில் |
| ஈருள்ளிச்சாறு | பால் |
| குட்டி | தக்காளிச்சாறு |
| சிறுகீரைச்சாத்தில் | தனித்தனி சுத்தி செய்யவும், |

முடிவு :

முழுகு மிடத்தினீர் மாற்றற்ருல்ப்
பெண்ணுர்கள் கெற்ப்பம் பிறக்கும்போ துண்ணும்
பிளிச்சித நிறக் குறியும் பின்பறுந்த வாலுங்
களிச்(தீய்ப்) பாட்டாலு காரிகையீர் தெளிசப்பனே
நீர்மதுவினுல் ... ... ... ...

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், அமுற்த செந்தி, குக்கில் வல்லாதி, கபத்துக்கு......... செம்முள்ளித் தைலம், கோசாமி சங்குத் திராவகம், கோசாமி சங்கு பஷ்ப்பம், தருமந்திரி பகவான் முரை, அசுவகெந்தித் தயிலம், மன்மத சிந்தாமணி லேகியம், வாயுவுக்கு யிஞ்சி லேகியம், யிடிமருந்து, வாயுவு புத்திரன். சகல ரோகத்துக்கும், சித்திரமூல எண்ணெய், ரசபதங்கம் குன்னக்குடி ஆசாரி, குடோரி பதங்கம் முதலியன உள்ளன. இதன் இடையில் பலமருந்து முறைகள் உள்ளன. பலருடைய அனுபோக முறைகள் இதில் அடங்கியுள்ளன.

வரிசை எண்: **1095** சுவடி எண்: **499**

## கருவூரார் நொண்டி

ஏடுகள்: 62. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 26X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1500. ஆசிரியர்: கருவூரார். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம்:**

நாய்ப்பாகல் தயிலம்

காந்தஞ் சவ(ளை)யிற் கருங்குன்றி காமிலைச்சாறு
நாள்ப்படப் போட
சேந்திடு மீயந்தங்க குணண்.

நொண்டி

ஆடுஞ் சரக்குவகை சொன்னே மிந்த
அறுபத்து னுலுசரக் கப்பலத்தை கணும்
சூடுமந் தங்க ஆபரண.

**முடிவு:**

ஆமப்பா புத்திச் சொன்னேன்
அளிபுத்தி சொல்ல இல்லை
ஆமப்பா வேதை கண்டால்
கற்பத்தைப் பின்பு கொள்வாய்
ஆமப்பா (சிதறி யார்க்கும்
அரனி... ......பிரம்பி வாளை
ஆமப்பா குருவின் பாதம்
அடிதொழு திருப்பாய் வாழி. 303

கருவூரார் நொண்டி முகிந்தது முற்றும்.
தெச்சணாமூர்த்தி துணை
குரு முன்னிற்க வேணும்
தேவிசகாயம்

**காலம்:**

ஆங்கீரஸ வருசம், தை மாசம் 14-ம் தேதி, குருவாரமும். மிறுகசீருச நட்சேத்திரமுங் கூடின சுபத்தில் கருவூர் னயனர் நொண்டியெழுதி முகிந்தது. சிதம்பரயேடு. இந்த சுவடி யெழுதினேன் நாகலிங்கம் கையட்சரம்.

கேளப்பா ஆகாச கபால மோடுங்
 கெவனமாவான் அட்டசித்தி வசித்திவச் சிரகாயன்
(வேள)ப்பா ஒருவருசங் கொண்டா ளுகில்
 கிருபையுள்ள பதினறு வயது தோன்றுங்
கேளப்பா வரிசமாயி ............ ......பான்
 கிருகையுள்ள கற்ப்பமிது கொண்டு பாரே. 1

குறிப்பு :

இதில் சிந்தாமணிக்குளிகை, அன்னபேதியுப்பு, பூனகவித்தை, தலியுகமகிமை கபால தீட்சை, மூலியால் சூதங்கட்ட, தந்தமூலி, தங்கசெம்பு, நாகதாளி கற்பம், முதலியன உள்ளன.

இது எமது மகால் சுவடி எண் 322 (f)/D.619ன் வேறுயது போல் தோன்றுகிறது. இதில் காலக் குறிப்பை அடுத்து ஒரு விருத்தம் (மேலே காட்டப்பட்டுள்ளது) இருக்கிறது.

வரிசை எண்: 1096. சுவடி எண்: 500

## போகர்—38

ஏடுகள்: 15. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 5—6 வரிகள். அளவு: $26 X 2\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 250. ஆசிரியர்: போகர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

காப்பு

சீர்பெரிய நாதாக்கள் பாதம் போற்றி
 தெரிந்துரைத்த போகருட பாதம் போற்றி
... ... ... ... ...
காராரு முமையவள்த னீன்ற பாலன்
 கணபதிதா ளிருசரணங் காப்ப தாமே.

பெண் பூசை

தானன வஷ்த்துவுக்குப் பெண்ணைக் கேளு
 சகலவித்தை கீழாச்சு யிதுமே லாச்சு
ஆனன வித்தையெல்லா மிதுக்குக் கீழே
 ஆதியென்று மனதியென்று மிதுக்கு னமம்

முடிவு:

முப்பது... ... ... னே
மொழிந்தநூல் வாத மென்றே
முப்பது எட்டி னுள்ளே
முயன்றதோர் வயித்தி (யந்தான்)
முப்பது எட்டி னுள்ளே
முணமையாங் காய சித்தி
முப்பது மெட்டு மீய்ந்த
உமை................ங் காப்பாமே,

குருவே துணை

காலம் இல்லை.

குறிப்பு:

இது, போகர் பூசாவிதி என்றும் பெயர்கொண்டது என்பது 2-ம் ஏட்டால் தெரிகிறது.

இதில், பெண்பூசை, நாதவிந்து, துரிசு, பூரண சந்திரோதயம் ஆகிய தலைப்புக்கள் உள்ளன.

வரிசை எண்: 1097 வரிசை எண்: 501

## நந்தீசர் வைத்தியம்—205

ஏடுகள்: 26. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 8—9 வரிகள். அளவு: 30X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 500. ஆசிரியர்: நந்திதேவர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்:

பூரணமாய் மும்மூலப் பொதியில் சூடாய்
புகையெழுந்தே மேகமதாய்ச் சிரசிற் சூடாய்க்
கா(ரணமாய்)........ ........ கங்கள்
கனலெழுந்து வாயுவினுல்ச் சூலை ரோகம்
வாரணமாம் வாதத்தி லெழுந்த மேகம்
மதியதொரு ...... ...... ......
(கார)ணமாம் வாயுவினுல்க் குற்ம மாச்சு
சார்ந்தசிலேற் பனங்கூடிச் சயம தாமே, 1

முடிவு :

…… …… தயிலங் கொண்டால்
உறுதியாயி வியாதியெல்லா மொழிந்து (போகும்)
…தொரு சீரகமுங் கெந்தகந்தான் ……
நெளியவே பத்துக்கொன்று …… …வே
வந்ததொரு கிரந்திகுட்டம் வாத மோடு
சூலையெல்லாம் …… …… ……
…யுதை பூதனையும் சுத்த மாமே 197

சுத்தமா மின்னமொரு …… ……

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில், அயபற்பம், காந்த பற்பம், தாம்பூர பற்பம், ஒழுக்கறைப் பற்பம், பாஷாண பற்பம், நமச்சாரப் பற்பம், உப்பு பற்பம், ஆமையோட்டுப் பற்பம் முதலியன உள்ளன.

இதன்பின், சந்தி விக்கலுக்கு, சிலேற்பனம், மூளையிளைப்புக் காச்சலுக்கு, வாய் புண்ணுக்கு, பித்தத்துக்கு, சுரத்துக்கு, வாத சன்னிக்கு, சிவன் வேம்புத் தயிலம், வெண்புரசுத் தயிலம், வெள்வேல் தயிலம் முதலியன உள்ளன.

இதில் எழுத்துக்கள் மிகப்பொடியாக உள்ளன,

வரிசை எண்: 1098 சுவடி எண்: 502

## அகத்தியர் பட்சணி நூறு

ஏடுகள்: 8. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 9—10 வரிகள். அளவு; 30X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 160. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

திருமகள் சோதி யாகும் செகதலம் வல்லி மாது
மருமக ளவளே யுந்தி மவுனத்தி(ன் நந்தி தோண)க்
கரு(வது) நாமே சொல்வோம் கண்டதை விண்டி டாதே
பருவமாய் மாது கற்புப் பட்சணி (யறிந்து கொள்)ளே. க

முடிவு :

(முற்றிலும நூறுங்) கூட்டி
முப்பத்தி ரெண்டும் பாரு
ஒத்திட மதுவாய்க் காணும்
உற்பனம் உறுதி தோணும்
சுத்தது யெ(ன்)னூல் தன்னைக்
கைவிடாக் கருவைக் காண்ம்பார்
செத்தபே ரில்லை யென்னூல்
செப்பவு முத்தி யாமே. 123

குருசுவாமி (துணையாக வேண்டி)யது.

காலம் :

விசுவாவசு வருடப். தை மாதம் 23-ம் தேதி, திருக்கோகருணத்தி லிருக்கும் தாசி ஞராயணி(ன)சி அகஸ்த்தியர் பட்சணி யெழுதி முடித் தாள். முற்றும்.

சிவமயம்
குருவே துணை

குறிப்பு :

கடைசி ஏட்டில் :

"மயக்கறுவையும் பித்தனையும் கொண்டுவந்து, வெளியில்ப் போட்டு வறுத்து, அம்மியில் போட்டு அதோடே கோரோசினை அரைப் பணவிடைக் கரியுப்பு அரைப்பணவிடை போட்டு கருங்குரங்கு...... 40 படி கூடப்போட்டு கய்யந்தகரைச் சாரும் பொன்ஞங்கண்ணிச் சாறும் விட்டு அரைத்து, பசுவின்பால் அரைப்படி வாங்கி, அதில் கோரக்கர் மூலியும் சாதிக்காய்ப் பத்தியம் மருளுமத்தை வித்தும், வேரும் கால்ப்பணவிடை சேர்த்து அரைத்து அதில் கலக்கி காயவச்சு உரைக்குத்தி அதில் வெண்ணெயெடுத்து..............மருக்கில் போட்டு அரைத்து வளித்துச் சிமிளில் வைத்துக் கொள்ளவும்" என்றுளது.

இது எமது சுவடி எண் 228 (b)/D. 368 போன்றது. அதில் 131 செய்யுட் களிருப்பதாக உள்ளது. இதில் 123 செய்யுட்கள் உள்ளன். ஆயினும் முற்று முளது. சில இடங்கள் அதனில் இது வேறுபடுகின்றது. பாட வேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

வரிசை எண்: 1099 சுவடி எண்: 505

## புலிப்பாணி வைத்தியம்

ஏடுகள்: 28. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுதுபட்டது.
பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: $26\frac{1}{2}$X3 செ. மீட்டர்.

எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 450. ஆசிரியர்: புலிப்பாணி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

அண்ட ரெண்ட மாகிநின்ற அறனே காப்பு
ஆனந்த மாகிநின்ற உமையாள் காப்பு
கன்றமெனுங் குன்றலியே குறியே காப்பு
குமரகுரு வேல்முருகர் பாதங் காப்பு
புண்டரிக மானதிரு மாலுங் காப்பு
பிரமமுதல் குலிசநெடு அயிவர் காப்பு
சண்டமெனும் மாருதம்போல் வயித்தி யத்தில்
சாத்துகிற னென்போகருட பாதங் காப்பு.

**முடிவு :**

பாடியதோர் விஷங்களெல்லாம் தீர்க்க வேதான்
பண்பான யெட்டிப்பழத்தின் வூனே வாங்கி
கூட்டியே சட்டியிலே வேண மட்டும்
குணமாகத் தானெடுத்து வேப்பெண்ணெ விட்டு
நாடியே அடுப்பேத்தி வேக வயித்து
நலமாக உருட்டியதை செப்பில் மூடி
துடியான விஷந்தீன்றி வந்த பேர்க்குத்
தூதுவளங் கா...... ......... ......... 102

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இதில் சன்னித் தயிலம், சூதகத்தின் வலிபோக, ஆகிய தலைப்புக்களே உள்ளன. விஷ வைத்தியம் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1100 சுவடி எண்: 504

## போகர் பூரணம்—சோடச சூத்திரம்—50

ஏடுகள்: 11. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது, பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: $26\frac{1}{2} X 3$ செ. மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 200. ஆசிரியர்: போகர். முழுமை: குறைபாடுடையது,

**தொடக்கம் :**

காப்பு

முப்பாழுக் கப்பால் முதலான நிற்குணப்பாழ்
அப்பாழ் வழிலே அறிவீரால்— யெப்போதுந்
தானவனுய் நிற்குஞ் சகலகுரு வானதொன்ரு
மானேமுகன் காப்பா மறி. 1

நூல்

முத்தியா மிடைபின் ஞெடு
மூதறி சுழினே நாடி
சத்தியா மதியே பூரந்
தானது காச்சும் பூவாம்
பத்தியாம் வழிலே யுப்பு
பானுவாஞ் சுழினேச் சுன்னஞ்
சித்தியாம் அமுரி கங்கை
சேருறக் காச்சல் நாலே. 1

**முடிவு ;**

வானுறு சூட ஞென்று
வாருதி உப்ப தொன்று
கானுறு கல்லில் ஞதங்
கலரிது அமுற்த பேதி
ஊனுறு மமுரி மந்திர
மமுரியின் பூவா முத்தே. 51

சிதம்பரம்பிள்ளை கூமாறன்
ருமசந்திர பிள்ளை ஏடு.

**காலம் :** இல்லை.

**குறிப்பு :**

இதில் 10-வது ஏடு இல்லை. எழுத்துக்கள் நன்ருக உள்ளன, இதில் பூமி ஞதம், சமாது ஆகிய தலைப்புக்கள் காணப்படுகின்றன.

இது எமது பலதிரட்டு வைத்தியச் சுவடி எண் 296 (e) காட்டலாக்கு எண் V, பக்கம் 444 போன்றது. அதில் 11 செய்யுட்களே உள்ளன. இதில் முற்றும் இருப்பினும் 10-வது ஏடுகள் இல்லாததால் குறைபாடுடையது.

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

**மா. இராமு,** I. A. S.,
மாவட்ட ஆட்சியர்& இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகச் சங்கம்.

*தஞ்சாவூர்,*
*21—12—86.*

(சரசுவதி மகால் நூலகச் சங்க அச்சகம், தஞ்சாவூர்.)